Tamil

தமிழரசு 1970

JL
V211m,N70
N70:1
69594

# தமிழரசு

ழநாடு அரசின் திங்கள் இருமுறைத் தமிழ் ஏடு ஜூலை 16-1970-35 கா





# குடும்ப நலத் திட்டம்

"நாட்டிலே உற்பத்தி பெருக்கென்றால் அதைவிடுத்து
வீட்டிலே உற்பத்தி பெருக்குகின்றார்...

முத்தென்றும்
மணியென்றும்
சிட்டென்றும்
சிமிழென்றும்
கண் என்றும்
மூக்கென்றும்
கணக்கின்றிப் பெறுதல் விட்டு
நெல் என்றும்
வரகென்றும்
கரும்பென்றும்
உளுந்தென்றும்
பருப்பென்றும்
எள் என்றும்
கொள் என்றும்
உணவைப் பெருக்கிடுவீர்
உற்பத்தி செய்திடுவீர்...."

தமிழக முதல்வர்
கலைஞர். மு. கருணாநிதி



**அடுத்த குழந்தை இப்பொழுது வேண்டாம்**
**மூன்றுக்குமேல் எப்போதும் வேண்டாம்**



## உள்ளே

Verified B

மலர் 1 ஜூலை 16 1970 இதழ் 2


குடியரசுத் தலைவர் வாழ்த்துகிறார்
மக்களாட்சியில் ஒரு மகத்தான முன்னேற்றம்
அன்புக் குழந்தைகளே
எண்ணங்களின் எழிலோவியம்
கொடுத்து வைத்தவன்
அடிதொழுது விடைபெறுகிறேன்
பஞ்சாமிர்தம்
டிராக்டர் வேண்டுமா ?
ஒரு ஜூலை மாத மாலைப் போதில்
செய்தி கூறுகிறது
மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு
சிறந்த எதிர்காலம் சிறு தொழிலுக்கு
கனவுகள் நனவாகும்
காஞ்சி மண்ணில் அகழ்வாராய்ச்சி
காவிரி நதிப்புறத்துக் கோதுமை
இ[illegible]ன் புன்னகை
[illegible]ச்சி அரங்கில் தமிழ்
வீடுதோறும் [illegible]ழிப்பண்ணை
அம்பத்தூர் [illegible]முக்கிறது
பார்த்தோம் [illegible]த்தோம்
மகளிர் ப[illegible]
இன்னும் பல


69594
JL
V211m,N70
N70.1

## தமிழரசுக்கு



தமிழ்நாடு அரசு வெளியிடுகிற திங்களிருமுறை இதழான "தமிழரசு"க்கு எனது நல் வாழ்த்துக்கள்.

சமூக, பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் தமிழ்நாடு அரிய சாதனைகளைப் புரிந்திருக்கிறது. இச்சாதனைகளை மக்களுக்கு இந்த இதழ் எடுத்துக்காட்டும் என்று நம்புகிறேன்.

# நல்வாழ்த்துக்கள்

தெளிவு [illegible]

ஆகவே, மக்க[illegible]யாத ஒன்று. கொள்கைகளையும் திட்டங்களையும் [illegible]தமிழக அரசின் அதிகாரபூர்வமாக அறிவிக்கும் ஏடாகத் திகழும் என்றும் நம்புகிறேன்.

இதழின் வெற்றிக்கு என் நல்லெண்ண வாழ்த்துக்கள்.

V. V. Giri

(வி. வி. கிரி)

இந்தியக் குடியரசுத் தலைவர்

---



# மக்களாட்சியில் ஒரு மகத்தான முன்னேற்றம்

"ஊராட்சி, நகராட்சி போன்ற உள்ளாட்சி மன்றங்களே மக்களாட்சியின் அடித்தளங்கள்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள்.

ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்கும் ஊராட்சி மன்றங்களுக்கு இத்திங்கள் இறுதியில் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. இந்தத் தேர்தல் பணியானது மிகப் பெரிய அளவினதாகும்.

தமிழ்நாட்டில் 12,339 ஊராட்சிகளும் 537 பேரூராட்சிகளும் 14 நகரியங்களும் உள்ளன. இவைகள் 374 ஊராட்சி ஒன்றியங்களாக உருக்கொண்டுள்ளன. ஏறத்தாழ 1,30,000 வார்டுகளில் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன.

ஆனால், இந்தத் தேர்தல் வழக்கம் போல நடைபெறும் ஊராட்சித் தேர்தல் போன்றதல்ல.

மக்களாட்சியின் மகத்தான முன்னேற்றத்திற்கு ஓர் அடையாளமாகும்,

1958ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் தக்க முறையில் நிர்வகிக்கப்படுவதற்கான வழி முறைகளை அமைத்துக் கொடுத்தது. இத்தேர்தலில் ஊராட்சித் தலைவர்களை மக்கள் நேரடியாக இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கத் தக்கவாறு 1958ஆம் ஆண்டைய ஊராட்சிச் சட்டம் திருத்தப் பெற்றுள்ளது.

இத்தேர்தல் ஊராட்சித்தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கவிருப்பது மிக முக்கியமானதாகும்.

இப்படி நேரடியாகத் தேர்ந்தெடுக்க விருப்பது மக்களாட்சி முறைக்குப் புதிய வலிவூட்டுவதாகும்.

நெடுங்காலமாகத் தமிழக மக்கள் கோரி வந்ததை நம் அரசு இத்தேர்தல் மூலம் நிறைவேற்றுகிறது.

மக்களாட்சியில் ஒரு மகத்தான முன்னேற்றத்தை இத்தேர்தல் மூலம் நம்முடைய அரசு உருவாக்கியுள்ளது.

உள்ளாட்சி மன்றங்களுக்குப் பல்வேறு பொறுப்புகளையும் கடமைகளையும் அளித்துள்ள அரசு 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் குறைபாடுகளை நீக்க அச்சட்டத்தை விரிவாக ஆராய்ந்தது. திருத்தச் சட்ட வரைவு தயாரிக்கப் பட்டு வருகிறது.



**திரு. மா. முத்துசாமி**

உள்ளாட்சி அமைச்சர்

ஊராட்சி ஒன்றிய விரிவினை அலுவலர்களுக்கும் பொருத்தமான நேரடிப் பொறுப்புகளை ஈந்து அவர்கள் நாட்டில் நடைபெற்று வரும் பசுமைப் புரட்சியில் தக்க தொரு பங்கேற்கத் தக்கவாறு நிறுவன அமைப்பு முறைகளில் ஓர் ஒழுங்கு முறையை ஏற்படுத்து வது அரசின் தீவிரக் கவனத்தில் இருந்து வருகிறது. இதற்கெனத் தனியே 'ஊராட்சி வளர்ச்சித் துறை'யை அமைப்பதும் அரசின் ஆய்விலிருந்து வருகிறது.

அண்மையில் விலங்கின வளர்ச் சித் துறையை அரசு சீரமைத் துள்ளது. ஒவ்வொரு வட்டாரத் திலும் விலங்கின வளர்ச்சித் துணை நிலையங்கள் கூடுதலாக்கிய தற்கேற்ப விலங்கின வளர்ச்சி விரிவினை அலுவலர்களின் எண் ணிக்கையும் அதிகப்படுத்தப் பட்டது ஒரு முக்கிய மாறுத லாகும். இச் சீரமைப்பினுல் ஒவ் வொரு வட்டாரத்திலும் எத்தனை துணை நிலையங்கள் உள்ளனவோ அத்தனை விரிவினை அலுவலர்கள் இருப்பார்கள். இதனுல் ஒவ் வொருவருக்கும் கட்டுக்குள் அடங் கிய பரப்பேயிருக்குமாதலால் அவர் கள் துறை தொடர்பான பணி, விரிவினைப் பணி ஆகியவற்றைச் செம்மையுறச் செய்ய முடிகிறது.

குடிநீர் வழங்குவதற்குப் பெரும் முதன்மைதந்தும் அப்பிரச்சினையில் ஒரு சிறு அளவை மட்டுமே தீர்க்க முடிந்து உள்ளது. ஆண்டின் குறிப்பிட்ட பருவங்களில் குறிப் பிட்ட இடங்களில் காலரா ஏற் படுவது தொடர்ந்திருப்பதால், அதைப் போக்கவும், தட்டுப் பாடுள்ள இடங்களுக்குக் குடிநீர் வழங்கவும் கிராமப்புறங்களுக் காகக் குடிநீர் வழங்கும் தனித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடை முறைப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. இத்தகைய இடங்கட்குத் தனித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு அவற்றிற்கான மதிப்பீடுகளும் நெடுஞ்சாலைகள்— ஊர்ப்பணிகள் முதன்மைப் பொறி யாளரால் தயாரிக்கப்பட்டன. அவர் கொடுத்த மதிப்பீடு ஏறத் தாழ ரூ. 10 கோடியாகும். முதற் படியாக 1969—70 வரவு செல வுத் திட்டத்தில் இதற்கென 16 இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப் பட்டு அத்தொகை மாவட்டங்கள் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள் ளது. தட்டுப்பாடுள்ள இடங் களில் குடிநீர் வழங்க இத்தொகை செலவிடப்படும்.

1971—72க்குள் இம் மாநிலத் தில் உள்ள எல்லா இடங்கட்கும் பாதுகாக்கப்பெற்ற குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற அரசின் எண்ணத்தை நிறைவேற் றத் தொலை நோக்கோடு மிகப் பெரும் அளவிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரட்சி நிலை உச்சமுற்றிருந்த நிலையில்



> சமதர்மம் (Socialism) என்பது வெறும் பொருளாதார அமைப்பு மட்டுமல்ல அது வழி முறையாகும்; வாழ்க்கை நெறியாகும்; இதனைச் செயற்படுத்த அறிவுமட்டும் போதாது; இதயம் வேண்டும்.
>
> சோசலிசம் ஏட்டளவில் மட்டும் நிற்பதல்ல; ஏட்டில் பிறந்ததுமல்ல; நசுக்கப்பட்டு நலிந்தோரின் இதயக்குமுறலின் எச்சரிக்கையிலிருந்து பிறந்தது.

முதலமைச்சர் மாநிலத்தில் உள்ள எல்லா இடங்களிலும் உடனடி யாக நிறைவேற்றத் தக்க நீர் வழங்கல் திட்டங்களைத் தயாரிக் கச் செய்தார். அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து 11 கோடிக்கான திட்டங்கள் வந்தன. பல மாவட்டங்களிலிருந்தும் பேரு ராட்சிகளுடன் தொடர்புடைய, 173 நிகழ்வுகள் (Cases) வரப் பெற்றன. நிலைமையைச் சமா ளிக்க இப்பணியை மட்டும் தனித்து மேற்கொள்ளத் தக்க வகையில் தமிழ்நாடு நீர்வழங்கல் வடிகால் வாரியம் உருவாக்கப்பட்டது. எல்லா வகையான நீர்வழங்கு திட்டங்களையும் மேற்கொள்ள இவ் வாரியத்திற்கு அதிகாரமளிக்கப் பட்டது. இவ்வாரியம் சட்ட பூர்வமாக்கப்பட்டதும் அது ஆயுள் காப்பு நிறுவனத்திட மிருந்து ரூ. 11 கோடியைக் கடனுகப் பெற்று இத்திட்டங்களை நிறைவேற்றும் என எதிர்பார்க்கப் படுகிறது. அரசு ஊராட்சி ஒன்றியங்கட்கு ஆண்டு தோறும் குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக ஒதுக்கும் தொகையைக் கொண்டு இக்கடன் திருப்பித் தரப் பெறும்.

இணைப்புச் சாலைகள் அமைத்தல், தாய்சேய் நல விடுதிகள் கட்டு தல், நீர்வழங்கு திட்டவேலை கள் ஆகிய பணி வாய்ப்புகள் அளிப்பதன் மூலம் ஊர்ப்புறங் களில் உணரப்படும் வேலையின் மையை முறியடிக்க, அரசு 1970-71இல் ஒரு புதிய திட்டத்தை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. அஃது ஊர்ப்புறச் சிறப்புவேலைத் திட்டம் எனப் பெயர் பெறும். 1970—71ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென 100 இலட்சம் ரூபாய் வழ்ங்கப் பட்டுள்ளது. இத்தொகையில் 20 சதவீதம் அரிசனக் குடியிருப்பு களில் இப்பணிகளைச் செய்வதற் கெனவே குறிப்பிட்டு ஒதுக்கப் பட்டுள்ளது. வேலைகளை மேற் கொள்ள இத்தொகையை மாவட் டங்களிடையே பகிர்ந்தளிக்கப்பட் டுள்ளது. இப்பெரும் திட்டத்தி னுல் அடுத்த ஐந்தாண்டுகளுக் குள் இம்மாநிலம் முழுதும் அரி சனக் குடியிருப்புகள் உட்பட இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற பணிகள் நிறைவேற்றி முடிக்கப் பெறும் என எதிர்பார்க் கப்படுகிறது.





# அன்புக் குழந்தைகளே!



## கல்வி அமைச்சர்

## நாவலர். இரா. நெடுஞ்செழியன்

எல்லாருக்கும் என் அன்பு வணக்கம். நான் உங்களைப் பார்க்க முடியவில்லை. நீங்களும் என்னைப் பார்க்கமுடியவில்லை. ஆனுல், நான் பேசுகிறேன், நீங்கள் எல்லாரும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நான் சென்னை வானொலிக் கூடத் தின் மாடமாளிகையில் இருந்து கொண்டு பேசுகிறேன். நீங்கள் கண்ணுக்கெட்டாத நெடுந்தொலை வில் எங்கெங்கோ இருந்து கொண்டு கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

நான் பேசுவதைச் செவியால் கேட்கிறீர்கள்; செவியால் கேட் டதைச் சிந்தையில் இருத்துகிறீர் கள்; சிந்தையில் இருத்தியதைச் சீர் தூக்கிப் பார்க்கிறீர்கள்.

உங்கள் கண்ணுக்கு முன்னுல் வானொலிப் பெட்டி ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பெட்டி உலகத்தையே உங்கள் அகக் கண்ணுக்கு முன்னுல் கொண்டுவந்து நிறுத்துகிறது. உலகம் ஒலி வடி வில் உங்கள் முன் கூத்தாடுகிறது. வானொலியின் மூலம் இசைப்பாடல் களைக் கேட்டு மகிழ்கிறீர்கள். வானொலியின் மூலம் நடித்துக் காட் டப்படும் நாடகங்கள் உவகையைத் தருகின்றன. சுவையோடு கூடிய கதைகள் உங்களுக்குப் பெருங் களிப்பை அளிக்கின்றன. அரிய கருத்துக்கள் பேச்சுக்கள் உங்களுக்கு வியப்புணர்ச்சியை வழங்குகின்றன.

குழந்தைகளே! நீங்கள் வானொலி யின் மூலம் நாடகம் கேட்கலாம். நாட்செய்தி அறியலாம்; பாடல் பயிலலாம்; பேச்சு கேட்கலாம்; கதை அறியலாம்; கவிதை கேட்க லாம்; காவியம் நுகரலாம்; இவற் ருேடுகூட நீங்கள் கல்வியும் பயில லாம். உங்களுக்கான கல்விப் பயிற் சிகளைத் துவக்கி வைக்கவே நான் உங் களிடம் பேச முற்பட்டுள்ளேன்.

ஆண்டுதோறும் துவக்கக் கல்வி வானொலி மூலம் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இவ் வாண்டு உங்களுக்கு அப்படிக் கல்வி கற்பிக்கும் திட்டத்தை இந்த வானொலியின் மூலம் துவக்கி வைப் பதில் நான் கல்வி அமைச்சன் என்ற முறையில் பூரிப்படைகிறேன். பெருமைப்படுகிறேன்.

இளமையிலேயே ஒவ்வொரு வரும் கல்வி கற்க முனையவேண்டும். இதைத்தான் 'இளமையில் கல்' என்று ஔவைப் பாட்டி குறிப்பிட் டார். 'ஐந்தில் வளையாதது ஐம் பதில் வளையாது' என்று பெரியவர் கள் கூறி வைத்தார்கள். ஐந்து வயதில் படிக்காவிட்டால் ஐம்பது வயதில் ஒருவன் படிக்கவே முடி யாது. படிப்பை இளமையில் தவற விட்டுவிட்டால், எதிர் காலத்தில் வாழ்க்கையும் உங்களைத் தவற விட்டுவிடும். எனவே, நன்ருகப் படியுங்கள்; நாள்தோறும் பள் ளிக்குச் செல்லுங்கள்; ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதைக் கேளுங் கள்; அதோடுகூட அன்ருடம் வானொலி உங்களுக்குச் சொல்லிக் கொடுப்பதையும் கேளுங்கள். பள் ளிக்கு வராமல், பாடம்படிக்காமல், வானொலியைக் கேட்காமல், ஓணன் பிடிக்கப் போகாதீர்கள்; பன்றியை விரட்டச் செல்லாதீர்கள்; பம்பரம் விடப் போகாதீர் கள்; பட்டம்பறக்க விடச் செல்லாதீர் கள்; கழுதை வாலில் கலயத் தைக் கட்டி விர ட்டி அடிக்காதீர் கள்; நாயைக் கல் லால் அடித்துத் துரத்தாதீர்கள். கல்வியில் கவனம் செலுத்துங்கள்.

இளஞ்சிருர்களே! பள்ளிக்கூடத் தில் உங்கள் ஆசிரியர்கள் புத்தகங் களைக் கொடுத்து உங்களைப் படிக்கச் சொல்லுகிருர்கள். கரும் பலகை யில் எழுதிக் காட்டுகிருர்கள். படங் களைக் காட்டி விளக்குகிருர்கள். கருவிகளைக் கொண்டு பலவும் செய்து காட்டுகிருர்கள். காட்சிப் பொருள்களைக் காட்டி உணர்த்து கிருர்கள். இவற்றையெல்லாம் செய்து உங்களுடைய அறிவை வளர்க்கிருர்கள். பெற்ற அறிவை வைத்துக் கொண்டு அதனைச் சொல் லிக்காட்டவும் செய்து காட்டவும் நீங்கள் பழக வேண்டியிருக்கிறது.

எல்லாவற்றையும் அறிந்து கொள்வதே அறிவாகும்; அறிந்த அறிவை வெளிப்படுத்துவதே ஆற்றலாகும். அறிவையும், ஆற்றலேயும் ஒழுங்குபடுத்திச் சீராக்கிச் செம்மைப்படுத்திப் பண்படுத்துவதே பண்பாடு ஆகும்.

குழந்தைகளே! நீங்கள் பள்ளிக்குப் படிக்கச் செல்வது எதற்கு என்ருல், உங்கள் அறிவை வளர்க்கவும், ஆற்றலேப் பெருக்கவும், பண்பாட்டைச் சேர்க்கவும் ஆகும்.

நீங்கள் பள்ளிகளில் பெறும் கல்விக்கு மேலும் துணைபுரியவே வானெலிக் கல்விப் பயிற்சி வந்துள்ளது. வானெலிக் கல்விப் பயிற்சி நீங்கள் பாட நூலில் படித்த அறிவை மேலும் தெளிவுபடுத்தும்; பரவலான கருத்துக்களை உங்களுக்குத் தரும்; உங்கள் கல்வியின் தரத்தை உயர்த்தும்; சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு பாடஞ் சொல்லிக் கொடுக்கும்; உங்களுடைய ஐயப்பாடுகளைப் போக்கும்; உங்களுடைய அறியாமையை நீக்கும்.

இனி வாரந்தோறும் இரண்டு நாட்கள் வானெலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும். ஒவ்வொரு திங்கட்கிழமையும், புதன் கிழமையும் நடுப்பகலில் 2 மணி 10 நிமிடங்கள் முதல் 2 மணி 30 நிமிடங்கள் வரை கல்வி நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்கலாம். நீங்கள் தவருது கேளுங்கள்; கேட்டுக் குன்ருத பயன் பெறுங்கள்.

நீங்கள் முறையாகக் கேட்டு வந்தால், புத்தம் புதிய அறிவுரைகளையும், தெளிவுரைகளையும், கருத்துரைகளையும் கேட்டுப் பயன் பெறலாம். உடல் நலம் பேணும் முறைகள் உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படும். வியப்பூட்டும் அறிவியல் செய்திகள், களிப்பூட்டும் பிறமாநிலக் கதைகள் ஒலிபரப்பப்படும்.

சிறுவர் சிறுமியர்களே! உங்களுக்குப் புரியாத போது ஆசிரியர்—ஆசிரியைகளிடம் விளக்கம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஆசிரியர்களும் வானெலி நிலையத்தாரைக் கேட்டு ஐயப்பாடுகளையும், அறியாப்பாடுகளையும் போக்கிக் கொள்ளலாம்.

### ஆசிரியர்கட்கு

தொடக்கப் பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் இவ்வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வானெலிப் பெட்டிகள் உள்ள தொடக்கப் பள்ளிகள் இந்த நிகழ்ச்சிகளைத் தவருது கேட்க வேண்டும். வானெலிப் பெட்டிகள் இல்லாத தொடக்கப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்கள் பெற முயல வேண்டும். ஆங்காங்குள்ள கொடை வள்ளல்கள் வானெலிப் பெட்டிகளை நன்கொடையாகப் பள்ளிகளுக்கு வழங்க முன் வரவேண்டும்.

பள்ளிப் பாடத் திட்டத்தில் வானெலிக் கல்விப் பயிற்சித் திட்டமும் இடம் பெறும்படி ஒவ்வொரு துவக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியரும் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் கல்வி ஒலிபரப்பின் முழுப் பயனையும் நம் குழந்தைகள் பெற முடியும். குழந்தைகளின் எதிர்காலம் நலம் பெற இந்த ஆண்டின் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சியை மிக்க மகிழ்ச்சியோடு துவக்கி வைக்கிறேன்.

நன்றி! வணக்கம்! வாழ்க!

(வானெலி உரை)



## அயல்நாட்டுப் பயணம்—ஏன் ?

முன்பெல்லாம் காசிக்குப் போகிறேன், திருப்பதிக்குப் போகிறேன் என்பார்கள். இப்படி இருக்க இந்த நாட்டில் வாரத்துக்கு வாரம், மாதத்துக்கு மாதம் அமெரிக்கா போகிறேன்—ரஷ்யாவுக்குப் போகிறேன் என்று கூறப்படுவதைக் கேட்கிருேம்—நம்நாடு எந்த அளவு முன்னேறியுள்ளது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

காசிக்குப் போகிறவர்களிடம் மறக்காமல் கங்காதீர்த்தம் கொண்டு வாருங்கள் என்பார்கள். பழனியாயிருந்தால் பஞ்சாமிர்தம் கொண்டு வரும்படிச் சொல்லுவார்கள்.

ரஷ்யாவுக்குப் போகும் நமது நண்பர்களிடம் நாம் என்னென்ன கேட்போம். எப்படி அந்த நாட்டில் ஆட்சி அமைந்துள்ளது? அங்கு மாநகராட்சிகள் எப்படி அமைந்துள்ளன? எப்படி அந்த நாட்டுக் குழந்தைகள் எந்த அளவு மகிழ்ச்சியோடு இருக்கின்றன? இதையெல்லாம் தெரிந்துகொள்ள நாம் விரும்புவோம்.

உலகம் எப்படி நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள நம்மிடம் நிரம்ப ஆர்வம் உள்ளது.

பக்கத்து வீட்டுக்காரன் எப்படி இருக்கிருன் என்பதைக்கூடத் தெரிந்துகொள்ளாதது பழைய காலப்பழக்கம். இன்று நெடுந்தூரத்து நாடுகளானுலும் அங்கே மக்கள் எப்படி வாழ்கிருர்கள் என்பதை நேரில் தெரிந்துகொள்ள விழைகிருேம். அந்த நாட்டில் என்னென்ன விந்தைகள் உள்ளன என்பதை அறிய விரும்புகிருேம். அத்தனை ஆர்வம் உள்ளது. அங்கு காணுகின்றவற்றைத் தெரிந்தவகையில் புகுத்தலாம் என்பதை நம்மவர்கள் தெரிந்துகொள்ள இந்த அயல்நாட்டுப் பயணங்கள் துணையாக இருக்கும்.

—பேரறிஞர் அண்ணு

(மாநகராட்சி உறுப்பினர்களை சோவியத்நாட்டுக்கு வழியனுப்பும் விழா)



# அடி தொழுது விடை பெறுகிறேன்

**"என்னை அடிமை கொண்ட அன்பு உள்ளங்களே! உங்கள் அடிதொழுது விடை பெறுகிறேன். விரைவில் திரும்பி வந்து உங்களை மீண்டும் சந்திக்கிறேன்!"**

ஒலிபெருக்கியின் முன்னுல் நின்று இந்த மூன்று சொற்ருெடர்களைச் சுருக்கமாகக் கூறி முடித்தார் தமிழக முதல்வர். அதற்குள் அவர் நா தழுதழுத்தது; கண்களில் மல்கிய நீரைக் கறுப்புக் கண்ணுடி மறைத்தது. பல்லாயிரக் கணக்கான மக்களின் அன்பு வெள்ளத்தில் மூழ்கித் திளைத்துத் தத்தளித்துக் களைத்திட்ட சோர்வு அவர் நடையில் தெளிவாகத் தெரிந்தது. மேடையிலிருந்து இறங்கக் காலடி எடுத்து வைத்திட்டபோது மலர் மாரி பொழிந்த மக்கள் ''வெளிநாட்டுப் பயணம்—வெற்றி பெறுக'' என முழக்கிய வாழ்த்தொலி விண்ணில் எதிரொலித்தது.

1.7.70 மாலை 6-20 மணி. பம்பாய் செல்லும் விமானம் புறப்பட்டிருக்க வேண்டிய நேரம். மாலை சூட்டிட வரிசையில் ஏறி வருவோர் தொகை அப்போதுதான் ஓரளவு குறைந்தது. தயங்கிடும் கால்களில் விறுவிறுப்பை ஏற்றிக் கொண்டு முதல்வர் தம்மைச் சுமந்து பறந்திடக் காத்து நிற்கும் விமானம் நோக்கி விரைந்து நடைபோட்டார். கட்டுகளைக் கடந்து மீறி மக்கட் பெருங்கடலின் அலைகள் விமான தளமெங்கும் நிறைந்தன. விமானப் படிக்கட்டுகளில் ஏறி நின்ற முதல்வரும் அவர்தம் துணைவியாரும் கரங்களை உயர்த்தி அசைத்தபோது ஆங்குக் குழுமி நின்ருேர் அனைவருமே அவ்வாறு செய்தனர்.

### கார்கள் ஊர்ந்தன!

உள்ளே நுழைந்த முதல்வர் மீண்டும் ஒருமுறை வெளியில் வந்து நின்று அன்னை பூமியைக் கண்ணுல் தழுவி நிறைந்த மனத்துடன் புகுந்திடவும் விமானம் புறப்பட்டது. வந்து இருந்த யாவரும் தங்கள் இதயத்தை பறிகொடுத்த உணர்வுடன் இல்லந்திரும்பினர். இதற்கு முன்னர் ''யாருக்கும் இவ்வளவு சிறப்பான வழியனுப்பு விழா நிகழ்ந்ததில்லை!'' என மக்கள்பேசிச் சென்றதை எதிரொலிப்பதுபோல் இந்தியன் எக்ஸ்பிரஸ், மெயில், சுதேசமித்திரன் போன்ற ஏடுகளும் செய்தி வெளியிட்டன. அன்றைய தினம் நிகழ்ந்த பல புதுமைகளையும் கோடிட்டுக் காட்டின. மாலை 4 மணிக்குக் கோபாலபுரத்திலிருந்து புறப்பட்ட கார்களின் ஊர்வலம் (உண்மையில் கார்கள் ஒவ்வோரடி

யாக ஊர்ந்துதான் வந்தன!) மீனம்பாக்கம் அடைந்திட ஏறத்தாழ இரண்டு மணிநேரம் ஆனதும் விந்தைதானே!

மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், முதலமைச்சர் காரினின்று இறங்கியதும் முதலாவதாக ஆரத் தழுவி மலர்மாலே சூட்டினுர். பின்னர் மரபு குன்ருமல் அமைச்சர்களும், சட்டப்பேரவைத் தலேவரும், பிறரும்! தாங்கள் கொண்டு வந்த மாலே வீணுகி விடுமோ எனக் கவலேயுற்ற எளிய மக்களுக்கும் காவல் துறையினர் வாய்ப்புத் தந்து பெருமை பெற்றனர்.

சொந்தத் தொகுதியான சைதாப்பேட்டையில் எப்போதுமே கலேஞருக்குத் தனிச் சிறப்பு, அங்கு தான் அவர் திறந்த ஜீப்காரில் ஏறினுர். மனங்குளிர மக்களின் வரவேற்பினே ஏற்ருர். சாலே ஓரத்து மக்களும் இடரின்றிக் கண்டு களித்து விடையளித்திட நல்ல முறையில் வேலி அமைத்திருந்தனர். எந்த விதமான தொந்தரவுமின்றி எல்லா ஊர்திகளும் சென்றன.

### முதல் பயணம்

முதன் முறையாக வெளிநாடுகளுக்குச் செல்லும் தமிழக முதல்வர், தமது பயணம் தொடங்குவதற்கு ஒரு கிழமை முன்னதாகவே மிகவும் சுறுசுறுப்பாக இயங்க வேண்டியதாயிற்று. அண்மையில் தம் இடது கண்ணிலே இருந்து வந்த தொந்தரவின் காரணமாக வெளியூர்ச் சுற்றுப் பயணங்களே மேற்கொள்ளாமல் இருந்து வந்தவர், கடந்த 23.6.70 அன்று மாலேயில் விழுப்புரம் சென்ருர்.

விழுப்புரத்தில் தென்னுர்க்காடு மாவட்டச் சார்பில் ஒரே மேடையில் சுமார் 20 ஆயிரம் பேருக்கு ஒரே சமயத்தில் நிலப்பட்டா வழங்கும் நிகரற்ற விழா மிகச் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. 8154 ஏக்கர் விவசாய நிலம் 5859 பேருக்குத் தரப்பட்டது. மேலும் 14,144 பேருக்கு வீட்டு மனேப் பட்டாவும் வழங்கப்பட்டது. இது தவிர அந்த மேடையிலேயே நிலவள வங்கியின் சார்பில் 45 பேர்களுக்குக் கிணறுகள் வெட்டவும், ''பம்பு செட்''டுகள் அமைக்கவும் 94,550 ரூபாயை முதல்வர் வழங்கினுர்.

சட்டத்தின் துணையோடு பெறக் கூடிய நிலப்பட்டாதான் நிலேத்து







நின்று ஏழை மக்களுக்குப் பயன்தர முடியும். அல்லாமல் வேறு ஏதாவது இயக்கங்கள் வாயிலாகவோ வன்முறையாலோ நிலங்களேப்பெறுவது ஏற்றதாகாது, என்பது நல்ல முறையிலே முதல்வரால் விளக்கிக் கூறப்பட்டது. அன்று விழுப்புரம் நிகழ்ச்சிகள் முடிந்ததும், முதல்வர் தமது சொந்த ஊராகிய திருவாருருக்குப் புறப்பட்டார். அங்கும் தமது பிறந்த ஊரான திருக்குவளேயிலும் 24.6.70 அன்று சிறப்பான பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

காட்டூரிலுள்ள தமது அருமை அன்னேயாரின் சமாதிக்குச் சென்று வணக்கம் செலுத்தித் தமது அன்றைய நிகழ்ச்சிகளேத் துவக்கினுர்.

திருவாரூரில் ஒரே மேடையில் முப்பெரும் விழா நடைபெற்றது. சங்கீத மும்மூர்த்திகள் பிறந்த மண்ணல்லவா? 5158 ஏழையர்க்கு நிலப்பட்டா வழங்கப்பட்டது. தஞ்சைமாவட்ட 20வது விவசாயக் கண்காட்சித் திறப்புவிழாவும், திருவாரூரில் புதிய மருத்துவமனேக் கட்டிடத்திற்கான கால்கோள் விழாவும் இனிது நடைபெற்றன. முதல்வர் அவர்கள் மகிழும் வண்ணம் மருத்துவமனேக்கான நன்கொடையும் அங்கேயே குவியத் தொடங்கியது.

### பிறந்த ஊரில்...

திருக்குவளேயில் இருந்த தாம் பிறந்த வீட்டைத் துவக்கப்பள்ளி நடத்துவதற்காகக் கலேஞர் அளித்துள்ளார். மேலும் அஞ்சுகம் முத்துவேலர் உயர்நிலேப் பள்ளி அங்கே அமைப்பதற்கு அரசின் ஆணே பெற்றுத் தம் சார்பில் பங்குத் தொகையினேயும் அளித்து அதன் கட்டிடத்திற்குக் கால்கோள் விழாவினேயும் அன்றே நடத்தி வைத்தார். ஏற்கனவே தம்மால் கட்டித் தரப்பட்ட அஞ்சுகம் முத்துவேல் தாய்சேய் நலவிடுதியின் கட்டிடத்தையும் புதுப்பித்துத்தந்தார்.

ஊரிலிருந்து சென்னே திரும்பியதும் மின்சாரத் துறை அதிகாரிகளுக்கும்ஊதிய உயர்வளித்து அவர்களுக்கு இருந்த குறையினேயும் போக்கினுர். தமிழ் நாட்டிலுள்ள எல்லா கிணறுகளுக்கும் நீர் இறைக்க மின்கட்டணம் 9 பைசாதான் என்பதை மீண்டும் தெளிவுபடுத்தினுர்.

26.6.70 அன்று சிலம்புச் செல்வர் ம.பொ.சி அவர்களது 65வது பிறந்தநாள் விழாவில் முதல்வர் கலந்து கொண்டு அந்த நல்லெண்ணம் படைத்த தமிழ்ச் சான்ருேரை மனமாரப் பாராட்டி வாழ்த்தினுர். முதல்வரின் பெருந்தன்மை நிறைந்த பண்புகளேச் சான்றுகளினுல் எடுத்துக் காட்டி அப்பேர்ப்பட்டவர் வெளிநாடு செல்லும்போது அனேவருமே வழியனுப்ப வரவேண்டும் என்று தெரிவித்தார் ம.பொ.சி. அவர்கள்.



### யுனெஸ்கோ மன்றம்

ஐக்கிய நாடுகள் கல்வி—பண்பாட்டு மன்றம் என்ற ஒன்று திரு க. அறிவழகன் அவர்களேத் தலேவராகக் கொண்டு இயங்கி வருகின்றது. இந்தக் கல்வி ஆண்டில் இது, தமிழுக்குச் சிறப்புப் பணி புரிந்த பலரைப் பாராட்டத் திட்டமிட்டு, முதலமைச்சரின் வயதைக் குறிக்கும் முறையில், 47 பேரைப் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுத்துள்ளது. அதிலே முதலமைச்சரும் ஒருவர். மேலும் அவரைக் குறித்து இயற்றப் பெற்ற ''கலேஞர் கவிமணி மாலே'' என்ற நூல் ஒன்றினேயும் 27.6.70 அன்று ராஜாஜி மண்டபத்தில் வெளியிட ஏற்பாடு செய்திருந்தது இந்த யுனெஸ்கோ மன்றம்.



### மத்திய அமைச்சர்கள் புகழுரை

மத்திய அரசாங்க அமைச்சர்களான டாக்டர் திரிகுணசென்னும், பேராசிரியர் ஷேர் சிங்கும் இந்த விழாவில் சிறப்புறக் கலந்து கொண்டு தமிழக முதல்வருக்குப் புகழாரம் சூட்டி மகிழ்ந்தனர். ''திரு கருணுநிதி ஒப்புவமையற்ற தலேவர். மிகக் குறைந்த காலத்தில் தமிழகத்தில் அனேத்துத் துறைகளிலும் முன்னேற்றத் திட்டங்களேத் தந்து, தமது திறமையையும் உறுதியான தன்மையினேயும் வெளிப்படுத்தியுள்ளார்'' என்று திரிகுணசென் அவர்கள் பாராட்









டினுர்கள். திரு ஷேர் சிங் அவர்களோ அடுக்கு மொழியிலேயே புகழ்ந்தார்கள். ''கருணுநிதி அருங்கவி—அரசியல்வாதி; நூலறிவாளர்—அரசியல் நுட்பவாதி; நடிகர்—நிர்வாகி; கூத்தாசிரியர்—குடியாட்சியாளர்; திறன்மிகு தந்திரசாலி. அவரது புகழ் தமிழ்மொழி போல் நீண்ட நெடுங்காலம் வாழ்க!'' என்று.

28.6.70 அன்று ராஜாஜி மண்டபத்தில் ஊராட்சி ஒன்றிய மாமன்ற மாநாட்டை உள்ளாட்சித் துறை அமைச்சர் துவக்கி வைத்துப் பஞ்சாயத்துத் தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பதுபற்றி விளக்கமுரைத்தார். அன்று மாலை சிறப்புரையாற்ற வந்தார் முதல்வர் அவர்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர் அளித்த வரவேற்பினைப் பெற்றுக் கொண்டு, பல்கலைக்கழக நூற்ருண்டு விழா மண்டபத்திற்கு விரைந்தார்.

## திரையுலகப் பெருவிழா!

தமிழகத் திரைப் படத்துறையினர் சார்பில் திரு ஏ. எல். சீனிவாசன் அவர்கள் ''கருணுநிதி டிரஸ்ட்'' ஏற்படுத்துவதற்காக ஒரு லட்சம் ரூபாய் திரட்டியிருந்தார். அதனை அளிக்கவும், தமிழக முதல்வரது பிறந்தநாள் விழா எடுக்கவும், வெளிநாடு செல்வதற்கு வாழ்த்தி வழியனுப்பவும் அங்கே விழா நடைபெற்றது. கலையுலக நண்பர்கள் மனந்திறந்து பேசினர். அன்னையார் அஞ்சுகம் அம்மையை நினைவு கூர்ந்தும், திரும்பி வரும்போது ஒளி படைத்த கண்ணேடு வருமாறும் வேண்டினர். வயதான நடிகர்களைப் பாதுகாக்கும் கருத்தொன்றை முதல்வர் தெரிவித்தார்.

## பரந்த மனம்

அடுத்த நாள் 29.6.70 அன்று சென்னை மாநகராட்சி, தமிழக முதல்வருக்குச் சிறப்பான வரவேற்பு ஒன்றினை அளித்தது. பரந்த மனப்பான்மைக்குப் பற்பல சான்றுகளை எடுத்து உரைத்தார் தமிழக முதல்வர் அவர்கள். அடுத்து, நலம் நாடுவோர் குழுவினர் சார்பில் சீரிய விழா ஒன்று சென்னை அசோகா ஓட்டலில் நடைபெற்றது. பெரியார் அவர்களும், குன்றக்குடி அடிகளாரும், தமிழ்ச்சான்ருேர் பலரும், அமைச்சர் பெருமக்களும் கலந்து கொண்ட அந்த வழியனுப்பு விழா உணர்ச்சிமயமாக அமைந்திருந்தது. உள்ளத்தைக் காட்டிப் பேசும் நல் விழாவாகவும் அது வாய்த்தது.

30.6.70 அன்று நெருக்கமாகப் பல நிகழ்ச்சிகள். காலையிலேயே முதல்வர் அவர்கள் கீழ்ப்பாக்கம் சென்று ராஜாஜி அவர்களைச் சந்தித்து, வணங்கி, வாழ்த்துப் பெற்ருர்கள். பின்னர் குரோம்பேட்டை சென்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களைக் கண்டு விடை பெற்ருர்கள். கோட்டையில் நிருபர்களைச் சந்தித்துத் தாமும், பிறகு நிதியமைச்சரும் வெளிநாடு செல்லும்போது, தமது துறைகளை யார்யார் கவனித்து வருவார்கள் என்பதற்கான விவரங்களை அளித்தார்கள். பத்திரிகைச் செய்தியாளர்களுக்குச் சிறியதோர் தேநீர் விருந்தளித்து விடைபெற்ருர்கள். அதற்கு முன் தம்முடன் மேல் நாடுகளுக்கு எடுத்துச் செல்வதற்காகத் தாமே இயற்றி வெளியிட்ட நான்கு ஆங்கில நூல்களை அனைவர்க்கும் வழங்கினுர். அவை (1) தி.மு.க. தோற்றமும் வளர்ச்சியும் (2) முத்துக்கள் (கவிதைத் தொகுப்பு) (3) தீச்சுடர் (சிறு கதைத் தொகுப்பு) (4) நாம் முன்னேறும் போது... (சொற்பொழிவுகள்) ஆகிய, சிறந்த அமைப்போடு கூடிய நூல்களாகும்.

## சீரணி விழாவில் "தமிழரசு"

அன்று மாலை மாநகராட்சி நேரு விளையாட்டரங்கில் சீரணி அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்களும் மற்றும் சீரணித் தலைவர்களும் மிகச் சிறப்போடு ஒரு வழியனுப்பு விழா நடத்தினர். எல்லா அமைச்சர்களும், நகரப் பெரியோர்களும் இதில் கலந்து கொண்டனர். சீரணியினரின் அணிவகுப்பு கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்தது போதாதென்று இறுதியில் நாவுக்கும் விருந்தொன்று தந்து களித்தனர்.



இதே நிகழ்ச்சியோடு, நமது முதல்வர் அவர்களின் நீண்ட நாளைய கனவொன்று நனவான விழாவும் இணைக்கப்பட்டது. தமிழக அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் ஏடுகள் பல நடத்தப்பட்டு வந்தன. இவற்றைப் பொது மக்களும் விரும்பிப்படிக்குமாறு இவை அமையவில்லை என்ற குறைபாடு இருந்து வந்தது. அதனை நீக்கும் பொருட்டு, எல்லா ஏடுகளையும் ஒருங்கிணைத்துத் ''தமிழரசு'' என்ற பெயரால் தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித் தனியே இரு ஏடுகள் வெளியிட விரும்பினுர் கலைஞர் அவர்கள். அவற்றின் முதல் இதழை இவ் விழாவிலே வெளியிட ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

முதல்வர் அவர்கள் தமக்கேயுரிய நகைச்சுவை மிளிரும் பாணியில் ஆங்கிலத் ''தமிழரசு'' இதழைச் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களிடத்திலும், தமிழ் இதழைத் திரு டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்களிடமும் வழங்கினுர்கள்.

முதல்வர் அவர்களின் சிறப்பியல்புகள்குறித்தும், மேனுட்டுப் பயணம் எவ்வளவு அவசியமானது என்பது குறித்தும் கல்வி அமைச்சர் நாவலர் அவர்களும், காயிதே மில்லத், கே. பாலசுப்ரமணிய அய்யர், சிலம்புச் செல்வர், மேயர் பாலசுந்தரம், டாக்டர் ஏ.எல். முதலியார் போன்ருேர் விளக்கிப் பேசினர்.



மறுநாள் 1.7.70 காலையில் அண்ணு சதுக்கத்துக்குச் சென்று, முதல்வர் அவர்கள் மலர் வளையம் வைத்து வணங்கித், தம்மை ஆளாக்கிவிட்ட அருமை அண்ணனின் நினைவு கூர்ந்தார். அன்று பகல் முழுதும் தமது இல்லத்தில் இருந்து, மலர்மாலை சூட்டி வாழ்த்துத்தெரிவிக்க வந்த வண்ணமிருந்த நல்லெண்ணம் படைத்த அரசு அதிகாரிகள், ஊழியர்கள், உழுவலன்பர்கள், கழக நண்பர்களின் அன்பினில் ஆழ்ந்து மகிழ்ந்தார். மாலை 4 மணியளவில் மிகுந்த கட்டாயத்தின் பேரில் எஞ்சியிருந்த மக்களின் மலர் மாலைகளை விரைவாக ஏற்றுக் கொண்டு விமான நிலையம் புறப்பட்டார்.

பெற்ருேர்களின் படத்துக்கும், பேரறிஞர் அண்ணு அவர்களின் திருவுருவப் படத்துக்கும் மாலைகள் அணிவித்துவிட்டுக், கல்வி அமைச்சரும், உணவு அமைச்சரும் உடன் வரத் தமது காரில் ஏறி அமர்ந்தார். அவரது துணைவியாரும், சகோதரிகளும், மக்களும், மற்றவர்களும் பின்னுல் பெரிய ''வேன்'' ஒன்றில் ஏறிக்கொண்டனர். பத்திரிகைச் செய்தியாளர்கள் ஆர்வத்தோடு பேருந்து ஒன்றில் அமர்ந்தவாறு பின் தொடர்ந்தே வந்தனர்.



# I.O.B nurses your savings



Just as a mother takes pride in her child and nurses him with tender care, I.O.B considers it a privilege to cherish your savings, nourish them with interest and hold them in trust till you need the money.

I.O.B provides a wide variety of savings facilities to suit every one—savings bank accounts—recurring deposits — term deposits — special savings scheme for minor children.

Don't forget! Interest income up to Rs. 3000 per annum earned on savings with the bank is tax-free. So also bank deposits up to Rs. 1.5 lacs are exempt from wealth tax.

Let your savings grow with I.O.B

INDIAN OVERSEAS BANK
Central Office: 151 Mount Road, Madras-2

IOB-5940




## காஞ்சிப்பட்டு, திருப்பதி லட்டு, தஞ்சாவூர்த் தட்டு!

"அத்தான்! ஊருக்குப் போகிறீர்களே, தஞ்சாவூரில் .........!"

"என்ன தலையாட்டிப் பொம்மை வேண்டுமா?"

"நீங்கள் இருக்கும்போது அது எதற்கு? நான் சொல்ல வந்தது தஞ்சாவூரில் தட்டு...!"

"என்ன? தஞ்சாவூரில் எதற்குத் தட்டு? காவிரியாற்றின் கழிமுகப் பகுதியில், இப்போது முப்போகம் விளைகிறது; "கருணை" நெல் வேறு இப்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு வேளாண்மை செய்யப்படுகிறது, அப்படியிருக்க அங்கு ஏது தட்டு?"

"உங்களுக்குத் தெரியாதா? கை வேலைப்பாடு நிறைந்து, அழகு மிகுந்து, அற்புதமான பரிசுப் பொருளாகிய இந்தத் தட்டு ஒன்று வாங்கி வாருங்கள், அத்தான்!"

"அப்படியா! கட்டாயம் வாங்கிவருகிறேன்!"






'பழனி' என்றதும் பஞ்சாமிர்தத்தின் இன்சுவை நம்மை ஆட்கொள்வதை நன்கு அறிவோம். இது வேறு எந்த நகரிலும் இல்லாத சிறப்பு. பஞ்சாமிர்தச் சுவையை அவனியெங்கும் பரப்புவது பழனிக்கு மட்டுமே உரிய தனிச் சிறப்பாகும். முருகப் பெருமானின் தரிசனம் பெற்றுக் கரத்திலே பஞ்சாமிர்தக் குப்பிகளை ஏந்திச் செல்வதில் தான் எத்தனை இன்பங்களைப் பெறுகிறார்கள், பழனி நோக்கி வந்து செல்பவர்கள். அத்தகைய களிப்புக்கு வித்தாக இருப்பது வாழைப் பழம் தோய்ந்த பஞ்சாமிர்தம் அல்லவா? நாள்தோறும் பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவிற்குப் பஞ்சாமிர்தத் தயாரிப்புத் தடங்கலின்றிப் பழனியில் நடந்துவர இன்றியமையாத மூலப்பொருள், ஈரப் பசை தோய்ந்த வாழைப் பழங்களாகும். பதமாகக் கனிந்த வாழைப் பழங்கள் தேவைக் கேற்ப நாள்தோறும் கிடைத்து வருவதால் பஞ்சாமிர்தத்தின் சுவை பேணிக் காக்கப்படுகிறது.

பழனியில் கிடைக்கும் வாழைப் பழங்கள் இனத்தால்—வகையால் பல்வேறு வகைப்பட்டவை. சமவெளிப் பகுதியில் பயிராகும் பூவன், மிருசியஸ், பச்சைநாடான், ரஸ்தாளி வகை முதல் பழனி மலைத் தொடரில் பயிராகும் சிறுமலைப் பழம் ஈருக, மிக உயர்ந்த பகுதியில் சாகுபடியாகும் விருப்பாட்சி இனம் வரை, பழனி நகர் கடைகளை அலங்கரிப்பது பழனிக்கே உரிய பெருமையாகும். சிறிது காலம்கூடத் தேங்காமல், புதுமை குன்றாத கனிவோடு அவ்வளவு வாழைக் கனிகளும் பஞ்சாமிர்தக் குப்பிக்குள் அடைக்கலம் கொண்டு, அதற்கு அவையேற்றும் சுவையால் உலர்ந்த கனிகளுக்குப் பழனியில் இடமில்லை என்றாகி விடுகிறது.

பழனியில் வாழைப் பழங்களின் தேவை அதிகமாக இருந்தாலும் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்குப் பழனி சமவெளிப் பகுதியில் வாழைச் சாகுபடிப் பரப்பு 278 ஏக்கர் அளவேயாகும். மலைப் பழங்கள் அதிக அளவில் அரசோச்சுவதால் சமவெளிப் பகுதிப் பழங்களுக்குக் கிராக்கி குன்றி விடுகிறது. சமவெளிப் பகுதி வாழைப் பழங்களைவிடச் சுவையில்—பதத்தில் மலைப் பழங்கள் சிறந்து விளங்குவதால் அவைகளுக்கே பஞ்சாமிர்தத்தில் முதலிடம் தரப்படுகிறது.

சாகுபடியாகும் சமவெளிப் பகுதி வாழைகளில் அதிக இடத்தைப் பெறுவது பூவன் வகையாகும். வியாபார முறையில் அதிக அளவில் உற்பத்தியாகும் இந்த வகை, பழத்திற்காகவே சாகுபடியாகிறது. பச்சை நாடான், ரஸ்தாளி, மிருசியஸ் ஆகிய வகைகள் பரவலாகப் பயிரிடப்படுகின்றன. இந்த வகைகள் அனைத்தும் நல்ல வடிகால் வசதியுடன் கூடிய வளமான மண்ணில் நன்கு பயிராகின்றன. குள்ளவகை வாழையான மிருசியஸ் ஏக்கர் ஒன்றில் 2600 கன்றுகள் வரை நட்டு உரிய உரங்களைக் காலத்தே இடுவ

### "தேன் குடத்தில் விழுந்த ஈயும்-நானும்"

வெளிநாடு செல்லும் என்னைப் புகழ்ந்து பேசிய பாராட்டுரைகட்குப் பிறகு, அணிவிக்கப்பட்ட மாலை உபசாரங்களுக்குப் பிறகு நான் பேசுவது என்பது உள்ளபடியே கொஞ்சம் இயலாத காரியந்தான்.

ஈ ஒன்றினைத் தேன் குடத்தில் போட்டுவிட்டுக் கொஞ்சம் பறபார்க்கலாம் என்று கூறுவதும், தாங்கமுடியாத அளவுக்குப் புகழாரத்தைச் சூட்டிவிட்டுக் கொஞ்சம் பேசு பார்க்கலாம் என்று கூறுவதும் என்னைப் பொறுத்தவரையில் ஒன்றாகத்தான் தோன்றுகிறது.

ஆனால் தேன் குடத்தில் விழுந்த ஈயாக நான் மாறிவிடுவேனானால் இந்த நாட்டிற்கு, சமுதாயத்திற்கு, கலை உலகிற்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யத் தவறியவன் ஆவேன். அதனால் தேன் குடத்தில் நான் போடப்பட்டாலும் மெல்ல மெல்லச் சிறகுகளைத் தூக்கிப் பறக்க முனைகிறேன்.

முதல்வர் கலைஞர்

*தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை வழியனுப்பு விழாவில்*
*28—6—'70*

தன் மூலம் ரூ 10,000 வரை வரு வாய் தேடித் தந்துள்ளது இந்தப் பகுதியிலே.

சிறுமலை இனத்தைச் சார்ந்த வாழைகள் கடல் மட்டத்திலே யிருந்து 2000 அடி முதல் 2500 அடி வரை உயரமுள்ள இடங்களில் சாகுபடியாகின்றன. இவற்றில் இருந்து வரும் வாழைப் பழங் களிலே ஈரச் சத்து குறைவு. ஆகவே அதிகநாள் சேமித்து வைக்க முடி கிறது.

விருப்பாட்சி இனத்தைச் சார்ந்த வாழைகள் 3000 முதல் 3500 அடி வரையுள்ள உயரத்தில் சாகுபடியா கின்றன. பழங்களில் ஈரம் பதம் குறைந்திருப்பதால் அதிகநாள் சேமித்து வைக்க முடிகிறது.

வாழைப் பழச் சாகுபடியில் விவ சாயிகளை இந்தப் பகுதியில் ஊக்கு விப்பதற்காகத் தீவிர சாகுபடித் திட்டமொன்று திண்டுக்கல்லை மையமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வசதியும், வேளாண் மைத் துறை அலுவலர்கள் மூலம் தொழில் நுட்ப ஆலோசனைகளும் பெற்று இந்தப் பகுதி விவசாயிகள் இந்தத் திட்டத்தால் பயன் பெறு கிறார்கள்.

வாழைப் பழச் சாகுபடியை மேற் கொண்டுள்ள விவசாயிகளின் நன் மையைக் கருதியும், நாள்தோறும் வந்து செல்லும் பல்லாயிரக் கணக் கான மக்களின் விருப்பத்தை முன் னிட்டும் அரசாங்கமே ஒரு பஞ்சா மிர்தத் தொழிற்சாலையைத் துவக்கி உயர்ந்த ரகப் பஞ்சாமிர்தமும் வேறு பலவகையான பழப் பக்குவப் பொருள்களும் தயாரிக்க முன் வரு வது வரவேற்கத் தக்கதாகும்.



---

## ஒரு வீராங்கனையின் கதை



மலையோரத்தில் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த மங்கை, அவள். மானினத்தைச் சூறையா டும் வேங்கை ஒன்று அந்த மங்கை யின் பாட்டனாரின் உயிரைப் பலி கொண்டது. பசுவென இருந்த அப் பெண், பகை நடுங்கும் புலியானாள். மானிடரைக் கொன்று தின்னும் புலி யினத்தை ஒழித்துக்கட்ட உறுதி கொண்டாள். மாடோட்டுவதற்குக் கோலேந்திய கரத்தில் துப்பாக்கி ஏறியது. மங்கையின் கனவும் நன வாகியது.

சென்ற மார்ச் திங்கள் 23-நாள் துப்பாக்கி சுடுவதில் சிறந்த பெண் என்ற முறையில், தமிழக முதல்வர் கலைஞரிடமிருந்து பரிசு பெற்றாள். பாராட்டுதலும் பெற்றாள்.

அந்த வீராங்கனையின் பெயர் ராம்பிரியா. மத்தியப் பிரதேசத் தைச் சேர்ந்தவள். முன்னாள் ராணுவ வீரரின் மகள்.

தாத்தாவின் மரணத்தினால் புலி களைக் கொல்லத் துப்பாக்கிப் பயிற்சி பெற விரும்பிய செல்வி ராம்பிரியா வுக்கு மத்திய பிரதேசத்தில் அதற் குச் சரியான வாய்ப்புக் கிடைக்க வில்லை. அப்பகுதியில் வாசம் செய்து வந்த தமிழரான திரு. விநாயகத் தின் குடும்பத்தாருடன் சென்னை வந்தாள். சென்னை, காவல்துறை யினர் நடத்திவரும் துப்பாக்கி சுடும் பயிற்சி முகாமில் ஒரு வாரம் பயிற்சி பெற்றாள். ·22 என்ற துப்பாக்கி (ரைபிள்) சுடுவதில் திறமையும் பெற்றாள்.

துப்பாக்கி சுடும் போட்டியில் 4-வது இடத்தைப் பெற்று, முதல்வ ரிடம் பரிசு வாங்கிய ராம்பிரியா தனது வெற்றிக்கு முக்கிய காரணம், சென்னை காவல்துறை அளித்த திற மையான பயிற்சியும், போலீசாரின் அன்புமே என்கிறாள்.

சென்னை காவல் துறையினரால் நடத்தப்பெற்று வரும் சிவிலியன்கள் துப்பாக்கி சுடும் பயிற்சி நிலையம் தற்காப்புக்கும், தேவையானால் நாட் டின் பாதுகாவலுக்கும் இன்றியமை யாத இந்தப் பயிற்சியினைச் சிறப்புற நடத்திவருவது பாராட்டுக்குரிய தாகும்.




**" ஒவ்வொரு ஏக்கரிலும் அதிக மகசூல் ;**

**ஒவ்வொருவருக்கும் அதிக வருவாய் "**

என்ற சீரிய குறிக்கோளுடன் தமிழக அரசு தீவிர சாகுபடித் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இந்தியா போன்ற விவசாய நாட் டில், எல்லா மாநிலங்களும் கடைப் பிடிக்கத் தக்க முன்னுதாரணமாக இது திகழ்கின்றது. அதிக உற் பத்தி, அதிக வருவாய் என்று கூறு வதினாலேயா ஒரு நாடு முன்னேறி விட முடியும்? இல்லை பட்டினிகிடந் தாலும் கிடப்போம், அன்னிய நாட்டிடமிருந்து பிச்சை எடுக்க மாட்டோம் என்று வீறுகொண்டு பேசுவதாலேயே பொருள் உற் பத்தி பெருகிவிட முடியுமா?

**" எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை**
**வாழிய நிலனே ! "**

என்று ஔவை மூதாட்டி பாடிச் சென்றாள். அம்முறையில் கடின மாக உழைத்திட வேண்டும். நம் நாட்டு மக்கள் கடினமாக மாடாய் உழைத்திட்டாலும், பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை, பழைய சாகுபடி முறைகளையே கடைப்பிடித்து வந்ததால், அந்நிய நாடுகளைப் போன்று விவசாய முன் னேற்றத்தைக் காண முடிந்ததில்லை இங்கு. வாழ்க்கைத்தரம் உயர்ந்து, வளரும் விஞ்ஞானத்தால்வாழ்க்கை முறை பெரிதும் மாறிவிட்ட சூழ் நிலையில், உற்பத்தி முறை மாறா திருக்குமேயானால் மனிதனின் அன்றாடத் தேவைகளை எந்த அரசும் பூர்த்தி செய்யவியலாது என்ற உண்மையைத் தெள்ளத் தெளிய அறிந்து அதன்படிச் செயல்படத் தொடங்கியது நம் தமிழ்நாடுஅரசு.

**" சென்றிடுவீர் எட்டுத் திக்கும்–**
**கலைச் செல்வங்கள் யாவும்**
**கொணர்ந்திங்கு சேர்ப்பீர் "**

என்று பாரதி பாடியதற்கிணங்க நம்முடைய நல்லாட்சிக் காவலர்கள் 'பசுமைப் புரட்சித் திட்டத்திற் கான' வாயில்களை நன்கு ஆராய்ந்து செயல்பட்டனர். இந்த அடிப்படை யில் விவசாயத்தில் புதிய, நவீன முறைகளைப் புகுத்தி, உற்பத்திப் பெருக்கை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக நமது அரசால்1968ம் ஆண்டு, ஏப்ரல் முதல் நாளன்று 'வேளாண்மைத் தொழிற் கழகம்' இருபது லட்சம் ரூபாய் அடிப்படை முதலீட்டுடன் நிறுவப்பட்டது. உற் பத்திப் பொருள்களை பக்குவப் படுத்திப் பாதுகாப்பதும், உற் பத்திப் பெருக்கத்திற்குத் தேவை யான உர வகைகளை அளித்திடப் பயன்படும் தொழிற்சாலைகளைத் தொடங்கி நடத்துவதும் இக்கழகத் தின் தலையாய பணிகளாகும்.

ஆக்கப் பகுதியின் ஆரம்பப் பணியை, இக்கழகம் 1968, ஏப்ரல் முதல் நாள் தொடங்கியது. தமிழ் நாட்டு விவசாயிகளுக்குத் தவணை முறையில் டிராக்டர்களையும் இயந் திரக் கலப்பைகளையும், எண்ணை அல்லது மின்சாரத்தால் இயங்கும் நீரிரைக்கும் கருவிகளையும் வழங்கு வதே இதன் ஆரம்பகாலப் பணி யாக அமைகின்றன. இயந்திரத்திற் கான விலையில் 125 சதவீத மதிப் பிற்கு நிலம் ஈடாகக் காட்டப்பட் டால், விவசாயிக்குத் தேவையான துணைக்கருவிகளுடன் டிராக்டர் வழங்கப்படுகின்றது. வேளாண் மைத் தொழிற் கழகம், டிராக்ட் டருக்கும், துணைக் கருவிகளுக்கு மான தொகையில் 75 சத வீதத்தைக் கடனாக அளிக்கிறது; எஞ்சிய 25 சதவீதத் தொகையை விவசாயி கட்ட வேண்டும். அவ் விதம் இக்கழகத்தால் டிராக்டர் வாங்கவென விவசாயிக்கு அளிக்கப் படும் கடன்தொகை 7 ஆண்டுகளில் ஒத்த தவணைமுறையில் கட்டியாக வேண்டும். இதற்காக அவர்கள் ஏற்கும் வட்டி, ஆண்டிற்கு 8½ சத வீதமே ஆகும். அரசு அளித்திடும் விவசாய முன்னேற்றத்திற்கான இத்தகு வசதியைப் பெற விழையும் விவசாயிக்குச் சொந்தத்தில் நஞ்சை யானால் 5 ஏக்கரும், புஞ்சையானால் 10 ஏக்கரும் இருந்தால் போதுமான தாகும். நஞ்சை புஞ்சை நிலங்கள் சேர்ந்து பெற்றிருக்கும் விவசாயி களைப் பொறுத்தமட்டில் ஓர் ஏக்கர் நஞ்சை இரண்டு ஏக்கர் புஞ்சைக்குச் சமமாகக் கணக்கிடப் படுகின்றது.

### உங்கள் வீட்டுத் தோழன்

டிராக்டர் என்றால் அது என்னவோ என்று எண்ணியவர்கள் ஏராளமிங்கே உண்டு. அது மிட்டா மிராசுகளுக்கே சொந்தமாகக் கூடியது என்று தாழ்மையுணர்ச்சி கொண்டிருந்தோர் பலர் உண்டு. ஆனால் அந்தக் கவலை எல்லாம் இந்த

## அழுகின்ற குழந்தை அதிக நாள் வாழும்!

**குழந்தை அழுகிறதா?**

**ஆனந்தப்படுங்கள்!**

**குழந்தை அழுவது அதன் வளர்ச்சிக்கு ஓர் அருமையான உடற்பயிற்சி ஆகும். குழந்தை அழும்பொழுது அதன நுரையீரல்கள் திறக்கின்றன; மார்பகம் விரிவடைகின்றது; இரத்த ஓட்டம் சுறுசுறுப்படைகிறது.**

**ஆனால் இது குழந்தை பிறந்த சில மாதங்களுக்கு மட்டுமே பொருந்தும். பின்னர், பசியோ தாகமோ அன்றி வலியோதான் குழந்தையின் அழுகைக்குக் காரணமாகும்.**

அரசிடம் தேவையில்லை. அது உங்கள் வீட்டுத் தோழன்! தனி ஒருவர் பொறுப்பிலோ, கூட்டுப்பொறுப்பிலோ தாராளமாக யாரும் பெற்றுக் கொள்ளலாம்; தடைகள் ஏதுமில்லை. இன்ன கம்பெனியைச் சார்ந்ததைத்தான் பெற முடியும் என்பதல்ல, எந்தக் கம்பெனியைச் சார்ந்ததாயினும், எந்நாட்டு உற்பத்தி வகையாயினும், விவசாயிகளின் எண்ணப்படி பெற விவசாயி, செய்ய வேண்டியது இக் கழகத்தின் துணை விவசாயப் பொறியாளரிடமிருந்து விண்ணப்ப மனுவைப் பெற்று, பூர்த்தி செய்து, தேவையான சிட்டா, அடங்கல், வில்லங்கச் சான்றிதழ்களுடன் அனுப்பிவைக்க வேண்டியதுதான். மாற்றுரிமையில்லாத வகையில் ரூ. 37,500க்கு சால்வன்ஸி சான்று, தாசில்தார் ஒப்பம் பெற்றுக் கொடுத்திடவேண்டும். இருப்பு நிலைக்கேற்ப, தொகைக்கேற்ப, விவசாயி தனக்குப் பிடித்தமான டிராக்டரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தவணை முறை ஒப்பந்தமும், அடமான ஏற்பாடுகளும், அவ்விவசாயி இக்கழகத்திற்குச் செய்துதர வேண்டும். அத்துடன் கட்ட வேண்டிய மீதித் தொகைக்கான ஒப்புதலையும் எழுத்து வடிவில் அளிக்கவேண்டும்.

### ஏனைய பணிகள்

டிராக்டர் மட்டுமின்றித் தவணை முறையிலேயே, ஆயில் எஞ்சின்களையும், மின்விசை மோட்டார் பம்பு செட்டுகளையும் வேளாண்மைத் தொழில் கழகம் வழங்கி வருகின்றது. எந்தவித லாபமும் இன்றி, அடக்கவிலை மதிப்பீட்டிற்கே அளிப்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். பம்பு செட்டின் மதிப்பீட்டைப் போல் இருமடங்கு மதிப்புள்ள நிலத்தை விவசாயி பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு பம்பு செட்டிற்காகப் பெறப்படும் கடனை, ஏழு ஆண்டுகளில் ஒத்த தவணைகளில் ஆண்டிற்கு $8\frac{1}{4}$ சதவீதவட்டியுடன் திருப்பித்தர வேண்டும். பம்புசெட்டிற்கான விண்ணப்ப மனுவை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். மின்சாரம் அளிப்பதற்கான ஒப்புதல் பெற்றவுடன், பம்புசெட் அளிக்கப்படுகின்றது.

### திட்ட இலக்கும் வெற்றி நிலையும்

வேளாண்மைத் தொழிற் கழகம், தொடக்க ஆண்டான 1968-69ல் ரூ. 3,36,50,000 மதிப்புள்ள 10,000 பம்புசெட்டுகளும், 300 டிராக்டர்களும், 30 இயந்திரக் கலப்பைகளும், தவணை முறையில் விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும் எனத் திட்டமிட்டது. தலைமை இயக்குநர், தனது அலுவலர்களது துணையோடு தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கு அல்லது ஐந்து முக்கிய பகுதிகளில் முகாமிட்டுப் பம்புசெட்டிற்கான கடனை உடனுக்குடன் அவ்விடத்திலேயே வழங்கினர். தொடக்க ஆண்டின் இறுதிவரை ரூ. 28 லட்சம் மதிப்புள்ள 87 டிராக்டர்களும், ரூ 92.56 லட்சம் மதிப்புள்ள 3,800 பம்புசெட்டுகளும் வழங்கப்பட்டன. பெர்கூசன், பி. 275, இந்துஸ்தான், எஸ்கார்ட், டி. டி. 14-பி ஆகிய டிராக்டர் வகைகள் இதில் அடங்கும். இரண்டாம் ஆண்டான 1969-70இல் ரூ 31.63 லட்சம் பொறுமானமுள்ள 98 உள்நாட்டு டிராக்டர்களும், ரூ 68,000 மதிப்புள்ள யு-500 டிராக்டர் 5ம், ரூ 31,400 மதிப்புள்ள ஸெட்டார் டிராக்டர் 2ம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. 350 ரஷிய டிராக்டர்கள் தவணை முறையில்லாது, முழுத் தொகைக்கு விற்கப்பட்டன. அத்துடன் 5893 பம்பு செட்டுகளையும் வழங்கியுள்ளது.

### எதிர்காலத் திட்டம்

வேளாண்மைத் தொழிற் கழகம் டிராக்டர்களைப் பழுதுபார்க்க, வாடகைக்கு விடவுமான சர்வீஸ் சென்டர் ஒன்றைத் தஞ்சை மாவட்டத்தில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு இல்லாத



## காணக் கிடைக்காத பம்பு செட்!

**உலகத்திலேயே உயர்ந்த ஒரு பம்பு செட் உங்களுக்குள்ளேயே ஒளிந்திருக்கிறது.**

**அதுதான் உங்கள் இதயம்!**

**கைப்பிடி அளவே உள்ள இந்த பம்பு • செட் வேலை செய்ய வெளியிலிருந்து மின்சாரம் வரத்தேவையில்லை!**

**மிகவும் மென்மையானதாக நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கும் உங்கள் இதயம் உடல் உறுப்புகளிலேயே மிகவும் வலுவான தசை நார்களால் ஆனது. வளர்ந்த மனிதனிடத்தில் அது நிமிடத்திற்கு 70 முறை துடிக்கிறது. நீங்கள் குறைந்தது அறுபது ஆண்டுகளாவது வாழப்போகிறீர்கள் என நினைத்து, 70×60×24×365×60 என்று பெருக்கிப் பாருங்கள். இந்த பம்பு செட்டின் பெருமை விளங்கும்!**

**ஒவ்வொரு துடிப்பின் போதும் இரண்டு அல்லது மூன்று அவுன்ஸ் இரத்தம் இறைக்கப்படுகிறது. இது மணிக்கு ஏழு மைல் வேகத்தில் குழாய்களில் ஓடுகிறது!**



அதிகப்படியான எஞ்சினீயர்களுக்கு வேலை வாய்ப்பு நல்கிட இக்கழகம் உறுதிகொண்டுள்ளது. 1970-71ம் ஆண்டில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து விவசாயிகட்கு அளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கும் இலக்கு பின்வருமாறு:

| | |
|---|---|
| டி.டி.—25 (ரஷியா) | 500 |
| ஸெட்டார்—2011 செக்) | 401 |
| ஆர். எஸ்.—09 (ஜெர்மனி) | 150 |
| பைலாரஸ் (ரஷியா) | 250 |
| யு—500 (ரொமேனியா) | 29 |
| யு—650 (ரொமேனியா) | 50 |
| ஸெட்டார்—5511 (செக்) | 50 |

இவைகளுக்கான மொத்த மதிப்பு ரூ 214.95 லட்சங்களாகும். 69-70 ஆண்டிற்கான ஒதுக்கீட்டில் எஞ்சியவை இவ்வாண்டு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசு 400 ஸெட்டார் டிராக்டர்களை இக் கழகத்திற்கு அளித்திட ஒப்புதல் தெரிவித்துள்ளது. இந்திய அரசாங்கத்திடமிருந்து 400 மின்விசை உழவு இயந்திரங்களைப் பெற முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. விவசாயக் கருவிகள் தயாரிப்பதற்கான அடிப்படை இயந்திரங்களை இறக்குமதி செய்வதோடு, அந்நிய டிராக்டர்களுக்கான துணைக் கருவிகளையும் இக்கழகம் இறக்குமதி செய்து, டிராக்டர் சொந்தக்காரர்களுக்கு வழங்கஇருக்கிறது. இங்கு கிடைக்காத டிராக்டர் டயர்களை வெளிநாட்டிலிருந்து தருவித்துக் கணிசமான தொகையில் வழங்க வழிசெய்து வருகிறது. துளைக் கிணறுகள் தோண்ட உதவும் 'பவர் டிரில்லர்' நான்கினை வாங்கியுள்ளது. இதனை விவசாயிகளுக்கு வாடகைக்கு அளித்து வருகின்றது. நைலான் நூலும், மீன் பிடிக்க உதவும் நைலான் வலையும் தயாரிக்கும் திட்டம் இதன்பரிசீலனையில் இருந்து வருகின்றது. மீன் உணவு உற்பத்தி நிலையம் ஒன்று தொடங்கவும் திட்டமிட்டுள்ளது. தஞ்சையில் தொடங்குவதோடு மட்டுமின்றி மாநிலத்தில் மேலும் நான்கு பகுதிகளில் சர்வீஸ் சென்டர்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

செக்கோஸ்லோவக்கியா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 100 ஸெட்டார் டிராக்டர்களை விவசாயிகளுக்கு 21.4.70 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கிய போது, ''பஞ்சாபிலே உள்ள விவசாயிகள், பக்கத்து ஊருக்குத் திருவிழாவிற்குச் செல்வதானாலும், சினிமா பார்க்கச் செல்வதானாலும் டிராக்டர்களிலேயே குடும்பம் குடும்பமாகச் செல்கிறார்கள். அந்த நிலைக்கொப்பத் தமிழகத்தில் டிராக்டர்கள் பெருகிடவேண்டும்'' என்று தமது திட்டமிட்ட ஆசையைத் தெரிவித்தார். அவர் எண்ணத்தை நடைமுறைப்படுத்தும் வேலையில்ஈடுபட்டு வரும் 'வேளாண்மைத் தொழிற் கழகம்' தன் பணியில் தன்னிறைவை அடைவதுடன், உணவுப் பொருள்களை நாம்வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நாள் இக்கழகத்தின் ஆக்கப்பணியால் வெகு விரைவில் வந்து சேருமென நம்பலாம்.






வானம் பொன்னூஞ்சலாகி மேகப் பிசிறுகளைத்தாலாட்டுகிறது: மழை மூட்டம்—ஆகாயதேவியின் கனவுகள்.

அலுவலகப் பணிகளை முடித்து விட்டு மேலாளர்களின் உடனிருப்பில் எனக்குப் பிடித்தமான அந்த வேலையின் புறப்பாட்டிற்காக அனுமதி பெறுகிறேன். தொலைபேசி—தேர்தல் காலத்து வானொலியாக உற்சாகமான அந்தச் செய்தியைத் தருகிறது.

ஒரு ஜூலை மாதத்து மாலைப் பொழுதில் அந்தப் பெரியவரைச் சந்திக்கப் புறப்படுகிறேன். சாலையிலே—காற்றுத் தாதியரின் பணிவிடையில் அலுவலக வண்டி நுங்கம்பாக்கம் மரங்களின் நிழல் அமுதம் மெழுகிய சாலையில் தமிழ்க் கனவுகளோடு திரு 'தமிழகம்' சுப்பையா அவர்களின் இல்லத்தை நெருங்குகிறது.

வியர்வை அடங்கிய நிலையில் வான வியர்வையாக மழைத்தூறல்.

பணியாளரின் வழிகாட்டுதலில் அவருடைய அலுவலகத்தில் அவரைச் சந்திக்கிறேன்.

அறிமுகப் பீடிகைக்குப் பிறகு கண்ணாடிப் பின்னிருப்பில் மின்னும் அந்த அறிவு ஜுவாலையின் கண்கள்—அவருடைய அனுபவச் சுவை தேங்கிய உரையாடல் தொடர்கிறது.

உலக நாகரிகத்தின் தலைவாசலாகத் திகழ்ந்த தமிழ் மறவர் நாட்டின் அமுத மொழியில் ஆய்வுகள் நிகழ்த்த, பாரிசில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாடு பற்றிய சிந்தனைகள் கேள்வி பதிலில் வடிவம் கொள்கின்றன.

கோலாலம்பூரிலும், சென்னையிலும், நிகழ்ந்த முன் மாநாடுகளைப் பற்றி ஒரு கம்பீரமான பெருமிதத்தோடு அவர் விவரிக்கிறார்.

''தனிநாயக அடிகளும், பில்லியோசாவும் ஆற்றிய பணிகள் என்னை மெய்சிலிர்க்கவைக்கின்றன.

''தமிழ்த் துறை ஆராய்ச்சிப் பேரறிஞர்கள் ஆராய்ச்சி பற்றிக் கலந்து பேசுவதற்கான வாய்ப்பினை உருவாக்குவதே இந்த மாநாட்டின் நோக்கம்'' என அவர் கூறுகிறார்.

பழந்தமிழர் வெளிநாட்டுத் தொடர்பு, சமூக அமைப்பு, பழந்தமிழகப் பேரரசுகள், புதுக்காலம், இசை, மொழி பெயர்ப்பு, மொழி நூல் ஆகிய பல்வேறு துறை ஆய்வுகளில் கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் கூறுகிறார்.

இந்த ஆய்வுகளின் மூலம் தமிழ்க் கலைகளின் தனித்தன்மை உலகின் முன் அறிமுகப்படுத்தப்படுகிறது. தமிழ்க்கலை வடமொழிக் கலைகளோடு தொடர்பற்ற, ஆனால் அவைகளுக்கு இணையான ஒரு கலை என்பது பில்லியோசாவின் கருத்தாகும்.

இந்த உண்மையை நிறுவுவதற்கும், நம் மொழியின் பெருமையை ஆதாரத்தோடு உலகிற்கு அறிவிப்பதற்கும் International Institute of Tamil Studies எனும் நிலையான அமைப்பினை நிறுவத் தமிழக அரசு ஒப்புதல் அளித்துவிட்டது.

இவ்வமைப்பின் உருவாக்கத்திற்கான எல்லாச் செலவுகளையும் ஏற்றுக்கொள்ளத் தமிழக அரசு முன் வந்துள்ளது. 40 ஏக்கர் நிலமும், கட்டிடச் செலவுக்காக அரைக் கோடி ரூபாயும் தர ஒப்புதல் அளித்துள்ளது.

பெரும்பாலும் இவ்வமைப்பு 1971ல் செயல்படத் தொடங்கும். அண்ணா அவர்கள் இதை நிறுவுவதில், அடையாறு மருத்துவ மனையிலிருந்தபோது கூட உற்சாகம் காட்டினார்கள். ஐ.நா.வின் யுனெஸ்கோ மன்றம் இதற்காக இதுவரை ரூ. 60,000 தந்துள்ளது.

இவ்வமைப்பின் மூலம் தமிழின் பல்வகைக் கலைகளின் ஆய்வு, திறனாய்வு, நாட்டுப் பாடல் தொகுப்பு, புத்திலக்கிய மதிப்பீடு முதலிய பல முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வமைப்பு பல்கலைக் கழகங்களில் இடம் பெறாத ஆய்வுத் துறைகளை வளர்க்கும்.

வெளிநாட்டார்க்குத் தமிழ் கற்பிக்கும் ஜெர்மன், பின்லாந்து, சுவீடன், அறிஞர்கள் விரைவில் இங்கு வந்து கற்பர். இதற்காக யுனெஸ்கோ ரூ 25,000 ஒதுக்கியுள்ளது. 'யுனெஸ்கோ' ஒரு மொழிக்காக இவ்வளவு தொகையைத் தனது வரலாற்றில் இதுவரை ஒதுக்கியதில்லை. இப்போதுதான் இந்தி, தெலுங்கு, ஒரிய மொழிகட்கும் இத்தகைய அமைப்பினை நிறுவி உதவி பெற அங்குள்ளவர்கள் முயல்கிறார்கள்.

இச்செய்திகளைக் குறிப்பிட்ட திரு சுப்பையா அவர்கள் இந்த அமைப்பினை ஏற்படுத்துவதில் அண்ணா காட்டிய ஈடுபாட்டிற்கு, இணை சொல்ல முடியாதென்று உருக்கத்தோடு கூறினார்.

திராவிட மொழியின் கலைகள் உலகின் மூத்த கலைகள் எனும் உண்மை, தெளிவான ஆய்வுகள் மூலம் நிறுவப்பட வேண்டு மென்பதே தமது வாழ்வின் கனவாகும் என்று திரு சுப்பையா குறிப்பிட்டார்.

'மொகஞ்சோதரா — ஹாரப்பா நாகரிகங்கள் ஆரிய இனத்திற்குரியன என இடையிலே ஏற்பட்ட ஆராய்ச்சிக் குழப்பம் முறியடிக்கப்பட்டு விட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

அங்கே உள்ள எழுத்துக்களைக் கம்ப்யூட்டர்கள் மூலம் ஆய்ந்த ரஷ்யர்கள் அவை திராவிடக் கலாச்சாரத்திற்கே உரியவை என நிறுவி விட்டனர். பின்லாந்து அறிஞர் நால்வர் தமது ஆய்வுகளின் மூலம் ரஷ்யர்களின் முடிவே சரியெனக் கண்டனர்.

எனவே தமது கனவு நிறைவேறும் என இவர் நம்புகிறார்.

சமஸ்கிருதத்தைப் போலத் தமிழை உலக அரங்கில் நாம் அறிமுகப்படுத்தவில்லை எனக் கூறும் இவர், செக். நாட்டுத் தமிழறிஞர் கமில் சுவலபில்கூட முதலில் சமஸ்கிருதம் கற்று, அம்மொழியிலுள்ள திராவிட நாகரிகக் குறிப்புகளால் உந்தப்பட்டு அதற்குப் பிறகு தமிழ் கற்றதாகக் கூறுகிறார்.

குலசேகரப்பட்டினத்தில் பிறந்த இவர் இளம் வயதிலேயே தமிழால் கவரப்பட்டுக் குறள், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களை நேசித்தார்.

தமிழின் மொழி அமைப்பு linguistic Structure of Tamil இவரைப் பெரிதும் கவர்வதாக இவர் கூறுகிறார்.

ராயிஸ் எனும் மேல்நாட்டறிஞர் கி.மு. 2000திலேயே ஹீப்ருமொழி தமிழிலிருந்து சொற்களைக் கடன் வாங்கியதாக நிறுவியுள்ளார்.

ரஷ்ய ஆய்வர்கள் பிலிப்பைன்சிலுள்ள 'டெகலாக்' மொழி தமிழிலிருந்து பிறந்ததாகக் கருதுகின்றனர். எனவே உலகின் பழம் கலாச்சாரம் திராவிடக் கலாச்சாரமேயாகும். இந்த உண்மை மிகத் தெளிவாக நிறுவப்பட வேண்டும். உலகத் தமிழ் மாநாடுகள் இதற்குப் பயன்பட வேண்டுமென இவர் கருதுகிறார்.

தமிழக அரசின் மாநில சுயாட்சிக் கொள்கையினை ஆழமாக நேசிக்கும் இவர் 'தமிழரசு' இதழ் பிற நாட்டாரையும், கடல் கடந்து வாழும் தமிழ் நெஞ்சங்களையும் சந்திக்க வேண்டுமென விரும்புகிறார்.

இவ்வேட்டில் அரசின் சாதனைகளை வெளியிடுவதோடு நமது கலைகளின் சிறப்பையும் விளக்க வேண்டுமென விரும்புகிறார்.

ஒன்றரை மணி நேர இன்பம், நேரத்தின் தாண்டுதலில் கரைகிறது.

வெளியே பூச்சிதறலாக மழைத் துளிகள். அந்தப் பெரியவரைச் சந்திக்கும் வாய்ப்பைத் தந்த ஜூலை மாதத்து மாலைப் பொழுதை வாழ்த்தியபடி மழை மூட்டத்தில் அவரிடமிருந்து நான் விடைபெறுகிறேன்.

## நவீனமுறையில் நெசவாளர்க்குப் பயிற்சி

**நெசவாளர்கட்கு நவீன முறையில் பயிற்சி தருவதற்கான திட்டத்தை அரசு ஏற்றுக்கொண்டு அத்திட்டத்தின் நடைமுறை, நிரந்தரச் செலவுகட்காக ரூ. 1,90,200 ஒதுக்கி உள்ளது. இப்பயிற்சி நிலையங்களில் பல துறைகளிலும் ஓராண்டிற்கு ஆகும் செலவிற்காக ரூ. 4,08,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**12 பயிற்சி நிலையங்களில் 4 மாதங்கட்குத் தற்காலிகத் தொழில் நுணுக்கப் பயிற்சியாளர் 12 பேரை நியமிக்கவும் அரசு அனுமதித்து உள்ளது.**

## அந்நாளே எனக்குப் பொன்னாள் !

**இதுவரை செய்திருக்கிற காரியங்களாலேயே கிராம மக்களின் குறைகள் முற்றிலும் தீர்ந்துவிட்டன; குறையேயில்லை என்ற எண்ணத்தோடு நாங்கள் நிம்மதியும் மனநிறைவும் பெற்றிடவில்லை.**

**நீங்களெல்லாம், அழுக்கற்ற தூய வெள்ளை ஆடைகளை அணிந்து-ஒளியுமிழும் கண்களோடும் பிரகாசமான முகத்தோடும் மலர்ந்த வதனத்தோடும் நிம்மதியாக வாழ்கின்றோம் என்பதை அறிவிக்கும் முறையில் என்று புன்னகையோடிருக்கிறீர்களோ அந்நாளே எங்களுக்குப் பொன்னாள். அந்த நிலையை உருவாக்கத்தான் இந்த அரசு விரும்புகிறது.**

**முதற்கட்டம் — இரண்டாவது கட்டம் — மூன்றாவது கட்டம் என்று படிப்படியாக நடைபெறுகிறது. இதோடு பணி முடிந்துவிட்டது என்று எங்களை நாங்களே ஏமாற்றிக்கொள்வதோடு, உங்களையும் ஏமாற்ற நாங்கள் தயாராக இல்லை.**

*சூரப்பட்டு ஊராட்சி மன்ற விழாவில்*

**கலைஞர்**

***21—4—'68***

# கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் ~ வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:

**கதர் கிராமத் தொழில் துறை**
௨, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.





வணங்குகின்ற அண்ணாவால் அமைந்தி ருக்கும்
    வடிவான தமிழரசு மக்கள் வேட்கைக்(கு)
இணங்குகின்ற விதத்தினிலே செயலாற்றத்தான்
    ஏராள ஏற்பாடு முனைந்து செய்தார்
சுணங்குகின்ற வழக்கத்தை நிறுத்தி மிக்கச்
    சுறுசுறுப்பாய் அரசாங்கம் இயங்கு தற்குக்
கணங்கூடத் தாமதியா வண்ணமாகக்
    கட்டளைகள் பிறப்பித்து விரைவில் எல்லா

முடிவுகளும் மேற்கொண்டார் வரட்சித் துன்பம்
    மூண்டெழவே உடனடியாய்த் துயர்து டைப்புக்
கடிதாக நிறைவேற வழிகள் கண்டார்
    காவலரின் அல்லல்கள் நீக்குதற்கும்
நெடியநாளாய் அவதியுற்ற பிற்பட் டோரை
    நிமிர்த்துதற்கும் குழுவமைத்தார் மாண வர்க்குப்
படிப்புவரப் புகுமுகமும் இல்வ சத்தில்
    பாங்குடனே கற்றுவர வகை சமைத்தார்

ஆசிரியர் எழுத்தர்கள் தொல்லை நீக்க
    அன்புடனே திட்டங்கள் தந்தார் சாதி
பேசிடுவோர் தாழ்த்திவைத்த குலத்தார் வாழப்
    பேருதவி புரிந்திட்டார் தமிழ்ம ணந்தான்
வீசிடவே நெறிகண்டார் சேலம் தூத்துக்
    குடி கல்லக் குடியென்று வெற்றி கொண்டார்
மாசில்லா ஒழுக்கமுடன் முதல்வராகி
    மாப்புகழை உலகத்தில் சேர்ப்போர் வாழ்க !

## ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நில வருவாய்த் துறை

இன்று காணும் ஆட்சி முறை யாவும் ஆங்கிலேயர் தந்தது என்று நம்மில் பலர் 'பெருமை' பேசுகிறோம் அல்லவா? அது முழுதும் உண்மையல்ல என்பதனை பழந்தமிழ் ஏடுகளும் கல்வெட்டுகளும் பறை சாற்றுகின்றன.

1601ம் ஆண்டில் வணிகராக வந்த ஆங்கிலேயர், பின்னர் வரி வசூலிப்பவர்களாக மாறியதும் வரி வசூல் முறையைச் செம்மைப் படுத்தினரென்பது உண்மையே. என்னும் அதற்கும் 600 ஆண்டுகளுக்கு முன்பே நில வருவாய்த் துறை சிறப்பாக நிர்வகிக்கப்பட்டதையும் அது பத்து பிரிவுகளாகப் பிரிந்து பாங்குடன் செயல்பட்டு வந்ததையும் தமிழர் வரலாறு உரைக்கிறது! அந்நாளில் நிலவருவாய்த்துறை புரவு வரித் திணைக்களம் எனப்பட்டது. இந்தத்துறையின் முதற்பிரிவு நிலவரித் தொடர்பான எல்லாவற்றையும் முதலில் கவனிக்கும் பொறுப்பைப் பெற்றிருந்தது.

நிலத்தை அளந்து பார்க்கும் பிரிவு தெரிப்பு எனப்பட்டது. ஒரு வேலியின் $\frac{1}{52428\ 800}$ பகுதி கூட அளக்கப்பட்டு வரி விதிக்கப்பட்டதை முதலாம் இராசராசன் 'கல்லின்மேல் எழுதி'ச் (கல்வெட்டில்) சென்றிருக்கிறான். அவனுடைய காலத்தில் நிலத்தைச் சிறப்பாக அளந்தமைக்காக புரவு வரித் திணைக்களத்தின் தலைவனாக விளங்கியவன் 'உலகளந்தான்' என்ற பட்டம் பெற்றான்!

தெரிப்பு செய்யப்பட்ட நிலம் பற்றிய அரசன் ஆணைகளை செப்புப்பட்டயங்களிலும் கல்லிலும் வெட்டியவர்கள் பணியாற்றிய துறை முகவெட்டி யாகும்.

நிலத்திற்கு உடையவன் தர வேண்டிய வரியைப்பற்றிய கணக்குகள் உள்ள துறை 'வரிப் பொத்தகம்' எனப் பெயர் பெற்றது (புத்தகம் என்பது புஸ்தகம் என்னும் வடமொழிச் சொல்லின் மரூஉ அல்ல. பொத்தல் செய்து ஏடுகள் தைக்கப்படுவதனால் பொத்து+அகம், பொத்தகம் ஆகி, பின்னர் புத்தகம் ஆயிற்று).

இந்த வரிக்கணக்கைப் பரிசீலனை செய்யும் துறை புரவு வரித் திணைக்களக் கண்காணி எனப்பட்டது.

வரி செலுத்தியவர்களுக்கு இரசீது செதுக்கிக் கொடுக்கும் வழக்கமும் அந்நாளில் இருந்தது. அந்த பொறுப்பினை ஏற்ற துறை தரவு சாத்து ஆகும்.

புதிய வரிகளைக் கட்டும் பொழுது பழைய பாக்கிகளை வசூலிப்பதும் அரசின் கடமைதானே! அவற்றையெல்லாம் பழ நியாயம் என்னும் பிரிவு கவனித்து வந்தது,

வசூலான வரிகளை வரிப் பொத்தகத்தில் வரவு வைக்கும் பகுதிக்குப் பெயர் வரியிலீடு என்பதாகும்.

வரியிலீட்டுக் கணக்குகளைப் பார்த்துத் தணிக்கை செய்யும் பிரிவு வரிப் பொத்தகக் கணக்கு எனப் பெயர் பெற்றது.

அனைத்துக்கும் மேலானது அரசனது ஆணையல்லவா? நிலங்களைப் பற்றி அவ்வப்போது அரசன் இடும் ஆணைகளைக் கவனிக்கும் துறையாக "பட்டோலை" இருந்து வந்தது.

இப்பொழுது சொல்லுங்கள்! இந்தப் பத்துப் பிரிவிற்குள்ளும் அடங்காததா இன்றுள்ள நில வருவாய்த் துறை!



- பெரம்பூரிலுள்ள ரெயில் பெட்டித் தொழிற்சாலையில் ஆண்டுக்கு 650 ரெயில் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள பெட்டிகளின் எண்ணிக்கை 7300.

  வேலை பார்க்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 10,700.

* * *

- சென்னை கிண்டியிலுள்ள டெலிபிரிண்டர் தொழிற்சாலையின் ஆண்டு உற்பத்தித்திறன் சுமார் 5500, 1969-70க்காக திட்டமிடப்பட்டுள்ளது 6500 டெலிபிரிண்டர்களும், 1000 உதிரிப் பகுதிகளுமாகும். தற்போது ஆங்கிலம், இந்தி, அரேபிய மொழி ஆகியவற்றில் அங்கு டெலிபிரிண்டர்கள் தயாரிக்கப் படுகின்றன.

* * *

- நெய்வேலியில், மின்சக்தி, உற்பத்திக்கும், பயிரிடும் நிலங்களுக்கான யூரியா உரம் தயாரிப்பதற்கும் வீட்டு எரிபொருளாகப் பயன்படுத்தவும், மற்றும் சிறு தொழில்களுக்குப் பயன் படுத்தவும் ஆண்டு ஒன்றுக்கு 41 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த உற்பத்தி ஆண்டுக்கு 60 லட்சம் டன் அளவுக்கு உயர்த்தப்படும்.

## அருகில் வரும் தொலைவு



வானொலியில் இசை வாணர் பாடுவதைக் கேட்கிறோம். வண்ணத் திரையில் விழுகின்ற காட்சிகளின் கோலத்தைக் கண்டு இரசிக்கிறோம். நாடகமேடையில் வரும் நடிகரின் திறமையில் மயங்கி மகிழ்கிறோம்.

நானிலம் முழுதும் நடக்கின்ற நிகழ்ச்சிகளைச் செய்திகளாகப் படித்து அறிகிறோம். ஆனால் இசை வாணரைப் பார்த்துக் கொண்டே வானொலியின் இசையைப் பருக முடியாதா?

இல்லத்தில் இருந்து கொண்டே திரைப்படத்தை, நாடகத்தைக் காண இயலாதா?

உலகத்து நிகழ்ச்சிகளை அவை நடக்கும் பொழுதே அறிய முடியாதா?

இப்படி ஓர் ஆசை மனிதனின் மனத்தில் எழுந்தது.

ஆசைதானே அனைத்திற்கும் வித்து! கிராபைட் தட்டிலே கீறல்களைப் பதியவைத்து கிராமபோன் இசைத்தட்டை உருவாக்கியவனுக்கு இது நிறைவேற முடியாத ஆசையா என்ன?

தொலைக்காட்சி தோன்றியது!

கிரேக்க மொழியில் 'டெலி' என்றால் 'தொலைவு' என்று பொருள். 'விஷன்' என்பதற்கு வேர்ச் சொல்லான 'விதிர்' என்றால் இலத்தீன் மொழியில் காட்சி என்பர் இவை இரண்டும் இணைந்தே 'தொலைக்காட்சி' என்னும் பதம் பிறந்தது.

உருப் பெருக்கும் ஆடியின் மூலம் ஒரு படத்தை நன்றாக உற்றுப்பாருங்கள். பல்வேறு வகையான அடர்த்தியுடன் கூடிய கருப்பு, வெள்ளைப் புள்ளிகளின் தொகுப்பே அப்படம் என்பதை உணர்வீர்கள். தொலைக் காட்சி புகைப்படக் கருவியின் விழியாக விளங்கும் குவி ஆடியில் காட்சி பதியும் பொழுது அது கரும் புள்ளிகளும் வெண் புள்ளிகளும் நிறைந்த பிம்பமாக மாற்றப்படுகிறது. இந்த பிம்பம் குவி ஆடியின் பின்னாலுள்ள திரையில் விழும்பொழுது புள்ளிகளில் உள்ள ஒளியின் அடர்த்திக்கேற்ப எலக்ட்ரான்கள் வெளிப்படுகின்றன. இந்த எலக்ட்ரான்கள் அடுத்து அமைந்துள்ள 'இலக்கு' என்னும் கருவியைத் தாக்கும் பொழுது மேலும் அதிகமான எலக்ட்ரான்கள் வெளியாகின்றன. இவை எலக்ட்ரானின் படமாக உருப் பெறுகின்றன. ஆனால் வானவெளியில் செலுத்துவதற்கு முன்னால் எலக்ட்ரானிக் வடிவம் பெற்ற காட்சி பல துண்டுகளாக நறுக்கப் பட வேண்டும். எலக்ட்ரானிக் துப்பாக்கி என்னும் கருவி இப்பணியைச் செய்கிறது. இந்தக் குழாயிலிருந்து வெளிவரும் ஓரே சீரான வரி ஒளிக் கற்றைகள் ஒரு நொடியில் உருவாகும் 25 தனித் தனிப் படங்கள் ஒவ்வொன்றையும் 525 வரிகள் உள்ள ஒளிக் கற்றைகளாக மாற்றுகின்றன. இலக்கினின்றும் பிரதி பலித்துவரும் இந்த வரி ஒளிக் கற்றைகள் பெருக்கி (amplifier) என்னும் கருவிக்கு அனுப்பட்டு அதிக மின்னழுத்தமுள்ள மின் விசையாக மாற்றப்பட்டு பின்னர் 'சிக்னல்'கள் எனப்படும் மின்காந்த அலைகளாக குன்றின் மேல் அமைந்துள்ள 'ஆண்டெனா' மூலம் விண்ணில் விடப்படுகின்றன. வான வெளியில் மிதந்து வரும் மின் காந்த அலைகள் ஏரியல் கம்பியில் படும்பொழுது கம்பியின் மின் விசை தூண்டப் படுகிறது. அது பெருக்கியின் மூலம் அதிக மின்னழுத்த முள்ள மின் விசையாக மாற்றப்படுகிறது. பின்னர் மின் விசை எலக்ட்ரான் வரி ஒளிக் கற்றைகளாக மாறி 'தன் ஒளிர் திரையில்' (fluorescent screen) ஒன்று சேரும்பொழுது நிழலும் ஒளியும் இணைந்து படங்கள் தோன்றி காட்சிகளாக நகர்கின்றன. தலையைச் சுற்றுகிற தல்லவா?

ஆனால், எலக்ட்ரான் வடிவத்தை வரி ஒளிக்கற்றைகளாகப் பிரிக்கின்ற அற்புதக் கருவியை 1922ஆம் ஆண்டு கண்டுபிடித்த பொழுது பான்ஸ் வொர்த் என்ற விஞ்ஞானி பதினாறு வயதேஉடைய ஓர் பள்ளிச் சிறுவன்!

டெலிவிஷனுக்கு மூலப் பொருள் 1817ஆம் ஆண்டே கண்டுபிடிக்கப் பட்டது என்றாலும் குரூக்ஸ், நிப்கோ, ஹெர்ட்ஸ், ப்ளெமிங், எடிசன், பாரெஸ்ட், ஜென்கின்ஸ் போன்ற விஞ்ஞானிகளின் அயராத தொடர்ந்த உழைப்பின் பயனாகவே நாம் இன்று காணும் தொலைக் காட்சி உருப்பெற்றது. 1930ஆம் ஆண்டு முதல் தொலைக் காட்சி நிலையங்கள் தோன்றியதும் அவை ஆராய்ச்சித் துறைகளை ஆரம்பித்து விஞ்ஞானத்தின் இந்த வியத்தகு படைப்பை மேலும் வசீகரமாக்கின.

1950ல் வண்ணத் தொலைக் காட்சி சாத்தியமாயிற்று. அதற்கான புகைப்படக் கருவியில் ஒளிக் கற்றைகளை அனுப்ப சிவப்பு, பச்சை, நீலம் ஆகிய மூன்று வகையான குழாய்கள் இருக்கின்றன. இவை இணையும் பொழுதுதான் இதர வண்ணங்கள் உண்டாகின்றன. சிவப்பும் மஞ்சளும் சேரும்பொழுது மஞ்சள் பிறக்கிறது. மூன்று வண்ணங்களும் தேவையான அளவு கலக்கும் பொழுது வெண்மை தோன்றுகிறது. மஞ்சளும் நீலமும் கலந்தால் பச்சை உண்டாவதைக் கண்டாலே மலைத்துப் போகும் நம்மில் சிலருக்கு இது நம்ப முடியாத ஒன்றாக இருக்கும்!

இன்று டிரான்சிஸ்டரைப்போல தொலைக்காட்சிக் கருவிகளையும் கையில் எடுத்துச் செல்லலாம்! அந்த அளவுக்கு தொலைக் காட்சித் துறை முன்னேறி விட்டது.

**ஐரோப்பாவில் கூவம்**

**ஆம்ஸ்டர்டாம் நகரின் குறுக்கே தெரு ஆறு ஓடுகிறது. இந்த ஆறு நமது கூவத்தைப் போலவே இருக்கிறது. ஆனல் இதில் படகுப் போக்கு வரத்து அதிகமாக இருக்கிறது. நமது கூவம் சீரமைக்கப்பட்ட பின்பு மேல் நாடுகளில் நகரின் நடுவே ஓடும் ஆறுகளைவிட அழகாகவும் சிறப்பாகவும் அமையும்.**

**—பொதுப்பணி அமைச்சர்**
**திரு. சாதிக்பாட்சா**
**அவர்களின்**
**ஐரோப்பா சுற்றுப்பயண அனுபவம்**

*1962ஆம் ஆண்டு 'டெல்ஸ்டார்' என்னும் செயற்கைக் கோளை வான வீதியில் அமெரிக்கா பறக்க விட்ட பிறகு உலகம் முழுவதும் தொலைக் காட்சி ஆட்சி செலுத்துவது எளிதாயிற்று.*

*1961ல் தொலைக்காட்சி இரும்புத் திரையையும் ஊடுருவிப் பாய்ந்தது. ஆம்! அந்த ஆண்டில் தான் லண்டன் பி.பி.ஸி நிலையம் இரஷ்யாவிலிருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சியை பிரிட்டிஷ் மக்களுக்கு வழங்கியது.*

*எண்ணும் பொழுதே உவகையூட்டும்,இந்த அற்புதக் கருவி எண்ணற்ற உலக மக்களைக் கவர்ந்துவிட்ட.தில் வியப்பென்ன? இன்று அமெரிக்காவில் 100க்கு 90பேர்களுடைய இல்லங்களில் தொலைக் காட்சி மகிழ்வூட்டும் தோழனுகி விட்டது. ஆங்கிலேயே நாட்டில் மட்டும் 10,000,000 கருவிகள் களிப்பூட்டி வருகின்றன. 4,000,000 கருவிகள் மூலம் இரஷ்யர்கள் தொலைக் காட்சியை இரசிக்கின்றனர். 3,400,000 கருவிகள் கனடா நாட்டு மக்களின் கருத்துக்கு விருந்தை வழங்கி வருகின்றன.*

*சிக்கலான அறுவைச் சிகிச்சைகள் நிகழும் பொழுது மற்றைய மருத்துவரும் மாணவர்களும் சிகிச்சையின் சிறப்பை நுணுக்கமாக அறியலாம். அவ்வப்போது மருத்துவத் துறையில் எழும் புதிய முறைகளையும் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம். அண்மையில் ஆப்பிரிக்காவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இதயமற்றுச் சிகிச்சை நடந்த பொழுது தொலைக்காட்சி சாதனத்தின் மூலம் பல்லாயிரக் கணக்கான மருத்துவரும், மாணவரும் மற்றவரும் கண்டு பயன் உற்றனர்.*

*வேளாண்மைத் துறையில் புதிய கண்டு பிடிப்புக்களையும் ஆராய்ச்சி முடிவுகளையும் விவசாயிகளுக்கு விளக்குவதும் இதனுல் எளிதாகும்.*

*அரசியல் உலகிலும் தொலைக் காட்சி ஆற்றல் மிக்கதோர் படைக் கலனுகி விட்டது. அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவர் தேர்தலில் தங்கள் கொள்கைகளை விளக்க கென்னடியும் நிக்ஸனும் தொலைக் காட்சியில் நிகழ்த்திய வாதப் போர்களே அவர்களின் வெற்றி தோல்வியை நிர்ணயித்தன.*

*குறைந்த செலவில் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் செய்து தொழிலைப் பெருக்க உதவும் தொலைக்காட்சி, தொழிற்சாலைகளிலும் அருமருந்தாக விளங்கி வருகிறது, அதிக வெப்பமுள்ள இடங்களையும், ரேடியோ இயக்கக் கதிர்களை வீசும் அபாயமுள்ள பொருள்களையும் அணுகாது கண்காணிக்கவும் தொலைக் காட்சி பயன்படுகிறது.*

*வங்கிகள், காசோலையில் கண்டுள்ள கையெழுத்துக்களைச் சரி பார்க்க தொலை காட்சியை நாடுகின்றன.*

*சிறைகள், விடுதிகள் இவற்றின் தலைமையாளர்கள் ஒரிடத்திலிருந்தே தொலைக் காட்சியின் உதவியினுல் அனைவரையும் தன் பார்வையில் கொண்டுவர இயலும்,*

*கானகத்தில் எங்காவது தீப்பற்றிக் கொண்டால் அறையில் உள்ள தொலைக் காட்சியில் புகை தோன்றும். உடனே, காடு கண்காணிப்பாளர்கள் தீப்பற்றிய இடம் எது என அறிந்து ஆவன செய்ய முடியும்.*

*போர்க்களத்தில் படையின் முன்னணியில் நிகழ்கின்ற மோதல்களை முகாமில் இருந்தவாறே படைத்தலைவர்களால் காணவும் அதற்கேற்ப புதிய போர்முறைகளை வகுக்கவும் தொலைக்காட்சியினுல் ஏதுவாகும்.*

*தங்கள் அருமைக் குடியரசுத் தலைவர் கென்னடி பதவி ஏற்ற பொழுது நிகழ்த்திய உரையை தொலைக் காட்சியில் கேட்டு மகிழ்ந்த அமெரிக்க மக்கள், கொடியவன் ஒருவனுல் அவர் குண்டடிபட்டு சாய்ந்த கோரக் காட்சியையும் அதே தொலைக் காட்சியில் கண்டு துடித்தனர்.*

*நீலவானைக் கிழித்துக் கொண்டு அப்பல்லோ பறந்த அழகையும் நிலாவில் நிலவுலக மாந்தர் தம் பொன்னடி வைத்து நடந்த அதிசயத்தையும் தொலைக் காட்சியில் உலகம் பார்த்து வியந்தது.*

*இவற்றையெல்லாம் அறியும் பொழுது மதியின் சிறப்பால் மனிதர் மதியையும் மிதித்து விட்ட இந்நாளில் தொலைக்காட்சி இன்னும் நம் தமிழ் மண்ணுக்கு வராத நிலையை எண்ணி இதயம் ஏங்குகிறதல்லவா?*

*அந்த ஏக்கம் இனி தீர்ந்துவிடும். நான்காம் ஐந்தாண்டு திட்டத்திற்குள் தொலைக் காட்சியை நாடு முழுவதும் பரப்பவும் கல்விப் பணியை அதன் மூலம் தொடர்ந்து செய்யவும் மத்திய அரசு முனைந்துள்ளது. புதிய சட்டமன்ற உறுப்பினர் விடுதி அருகே மாநில அரசுக்குரிய நிலப்பரப்பில், ஐந்து ஏக்கர் நிலத்தில் அதற்கான கருவிகளை அமைக்கவும் அரசு முயன்று வருகிறது.*

**குருவியும்**
**எறும்பும்**

**குருவி தலையில் பனங்காயா? என்று கேட்கிறேம். குருவியால் பனங்காயைச் சுமக்க முடியாது; உண்மை. ஆனல் ஒரு எறும்பால் தன்னை விட 3000 மடங்கு எடையுள்ள இரையைக் கவ்விச் செல்ல முடியும்.**

# எண்ணங்களின் எழிலோவியம்

## என். வி. நடராசன்

(பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)

*தமிழகத்தின் பல்வேறு அரசுகளையும் ஒருகுடைக்கீழ்க் கொண்டுவந்து தமிழுலகாண்டதாக சோழன் கரிகாலனை ''வரலாற்றுக்குட்பட்ட காலம்'' நமக்கு அறிமுகப்படுத்துகிறது. அதேபோல், தமிழக அரசின் பல்வேறு துறையினுல் நடத்தப்பட்டு வந்த பல்வேறு பெயர் கொண்ட இதழ்களும் ஒருங்கிணைந்து ''தமிழரசு'' எனும் பேரால் பயனுள்ள பணியாற்றப் பவனிவரும் வகையில், அந்தக் கரிகாலன் வழிவந்த சோழியச் செயல் வீரர் கலைஞர் கருணுநிதி அவர்கள் தலைமையிலான ஆட்சி ஏற்பாடு செய்து ''தமிழரசு'' இதழ் நம் கையில் தவழ்கிறது.*

*அரசின் இலாகாக்கள் பலதிறப்பட்டவையாக இருப்பது தவிர்க்க முடியாதது என்பதைப் போலவே, அந்தந்த இலாகாவின் செய்திகளும் சாதனைகளும் தனித்தனியாகத்தான் பொதுமக்களைச் சென்றடையவேண்டும் என்றிருந்த நிலைமாறி, இந்த ஆட்சியில் எவரும், எதையும், எப்போதும் கோர்வையாகவும் தெளிவாகவும் ஒருங்கே தெரிந்து கொள்ள வேண்டுமென்ற முயற்சியில் இந்தத் ''தமிழரசு'' வெளிவந்துள்ளது.*

*இவ்விதழ் தமிழ்நாடு அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் தெரிவிப்பதாக மட்டுமே அமையும் என்பதில்லாமல், தமிழர்களின் ஏற்றங்களையும் எண்ணங்களையும், அரசியல் சாதனைகளையும், மொழியின் மாண்புகளையும், ''தமிழ்கூறு நல்லுலகம் முழுவதும்'' தெரியும் வண்ணம் பறைசாற்றிப் பணியாற்றும் என்பதில் ஐயமில்லை.*

*இதுவரை தனித்தனியாக—துண்டுதுண்டாக அரசின் செய்திகள் பல்வேறு பெயருள்ள இதழ்கள் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டு வந்தன, அவைகளைப்பற்றிச் சாதாரண பொதுமக்களுக்கு ஒன்றுமே தெரியாது என்றுகூடச் சொல்லலாம். வாரந்தோறும் வெளியிடப்படும் அரசிதழ் (கெஜட்) போலவே அரசாங்க இதழ்களும் தொடர்புடைய—அல்லது அவசியமுள்ளவர்களால்*



*மட்டுமே பார்க்கப்பட்டன—படிக்கப்பட்டன. தமிழக மக்களுக்கும் தமிழக அரசின் செய்திகளுக்கும் ஒருவகையான மெல்லியதிரை இதுவரை இருந்துவந்திருக்கிறது. வழக்கமாக நாளிதழ்களில் வரும் அரசுத் தரப்பான செய்திகள் மட்டுமே மக்களால் இதுவரை விமரிசனம் செய்யப்பட்டுவந்தன. ''தமிழரசு'' இந்த நிலைமையை மாற்றியமைக்கும் அளவுக்கு மக்களிடையே தவழ வேண்டும் என்பது என் பேரவா.*

*ஜனநாயகத்தின் பல்வேறு சிறப்புகளில் ஒன்று, அரசாங்கம் தன்னுடைய சாதனைகளின் நிறை குறைகளை வெளிப்படையாக மக்களுக்கு எடுத்துச் சொல்வதாகும். அதே போல், ஜனநாயக அரசில் மக்களுக்குள்ள பல்வேறு உரிமைகளிலும் கடமைகளிலும் ஒன்றுக அரசாங்கத்தின் சாதனைகளையும் செயல் திட்டங்களையும் அறிந்துகொள்ள முயல்வதாகும். இந்த முயற்சிக்கு உறுதுணையாக தமிழக மக்கள் ''தமிழரசு'' இதழைப் பயன் படுத்திக்கொள்ளவேண்டும்.*

*நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு சாதிக்கப்பட்ட சாதனைகளின் பட்டியல், பொதுவாக இந்திய மக்களும்—குறிப்பாகத் தமிழக மக்களும் நினைத்துப் பார்த்துப் பூரிக்கத் தக்கவை ஆகும். அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நிறைவேற்றியுள்ள அதிகப்படியான பெருமை நிச்சயம் இந்த ஆட்சிக்கு உண்டு. சொல்லப்பட்ட அனைத்தையும் அல்லது தேவையான அவ்வளவையும் சாதித்துவிட்டதாக நமது அரசு சாதிப்பதில்லை. ''எவ்வளவோ சாதிக்கவேண்டும்'' என்று அதற்குள்ள உண்மை உணர்வும், அதனையொட்டி அரசு எடுத்துக்கொள்ளும் முயற்சியும் தன்னிகரற்றவை—அப்பழுக்கில்லாதவை. கரிகாலன் கல்லணையைக் கட்டிமுடித்த பின்பு, சோழநாட்டின் விளைச்சலைப் பற்றி வரலாறு நமக்கொரு கணக்கினைச்*

சொல்கிறது. அதேபோல், நாம் ஆட்சிக்கு வந்தபிறகு உணவு உற்பத்தியும் பல்வேறுவகை விளைச்சலும் அற்புதச் சாதனைகளாகும். ''உணவுப்பொருள் தட்டுப்பாடு'' என்ற வார்த்தையே இனித் தமிழகத்தில் உச்சரிக்கப்படக்கூடாது என்று நமது அரசு உறுதியான முடிவெடுத்துச் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு இலாகாவும் போர்க்கால வேகத்துடனும் இராணுவ ஒழுங்குடனும் போட்டிபோட்டு மக்கள் நலனுக்கான செயல்களில் முனைந்து ஈடுபட்டிருக்கின்றன. முன்னேற்றமடைந்த பகுதியினருடன் போட்டிபோட முடியாமல் முடக்கங்கண்டுள்ள பிற்பட்ட சமுதாய நலன்பேணும் துறை அமைச்சரான நானே, அந்தத் துறையின் குறுகியகால சாதனைகளை வரிசையாக அடுக்கிக் காட்ட முடியும்.

பேரறிஞன் சாக்ரடீஸ் காலத்திலிருந்து தொடங்கும் சரித்திரகாலமான இருபத்திமூன்று நூற்றுண்டுகள் மனிதகுலத்திற்கு மகத்தான விழிப்பையும் முன்னேற்றத்தையும் அளித்த காலமாகக் கணக்கிடப்படுகின்றன. அதேபோல், நாடு அந்நியர் பிடியிலிருந்து விடுதலை பெற்ற இருபத்துமூன்று ஆண்டுகளில் கடந்த மூன்று ஆண்டுகள் தமிழகத்தின் பொற்காலமாகத் திகழ்கின்றன. மறைந்த முதல்வர் அறிஞர் அண்ணு அவர்கள் துவக்கி வைத்த அந்தப் பொற்காலம் எத்தகு மாண்புடையது என்பதை இனித் ''தமிழரசு'' பறைசாற்றும் என்பதில் ஐயமில்லை. அரசு வேறு மக்கள் வேறு என்கிற பாகுபாடு—கடந்த மூன்ருண்டு காலமாக மறைந்துபோய்விட்டது. மக்களின் தேவைகளும், அவர்களுடைய மன ஓட்டங்களுமே அரசாங்கத்தின், கடமைகளாகவும் திட்டங்களாகவும் மாறிவிட்ட அற்புதம், கலைஞர் கருணுநிதி அவர்களைத் தலைவராகக் கொண்ட ஆட்சியில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

இந்த அற்புத நிகழ்ச்சிகளின் நேர்முக வர்ணனைகளாகத் ''தமிழரசு'' தமிழ் மக்களிடையே வலம்வரும். இந்த இதழ் தமிழக மக்களின் சாதனைப் பட்டியலாக, எண்ணங்களின் எழிலோவியமாக—தேவைகளை வற்புறுத்தும் குரலாக விளங்கும். ''மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும்'' இன்றைய அரசின் சாதனைகளை மட்டும் ''தமிழரசு'' தெரிவிக்காது. மக்களுக்கு அரசாங்கம் நிறைவு செய்ய வேண்டிய தேவைகளையும் அது வெளிப்படையாகத் தெரிவிக்கும்.

''மக்கள் குரலே மகேசன் குரல்'' என்று மறைந்த நம் முதல்வர் அறிஞர் அண்ணு அவர்கள் அடிக்கடி நினைவூட்டுவார். அதற்கேற்ப வழி நடக்கும் கலைஞர் கருணுநிதி அவர்கள் ஆட்சியின் வெற்றிச் சாதனைகளை, கோரிப் பெறவேண்டிய நியாயங்களை, உழைத்துப் பெறவேண்டிய உரிமைகளை ''தமிழரசு'' தமிழகத்தில் எதிரொலிக்கும்.

தமிழ்நாடு அரசின் இந்தக் குரல் தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிருர்களோ அங்கெல்லாம், மோதித் திரும்பும் வகையில் ''தமிழரசு'' பரவவேண்டும்— மக்கள் பேராதரவளித்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

''சமுதாயத்தில் நேர்மைநிலைக்க நாணயம் விளங்க நாம் நம்முடைய ஒத்துழைப்பைத் தரவேண்டும். இப்போது நாம் செய்கின்ற பல நல்ல காரியங்கள் சாதனைகள்—நம்முடைய உழைப்புக்கள், எல்லாங்கூட, சின்னஞ்சிறு புகார்களின் மூலம் அடிபட்டுப் போவதை நாம் காண்கிருேம். அந்தச் சாதனைகள் போதுமான விளம்பரம் பெறவேண்டும் என்று முதல்வர் கலைஞர் கருணுநிதி அவர்கள் அண்மையில் நடைபெற்ற கலெக்டர்கள் மாநாட்டில் தெரிவித்ததற்கேற்ப, அரசின் நல்ல திட்டங்கள் சாதனைகள் நியாயமான அளவில் உணர்ந்து பாராட்டப்படவும், அரசு செய்யவேண்டிய நல்ல காரியங்களை மேலும்மேலும் மக்கள் உணர்த்திப் பயன்பெறவும் ''தமிழரசு'' நிச்சயம் பயன்படும்.

• • •

## நம் தமிழ் நாட்டில்...!

நம்முடைய மாகாணத்தில் மக்களின் தேவைப் பொருட்களான சர்க்கரை, சிமெண்ட், காகிதம் போன்ற பொருட்களை உற்பத்திச் செய்யும் தொழில் சிறந்த முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. கூட்டுறவு ஆலைகளையும் சேர்த்து, மொத்தமாக உள்ள 16 சர்க்கரை ஆலைகளும் ஆண்டொன்றில் சுமார் 2.5 இலட்சம் டன் சர்க்கரையை உற்பத்திசெய்கின்றன. 1968 ஆம் ஆண்டு முடிவில், 6 சிமெண்ட் தொழிற் சாலைகளின் மொத்த உற்பத்தித் திறன் 2.12 மிலியன் டன்களாகும். இது அனைத்திந்திய உற்பத்தித் திறனில் 15 சதவீதமாகும். மின்சார 'சுவிட்ச்-கியர்'களை (Switch gears) உற்பத்தி செய்தவற்கென நாட்டின் மொத்த உற்பத்தித் திறனில் இம்மாநிலம் 28 சதவீத பங்கு வகிக்கிறது.

மின் சக்தியினுல் இயங்கும் பம்புகளின் மொத்த உற்பத்தியில் ஆறில் ஒரு பங்கினை தமிழ் நாடு பெற்றுக் கொள்கிறது.

மிதி வண்டிகளையும், மிதி வண்டிகளின் துணைக் கருவிகளையும் உற்பத்தி செய்வதில் முன்னணியிலுள்ள மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்ருகும். 'டீசல் என்ஜின்கள்', 'ஸ்டோரேஜ் பாட்டரிகள்', மின்விசிறிகள், கடலடி தந்திக் கம்பிகள், (Cables), வானெலிப் பெட்டிகள் ஆகிய வற்றை உற்பத்தி செய்வதில் தமிழ் நாடு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது.

# வாணிபப் பயிர்கள்



உணவு உற்பத்தியைப் பெருக்குவது போலவே வாணிபப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதிலும் வேளாண்மைத் துறை கண்ணும் கருத்துமாக உள்ளது.

இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் 94.60 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 8 புதிய வளர்ச்சி நிலையங்களும், கரும்பு வேரைத்துளைத்துப் பாதிக்கக் கூடிய பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக 6 ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்களும் தொடங்கப்பட உள்ளன. கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், சாலைகள் அமைப்பதற்காக ரூ. 36.51 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1970–71ல் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை 13 லட்சம் டன்களாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 2.66 லட்சம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட பரப்பளவில் எண்ணெய் வித்துக்களின் முனைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். மேலும் ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 4.24 லட்சம் தீவிர பருத்திச் சாகுபடித் திட்டத்தைத் திருநெல்வேலி, மாவட்டத்தில் மேற்கொண்டு 20,000 ஏக்கரில் செயல்படுத்தியும், பரம்பிகுளம் ஆழியாறு திட்டத்தில் 30,000 ஏக்கர்களிலும் அறிமுகப் படுத்தப்படும். தீவிரப் பருத்தி சாகுபடித் திட்டத்தைச் செயல் படுத்துவதன் மூலம் இவ்வாண்டின் பருத்தி உற்பத்தியை 4.90 லட்சம் பேல்களாக அதிகரிக்க இயலும்.

புகையிலை முனைப்புத் திட்டத்தை இந்த ஆண்டில் 2,000 ஏக்கர்களில் விரிவுபடுத்தப்படும். ஓசூர் பகுதியில் 600 ஏக்கரில் வரிஜீனியா புகையிலை பயிரிடப்படும்.

முந்திரித் தோட்டங்களில் பெரியர் ரக மட்டில் விளக்க நிலங்கள் 310 அமைக்கப்படும். 7,000 ஏக்கருக்கு மேல் தீவிர செடிப் பாதுகாப்பு மேற்கொள்ளப்படும்.

உயர்ந்த ரக கோகோ பயிரிடத் தமிழ்நாட்டில் வாய்ப்புள்ளதால் மதுரை மாவட்டத்தில் கெங்குவார் ஓடையில், 2,000 ஏக்கர் நிலப்பரப்பு, கன்னியாகுமரிமாவட்டத்தில் 1000 ஏக்கர் நிலப்பரப்பு தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் 2,000 ஏக்கர் பரப்பில் மேற்கொண்டு தென்னை பயிரிடவும், 7.12 லட்சம் தென்னங் கன்றுகளையும், 1 லட்சம் பாக்குக் கன்றுகளையும் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தூத்துக்குடியைச் சுற்றிலும் உவர் மண் நிலப்பகுதிகளைப் பயன்படுத்திப் படிப்படியாக 6,000 ஏக்கர் அளவுக்கு மேல் வாழை பயிரிடப்படும்.

1,600 ஏக்கரில் புதிய பழத் தோட்டங்கள் அமைக்கப்படும். இதற்காக ரூ. 6 லட்சம் கடன் வழங்கப்படும். 2,500 ஏக்கரில் காய்கறி பயிரிடப்படும். திருநெல்வேலி மாவட்டத்தில் 10,000 ஏக்கரில் மிளகாயும், ஈரோடு வட்டத்தில் 2,500 ஏக்கரில் மஞ்சளும், பயிரிட முனைப்புத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. வடஆர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களில் கூடுதலாக 2,400 ஏக்கரில் சர்க்கரை வள்ளிக் கிழங்கு பயிரிடப்படும்.

உற்பத்தியைப் பெருக்குவதில் விதைகள் முதல் இடம் வகிக்கின்றன. தரமான விதைகளை வழங்க, விதைச் சட்டத்தின் கீழ் விதைச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தை வேளாண்மைத் துறை மேற்கொண்டுள்ளது. இவ்வாண்டில் மதுரையில் விதைப் பரிசோதனை நிலையம் ஒன்று திறக்கப்படும். யந்திர முறையில் விதைகளைப் பக்குவப்படுத்துவதால் விதைகள் வீணுவது தடுக்கப்படுவதுடன் ஈரம், உற்பத்தி வளம், தரம், கெடாத தன்மை ஆகியவை மேம்படுகின்றன. எனவே இவ்வாண்டில் தஞ்சை மாவட்டம் சாக்கோட்டையில் நெல் விதை பக்குவப்படுத்தும் நிலையம் ஒன்றையும், குடுமியான் மலை ''அண்ணு'' பண்ணையில் சிறு தானிய விதைப் பக்குவப்படுத்தும் நிலையம் ஒன்றையும் நிறுவ இருக்கிருேம்.

உற்பத்தியைப் பெருக்குவதில்

**டெஹ்ரான் நகரில் உள்ள குழாய் செய்யும் ஒரு கம்பெனியின் இயக்குநர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன்.**

**அவர் உங்கள் முதல்வரின் வயதென்ன என்று கேட்டார். நாற்பத்தி ஆறு முடிந்து நாற்பத்து ஏழு என்றேன்.**

**இந்த வயதில் அவர் இவ்வளவு சிறப்பாக ஆட்சி நடத்துகிருரே என்று அவர் மிகுந்த ஆச்சரியப் பட்டார்.**

**—பொதுப்பணி அமைச்சரின் வெளிநாட்டு அனுபவம்**

## "விடியல்கள் மலரும் பொழுது..."

**(மதனன்)**

அடிவானில்...... இருள்நாளின் உதிரலிலே
விடியல்கள் மலரும் பொழுது......
அதோ ! அந்தக் காலநதி தீரத்தில்
எங்கள் இளம்படகு
இளைப்பாறிச் செல்கிறது.

★

விடியல்கள் மலரும் பொழுது......
முன்னைப் பழம்நாளில்
மூண்டெழுந்த கனவெல்லாம்
சின்ன விழிக்கூட்டில்
சிறகசைத்துப் பறக்கிறது.
முன்முன்...ஓர் பொற்காலம்...
முத்தமிழர் கைக்குழந்தை...
மண்மேலே அக்காலம்
மறுபிறவி எடுக்கிறது !

★

'தமிழரசு' வருகிறது !
சரித்திரத்தேன் சாற்றினிலே...
அமிழ்தரசக் கலவையுடன்
அள்ளக் குறையாமல்...
'தமிழரசு' வருகிறது !
காலத்தின் வீதியிலே
தடம்பதித்த **"சாதனைகள்"**
ஞாலமகள் வாசலிலே
நடைபோட வருகிறது !

★

விடியல்கள் மலரும் பொழுது....
அதோ ! அந்தக் காலநதி தீரத்தில்
எங்கள் இளம்படகு
இலக்கைத் தொடுகிறது !
ஓ...அந்த விடியல்கள் மலரும் பொழுது...

விதைகளுக்கு அடுத்தாற்போல் இரசாயன உரம் முக்கிய இடம் பெறுகிறது. தமிழ்நாட்டில் இரசாயன உரங்களின் உபயோகம், நாளுக்கு நாள் பெருகி வருகிறது. தற்பொழுது இரசாயன உரம் கிடைப்பதில் எவ்விதச் சங்கடமும் இல்லை. இந்த ஆண்டில் 1.75 லட்சம் மெட்ரிக் டன் தழைச்சத்து உரங்களும், 0.75 லட்சம் மெட்ரிக் டன் மணிச்சத்து உரங்களும், 0.75 லட்சம் டன் சாம்பல் சத்து உரங்களும் வழங்கப்படும். இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இவ்வாண்டில் 5.25 லட்சம் டன் கூடுதல் உணவு உற்பத்தி கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மண் மாதிரி எடுத்துப் பரிசோதனை செய்து, பார்த்து, சிபாரிசு செய்யப்படும் அளவில் இரசாயன உரமிடுமாறு வலியுறுத்தப்படுகிறது. தற்பொழுது 8 இடங்களில் மண் பரிசோதனை நிலையங்கள் உள்ளன. இவ்வாண்டில் திருச்சியில் ஒன்றும், இராமநாதபுரத்தில் ஒன்றுமாக 2 மண் பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்படும். மேலும் 3 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பயிர்ப் பாதுகாப்பு, அடுத்தாற்போல் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். பூச்சி பூசண மருந்துகளை மானிய விலையில் வழங்குவதை நிறுத்திவிடும்படி இந்திய அரசு கேட்டுக் கொண்டிருந்தும் தமிழ்நாடு அரசு 15 சத மானிய விலையில் பூச்சி பூசண மருந்துகளை உழவர் பெருமக்களுக்கு வழங்கி வருகிறது. நடப்பாண்டில் 10 லட்சம் ஏக்கர்களில் விமானம் மூலம் மருந்து தெளிக்கவும், கோவை வேளாண்மைக் கல்லூரியில் விமானத்திலிருந்து மருந்துதெளிக்கும் பயிற்சிப் பள்ளி ஒன்று அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 500 விசைத் தூவு கருவிகளை வாங்கவும், காஞ்சிபுரத்தில் ஒரு மருந்து பரிசோதனை ஆய்வுக் கூடத்தை விரைவில் செயல்படுத்தவும், மதுரையில் மற்றொரு ஆய்வுக் கூடத்தைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

★ ★ ★




செந்தமிழ்ப் பொதிகையின் சந்தனக் காற்று சில்லென்று வீசுகிறது.

செல்லக் குழந்தையைப்போல பூமி அன்னையின் மடியில் முற்றிய செந்நெற் கதிர்கள் மோனத்துயில் கிடக்கின்றன. செக்கர் வானத்துப் பின்னணியில் செருக்களத்து வீரர்களைப்போல நிமிர்ந்து நிற்கும் தென்னை மரங்கள்!

கமுகும் வாழையும் நெருங்கி வளர்ந்து கண்ணைப் பறிக்கின்றன. காணுமிடமெல்லாம் இயற்கைத் தாயின் எழில் நடனம்! காட்சித் தேனில் களி வண்டாகி மயங்கி நிற்கும் என்னைக் கடமை உணர்வு தட்டி எழுப்புகிறது!

பதினெட்டு பவுண்டு எடையுள்ள காமிராவைத் தோளில் சுமந்து கொண்டு கிளம்புகிறேன்.

நாகர்கோவிலிலும் கன்னியாகுமரியிலும் மூன்று நாட்கள் சுற்றுப் பயணம் செய்கிறார் முதலமைச்சர். கல்லூரி விடுதிகள், விளையாட்டரங்குகள், பாலங்கள் திறப்பு, பள்ளிகள் கல்லூரிகள் துவக்கம், குடிதண்ணீர் வழங்கல் முதலிய மக்களின் குறை தீர்க்கும் திட்டங்களைச் செய்திப் படமாக எடுக்கிற வேலை எனக்கு!

### எங்கும் புதுமலர்ச்சி

களிக்காவிளையில் 9.45க்கு ஒரு விழா!

பிறகு 10.30 மணிக்கு குழித்துறையில் ஒரு கூட்டம்! பின்னர் தக்கலையில் 12.30 மணிக்கு ஒரு நிகழ்ச்சி! தொடர்ந்து வில்லுக்குறியில் ஒருவிழா! அடுத்து குடலக்குடி, வடசேரி என்று கலைஞர் சுற்றுப் பயணத்தைத் தொடர்கிறார்.

எங்கணும் புதுமலர்ச்சி! எங்கணும் புது எழுச்சி! எங்கணும் மக்கள் வெள்ளம் புரண்டோடுகிறது! அந்த வெள்ளத்தில் அமிழ்ந்தெழுந்து செய்திப் படங்களை உருவாக்குகிறோம் நானும் என் உதவியாளர்களும்.

கானத்தால் கட்டுண்ட நாகம் போலக் கலைஞரின் பேச்சில் மக்கள் மயங்கிக்கிடப்பர். ஆனால் நாங்கள் அவ்வாறு மயங்க முடியாது. மயங்கினால் பிறகு காமிராவும் மயங்கி விடும்! பின்னர் படமெடுக்க வந்த வேலை என்னாவது? ஒரு கூட்டம் முடியுமுன்னரே அடுத்த நிகழ்ச்சிக்கு, முதலமைச்சருக்கு முன்னதாகவே சென்று விடுவோம். அப்பொழுது தான் எங்கே மின்விளக்குகளை அமைப்பது, எந்தக் கோணங்களில் படமெடுப்பது என்பவை தெளிவாகும்.

நாகர்கோவிலுக்குச் செல்லும் பொழுது இரவு மணி 12.30 இருக்கும். அந்த நள்ளிரவிலும் நாகர்கோவில் மக்கள் கண்ணில் உறக்கமின்றிக் காத்திருந்தனர்.

### பயணம் தொடருகிறது

மறுநாள்—

தோவாளை, குளச்சல், ஈத்தாமொழி, வள்ளியூர், அத்தி உத்தி, நெட்டூர், பாலூர் என்று ஊர் ஊராக ஊண் உறக்கமின்றி முதலமைச்சர் செல்ல நாங்களும் உற்சாகமாகத் தொடர்கிறோம்.

பொங்கி வரும் மக்கள் வெள்ளத்தில் முங்கி எழும் எங்களுக்குப் பசியா, தாகமா? சிறிது வயிற்றுக்கும் ஈவோம் என்ற சிந்தனையே இருப்பதில்லை.

சில வேளைகளில் மட்டும் இடையில் வண்டியை நிறுத்தி, இறங்கி, ஆளுக்கு இரண்டு வாழைப் பழங்கள், கிராமப்புறங்களில் கிடைக்கும் கண்ணைப் பறிக்கும் 'கலர்' சாப்பிட்டுவிட்டு மீண்டும் வண்டியில் அமர்ந்து விடுவோம்.

பிறகு? மீண்டும் பயணம்...படப்பிடிப்பு... பயணம்... படப்பிடிப்பு ...பயணம்....



## புதிய பொறுப்பு

அடையாற்றில் அமைந்துள்ள திரைப்படத் தொழில்நுட்பக் கல்வி நிலையம் தான் எங்கள் தாய்வீடு. 1960ஆம் ஆண்டு முதல் தனித் துறையாக விளங்கத் தொடங்கிய திரைப்படத் தொழில் நுட்பக்கல்வி 1965ஆம் ஆண்டில் தனிக் கட்டடத்தையும் பெற்றது. ஆண்டொன்றுக்குக் குறைந்தது 25 கலைஞர்களை உருவாக்கி வரும் இந்த நிறுவனத்திற்கு 1968ஆம் ஆண்டு வசிகரமான புதிய பொறுப்பொன்று வந்து சேர்ந்தது.

அரசின் ஆக்கப் பணிகளை மக்களுக்கு விளக்கவும் அவர்களின் ஒத்துழைப்பை வேண்டவும் திரைப்படம் ஒரு அரிய கருவியாகும். மக்களாட்சியில் எந்தத் திட்டமும் மக்களின் ஈடுபாட்டைப் பெற்றாலன்றி வெற்றி பெற இயலாது. அரசு மக்களுக்காக ஆற்றியுள்ள பணிகளை விளக்கினாலன்றி எந்த ஆட்சியும் நிலை பெறவும் முடியாது. இதனை உணர்ந்த தமிழக அரசு, செய்தி விளம்பரத் துறையின் கீழ், திங்களுக்கு இருமுறை அரசின் நிர்மாணத் திட்டங்களை உணர்த்தும் செய்திப் படங்களை உருவாக்குவதென்று திட்டம் தீட்டியது. இந்தத் திட்டத்தைச் செயலாக்கும் பொறுப்பினைத் திரைப்படத் தொழிற் கல்வி நிலையம் ஏற்றது.

1968 ஏப்ரல் முதல் இதுவரை முப்பது படங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. இவற்றில் இரண்டு- அண்ணல் காந்தி, அறிஞர் அண்ணா ஆகியோரின் வரலாற்றுச் சித்திரங்களாகும். அரசு நிகழ்ச்சிகள் மட்டுமன்றி அரசியல் தலைவர்கள் விழாக்களையும் படமெடுப்பதுண்டு. திருவாளர்கள் காமராசர், கல்யாணசுந்தரம், ம.பொ.சி. ஆகியோரின் பிறந்தநாள் விழாக்களும் சிறப்பாகப் படமாக்கப்பட்டன.

நாடெங்கும் நிகழ்கின்ற ஆக்கப் பணிகளைப் பற்றிய குறிப்புகள், செய்தி விளம்பரத் துறையினருக்கு வருகின்றன. தனிப்பட்ட முறையில் நிகழும் சில சமூக விழாக்கள், விளையாட்டுகள், கலைநிகழ்ச்சிகள் படமாக்கப்படவேண்டும் என்ற விண்ணப்பங்கள் வரும்பொழுது, நாட்டின் நலனோடு ஒட்டியதாயிருந்தால் அவை ஆய்ந்து சேர்க்கப்பட்டு, படமாக்கப் படவேண்டிய நிகழ்ச்சிகளின் தொகுப்பு ஒன்று செய்தித் துறையினரால் தொழிற்கல்வி நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.

## அனுபவத் துளிகள்

கடந்த இரண்டு ஆண்டுகளில், அவற்றைக் காண்பவரின் கருத்தில் பதியத் தக்க விதத்தில் நாங்கள் செய்திப்படமாக்க முயன்றபோது பெற்ற அனுபவங்கள் சில சுவையானவை; சில பயங்கரமானவை; சில உருக்கமானவை.

மலைத்தலங்களில் உயர்ந்து விளங்கும் உதகையின் அழகைப் பலரும் உணரவும், அங்கு சுற்றுலா வரும் மக்கள் தொகையைப் பெருக்கவும் அங்கு நிகழும் மலர்க்காட்சியையும், படகுப் போட்டியையும் செய்திப் படத்தில் வெளியிட வேண்டும் என்று ஓர் முறை ஆணைவந்தது. மலையின் அழகும், மரகதப் பசும்புல் வெளியின் எழிலும், வண்ண மலர்க் கூட்டங்களின் வனப்பும் எங்கள் உள்ளத்தைக் கிறக்கிவிட்டன. நேரம் தெரியாமல் படமெடுத்துக் கொண்டு போனோம். சிறிது நேரம் கழித்த பிறகு தான் திரைப்படச் சுருள் தீர்ந்து விடும் கட்டம் என்பது தெரிய வந்தது!

வரவேற்புகள், ஊர்வலங்கள் இவற்றைப் படமாக்கும் பொழுது ஜீப்பில் தொங்கிக் கொண்டு ஊஞ்சலாடிக் கொண்டே போவோம். அப்போது எங்கள் உடலோடு உயிரும் சேர்ந்து ஊசலாடிக் கொண்டிருக்கும்.

சென்னை எழும்பூரில் குழந்தை நல மருத்துவ மனையின் புதிய கட்டடத் திறப்பு விழாவைச் செய்திப் படமாக்கச் சென்றிருந்த பொழுது ஒரு விசித்திரமான அனுபவம் ஏற்பட்டது. கட்டடத்தில் பொருத்தப்பட்ட புதிய கருவிகளைக் காண்பித்துக் கொண்டு வந்த ஒருவர் இறுதியில் ஓர் 'ஆபரேஷன்' தியேட்டருக்குள் எங்களை அழைத்து வந்து விட்டார். ஒரு குழந்தைக்கு அப்பொழுதுதான் அறுவைச் சிகிச்சை செய்யத் தொடங்கியிருந்தார்கள். அதனைப் படமாக்கவும் சொன்னார்கள். நான் ஆழம் தெரியாமல் அதில் காலை விட்டு விட்டேன். என் கண் முன்னால் குழந்தையின் வயிற்றைக் கீற ஆரம்பித்தார் மருத்துவர். என் குடல் பதறிற்று. கண்களை இறுக மூடிக் கொண்டு முகத்தையும் திருப்பிக் கொண்டேன். நல்ல காலம்! காமிராவும் தன் கண்களை மூடிக் கொள்ளாததால் காட்சி சுருளில் பதிவாயிற்று!



### எனக்கு மகிழ்ச்சி எது?

ஜுலை 1ந்தேதி உங்களிடம் தனித்தனியே விடை பெறமுடியாது. முதலமைச்சர் வெளிநாடு செல்கிறாரே, அனைவரும் சென்று வழியனுப்ப வேண்டுமே என்பதற்காக நீங்கள் அனைவரும் என்னை வழியனுப்ப வரத்தேவையில்லை. மாவட்டங்களிலேயே இருந்து அங்கு செய்யவேண்டிய காரியங்களைச் செய்தால் போதுமானது. அதுவே எனக்கு நல்ல மகிழ்ச்சியைத் தரும். என்னுடைய வெளிநாட்டுப் பயணம் முடிந்த பிறகு, உங்களைச் சந்திக்கிற நேரத்தில், நாட்டின் மக்களுக்காகச் செய்த காரியங்கள் இவை என்று விரிவாகச் சொல்வீர்களானால் அதுவே எனக்குப் பெருத்த மகிழ்ச்சியைத் தரும்.

முதல்வர் கலைஞர்

*மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம்*
*23—6—'70.*

சில உருக்கமான நிகழ்ச்சிகளையும் நாங்கள் கண்டதுண்டு, உடல் ஊனமுற்றோரின் உலகநாள் விழாவை ஒட்டிச் சென்னை சிறுவர் அரங்கில் நடந்த கண்காட்சிகளைக் காண்பவர் நெஞ்சு நெகிழத் தக்க வகையில் படம் பிடித்திருந்தோம். அதனை ஒட்டி நிகழ்ந்த ஊமையர், செவிகேளார், குருடர், உடல் ஊனமுற்றோர் ஆகியோரின் விளையாட்டுப் போட்டிகளையும் சிறப்பாகப் படமாக்கியிருந்தோம். அந்தக் காட்சிகளை இன்று நினைக்கும் பொழுதும் அவர்களுக்கு ஒல்லும் வகையெல்லாம் உதவ வேண்டும் என்ற எண்ணம் நெஞ்சில் எழுகிறது. படத்தைப் பார்ப்பவர்களில் இரக்கமுள்ள இதயம் படைத்தவர்களுக்கெல்லாம் இதே சிந்தனை தோன்றியிருக்குமல்லவா? அந்தச் சிந்தனை செயலானால், செய்திப் படங்களை எடுக்கின்ற அரசின் கனவும் நனவாகுமல்லவா?

## இரக்கமில்லா எடிட்டர்

ஆனால், உள்ளத்தில் சற்றும் ஈவிரக்கமில்லாதவர் திரைப்படத் தொழில் கல்விக் கூடத்தில் இருக்கிறார். இவரை நாங்கள் 'எடிட்டர்' என்போம். படத்தில் தாங்கள் 'விழவேண்டும்' என்ற ஆசையில் எத்தனையோ பேர்கள் தங்கள் தலைகளை நீட்டுவார்கள். அவர்கள் ஆசை நிராசையாகமாலிருக்க நாங்களும் நிகழ்ச்சிகளைச் சற்று நீளமாக எடுப்பதுண்டு. தங்கள் ஊரில் செய்திப்படம் வெளியானால் தங்களைக் காணலாம் என்று அவர்களும் ஆவலோடு காத்திருப்பார்கள். ஆனால், செய்தி விளம்பரத் துறை அலுவலர்களிடமிருந்து எவை தேவையானவை என்பதை அறிந்த பிறகு, ''மூவியோலா'' என்னும் கருவியில் போட்டுப் பார்த்து, மற்றவற்றையெல்லாம் நெஞ்சில் இரக்கமின்றி வெட்டி எறிந்து விடுவார் எடிட்டர். அவர் என்ன செய்வார்? ஆயிரம் அடிக்குள் ஒரு செய்திப்படச் சுருளை அடக்க வேண்டுமென்பது ஆணையாயிற்றே!



'எடிட்டிங்' ஆவதற்கு முன்னுல், பதிவாக்கப்பட்ட படங்கள் 'பிராசஸிங்' செய்யப்பட்டு, படச் சுருளில் தெளிவான காட்சி வடிவத்தைப் பெறுகின்றன. இதனை, ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ்த் தொழில் நுட்பக் கல்வி மாணவர்களே செய்கின்றனர். மாணவர்க்கு இது ஒரு பயிற்சியாகவும் அமைகிறது; அரசிற்கு அதனுல் ஆகக்கூடிய செலவும் மீதமாகிறது.

மூவாயிரம் அடிகளுக்கும் மேலாக எடுக்கப்பட்ட படங்கள் ஓர் ஆயிரம் அடியாக 'எடிட்' செய்யப்பட்ட பிறகு, படத்திற்குரிய விளக்க உரையும் இசையும் பதிவாக்கப்படுகின்றன. இந்த ஒலிப்பதிவும் ஆசிரியரின் துணை கொண்டு மாணவர்களாலேயே கவனிக்கப்படுகிறது.

இறுதி வடிவம் பெற்றுவிட்ட படம் இப்பொழுது தமிழகத்தின் பல்வேறு இடங்களில் திரையிடப் படத் தயாராகிறது. ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் கல்வி நிலையத்தில் கட்டப்பட்டுள்ள அழகான திரை அரங்கில் காண்பிக்கப்பட்டு அரசு அலுவலர்களின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், திரைப்படச் சுருள்கள் அடங்கிய 'கேன்'களை 'வேனி'ல் ஏற்றிக் கொண்டு ஒரு ஊழியர் ஊர் முழுதும் வினியோகம் செய்யக் கிளம்பி விடுகிறுர்!



### வரலாற்றுச் சான்று

நிரந்தரமான ஒரு சான்றை 'கல்லின் மேல் இட்ட கலம்' என்று விளக்கும் வழக்கம் தமிழகத்தில் உண்டு. கல்லின் மேல் எழுத்தையும் சிதைக்கவும், திருத்தவும் இயலும். ஆனுல் 'நெகடிவ்'கள் சரியான முறையில் பாதுகாக்கப்பட்டால் இன்று தமிழகம் வளர்ந்து வரும் சிறப்பினை எதிர்காலத் தலைமுறைகள் அறிந்து கொள்வதற்குச் செய்திப் படங்கள் என்றும் சான்ருக விளங்கி வரும்.

இன்றையத் தலைமுறைக்கோ, வளரும் தமிழகத்தின் ஆக்கப்பணிகளில் நாமும் பங்கேற்க வேண்டும் என்ற வற்ருத ஆர்வத்தைத்தூண்டி வரும்.

அண்மையில் முதலமைச்சர் அவர்களும், நிதி யமைச்சர் அவர்களும் ஐரோப்பிய சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, உடன் கொண்டு செல்வதற்காக " அண்ணுவும் அவருக்குப் பிறகும் " என்று ஒரு படத் தொகுப்பினைத் தயாரித்துக் கொடுத்துள்ளோம்.


# இந்தியன் பாங்க்

(முற்றிலும் இந்திய அரசுக்கு சொந்தமானது)

தலைமை அலுவலகம் :: சென்னை

**பாங்க் டிபாசிட்தாரர்களுக்கு**
**1970-ன் இணையில்லாத வெகுமதி**

இந்தியன் பாங்கியில் உள்ள பணத்தை டிபாசிட் செய்து, பின்வரும் ஆதாயங்களைப் பெற்றிடுங்கள்:

(அ) வருமான வரியிலிருந்து விலக்கு,
(ஆ) செல்வ வரியிலிருந்து விலக்கு,
(இ) உங்கள் பணம் பத்திரமாக இருந்து வளர்ச்சி பெறுவதைக் காணுதல்,
(ஈ) உங்கள் சேமிப்புகளை இந்தியன் பாங்கின் மூலம் வழிப்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல்,
(எ) இந்தியன் பாங்கின் எல்லா கிளைகளிலும் எல்லா வகையான பாங்கிங் சேவைகளையும் பெறலாம்.

அருகாமையில் உள்ள இந்தியன் பாங்க் கிளைக்கு வருகை தந்திடுங்கள்.

லக்ஷ்மிநாராயணன்,
பாதுகாவலர்.



# தமிழரசு

| சந்தா விவரம் | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ... | ரூ. 8-00 |
| ஆறு மாதங்கள் | ... | ரூ. 4-00 |
| தனிப்பிரதி விலை | ... | 35 காசுகள் |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| கடைசி அட்டை இரு வண்ணங்களில் | ரூ. 1000 |
| இரண்டாவது அட்டை ,, | ரூ. 650 |
| மூன்ருவது அட்டை ,, | ரூ. 450 |
| முழுப்பக்கம் | ரூ. 400 |
| அரைப் பக்கம் | ரூ. 200 |
| கால் பக்கம் | ரூ. 100 |

விவரங்களுக்கு:

இயக்குநர், செய்தி விளம்பரத்துறை
கோட்டை : சென்னை - 9.

# கொடுத்து வைத்தவன்!

அமைச்சர் கே.வி. சுப்பையா



**கலியாண ராமனுக்கு** சென்னைக் கம்பெனி ஒன்றில் வேலை. சம்பளம் நானூறு ரூபாய். சாதுவான பையன். பசுப் போல சாது என்ருல் இவனைத்தான் குறிப்பிட வேண்டும். பெற்ருேர்களும் ஒரு தங்கையும் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் அப்படி ஒன்றுமில்லை. கொஞ்சமிருந்த சொத்துக்களையும் இவனுடைய படிப்பு சாப்பிட்டு விட்டது. அதனுல்தான் படித்த வரைக்கும் போதுமென்று கம்பெனி உத்தியோகத்தில் ஒரு பெரிய மனிதர் சிபார்சில் சேர்ந்து குடும்பத்தை ஓட்டிக் கொண்டிருந்தான்.

கலியாணராமனுடைய தகப்பனுர் ராமமூர்த்தி ஒரு ஆரம்ப ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். இவர் பள்ளியை விட்டு, ரிடையராகிற பொழுது பள்ளி ஆசிரியர்களும், மாணவர்களும் இவருக்குப் பாராட்டு விழா நடத்திஞர்கள். இவருடைய சேவையைப் பாராட்டிப் பலர் பேசிஞர்கள். இவருக்குப் பொன்னுடையும் போர்த்தப்பட்டது. பொன்னுடை என்ற பெயரில் ஒரு சரிகைத் துண்டைப் போர்த்திஞர்கள். இந்த விழாவிற்குச் செலவு செய்தது ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கலாம். அதை அவரிடம் கொடுத்திருந்தாலும் அவருக்குப் பிரயோசனமாக இருந்திருக்கும். ஆனுல் அதைப் பற்றிய சிந்தனை இல்லாமல் பாராட்டுப் பெற்ற மகிழ்ச்சியில் வீடு வந்து சேர்ந்தார் ராமமூர்த்தி.

ராமமூர்த்தியின் மனைவி சுந்தராம்பாள் ஒருநாள் பேச்சோடு பேச்சாகக் கேட்டாள்.

''என்னங்க! உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்று விட்டதால், சகலத்திலும் ஓய்வு பெற்று விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே. உத்தியோகத்தில் தான் ஓய்வு பெற்றிருக்கிறீர்களே தவிர வீட்டுக் காரியங்களில் ஓய்வில்லை. பையனுக்கு வயது ஆகிக்கொண்டே போகிறது. பெண் சுந்தரியும் வயதுக்கு வரப்போகிருள். அப்புறம் எதை எதைப் பார்க்க முடியும். ஒவ்வொன்ருக முடிக்க வேண்டாமா? கலியாணராமனுக்கு ஒரு கலியாணத்தைச் செய்து பார்த்து என் கண்ணை மூடலாமென்றிருக்கிறேன். எங்கேயாவது ஒருபெண்ணைப் பாருங்கோ. சும்மா கையைக் கட்டிக் கொண்டு வீட்டில் அடைந்து கிடக்காமல் இன்றைக்கே கிளம்புங்கள்,'' என்று கவலை தோய்ந்த முகத்துடன் உஷார்ப் படுத்திஞள் தன் கணவனை.

ராமமூர்த்தியும் நாலு இடத்தில் சொல்லி வைத்தார். ஒரு பெண்ணின் ஜாதகம் பொருந்தி இருந்தது. ராமமூர்த்திக்கு ரொம்பவும் பிடித்து விட்டது. பெண் புதுக்கோட்டை. பெயர் மரகதவல்லி. அழகுக்கு ஒரு எடுத்துக் காட்டானவள். நல்ல இடம். சொத்து ஐந்து, ஆறு லட்சம் தேறும். மரகதவல்லி ஒருத்தி தான் வாரிசு என்று தரகர் எடுத்துச் சொன்னுர். ராமமூர்த்தியோ பஞ்சத்தில் அடிபட்டவர். ஆகையால் இந்தச் சம்பந்தம் ரொம்பவும் பிடித்து விட்டது.

மகன் கல்யாணராமனுக்கு கடிதம் ஒன்று எழுதி அன்றையத் தபாலிலேயே சேர்த்தார்.

கலியாணராமனும் திருச்சியிலுள்ள தன்னுடைய வீட்டிற்கு ஒரு நாள் முன்னதாகவே வந்து சேர்ந்தான். ராமமூர்த்தி, விவரமாகச் சம்பந்தி வீட்டாரைப் பற்றி எடுத்துச் சொல்லி . எப்படியும் இந்தச் சம்பந்தத்தை முடித்துவிட வேண்டுமென்ற ஆசைக் கனலை அவனுடைய மனதில் மூட்டி வைத்தார்.

மறுநாள் வெள்ளிக்கிழமை. குறித்த நேரத்தில் நல்ல சகுனம் பார்த்து ஒரு டாக்சியில் ஏறி மூவரும் புதுக்கோட்டை சென்றனர். காரில் போகும் பொழுதே ராமமூர்த்தி பாடம் சொல்லிக் கொண்டு வந்தார் மகனுக்கு. ''சம்பந்தி வீட்டில் நுழையும் பொழுது வலது காலை எடுத்து வைத்து வரவேண்டும். நிலையில் இடித்துக் கொள்ளாமல் தலையைக் குனிந்து செல்ல வேண்டும்,'' என்றும் இன்னும் எவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென்பனவற்றையும் சொல்லிக்கொண்டே வந்தார்.

கார் சம்பந்தி வீட்டு வாசலில் வந்து நின்றது. கார் சத்தம் கேட்டவுடன் சம்பந்தி சம்பந்தம் அவசர அவசரமாக ஓடிவந்து எல்லோரையும் அழைத்துச் சென்று நடு ரேழியில் உட்கார வைத்துத் தாகத்திற்குத் தண்ணீர், மற்றும் குளிர்ந்த பானங்கள் கொடுத்து 'ஆசுவாச'ப் படுத்திஞர். சம்பந்தத்தின் மனைவியும் ஒரு எட்டு வந்து சம்பந்திகளை வரவேற்று விட்டுச் சமையல் கட்டிற்குச் சென்று, சமையலைத் துரிதப் படுத்திக்கொண்டிருந்தாள். மரகதவல்லியும் ஜன்னல் வழியாக மாப்பிள்ளையைப் பார்க்காமலில்லை. 'மாப்பிள்ளை பரவாயில்லை', என்ற எண்ணம் அவளுக்கு!

நல்ல நேரம் போவதற்குள் பெண்ணைப் பார்த்து விடுவது நல்லது என்று அவசரப்படுத்திஞர் ராமமூர்த்தி. மரகதவல்லியும் நன்ருக அலங்கரித்துக் கொண்டு வந்து எல்லோரையும் வணங்கிஞள். 'அன்னமென அல்லவென', என்று வர்ணிப்பார்களே அதைப்போல இருந்தது. அவளது (Book ''கற்கண்டோ, சர்க்கரையோ, தேனே, பாகோ, கனியொடு கலந்த கரும்பின் சாருே?'' என்று ஒரு புலவன் பாடி இருக்கிருனே இவளைப் பற்றியும், இவளுடைய குரலின் இனிமையைப் பற்றியும்



தான் பாடியிருப்பானே? என்று வியத்து கொண்டிருந்தான்—கலியாணராமன்! ராமமூர்த்திக்கு வாயெல்லாம் பல்லாகி விட்டது. சுந்தராம்பாள் மரகதவல்லியின்மீது வைத்த கண்ணை வாங்கவில்லை. எல்லோரும் வாய் மூடி மௌனியானார்கள்!

மரகவல்லியும் வாய்ப் பேச்சற்று அசைவற்ற பொற்சிலைபோல் நின்று கொண்டிருந்தாள். அப்பொழுது இரண்டு வயது மதிக்கத் தகுந்த ஒரு பாப்பா, ''அம்மா, அம்மா,'' என்று அலறிக் கொண்டு தட்டுத் தடுமாறி ஓடி வந்து, மரகவல்லியின் காலைக் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். ''குழந்தையை இங்கே விடாதே, என்றால் கேட்கிறாளா'' என்று இரைந்தார் சம்பந்தம். மாப்பிள்ளைக்கும், மற்றவர்களுக்கும் என்னமோ போலாகி விட்டது.

ஒப்புக்கு ஏதோ சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஊருக்குச் சென்றவுடன் கடிதம் எழுதுவதாக விடை பெற்றுச் சென்றார்கள் மாப்பிள்ளை வீட்டார்.

இரண்டு தினங்கள் கழித்துக் கடிதமும் வந்தது. கடிதத்தைப் பிரித்து, சம்பந்தம் படித்தார்.

''அன்புள்ள சம்பந்தம் அவர்கள். மன்னிக்க வேண்டும். சம்பந்தி என்று கூறிக் கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன். அப்படி ஒரு பாக்கியம் எங்களுக்கு இல்லை என்று தான் சொல்ல வேண்டும். என்ன செய்வது? நாம் நினைக்கிறபடி எதுவும் நடப்பதில்லை. உங்கள் மகளுக்கு ஏற்கனவே திருமணமாகி ஒரு குழந்தை இருக்கிறதென்பதை நீங்கள் சொல்ல விட்டாலும், அந்தக் குழந்தையே ''அம்மா, அம்மா,'' என்று அலறிக் கொண்டு மரகதவல்லியின் காலைக் கட்டிக் கொண்ட நிகழ்ச்சி எங்களுக்குக் காட்டிக் கொடுத்து விட்டது. உங்கள் மேல் பிசகல்ல. எப்படியாவது மகளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்றுதான் நினைப்பீர்கள். அது ஒரு தகப்பன் செய்ய வேண்டிய காரியம் தான். இருந்தாலும் என் மனம் இடம் கொடுக்கவில்லை. அதனால்தான் உங்களைச் சம்பந்தி என்று கூறிக் கொள்ள முடியவில்லை. நான் இதை யாரிடமும் சொல்ல மாட்டேன். உங்களுடைய சமாதானம் எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

இப்படிக்கு
ராமமூர்த்தி.''

பெண் வேட்டையில் தோல்வி கண்ட கலியாணராமன், தன் தலை விதியை நொந்துக் கொண்டு சென்னைக்குச் சென்றான்.

இரண்டு மூன்று மாதங்களாயின. ஒரு நாள் கலியாணராமனின் நண்பன் சிங்காரவேலு, தன்னுடைய பிறந்த நாளை ஒட்டித் தன் வீட்டிற்கு விருந்துக்கு வரவேண்டுமென்று வேண்டிக் கொண்டான். சிங்காரவேலுவுக்கு வேறொரு கம்பெனியில் வேலை. இருவரும் நண்பர்கள். அதனால் கலியாணராமனால் தட்டிக் கழிக்க முடியவில்லை. கட்டாயம் வருவதாக ஒப்புக்கொண்டான்.

அந்த நாளும் வந்தது. சிங்காரவேலுவும் அவன் மனைவியும் புது மணத் தம்பதிகளாயிற்றே. அதனால் ஒரு வெள்ளிக் கெண்டியும் பாலாடையும் வாங்கிக் கொண்டு கலியாணராமன் சிங்காரவேலுவின் வீட்டிற்குச் சென்றான். சிங்காரவேலுவும் புன்முறுவலுடன் வரவேற்று உபசரிக்கலானான். இலை, போட்டுப் பரிமாறப்பட்டது. சிங்காரவேலுவின் மனைவி அமுது படைத்தாள். தலையைக் குனிந்து கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்த கலியாணராமன் நிமிர்ந்து நண்பனின் மனைவியைத் தற்செயலாகப் பார்த்து விட்டான்.

அவள், தான் பெண் பார்த்த மரகதவல்லி! பேயறைந்தவனைப் போலானான், இருந்தாலும் மனதை அடக்கிக் கொண்டு அவசர அவசரமாகச் சாப்பாட்டை முடித்துக் கையை அலம்பினான். அவனுடைய பரபரப்பைச் சிங்காரவேலுவால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சிங்காரவேலுவைக் கேட்டுவிடவேண்டுமென்று துடித்தது அவனுள்ளம். அவனை இழுத்துக் கொண்டு அறைக்குள் சென்றான். ''ஏண்டா! உன் மனைவிக்கு ஏற்கனவே ஒரு குழந்தை இருக்காமேயடா!'' என்று கேட்டான்.

''அது ஒரு வேடிக்கைக் கதை. மரகவல்லிக்கு ஒரு அக்காள் இருந்தாள். ஒரு வயதுப் பெண் குழந்தையை விட்டு விட்டு இறந்து விட்டாள். மரகதவல்லிதான் தாய் மாதிரி அந்தக் குழந்தையை வளர்க்கிறாள். ஒரு தாய்க்கு இருக்க வேண்டிய பாசத்தைவிட அதிகமான பாசத்தை அவள் மீது சொரிகிறாள். அவள் மீது உயிரையே வைத்திருக்கிறாள். அந்தக் குழந்தையும் இவள் தான் தாய் என்று நினைத்துக் கொண்டு இவளை ஒரு நிமிடங்கூட விட்டுப் பிரிய மாட்டேனென்கிறாள். ஒரு நாள் யாரோ ஒரு முட்டாள், இவளைப் பெண் பார்க்க வந்திருக்கிறான். அந்த நேரம் இந்தக் குழந்தை ''அம்மா, அம்மா,'' என்று அலறிக் கொண்டு மரகவல்லியின் காலை ஓடி வந்து கட்டிப்பிடித்து அழுது இருக்கிறாள். அந்த முட்டாள், இவளுக்குத் திருமணமாகி, ஒரு குழந்தை இருக்கிறதென்று நினைத்துக் கொண்டு பெண் வேண்டாம் என்று சொல்லிப்போய் விட்டான். அது நல்லதாகப் போய் விட்டது. இல்லாவிட்டால் எனக்கு இவள் கிடைத்திருப்பாளா? பெண்ணென்றால் மரகதவல்லி தாண்டா பெண். அன்பின் மொத்த உருவம். பண்பின் வடிவம், அழகின் சிகரம். குணக் குன்று என்றால் இவள்தான். அவளைப் பெறுவது என்றால் கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்று அடுக்கிக் கொண்டு போனான் சிங்காரவேலு.

கலியாணராமன் கண்களில் நீர் துளிர்க்கச் சொன்னான்: ''சிங்காரவேலு, நீ கொடுத்து வைத்தவன்! கொடுத்து வைத்தவன்!!



## செய்தியும் - நிகழ்ச்சியும்





அறுபடை வீட்டினுள்
பெருமை நிறைந்தது !

கிருத்திகை விழாவினில்
திருத்தணி நாடுவீர் !

வசதிகள் மிகுந்தன-செல்லும்
வாய்ப்புகள் பெருகின !

" தணிகைமலையைச் சாரேனோ
சாமி அழகைப் பாரேனோ ?"

JL
V21IM,N70
N70:1
69594



தமிழக முதல்வருடன், நாவலரும், நிதியமைச்சரும்



திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர்



டாக்டர் ஏ. எல். முதலியாருடன் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப்



ஆர்வமிக்க இளைஞர்கள்



உணவு அமைச்சர், உள்ளாட்சி அமைச்சர், பிற்பட்டோர் நல அமைச்சர்



சிலம்புச் செல்வருடன் தொழிலாளர் நல அமைச்சர்




# பார்த்தோம் படித்தோம்

## சாதனைக்குச் சான்று

தமிழக அரசு செய்துவரும் சாதனைகளுக்கு ஓர் அருஞ்சான்றாகும் தமிழரசு இதழ்.

அரசு ஏடு என்றால் கவர்ச்சிகரமாக இருக்கக் கூடாது என்று இலக்கணம் வகுத்துக் கொண்டதுபோல் அரசினர் ஏடுகள் வெளிவந்த காலமும் உண்டு. அந்நிலையை 'சீரணி' ஓரளவு மாற்றிற்று. முழுதும் 'தமிழரசு' மாற்றும் என்பது முதல் இதழின் தோற்றத்திலேயே தெரிகிறது.

இம்முயற்சி வெற்றிபெற தமிழ் நில மக்கள் என்றும் துணை நிற்பார்கள். வளர்க 'தமிழரசு'

அன்பன்
இ. சந்திரசேகரன்,
மதுரை-1.

## அட்டை ஒன்றே போதுமே!

'தமிழரசு' முதல் இதழ் அட்டையை கண்ணாடிபோட்டு வைத்துள்ளோம். அவ்வளவு அழகு. தமிழ் நாட்டில் இவ்வளவு குறைந்த விலையில் இதுபோன்ற இதழ் இதுவரை வெளிவந்ததில்லை!

பி. இருட்டினகுமார்,
கும்பகோணம்.

## காலதாமதம் வேண்டாம்

அரசாங்க இதழ் கால தாமதமாக வரும் என்ற மரபு நெடுங்காலமாக உள்ளது. எத்தனையோ குறைகளைக் களைந்த தமிழக அரசு 'தமிழரசு' காலம் தவறாமல் வர வழிவகை செய்யும் என்று நம்புகிறோம்.

நந்திவர்மன்,
திருச்சி.

## நெடுங்காலக் கனவு நனவாகியது

மலேசிய நாட்டில் அரசாங்கம் வெளியிட்ட ஏடு ஒன்றை என் நண்பர் ஒருவர் காட்டினார் அது. போன்ற இதழை நம் அரசு வெளியிடும் நாள் வராதா என்று ஏங்கியதுண்டு அந்நெடுங்காலக் கனவை நனவாக்கி விட்டது 'தமிழரசு.'

க. கு. கோபால்சாமி,
தஞ்சாவூர்.

## தேன் செய்தி எப்பொழுது?

தமிழரசு இதழில், தாயகம் திரும்பியவுடன் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் எழுதுவார்கள் என்ற தித்திக்கும் செய்தியை அவருடைய எழுத்தின் மூலம் அறிந்தோம். அந்தத் தேன் செய்தி எங்களுக்கும் கிடைக்கும் நாள் எந்நாளோ?

இரா. சதாசிவம்,
சேலம்.











''என்ன ராமையாண்ணே! கவலையா உட்கார்ந்திட்டே?''

''ஒண்ணுமில்லே செல்லப்பா! நம்ம சின்னப்பய சமாச்சாரம்தான் சதா உடம்புக்கு ஏதாவது வந்து படுத்துக்கிருன்.''

''ஏன் டாக்டரிட்டே கொண்டு போய்க்காட்டுகிறதுதானே. புதுசா வந்திருக்கிற பட்டணத்து டாக்டரு நல்லா கவனிக்கிருருன்னு பேசிக்கிருங்களே!''

''அவரிட்டேதான் கொண்டு போய்க் காட்டினேன். பயலுக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லேன்னுட்டாரு!''

''அப்புறம் என்னவாம்?''

''உடம்பு 'வீக்'காயிருக்குதாம். பால், முட்டை தினம் குடுக்கணுமின்னுரு! முட்டை விக்கிற விலையிலே முட்டை வாங்கிக் கொடுத்தா எனக்குக் கட்டுப்படியாகுமா?''

'முட்டை ஏன் வாங்குற! நாலு கோழி பிடிச்சு விடு! தினம் முட்டை கிடைக்கும்''

''அதுவும் செய்து பார்த்தேன். பத்து முட்டை விட்டுட்டுதானு அடைக்கு சிலிப்பிக்குது. ஒரு பிரயோசனமுமில்லே.''

''ஓ! நாட்டுக் கோழி வாங்கி விட்டியா?''

''ஆமாம். நாட்டுக் கோழி முட்டை சரியாவிடலேன்னு சீமைக் கோழியும் வாங்கி விட்டுப் பார்த்தேன். அதுங்க வாங்கி ரெண்டு நாளிலே தலையைப் போட்டிடுதுங்க. செத்த கோழியைத் திங்கிறதுக்கு மனுசும் வரல்லே. விட்டெறிஞ்சிட்டா என் பெண்சாதி.''

''நான்கூட ஒம்மாதிரித்தான் நினைச்சிக்கிட்டுயிருந்தேன், காட்டுப்பாக்கத்துக்கு என் தங்கச்சி வீட்டுக்குப் போறது வரைக்கும்!''

''அங்கே கோழிப் பண்ணை இருக்கிறதா கேள்விப்பட்டிருக்கேன்''.

''ஒரு நாளிலே இரண்டாயிரம் முட்டைகள் உற்பத்தி செய்கிற பெரிய கோழிப்பண்ணை இருக்குது காட்டுப்பாக்கத்திலே. அதுமட்டுமில்லே, அங்கே வீட்டுக்கு வீடு கோழிப்பண்ணைதான்.''

''அவங்க எப்படி வளர்க்கிருங்க?''

''நான் அதுபற்றி அங்குள்ள பஞ்சாயத்து அதிகாரி கிட்டே கேட்டேன். அவர் சொன்னுரு: ''பெரிய கோழிப்பண்ணைகள் எவ்வளவுதான் இருந்தாலும் கிராமத்திலிருந்துதான் அதிக அளவு முட்டைகள் கிடைக்கின்றன. கிராமப்புறத்திலே தரையில் சிந்தி சிதறிக் கிடக்கும் தானியங்கள், புழு, பூச்சிகளைக் கோழிகள் உண்டு வளர்வதால் கோழிக்குச் செலவே கிடையாது. சென்னைப் பட்டினத்திலே விற்கிற கோழி முட்டைகளில் 60 சதவீதம் கிராமத்திலிருந்து வருகிற முட்டைகள் தானும். நீ சொன்னமாதிரி நாட்டுக் கோழிகள் சரியா முட்டையிடுகிறதில்லே. சீமைக் கோழிகள் சில, கிராமச் சூழ்நிலைக்கு ஒத்துக் கொள்ளாமல் நோய்வாய்ப்பட்டுச் செத்துப் போகுது. ஆனுல் நாட்டுக் கோழிகளைத் தரம் உயர்த்தினுல் குறைச்சலான உற்பத்தி செலவில் நிறைய முட்டைகள் பெறலாம்ன்னு அவரு சொன்னுரு!



காட்டுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் இதற்காகச் சில ஏற்பாடுகள் செய்ததாம். ஆஸ்திரேலியாவிலிருந்து தருவிக்கப்பட்ட 'ஆஸ்ட்ரோலார்ப்' என்ற இனச் சேவலை வெள்ளையினக் கோழியுடன் சேர்த்து, அதன் மூலம் பிறந்த ''ஆஸ்ரோவைட்'' என்ற கலப்பினச் சேவல்களைக் கொண்டு கிராமப்புறக்கோழிகளைத் தரமுயர்த்தினர்களாம். அவை எத்தகைய சூழ்நிலைக்கும் ஏற்ற மாதிரி இருப்பதோடு அதிக முட்டைகளையும் இடுகின்றனவாம்!'

''அப்படியா விஷயம். ஆமாம் அந்த மாதிரி கோழி நமக்கு விலைக்குக் கிடைக்குமா?''

''ஓ! காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் இதற்காகப் பெரிய அளவில் செயற்கை முறையில் கோழிக் குஞ்சுகள் பொறிக்கும் யந்திரங்கள் இருக்கு. அவற்றில் பொறிக்கப்படும் குஞ்சுகள் ஒருநாள் ஆனவுடன் அதில் ஆண் எது,பெண் எது என்று பிரித்து விடுகிறுங்க. இவ்வாறு வகைப்படுத்த, பிரத்தியேகப் பயிற்சி பெற்ற கால்நடை உதவி மருத்துவர்கள் அங்கு இருக்கிறுங்க. இனம் பிரிக்கப்பட்ட குஞ்சுகளை நியாயமான விலைக்குப் பாதுமக்களுக்கு விற்கிறுங்க!''

''ஆமாம் செல்லப்பா. அங்கு என்ன என்ன வகைக் கோழிகள் இருக்கு?''

''வெள்ளை லெகான். கருப்பு மைனுர்கா, சிவப்பு பொந்தான் எல்லாமே இருக்கு. பத்து வருஷத்துக்கு முன்னே நூறு கோழிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட பண்ணையம், அது. இப்போ, அடேயப்பா! எவ்வளவு வளர்ந்து விட்டது! ஆமாம் சென்னையில் முட்டை விலை என்ன?''

''28 காசிலிருந்து 32 காசு வரை விற்கிறது!''

''இந்தப் பண்ணையில் என்னவிலை தெரியுமா? நியாயமானவிலை. சின்ன முட்டை 23 காசு. பெரியது 27 காசு தான். இங்கே உற்பத்தி செய்யிற முட்டைகளை சென்னைப் பட்டினத்திலே உள்ள முட்டை விற்பனை நிலையங்கள் மூலமும், நடமாடும் விற்பனை நிலையங்கள்மூலமும் நியாய விலையில் விற்கிறுங்க!''

''அப்போ, அந்தக் கலப்புக் கோழியை வாங்கி நான் வளர்க்கலாம்னு சொல்றே!''

''நீ மட்டுமில்லே. கிராம மக்கள் எல்லோரும் வீட்டுக்கொரு கோழிப் பண்ணை வைக்கணும். ஒரு கோழி முட்டையை உற்பத்தி செய்தால் நாட்டின் வருவாய் 25 காசு அதிகமானதாகப் பொருள்.''

''ஆமாம்! செல்லப்பா! நீ சொல்றது ரொம்பசரி. சத்துணவுக்கு உணவுமாச்சி. நல்ல வருமானமும் ஆச்சி. வீட்டுக்கொரு கோழிப் பண்ணை நிச்சயம் தேவைதான்! வணக்கம்ப்பா! நான் வர்ரேன்!!



### அரசு சிமெண்டின் அரிய திட்டம்

ஆலை, வெறும் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்கூடம் மட்டும் அல்ல. தொழிலாளர், தாம் விழித்திருக்கும் நேரத்தில் பாதிக்குமேல் செலவிடும் இருப்பிடமும் ஆகும். தொழிலாளரின் உழைப்பு நாட்டின் செல்வத்தைப் பெருக்கி நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துகிறது.

தம் உழைப்பினுல் நாட்டின் செல்வத்தினைப் பெருக்கும் தொழிலாளரின் வாழ்வை மலரச் செய்வது அவசியம் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது.

இந்த நல் நோக்கினை மனதில் கொண்டு, தமிழ்நாடு அரசு, ஆலங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள 'அரசு சிமெண்ட்' நிறுவனத்தில் ஒரு கூட்டு ஆலோசனைக் குழுவினை ஏற்படுத்தியுள்ளது. இதில் தொழிலாளர்கள் சார்பில் நால்வரும், இடை நிலை மேற்பார்வையாளர்கள் சார்பில் இருவரும், அதிகாரிகள் சார்பில் நால்வரும் உறுப்பினர்களாக இருப்பர்.

ஆலையின் அலுவல்களில், தொழிலாளர்கள் பயனளிக்கும் முறையில் பங்கு பெறவும், நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கு மிடையே நல் லெண்ணமும் நல்லுறவும் நிலவிடவும், இத் திட்டம் வழி வகை செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# உலக ஆராய்ச்சி அரங்கில் தமிழ்

திரு. ஏ. சுப்பையா

நாடுகள் பலவற்றுக்கும் சென்று, பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு துறைகளில் ஆய்வு நிகழ்த்தி வரும் ஆராய்ச்சி வல்லுநர்களைக் கண்டு உரையாடிய பின்னர், ஐரோப்பிய, அமெரிக்க, ஆசியப் பல்கலைக் கழகங்களில் தமிழாராய்ச்சி புறக்கணிக்கப்பட்டு வருவதற்கு வரலாற்றுச் சூழ்நிலையே அடிப்படைக் காரணம் என்பதை உணர்ந்தேன். இந்தோ—ஐரோப்பிய மொழியாராய்ச்சியில் ஈடுபட்டிருந்த தொடக்க கால ஆய்வாளர்களுக்கு, தொல் பொருளாய்வு, வரலாறு, மொழியாராய்ச்சி ஆகியவற்றில் சில ஆதாரங்கள் முன்னரே கிடைக்காமல்போய் விட்டன. இத்தொல்பொருள் ஆதாரங்கள் எல்லாம் அவர்களின் ஆராய்ச்சிக்குப் பின்னரே கிடைத்தன. எனவே, வேறு ஆதாரங்கள் அற்ற நிலையில் அவ்வாராய்ச்சியாளர்கள், அன்று பொதுவாக நிலவிய ஒரு தவருன கருத்தையே ஏற்றுக் கொண்டு, இந்திய கலாச் சாரத்தின் ஒப்பற்ற சிறப்புச் சின்னமாக அமைந்திருப்பது சமஸ்கிருத மொழியே என்ற மேலோட்டமான முடிவுக்கு எளிதாக வந்துவிட்டனர். வங்காளி, இந்தி, போல, ஒரு வட்டார மொழியாகவே தமிழையும் ஒதுக்கி விட்டனர். ஆகவே,இந்தியப் பண்பாட்டை உருவாக்கியதில் பெரும்பங்கு கொண்டுள்ளதாக இன்று ஆராய்ச்சியாளர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## வளர்ந்து வரும் இன்றைய ஆர்வம் :

மிகவும் பழைமையான தனிச் சிறப்பு வாய்ந்த திராவிடக் கலாச் சாரத்தைப் பற்றி அறிவதற்குரிய அரிய வாய்ப்பு ஆரம்பகால ஆராய்ச்சியாளர்களுக்குக் கிட்டாமல் போய்விட்டது. அறிவார்வம் மிக்க அவர்களுக்கு திராவிடப் பண்பாடு மறைக்கப்பட்ட நிலையிலேயே இருந்து விட்டது. மேலும், பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில், வடமொழிக்கும், இந்தோ—ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகக் கருதப்படுகின்ற கிரேக்கம், லத்தீன் போன்ற மொழிகளுக்கும் இடையே இருக்கின்ற மொழித் தொடர்பு கண்டுபிடிக்கப்பட்டதால், மொழியியல் ஆய்வு விரைந்து வளர்ந்தது. இந்தோ ஐரோப்பிய மொழி ஆராய்ச்சியாளர்களுக்கு வடமொழி ஆராய்ச்சி மிகவும் இன்றியமையாததாகி விட்டது.

அண்மைக் காலத்தில் மேலை நாட்டு ஆராய்ச்சி மேதைகள் திராவிடப் பண்பாட்டின் பழம் பெருமையை உணர்ந்து, அதனைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடும் ஆர்வத்தை மிகுதியாகக் கொண்டுள்ளனர். வளர்ந்து வரும் இவ்வார்வத்திற்கான காரணங்களாவன:

1923ம் ஆண்டில் ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்

### "அண்ணுவும் தம்பியும்"

நீதிக்கு என்னென்ன தேவையோ அதையதைக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அண்ணு அவர்களிடம் இயல்பாகவே இருந்தது. அதைப்போலவே அவருடைய தம்பியும் இன்றைய தினம் முதலமைச்சராக இருந்து செய்து தருகிருர்கள்.

தலைமை நீதிபதி திரு. வீராசாமி
(மதுரை 15-6-'70)



**சிகாகோ நகர மக்கள் சிந்திய இரத்தம்.....**

**"வீரசபதம்"**

இன்று மே தினம் உலகெங்குமுள்ள உழைக்கும் தோழர்களின் உரிமைக்குரலாக எதிரொலிக்கிறது. பாடுபட்டவன் பயன் காண்பதும், வியர்வை சிந்தியவன் விளைவினை அனுபவிப்பதும் மே தினத்தில் எடுத்துக்கொள்ளும் வீர சபதமாகும். மேதினி எங்குமுள்ள தொழிலாளி வர்க்கம் மேன்மையுறுவதற்காகவே அன்றொரு நாள் சிகாகோ நகரத்து தொழிலாளர் பெருமக்கள் இரத்தம் சிந்தினார்கள். எந்தவொரு குறிப்பிட்ட நாட்டுக்கும், எந்தவொரு குறிப்பிட்ட பகுதிக்கும் சொந்தமென்று இல்லாமல் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் அகிலத்துப் பாட்டாளி மக்கள் தங்கள் உரிமைக் கொடியை ஒளி தவழ வான்முட்ட உயர்த்தும் நாள் இந்நாள்.

**முதல்வர் கலைஞர்**

***(மே நாள் விழா 1-5-70)***

களில் புதை பொருள் ஆய்விற்குப் பின்னர், அங்கு நிலவியிருந்த சிந்துவெளி நாகரிகம் ஆரியர்களின் வருகைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே செம்மையுடன் பரவியிருந்த வியத்தகு சிறப்புடையது என்பது அனைவராலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும் இலக்கியம், சமயம், கலாச்சாரம், எழுத்தியல், புதைபொருள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சியின் முடிவுகளைப் பார்க்குமிடத்து, அவை அனைத்தும் சிந்துவெளி நாகரிகத்தின் மூலவர்கள் திராவிடர்கள் அல்லது திராவிடர்களின் மூதாதையர்கள் என்பதற்கான ஆதாரங்களையே குவிக்கின்றன. எகிப்திய, சுமேரிய நாகரிகங்கள் வளர்ந்தோங்கிய அதே காலத்தில் சிறப்புற்றிருந்த பெருமை சிந்து சமவெளி நாகரிகத்திற்கு உரியது.

இலக்கியம், இசை, நாட்டியம், சிற்பம், கட்டிடக்கலை ஆகிய துறைகளில் தமிழர்கள் பெற்றுள்ள பல திறப்பட்ட வெற்றிச் சிறப்புக்கள் அனைத்தும் இத்துறைகளில் சிறப்பாராய்ச்சி நடத்துகின்ற வித்தகர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அதே வழக்காற்றின் செம்மை நிலையினைச் சிறிதும் சிதைவுறாமல் காத்து நிற்கும் ஒரே உயர் தனிச் செம்மொழி தமிழே ஆகும். பரந்துகிடக்கும் பழங்கால, இடைக்கால, தற்கால இலக்கியங்கள் அனைத்தையும் தடுமாற்றமின்றிச் சீராக ஆய்வதில், ''உலக வழக்கழிந்தொழிந்து சிதையா சீரிளமைத் திறம்'', மொழியியல், சமூகவியல் ஆய்வார்க்குப் பெரிதும் துணை நிற்கிறது. தமிழின் இத் தனிச் சிறப்பு, ஆராய்ச்சியாளர்களைக் கவர்ந்து ஊக்குவித்துள்ளது.

திருக்குறள் போன்ற பழம்பெரும் தமிழ் இலக்கியங்கள், தமிழர்கள் தற்கால சிந்தனைகளுடன் இணைந்து போகின்ற, என்றும் பயன்தரும் நடைமுறை மனித வாழ்வுக் கோட்பாடுகளையே கொண்டிருந்தனர் என்பதனையே எடுத்துக் காட்டுகின்றன. இச்சிறப்பினால்தான் திருக்குறள் ஐம்பது மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

தமிழாராய்ச்சி ஆர்வம் அமெரிக்க அறிஞர்களைவிட ஐரோப்பிய ஆய்வாளர்களிடம் மிகுந்து காணப்படுகிறது என்பது குறிப்பிடத் தக்கது. அமெரிக்கர்களின் ஆர்வம் சீனா, ஜப்பான் போன்ற புத்தமதத்தைத் தழுவி நிற்கும் கீழை நாட்டுக் கலாச்சார ஆராய்ச்சிகளில் அதிகம் திரும்பியுள்ளது. இந்தோ—ஐரோப்பிய மொழி ஆராய்ச்சியில் ஐரோப்பியர்களே அதிகம் ஈடுபட்டுள்ளதற்கு, அவர்களுடைய குடியேற்றத் தொடர்பும் காரணமாக அமைந்திருக்கலாம். இந்திய மொழிகளில் சமஸ்கிருதத்தில் மட்டுமே முழுக்க ஈடுபட்டு, திராவிடப் பண்பாட்டுப் பகுதியை ஒதுக்கிவிட்டது, ஆராய்ச்சித் துறையிலேயே ஒரு பெருங்குறை என்பதை உணர்ந்து ஐரோப்பிய வல்லுநர்கள் திராவிடப் பண்பாட்டு ஆராய்ச்சியில் பேரார்வம் காட்டலாயினர்.

வட அமெரிக்காவில் கூட, சமஸ்கிருத மொழி ஆராய்ச்சியாளர்கள் தமிழாராய்ச்சியைப் பெரிதும் ஊக்குவித்ததை நான் கண்டேன். குறிப்பிட்ட எல்லைகளுக்குள் கட்டுப்பட்டு நிற்கின்ற ஆராய்ச்சியை உலக முழுமைக்கும் விரிவு படுத்துவதற்கான அறிகுறிகள் அண்மையில் தென்படுகின்றன. என்னுடைய பயணத்தின் போது, அமெரிக்க ஆராய்ச்சி அறிஞர்களும்° ஐரோப்பிய ஆய்வாளர்களைப் போன்ற தமிழாராய்ச்சியில் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதையும், அவர்களைவிட இவர்கள் தமிழராய்ச்சியில் பின் தங்கி விடமாட்டார்கள் என்பதையும் உணர்ந்தேன்.

**தடைகள் :** நான் சந்தித்த மொழி ஆராய்ச்சி மேதைகளில் பலர், மேலை நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழாராய்ச்சியினை ஆழ்ந்து பரந்த அளவில் ஏற்படுத்த வேண்டுமெனில், தமிழாராய்ச்சிப் பணியில் உள்ள சிக்கல்களை அகற்றத் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை எடுத்தியம்பினர்.

இரண்டாவது மொழியாகத் தமிழையும், அதன் இலக்கியத்தையும் கற்பிப்பதற்குத் தற்கால போதனா முறையில் தேர்ச்சி பெற்ற தமிழ் ஆராய்ச்சி அறிஞர்கள் இல்லாதது ஒரு பெருங்குறை என்றும் சொல்லப்பட்டது. பழைய போதனை முறையிலேயே பயிற்சிபெற்ற தமிழ் அறிஞர்கள் சிலர் இரண்டு மூன்று பல்கலைக் கழகங்களில் அமர்த்தப்பட்டனர்; ஏமாற்றமே விளைவாயிற்று. ஆகவே, தமிழ் பேசத் தெரிந்த கன்னட மலையாளப் பண்டிதர்கள் அமர்த்தப்பட்டனர். அவர்களுக்குப் போதனா முறையில் தேர்ச்சி இருந்தது. ஆனால், தமிழ் இலக்கியத் தேர்ச்சி இல்லை.

**ஆங்கிலத்தில் தமிழ் ஆராய்ச்சி நூல்கள் :**

தமிழாராய்ச்சி நூல்கள் ஆங்கிலத்திலோ, பிறமொழிகளிலோ தேவையான அளவுக்கு இல்லாதது ஒரு பெருங் குறை. மூலமும், மொழி பெயர்ப்பும் என்று பல்வேறு வகையான நூல்கள் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் கிடைக்க வழி செய்தல் வேண்டும். ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள நூல்களைக் கேட்டு எழுதினாலும் அனுப்பி வைத்து உதவுவதற்குத் தமிழ் நாட்டு நூல் வெளியீட்டாளர்களோ, பல்கலைக் கழகங்களோ உதவுவதில்லை என்று ஆராய்ச்சியாளர் பலர் குறைப்பட்டுக் கொண்டனர்.



**தாய்நாடும்—**
**தாய்மொழி**
**பிறந்தநாடும்**

உலகு எங்கும் தமிழர்கள் பரவி வாழ்கிறார்கள். அவர்கள் எந்த நாட்டில் குடிமக்களாகி வாழ்கிறார்களோ அந்த நாடுதான் அவர்களுடைய தாய்நாடாகும். மலேசிய நாட்டில் வாழும் தமிழ்மக்களாகிய உங்களுக்கு தாய்நாடு மலேசியநாடுதான். தமிழ்நாடு உங்கள் தாய்மொழி பிறந்தநாடு.

**—பேரறிஞர் அண்ணா**
மலேசிய நாட்டுச் சுற்றுப்பயணத்தில்

தமிழாய்வுக்குத் தேவைப்படுகிற நூல்கள் கையெழுத்துப் படிகள் பற்றிய விவரப் பட்டியல்கள் உலகின் பல பகுதிகளிலும் கிடைக்காததால், ஆதாரங்கள் இல்லாமல் ஆராய்ச்சியாளர்கள் அல்லற்படுகின்றனர்.

வளர்ச்சியுற்ற நாடுகளில் கூட, போதுமான நிதி வசதி இல்லாமையே ஆராய்ச்சித் துறையில் புதிய முயற்சிகளைத் தொடங்குவதற்கு மிகப் பெருந்தடையாக அமைந்துள்ளது. கடந்த இருபதாண்டுகளாகப் பல்கலைக் கழகங்கள் விரிவடைந்திருக்கின்றன. புதிய பல்கலைக் கழகங்கள் ஏற்பட்டுள்ளன. ஆகவே, இருக்கின்ற ஆய்வுத் துறைகளுக்கே நிதி மிகுதியாகத் தேவைப்படுகின்றது. புதிய துறைகளைத் தோற்றுவிப்பதற்குப் பல்கலைக் கழக மேலிடம் எளிதில் இசைவு தருவதில்லை. அதுவும், தமிழ்த்துறை போன்ற விளம்பரம் பெறாத, விரிவடையாத ஆய்வுத் துறையைத் தொடங்க வேண்டும் என்ற ஆர்வமுடைய ஆராய்ச்சியாளர்கள் பல்கலைக்கழக மேலிடத்தாரின் மனத்தில் தமிழாய்வின் முக்கியத்துவத்தையும் சிறப்பினையும் வலியுறுத்தி உணர்த்துவதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியதிருக்கிறது. நிதியுதவி கிடைப்பதரிது. ஆகவே, தமிழாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பலர் என்னிடம் ஐக்கிய நாட்டுக்கல்வி-சமூகப் பண்பாட்டுக் கழகமோ அல்லது அக்கழகத்தின் இந்தியப் பகுதி அமைப்போ அல்லது தமிழக அரசோ பிற நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழாராய்ச்சித் துறையைத் தொடங்கி வைத்து, இயங்கச் செய்யுமேயானால் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகால சோதனைக் கட்டத்திற்குப் பின்னர், அந்தந்தப் பல்கலைக் கழகங்களே அத்தமிழ்த் துறையினை நிலையாகக் காத்துக் கொள்ள முன் வந்துவிடும் என்று கூறினார். தற்சமயம், இந்தியாவில் அரசின் ஆதரவுடன் ஆய்வு செய்யப்படுகின்ற மொழிகள் இந்தி, உருது, வங்காளி ஆகியவை மட்டுமே.

எனது தமிழாய்வுப் பயணத்தின் போது, நான் சந்திக்க நேர்ந்த ஆராய்ச்சி மேதைகளுக்கு அவர்களின் தூய ஆய்வு மனப்பான்மை குறித்து என்னுடைய பாராட்டினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஐம்பது ஆராய்ச்சி நிலையங்களின் ஆராய்ச்சிப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியதன் விளைவாக இந்தியக்

## வாழ்க, வாழ்க!

தமிழகக் கல்வி, பொது நலத்துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஐம்பதாண்டைக் கடந்து, இப்போது ஐம்பத்தோரம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிருர்கள்.

சென்ற 11-7-70 காலே தமது பிறந்த நாளே முன்னிட்டு அண்ணு சதுக்கம் சென்று மலர் வளேயம் வைத்தும், அண்ணு சிலேக்கு மாலே சூட்டியும் தமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும், அன்பர்களும் அன்னரது இல்லம் சென்று பிறந்த நாள் வாழ்த்துக் கூறிஞர்கள்.

அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் தலேமையில் ஒரு கவியரங்கமும், நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலேமையில் ஒரு விழாவும் சிறப்பாக நடைபெற்றன.

*



கலாச்சார, மொழியியல் ஆராய்ச்சியில் ஏற்பட்டுவிட்ட குறைபாட்டை ஈடுகட்டும் வகையில் திராவிட, தமிழ்த் மொழி ஆராய்ச்சியினே விரிவுபடுத்தி, தமிழ்த் துறை இல்லாத பல்கலேக் கழகங்களில் தமிழ் கற்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர்கள் உணர்ந்திருக்கிருர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் ஆராய்ச்சியைத் தொடங்குவதிலும், தொடர்வதிலும் வெளிநாட்டுப் பல்கலேக் கழகங்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் ஏற்படும் இடையூறுகளேக் களேவதே அனேத்து நாட்டுத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் முதன்மையான பணியாக இருக்க வேண்டும்.

கலே, புதைபொருள், வரலாறு மொழியியல், இலக்கியம், தத்துவம், சமயம், சமூகவியல் போன்ற பல்வேறு துறை ஆய்வாளர்களும் தங்கள் பகுதியில் உள்ள தமிழாய்வுக் கழகத்திற்குச் சிறப்புப் பேராசிரியர்களாகச் சென்று தமிழ் அறிஞர்களுக்கு இவ்வாய்வுத்துறைகளில் பயிற்சியளிக்க விருப்பம் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட பேராசிரியர்கள், மேதைகளின் தொண்டினே தமிழ்க் கழகம் எந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொண்டு தன்னுடைய நோக்கங்களே நிறைவேற்றிக் கொள்ள விருக்கிறது என்பது தமிழ்த்தாய் அவர்களுக்கு அமைத்துத் தரும் சூழ்நிலே வசதிகளேப் பொறுத்தது.

அனேத்து நாட்டுத் தமிழாராய்ச்சிக் கூட்டுக் கழகம், அனேத்து நாட்டளவில் ஆலோசனேக் குழு ஒன்றினே அமைத்திருக்கிறது. அவ்வாலோசனேக் குழு என்னுடைய இந்த அறிக்கையின் அடிப்படையில் 1971–74 ஆண்டுகளுக்கான தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் ஆராய்ச்சி நடைமுறை பற்றியத் திட்டத்தைப் பரிசீலித்து ஏற்கவிருக்கிறது. அத்திட்ட விவரம் 1970 அக்டோபர் திங்களில் யுனெஸ்கோவின் பொதுக் குழுவின் பரிசீலனேக்கு வைக்கப்படும்.

தமிழாராய்ச்சிப் பணிக்காக நான் பயணம் மேற்கொண்டபோது அனேத்து நாட்டுத் தமிழாராய்ச்சிக் கழகத்திற்குப் பிற நாட்டு அறிஞர்களின் ஒத்துழைப்பு கிடைக்குமா என்ற ஐயப்பாடு இருந்தது. ஆனல் உலக அரங்கில் முதன்மையான கலாச்சாரங்களேப் பற்றிய ஆராய்ச்சியில் ஏற்பட்டுள்ள ஒரு வெற்றிடத்தை நிறைவுபடுத்துவதில் அனேத்து நாட்டுத் தமிழ்க் கழகம் பெரும்பணியாற்றும் என்றும், இக்கழகத்தை யுனெஸ்கோ அமைத்திருப்பது மிகவும் ஏற்புடைய ஒன்று என்றும் அவர்களும் எனக்கு இசைவான கருத்தினேயே கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன்; மேற்கொண்ட பணிகளில் நம்பிக்கையும் உறுதியும் பெற்றேன். அனேத்து நாட்டுத் தமிழாராய்ச்சி அறிஞர்கள் தமிழாய்வினேத் தாமதமின்றி மேற்கொள்ளும் வகையில் இக்கழகத்தை விரைந்து தொடங்குவது இன்றியமையாதது என்று உணர்ந்தேன்.

# சிறந்த எதிர்காலம் சிறு தொழிலுக்கு



தமிழ் நாட்டில் சிறு தொழில்கள் நம்மை கவர்ந்து ஆட்கொள்கிற வகையில் வளர்ச்சியடைந்துள்ளன. சிறுதொழில்களின் வளர்சியை ஊக்குவிப்பதில் மாநில அரசு மிக முக்கியமான பங்கேற்றுச் செயலாற்றியுள்ளது. இத்துறையின் வளர்ச்சியில் இந்திய அரசும் பங்கேற்றுள்ளது. முதல் திட்டக் காலத்தில் சிறு தொழில்களில் செய்யப்பட்ட முதலீடு ரூ. 2.76 இலட்சம் மட்டுமே. ஆனல், மூன்ரும் திட்டக் காலத்தில் இது ரூ. 1,120 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளது. திட்டங்களினுல் சிறு தொழில்களுக்கு பல முறைகளிலும் உதவிகள் செய்யப்படுகின்றன. கடன், பயிற்சி வசதிகள், சாதனங்களும் கருவிகளேயும் திறமுடன் கையாள்வதற்குரிய தொழில் நுணுக்க ஆலோசனேகள், மூலப் பொருட்களே வழங்குதல், மின் சக்தியைக் குறைந்த விலேயில் அளித்தல், பொது வசதிப் பட்டறைகளே பல இடங்களிலும் அமைத்து, செப்பனிடுதற்குரிய வசதிகளே ஏற்படுத்தித் தருதல், பொதுப்பணி பட்டறைகள், முன்னேறத் தனிமையுள்ள பொருட்களே உற்பத்தி செய்தற்குள்ள மாதிரி உற்பத்திப் பிரிவுகளே நிறுவுதல் ஆகியவை அரசு அளிக்கும் வசதிகளில் அடங்குவன.

சிறு தொழில்களின் வளர்ச்சிக்கென உருவாக்கப்பெற்ற திட்டங்களில் மிக முக்கியமானது தொழிற் பேட்டைகளே நிறுவியதாகும்.

### வாலாயமானத் தொழிற் பேட்டைகள்

இத் தொழிற்கூட வசதிகளும், மற்றும் இதர அடிப்படை பொது வசதிகளும் சிறு தொழிலதிபர்களுக்கு அளிக்கப்படுகிறது. இவ்வசதிகளே அரசாங்கம் செய்து தராவிடில், சிறு தொழிலதிபர்கள் அவற்றை நியாயமான செலவில் பெறுதற்கு சிரமப்படக் கூடும். வாலாயமான தொழிற்பேட்டைகள் 24-ல், மொத்தமாக 486 தொழிற்கூடப் பிரிவுகள் கட்டப்பட்டுள்ளது. இவற்றில் தொழிற்கூடங்களே அமைப்பதற்கென 452 பிரிவுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு திங்கட்கு ஒரு சதுர அடிக்கு 5 காசுகள் முதல் 15 காசுகள் வரை குறைந்த அளவில் வாடகை வசூலிக்கப்படுகின்றன. தவிர இம்மாதிரி பேட்டைகள் ஒசூர், கடலூர் ஆகிய இடங்களிலும் கூட ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

### குறிப்பானத் தொழிற்பேட்டைகள்

வாலாயமான தொழிற்பேட்டைகளேத் தவிர, குறிப்பிட்டத் தொழில்களுக்குரிய தொழில்பேட்டைகளே நிறுவுதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இது போன்ற குறிப்பிட்டத் தொழில்களுக்குரிய தொழிற்பேட்டைகளே ஏற்படுத்துவதில் தமிழ் நாடு முதன்மை இடம் பெறுகிறது. ஒரே இயல்புடைய தொழிற்களே ஓர் இடத்தில் ஒன்றுசேர்த்து, அவற்றை விருத்திச் செய்வதற்கு இத் தொழிற் பேட்டைகள் பெரிதும் உதவும்.

### துணைத் தொழில் பேட்டைகள்

தோல்பொருட்கள் மற்றும் தோல் பதனிடுதற்கானத் தொழிற்கூடம் மாதவரத்திலும், மட்பாண்டத் தொழிலுக்காக விருத்தாசலத்திலும், மின்சாரக் கருவிகளுக்காக கக்கலூரிலும் தொழிற்கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. மின்னியக்கத் தொழில்கள், உணவு — பழங்களுக்குரிய தொழில்கள், கருவிகள் தயாரிக்கும் தொழில்கள், மருந்து—மருந்து ஆக்கத் தொழில்கள் ஆகியவற்றிற்குரிய தொழிற்பேட்டைகளே நிறுவுதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பெரிய தொழில்களின் தேவைகளேப் பூர்த்தி செய்யும் சிறு

தொழில் பிரிவுகளைக் கொண்ட தொழில் பேட்டைகளும் இம் மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை துணைத் தொழில் பேட்டைகள் எனப்படுகின்றன. கனரக அழுத்தக் கொதிகலன்,, தொழிற் சாலையின் தேவைகளைக் கவனிக்கின்ற தொழில் பிரிவுகள் திருவெறும்பூர் தொழில் பேட்டையில் உள்ளன.

வடலூரில் உள்ள மற்றொரு, தொழில் பேட்டை மண்பாண்டத் தொழில் கூட்டமைப்பிற்கு வேண்டிய பொருள்களைத் தயாரித்துக் கொடுக்கிறது. உதகையில் உள்ள இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தொழிற்சாலையின் தேவைகளைச் சரிக்கட்டும் தொழில் பேட்டை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

### கூட்டுறவு, தனியார்த் தொழில் பேட்டைகள்

அரசு உதவி பெற்று, தனியார் நிறுவனங்களும், கூட்டுறவு நிறுவனங்களும் ' தொழில் பேட்டைகளை ஏற்படுத்தியுள்ளன. இம் மாநிலத்தில் ஐந்து கூட்டுறவுத் தொழில் பேட்டைகளும், இரண்டு தனியார்த் தொழில் பேட்டைகளும், அமைந்துள்ளன.

### தொழில் பகுதிகள்

தொழில் சாலைக் கட்டிடங்களை வாடகை அடிப்படையின் பேரில் ஒதுக்குவதோடு கூட, தொழிற் சாலைகள் அமைப்பதற்காக மனைகள் ஒதுக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இத் திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் தகுந்த இடங்களில் பெருவாரியான நிலம் கையகப்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்டு, நன்கு வரையறுக்கப்பட்ட மனைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. இத்தகைய மனைகள் தொழிற்சாலைக் கட்டிடங்கள் கட்டப்படவும் புதிய தொழிற் சாலைகள் தொடங்கவும், நிபந்தனையின்பேரில் பெரிய, நடுத்தர, சிறிய தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கப்படுகின்றன. இத்திட்டம் ஏற்கெனவே அம்பத்தூர், கிண்டி, மதுரை, மேட்டூர் ஆகிய இடங்களில் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்தகைய மனைகள் திருச்சிராப்பள்ளி, ராணிப் பேட்டை, திருவள்ளூர், சேலம், அரக்கோணம், தூத்துக்குடி, மணலி ஆகிய இடங்களிலும் கிடைக்கும்.

### தமிழ்நாடு சிறு தொழில் கழகம்

தொழிற்சாலைகளுக்குப் பணி புரியும் காரியமாகவும், தொழில் பெருவதற்கு ஓர் உள்ளமைப்பாக இருக்க வேண்டுமென்னும் கருத்துடனும், மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், அரசு துறைத் தொழில் பட்டறைகளை ஏற்படுத்தியது. இத்தகைய தொழில் பிரிவுகளை எடுத்து நடத்தும் காரியமாக 1965 செப்டம்பர் 10ஆம் நாளன்று (இப்போது தமிழ்நாடு சிறு தொழில் கழகம் எனப்படுகிற) ''சென்னை மாநிலச் சிறு தொழில் கழகம்'' எனப்படும் தொழில் கழகம் ஒன்றை அரசு அமைத்தது. இது 1965 டிசம்பர் 1 முதல் செயல்படத் தொடங்கியது.

அரசு பல்வேறு வகையான முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டதால்தான், பதிவு பெற்ற தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 1961ல் 3000 ஆக இருந்தது 1969 முடிவில் 18000 ஆக உயர்ந்தது. இவற்றில் பலதரப்பட்ட தொழில்கள் அடங்கும். ஒரு காலத்தில் சிறு தொழில் பிரிவுகளால் தயாரிக்க முடியாது என்று கருதப்பட்ட பொருள்கள் எல்லாம் இப்போது இந்தத் துறையில் செய்யப்பட்டு வருகின்றன.

இம் மாநிலத்துத் தொழில், வளர்ச்சியில் சிறு தொழில்களுக்கு மிகவும் முக்கியப் பங்கு கொடுக்கப் பட்டுள்ளது. சிறு தொழில்கள் வளர்ச்சியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும், அறிவும் ஏற்பட்ட போதிலும், அரிதாகக் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களைப் பெறுவதிலும், தயாரிக்கப் படும் பொருள்களுக்கு நல்ல விற்பனைக் களங்களைத் தேடுவதிலும், சிறு தொழிலதிபர்கள் இன்னமும் தொல்லைகளை அடைந்து வருகின்றனர். மூலப் பொருள்கள், இயந்திரங்கள், விற்பனைக் களங்கள் கிடைக்கச் செய்வதால் சிறு தொழில் பிரிவுகளுக்கு உறுதுணை செய்ய மாநில அரசு அண்மையில் சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தை ஏற்படுத்தியது. இம் மாநிலத்தில் சிறு தொழில்கள் தொடங்கவும், அவர்கள் தயாரிக்கும் பொருள்களை விற்பனை செய்யவுமுள்ள வாய்ப்பு பற்றி ஆலோசனை நல்கி போதிய தகவலளிக்க சிறு ரகத் தொழில்கள் வாரியம் ஒன்றைஅமைக்கவும் மாநில அரசு முடிவு செய்தது.

## “ஒரே செடி—ஒரே மரம்—ஒரே பழம்”

“ஜனநாயகத்தில் எப்படிப்பட்ட கருத்துவேற்றுமை இருந்தாலும், ஒத்துப்போகும் பண்பு இருக்கும். எல்லோரும் ஒரே கருத்துடன் இருப்பதால் சமத்துவம்!

ஒரே செடியில் பூத்தாலும் மலர்கள் அளவில் பெரியதும் சிறியதுமாகத்தான் இருக்கும்.

ஒரே மரத்தில் காய்த்தாலும் கனிகள் அளவில் பெரியதும் சிறியதுமாகத்தான் இருக்கும்.

ஒரே பழத்தில் கூட ஒரு பக்கம் புளிப்பும்—மறுபக்கம் இனிப்பும் இருப்பதுண்டு.

இதைப்பற்றிக் கூறவந்த பேரறிஞர் வாங்கி “சமத்துவம் என்பது ஒரே தன்மையுடன் இருப்பது அல்ல!” என்றார்.

பலவிதமான கருத்துக்கள் இருந்தாலும்—ஒத்துப் போகும் பண்பு இருக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் ஜனநாயகம் இயங்குகிறது.

என் கருத்துக்கு நான் எவ்வளவு மதிப்புத் தருகிறேனோ அவ்வளவு மதிப்பு பிறருடைய கருத்துக்கும் தரவேண்டும்.

தன் கருத்தை விரிவுபடுத்தும் வாதங்களைப் பிறர் எவ்வளவு தூரம் கேட்கவேண்டும் என்று நினைக்கிறோமோ—அவ்வளவு தூரம் அவர்களது வாதத்தையும் கேட்கவேண்டும்!

இந்த அடிப்படையில்தான் பலநாடுகளில் அரசியல் முறை நடைபெறுகிறது. அந்த முறை இங்கே வரவேண்டும்.”

—அண்ணா

### பிரமிக்கத்தக்க முன்னேற்றம்

இயல்பாகக் கிடைக்கக் கூடிய நிதி வாய்ப்பின்மை காரணமாக சில தடைகள் ஏற்பட்ட போதிலும் கூட, முதலில் பஞ்சாலைத் தொழிலையே மையமாகக் கொண்டிருந்த பொருளாதாரம், இப்போது தொழில் நுணுக்கம் பெற்ற, பரவலான பல திறப்பட்டதொழில் மயப் பொருளாதாரமாக பிரமிக்கத்தக்க அளவில் முன்னேற்றமடைந்துள்ளது. மின், வளர்ச்சித் போதிய போக்குவரத்துப் பணி, குடிநீர் வசதிகள், நிறுவன நிதி ஆகிய துறைகளில் திட்டமிட்ட சரி சமமான முன்னேற்றம் காரணமாகவும், பயிற்சிப் பெற்ற தொழில் நுட்பப் பணியாளர் கிடைப்பதாலும், பயன்துய்ப்போர் பொருள்களுக்கு நல்ல விற்பனையிடங்கள் வளர்ந்துள்ள தாலும், தொழிலில் இத்தகைய பிரமிக்கத்தக்க முன்னேற்றம் காண முடிந்தது.

மாநில மொத்த வருவாய்க்கு தொழில் துறை மூலமாகக் கிடைக்கும் பங்கு 1950–51ல் 12.65 சதவீதமாக இருந்தது 1968–69ல் 21.93 சதவீதமாக உயர்ந்தது. 1966ல் மொத்தம் 6644தொழிற் சாலைகள் இம் மாநிலத்தில் இருந்தன. இவற்றில் 1112 தொழி சாலைகள் எ. எஸ். ஐச் சேர்ந்தவை 'சென்ஸஸ்' தொழிற்சாலைகள், அதாவது மின்சக்தியினைப் பயன்படுத்தி, 50 நபர்கள், அல்லது 50 நபர்களுக்கு மேலும், மின் சக்தி பயன்படுத்தாமல் 150, அல்லது நூற்றுக்கு மேற்பட்டவரை வேலையில் வைத்துக் கொண்டுள்ள தொழிற்சாலைகள் எனப்படும். இந்நாட்டில் 1966ல் ரூ. 7,213, கோடிக்கு மேலாக மதிப்புடைய பெரிய தொழிற்சாலைகளில் பெருமொத்த அளவில், தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளின், மதிப்பு ரூ 611 கோடி அல்லது 8.5 சதவீதம். அதாவது இது இந்நாட்டு மக்கட் தொகையில் அதன் உரிய பங்குக்கும் அதிகமான பங்கு ஆகும். (7.3 சதவீதம்). 1966ல் இந்தியாவிலுள்ள பெரிய தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்ட ஆதாயமுள்ள மூலதனம், 1959லிருந்துததை விட 334 சதவீத் அதிகரிப்பைக் காட்டுகிறது. அதே கால அளவில் தமிழ்நாட்டில் இதற்கு நிகரான அதிகரிப்பு 684 சதவீதமாகும். இதைப் போலவே, 1959, 1966 ஆண்டுகளுக்கிடையில், அத்தகைய தொழிற்சாலைகளின் பெருமொத்த அளவு இந்தியா முழுமைக்கும் 168 சதவீதமாக இருந்தது 264 சதவீதமாக உயர்ந்தது. இவ்வாறு ஒப்பிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியின் அறிகுறிகளிலிருந்து தெரிய வருவதென்னவெனின் மிகவும் முக்கியமான கூறு நபர்வாரி வருமானம் என்பதேயாகும்.

இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கெல்லாம், தமிழ்நாடு நான்காவது மாநிலமாகத் திகழ்கிறது. 1965–66ல் இதன் நபர்வாரி வருமானம் ரூ. 443. 1966-67ல் ரூ 503. 1965-65 1966–67 ஆண்டுகளில் முறையே ரூ. 420, ரூ 471 ஆகவுமிருந்த இந் நாட்டின் சராசரி வருமானத்தை விட இது குறிப்பிடத்தக்கது விதமாக அதிகமாகவே உள்ளது.

### வருங்காலத் திட்டம்

மக்கட் தொகை பெருக்கத்தை முன்னிட்டும், பெருவாரியான,



புதிய பகுதிகளில் பயிரிடுவதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைந்துள்ளதாலும், குறிப்பாகத் தொழில் முன்னேற்றத்துக்குமாநில அரசு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறது. துரிதமான, சமன் பெற்ற தொழில் வளர்ச்சியின் அடிப்படையில் பொருளாதார நடவடிக்கைகளை பரவலாக்குவதன், வாயிலாகத்தான், வாழ்க்கை நிலையும், வேலை வாய்ப்பும் குறிப்பிடத் தக்க அளவு மேநிலையுறும் என அரசு கருதுகிறது. இம் மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட நிலையில் உள்ள தொழிலமைப்பில் காணும் ஓட்டைகளைக் கண்டறிந்து, அவற்றின் வளர்ச்சிக்தளை திட்டமிடவும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் படும். இம் மாநிலத்தில் இதுவரை மிகுந்த முன்னேற்ற மடையாத மின்னணுவியல், கருவிகள், மருந்துகள், மருந்தியல் சார்ந்த தொழில்கள் வளர்ச்சியை ஊக்குவிக்க அரசு பல ஏற்பாடுகளை ஏற்கனவே மேற் கொண்டது. மேற்சொன்ன தொழில்களுக்காக தொழில்முறை சார்ந்த தொழில் பேட்டைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் மின் அணுவியல் தொழில் வளர்ச்சிக்கான செயற்குழு ஒன்றையும் இவ்வரசு அமைத்தது.

மேற்கொண்ட வளர்ச்சி நடவடிக்கைகள் சென்னையிலும், நெய்வேலி, மேட்டூர், சேலம் ஆகிய இடங்களில் அமையும்.

தொழில் நடவடிக்கைகள் மையம் பெற்ற மற்ருெரு பெரிய இடம் தூத்துக்குடி நகரமாகும். இங்கு புதிய பெரிய துறைமுகம் வளர்ச்சி பெற்று வருகிறது. துறைமுகத்தைச் சேர்ந்த நிலப் பகுதியை, பலதரப்பட்ட தொழில்களைக் கொண்ட பெரிய தொழிற்சாலைப் பகுதியாக மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தூத்துக்குடித் தொழில் பகுதியைச் சுற்றிலும் உப்பும், உப்பை மையமாக் கொண்ட இரசாயனத் தொழிற்சாலைகளின் வளர்சிக்காக மாநில அரசு துணிகரத் திட்டம் வைத்துள்ளது. மேலும், இத்தகைய சாத்தியக் கூறுகளுக்கு வடிவங் கொண்ட விரிவான ஆய்வு தயாரிக்கவும் பணித்துள்ளது. ஆய்வு அறிக்கையை அரசு ஆய்ந்து வருகிறது.

இம் மாநிலம் நல்ல தொழில் வளத்தைக் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இது தொழில், வளர்ச்சிக்கான மிகவும் துணையான உள்ளமைப்பும் கொண்டது தொழில்களைத் தொடங்க முன் வருவோருக்கு அரசு எல்லா வகையான உதவிகளையும் நல்கி வருகிறது. தொழிலில் மூலதனம் அளிப்பவர்களைக் கவரும் வகையில் தொழில் தொடங்குவதற்கான பலதரப்பட்ட ஊக்கங்களை அரசு அளித்து வருகிறது,தொழில் பேட்டைகள் முதலியவற்றின் மூலமாக தொழில்களை அமைப்பதில் இதுவரை அரசு நாட்டஞ் செலுத்துகிறது, ஆனால், வெளியூர்களில் சில தொழில் பேட்டைகளில்,எந்த நோக்கங்களுக்காக தொழில்பேட்டைகள் ஏற்படுத்தப் பட்டனவோ அந்த நோக்கங்கள் முழுவதும்நிறைவேறவில்லை. எனவே, தொழிற்சாலை இடத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தொழில் மூலதனம் இடும் தொழிலதிபரிடமே இப்போது விடப்படுகிறது. தொழில் நடத்துவதற்கு வேண்டிய நிலமும் மற்ற வசதிகளையும் மட்டுமே அரசு கொடுக்கிறது.

> **வெற்றியா ?**
> **வேண்டாமே !**
>
> **"வெற்றி என்ருல் எனக்கு ஒரே அச்சம். இலட்சியத்தில் வெற்றி அடைந்த பிறகு இந்த உலகில் இனி இருந்து என்ன பயன்? வெற்றி என்பது காதல் முடிந்த மறுகணமே ஆண்சிலந்தியைக் கொன்றுவிடும் பெண்சிலந்தியைப் போன்றது.**
>
> **அழிவின் ஆரம்பம் அது!**
>
> **இலட்சியம் எப்போதும் எனக்கு முன்னுலேயே இருப்பதையும் அதனைத் தொடர்ந்து முன்னேறிக் கொண்டு இருப்பதையுமே நான் விரும்புகிறேன். இலட்சியத்தை அடைவதையோ அதனைக் கடந்து நடப்பதையோ நான் விழையவில்லை"**
>
> **—இப்படி யார் சொல்லுவார்கள் பெர்னுட்ஷாவைத் தவிர!**

மாண்புமிகு தொழிலமைச்சர் திரு. எஸ். மாதவன் அவர்கள் அரசின் தொழில் கொள்கை''தெளிவானதும் விருப்பு வெறுப்பு அற்றதுமான'' கொள்கை யாகும் என்றும் பொதுத் துறையும் தனியார் துறையுமாக ஒன்றுடன் ஒன்று சேர்ந்து, தொழில் தொடங்க இயலும் இடங்களில் தொழில் தொடங்கி நடத்துவதற்கு இவ்வரசு ஆதரவு அளிக்கிறது என்றும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிருர். மேலும் இவ்வரசு,, தொழில் தொடங்கி நடத்துவதில் துறைக்கு உள்ள ஆர்வத்திற்கும் திறனுக்கும் மட்டுமே முக்கியத்துவம் அளிக்க விரும்புகிறதே தவிர துறைக்கன்று என்பதையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசின் உரிமமளிக்கும் கொள்கை தடையாக உள்ள தென்றும், மாநிலத்தில் தொழிலைத் தெரிந்தெடுப்பதிலும் அதை அமைப்பதிலும் மாநில அரசுக்கு அதிக செல்வாக்கு இருக்கும் வகையில் உரிமம் அளிக்கும் முறை மாற்றியமைக்கப் படவேண்டும் என்றும் மாண்புமிகு தொழிலமைச்சர்குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய நாளில் இந்திய தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய இடம் பெற்று விளங்குகிறது. தமிழ்நாடு பரவலாக அமைந்த பல திறப்பட்ட தொழில்கள் அடங்கிய தொழிற்சாலைத் தொகுதிகளை உடையதாயிருக்கிறது.

தொழில் வளர்ச்சியில் காணப்பட்டு மந்தநிலை மறைந்து வரும் அறிகுறிகள் தெரிகின்றன.தொழில் நடவடிக்கைகள் புத்துயிரும் புது வேகமும் பெற்று வருகின்றன. இந் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தொழில் முனைவரிகளைக் கவர்ந்து ஈர்ப்பதில் இம் மாநில அரசு பெருமளவு வெற்றி கண்டுள்ளது. அரசுக்குச் சொந்தமான தொழில் வளர்ச்சிக் கழகம் தனது நடவடிக்கைளைப் பெருக்கிக் கொண்டுள்ளது. தொழில் மூலதனம், தொழில் வளர்ச்சிக்கான கருத்துகள் வழங்கும் நிறுவனமாக விளங்குகிறது. இந்நாட்டின் தொழில் வளர்ச்சியில் இன்றியமையாத பெரும் பங்கு ஆற்ற நிச்சயமாக இம் மாநில அரசு முன்வந்துள்ளது.

**தமிழ்நாட்டில் மின்னணுவியல் தொழில் வளர்ச்சி**

தமிழ்நாடு அரசு, அடையாறில், மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்காகவும், தொழில் நுட்பவியல் அளவில் நுட்பக் கருவிகள் அமைக்கவும் செயலளவில் தொழில் பேட்டை ஒன்றை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. தொழில் நுட்ப நிறுவனங்களில் கிடைக்கக் கூடிய குறிப்பாக இந்தியதொழில் நுட்ப நிறுவனத்தில் பொருளைச் சோதித்தல், சான்றிதல்போன்ற வசதிகளைச் சிறந்த அளவில் பயன் படுத்த வேண்டு மென்பதுதான், இத்தகைய தொழில் பேட்டைகளை தொழில் நுட்ப வளவில் ஏற்படுத்துவதன் முக்கிய கருத்தாகும். இதற்காகத் தொழில் பேட்டையில் மாநில அரசு ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்தும்.

★ ★ ★

# கனவுகள் நனவாகும்

பிற்பட்ட சமூகத்தினர் இந்த அரசிடமிருந்து எதிர்பார்க்கும் நலன்கள் மிக அதிகமென்று நான் உறுதியாகக் கூறமுடியும். ''இது மக்களின் அரசு. இந்த அரசு முன்னேற வேண்டிய இந்த சமூகத்தினரின் ஆசைக் கனவுகளைப் பூர்த்தி செய்யத் தவருது. இந்த அரசு செய்துதான் தீரும்'' என்பது பிற்பட்ட மக்களின் ஒரு அசையாத நம்பிக்கை.

தமிழக மக்களில் அறுபது சதவிகிதமான இந்தப் பிற்பட்டோரின் நலன்களுக்குரிய தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டியது நியாயம். இது அவசியமும் கூட. அவர்களின் முன்னேற்றத்திற்குரிய எல்லாத் திட்டங்களும், அவர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றி முன்னேறும் அளவிற்கு வழிவகை செய்வனவாக இருக்க வேண்டும். மற்ற சமுதாயத்தினருடன் இவர்களும் இணைந்து ஒன்ருகிட வழி செய்து தீரவேண்டும்.

பிற்பட்ட சமூகத்தினர் என்பது யாரைக் குறிக்கிறது? கல்வியிலோ, வாழ்க்கை வசதிகளிலோ, சமுதாய ஈடுபாடுகளிலோ, இவற்றில் முன்னேற்ற மடைந்துள்ள மேல் சாதியினரிடமிருந்து மாறுபட்டு, மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களேயாவர் இந்தச் சமூகத்தினர். இவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கணக்கிடும் வகையில், 1921ம் ஆண்டுக்குப் பிறகு, சாதி அடிப்படையில் தனித் தனியாகச் சரியான புள்ளி விவரம் தயாரிக்கப்படவில்லை. இதனுல் திட்டவட்டமாக யாதும் தெளிவு செய்யமுடியவில்லை.

ஆகவே சாதி ஒன்றை மட்டும் கொண்டுதான் பிற்பட்ட வகுப்பினர் என்னும் பாகுபாடு செய்யப் படுகிறது. இது இன்றைய நிலையில் தவிர்க்கப்பட முடியாத ஒரு நிலையாகும்.

இன்றைய அரசு ஆட்சியில் இவர்களுக்கு ஏற்பட்டுள்ள முன்னேற்



**திரு. ஏ. என். சட்டநாதன்**
**பிற்பட்டோர் நலக் குழுவின் தலைவர்**

றத்தை, இது மிகவும் குறுகிய கால அளவு என்ற காரணத்தால், திட்டவட்டமாகக் கணக்குப் போட முடியாது. ஆனல் ஒன்று மட்டும் கூற முடியும்—கடந்த 10 ஆண்டு காலத்தில் இவர்களின் வாழ்க்கை மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது. மேலும் முழு முன்னேற்றமடைய நல்ல வாய்ப்புக்கள் உள்ளன. அதன் காரணமாகவே இந்த அரசு, இந்தக் குழுவை அமைத்திருக்கிறது. பிற்பட்ட சமூகம் எவை எவை என்று பாகுபாடு செய்யும் வகையில் தெளிவு செய்யும் பணி இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்படவில்லை.

மாவட்டங்களில் இந்தக் குழு விசாரணையை முடித்துவிட்டது. விசாரணை அறிக்கையை எழுதி முடிக்க மேலும் சிறிது காலம் ஆகும். விசாரணைக்கு மக்களிடமிருந்து நல்ல வரவேற்பு இருந்தது. ஆக்கப் பூர்வமான புள்ளி விவரம் பலதரப்பட்ட இலாகாக்களிலிருந்தும் கிடைத்துள்ளது. எப்படியும் வரும் செப்டம்பர் திங்களில் இந்தக் குழுவின் அறிக்கை அரசுவசம் ஒப்படைக்கப்படும்.

பிற்பட்ட சமூகத்தினர் தங்கள் முன்னேற்றத்திற்குத் தேவையான அவ்வளவு வசதிகளையும் இந்தக்குழு செய்துதர வேண்டுமென எதிர் பார்க்கின் றனர். முக்கியமாகக் கல்வி உபகாரச் சம்பளம், இலவச உணவு விடுதி (ஹாஸ்டல்) போதுமான மான்யம் போன்ற வற்றில் இவர்களின் விருப்ப உள்ளது. சிறியோருக்கு அதிகப் படிப்பு வசதி, மதிய உணவு, உடை உடை வாங்க பண உதவி போன்றவற்றை செய்து, அதிகமான ஏழை மக்கள், தங்கள் பிள்ளைகளைப் பள் ளிக்கும், கல்லூரிக்கும் அனுப்ப வழி வகை செய்ய வேண்டுமெனக் கே கிருர்கள். சர்க்கார் அலுவலகப் தொழிற்சாலைபோன்றவற்றில் அதி வேலை வாய்ப்புகளும் கேட்கிருர்கள் இது மாதிரி வேலை வாய்ப்பு வச களைச் செய்து இவர் களின் முன்னே றத்திற்கு ஏற்பாடு செய்ய வேண் யது அவசியமும் நியாயமுமாகு

னேற்றம் அந்நாட்டின்வேலை வாய்ப்புகளின் அளவைப் பொறுத்தே மதிப்பிடப்படுகிறது. நிறைவுபெற்ற வேலைவாய்ப்புகள் ஏற்படுவது என்பது அந்நாட்டிலுள்ள பல்வேறு வேலைச் சந்தைகளின் சரியான இயக்கத்தைப் பொறுத்தது. வேலைச் சந்தை சரிவர இயங்க, அதிலுள்ள இயக்கும் திறன்களின் செயல்முறைகள் சரிவரக் கட்டுப்படுத்தப்பட்டு




சீரிய வழிகளில் செலுத்தப்படல் வேண்டும். இப்பெரும் பணியைச் செய்யவே வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயங்கி வருகிறது.

குறிப்பிட்ட ஒரு வேலைச் சந்தையை எடுத்துக் கொள்ளுவோமேயாயின், அதில் நாம் காண்பது என்ன? அதில் வேலைகொடுப்போரும், வேலை வேண்டுவோரும் இருப்பதைக் காண்கிறோம். ஆனால் வேலைகொடுப்போரின் தேவைக்கேற்றபடி எல்லா வேலை வேண்டுவோரும் அமைவதில்லை. இதனால் ஏற்படும் இடையூறுகள் பல. மிகப் பெரிய இடையூறு வேலையின்மையாகும். இதைப்போக்க வழி என்ன? வேலையில் அமர்த்துவோரின் தேவைக்கேற்பத் தொழிலில் அமர விரும்புவோர் தங்கள் திறனை அமைத்துக் கொள்ள வேண்டும். அதைச் சரிவரச் செய்வதே இந்த வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் நோக்கமாகும். இதற்காகவே சில சிறப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. தொழில் வேண்டுவோருக்கும் தொழில் அதிபர்களுக்கும் தொழில் முறைகள் மற்றும் தொழில் முன்னேற்றம் பற்றி அறிவுரைகள் வழங்கி இத்தொழில் திறன்கள் யாவும் சீரிய வழியில் செல்ல ஒரு வழிகாட்டியாக இருக்கவே இத்துறை பாடுபட்டு வருகின்றது. இப்படிச் செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் சீரிய முறையில் வளர்ந்து முன்னேற்றமடையும் என்பது ஐயமில்லை.

**தொழில்வளர்ச்சியைப் பொருத்து...**

ஒரு நாட்டில் தொழில் வளர்ச்சி அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்தது. அது போலவே, நாட்டின் வேலை வாய்ப்புப் பெருகுவதும் தொழில் வளர்ச்சியைப் பொறுத்ததாகும். நாட்டினைத் தொழில் மயமாக்குவதற்கும், தொழிலைத் திறமையாக நடத்துவதற்கும் முறைப்படி தொழில் பயின்றோர் தேவைப்படுகின்றார்கள். எனவே பல விதமான தொழிலுக்குத் தேவையான மனித சக்தியைக் கொடுக்கக்கூடிய பொறுப்பானது பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தி முறைப்படி தொழில் பயின்றோரை உருவாக்கி, அவர்களைத் தகுந்த தொழிலில் பரவலாக வேலையில் அமர்த்தும் பொறுப்பு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையினரைச் சேர்ந்ததாகும்.

**"வதந்தியால் வரும் போர்"**

**உண்மையான—முழுமையான விவாதம் நடைபெற நமக்கு வேண்டியவை இரண்டு பண்புகள்!**

**ஒன்று—உங்கள் கருத்துக்கு மதிப்பு ஏற்படவேண்டுமானால் மற்றவர் கருத்துக்கு மதிப்புத்தரவேண்டும். எனக்குத்தான் எல்லாம் தெரியும், பிறருக்கு எதுவும் தெரியாது என்று எண்ணிடும் போக்குக் கூடாது.**

**இரண்டு—மற்றவர் கருத்தைக் கேட்கும் வேளையில் மிகுந்த பொறுமை காட்டவேண்டும்!**

**இது மிகவும் கடினமான காரியம்தான்; அதிலும் வெப்பம் மிகுந்த பகுதியான நமது நாட்டில் உணர்ச்சிகள் விரைவில் தலை தூக்கும். குளிர் நாடாக இருந்தால் உணர்ச்சிகள் எழவும்—எழுந்த உணர்ச்சி அடங்கவும் அதிகக் காலமாகும். ஆனால் வெப்பம்மிகுந்த இந்த நாட்டில் காலமோ—காரணமோ இல்லாமல் கூட உணர்ச்சி பொங்குவதுண்டு. இன்னும் சில சமயங்களில் நிஜ உருவங்களுடன் சண்டை போடுவதை விட வதந்திகள் கிளப்பிய நிழல் உருவத்துடன் நாம் சண்டை போடுவதுண்டு!**

**— அண்ணா**

தமிழகத்தில் மாவட்டந்தோறும் வேலை தேடித்தரும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை தவிர தென்னார்க்காடு மாவட்டத்தில் நெய்வேலியில் ஒரு தனிஅலுவலகம் பணி புரிந்து வருகின்றது. சென்னையில் மட்டும், பள்ளி இறுதி வகுப்புத் தேருத, மற்றும் அதற்கும் கீழ்த் தகுதி பெற்ற தொழில் திறமை ஏதுமில்லாதோரின் நலனுக்காகஒரு தனி அலுவலகமும், உயர் தகுதியுடையவர்கள் மற்றும் தொழில் துறையில் உயர் தகுதி பெற்றவர்களுக்காக ஒரு தனி அலுவலகமும், உடல் ஊனமுற்றோர்களுக்காக ஒரு தனி அலுவலகமும் நிறுவப்பட்டுள்ளன.

வேலை தேடித்தரும் பணியை மேலும் தொடர்ந்தும், திறம் படவும் விரிவு படுத்திச் செயல்பட 50,000 மக்கள் தொகை கொண்ட நகரங்களில் ஒரு அலுவலகம் தொடங்குவதெனத் திட்டமிடப்பட்டு, முதலில் ஈரோட்டில் ஒன்றும் திண்டுக்கல்லில் ஒன்றுமாக இரண்டு அலுவலகங்கள் துவங்கப்பட்டுள்ளன. இவை தவிர, இம்மாநிலத்தின் மூன்று பல்கலைக் கழகங்களிலும் ஒரு அலுவலகம் வீதம் துவக்கப்பட்டுப் பல்கலைக் கழக மாணவர்கட்குத் தொழில் வகைகளைக்காட்டி அவ்வழிகளில் செயல்பட உதவி புரிந்து வருகின்றன.

**வழிகாட்டி**

வேலை தேடித் தரும் நிலையங்கள் வேலை தேடித்தரும் பணியைத் தவிர, வேலை வாய்ப்புக்காகப் பதிவு செய்தவர்கள் அனைவருக்கும் தொழில்வகை வழிகளைக்காட்டி, அவ்வழிகளில் அவர்கள் செயல்பட உதவி புரிவதற்கென தொழில் வாய்ப்பு—வழிகாட்டிப் பிரிவுகளையும் நிறுவிப் பணி புரிகின்றன.

இவ்வழிகாட்டிப் பிரிவில்,வேலைக்காகப் பதிவு செய்து கொள்பவர்களுக்குத் தேவையான தகவல்களைத் தனித்தனியாகவும், கூட்டாகவும், வேலைக்குப் பதிவு செய்து கொள்ளும்போது தரப்படுகின்றது. வேலை தேடி வருவோரின் நன்மைக்காக இப்பிரிவில் ''கூட்டு விவாதங்கள்'' நடத்தி அவர்களுக்குத் தேவையான தகவல்களும் மாநிலத்தில் அவர்களுக்குள்ள வேலை வாய்ப்பைப் பற்றிய தகவல்களும் தரப்படுகின்றன. இக்கூட்டு விவாதங்களில் கலந்து கொள்ளுபவர்கள் தங்கள் தங்கள் தொழிற் பிரிவில் தங்களுக்குள்ள குறைகளையும் நிறைகளையும் முழுமையாக உணர்ந்து பயனடைகின்றனர். இப்பிரிவுத் தலைவர்கள் மாவட்டம் முழுதும் உள்ள பள்ளிகளுக்குச் சென்று வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றியும் வருகின்றனர்.

இவை தவிர மாநில மட்டத்திலுள்ள தொழில்—தகவல் பிரிவும் தொழில் வாய்ப்பு—வழிகாட்டிப் பிரிவும், வேலை கோரி வரும் விண்ணப்பதாரின் நன்மைக்காகப் பல புத்தகங்கள் வெளியிட்டு வருகின்றன. இப்புத்தகங்கள் விலைக்கும், இலவசமாகவும் தேவையானவர்களுக்குத் தரப்படுகின்றன.

**உடல் ஊனமுற்றோருக்காக**

சென்னை, நந்தனத்தில் செயல்பட்டு வரும் அலுவலகம், உடல் ஊனமுற்றோருக்குத் தகுதியான வேலை தேடித்தரச் சிறப்பு முயற்சிகள் எடுத்து வருகின்றது. காந்தி நூற்றாண்டையொட்டி செப்டம்பர் மாதம் சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டு சுமார் 120 உடல் ஊனமுற்றோர் வேலையில் அமர்த்தப்பட்டனர்.

அதிக அளவு உடல் ஊனமுற்றோரை வேலையில் அமர்த்தும் தொழிலதிபர்களுக்கும் அதிகத் திறமையுள்ள உடல் ஊனமுற்றோருக்கும் தேசீய விருதுகள் வழங்கப்படவிருக்கின்றன. மத்திய—மாநில அரசு அலுவலகங்களில் உடல் ஊனமுற்றோர் வேலையில் சேரப் பல சலுகைகள் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டு மார்ச் மாதம் 14, 15, 16 தேதிகளில் சென்னையில் இத்துறையின் ஆதரவில் உடல் ஊனமுற்றோருக்கான 'உலக நாள்' சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

### பர்மா—இலங்கை அகதிகள்

பர்மா—இலங்கையிலிருந்து திரும்பும் அகதிகளுக்கு வேலை வாய்ப்பு வசதி அளிக்கும் நோக்கத்துடன் ''வேலைவாய்ப்பு தொடர்பு அலுவலகம்'' ஒன்று மாநில மட்டத்தில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வலுவலகம் பர்மா—இலங்கை அகதிகளுக்கு வேலை வாய்ப்பு தேடித் தரச் சிறப்பு முயற்சி எடுப்பதுடன், அவர்களுக்குத் தொழில் துறையில் பயிற்சி வசதிகளும் ஏற்படுத்தித் தருகிறது.

மத்தியப் பிரதேசத்திலுள்ள ''மாஞ'' என்ற இடத்திலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்துக்கு இதுவரை 213 பேர்களையும், அஸ்தினாபுரத்திலுள்ள நூற்பு ஆலைக்கு 114 அகதிகளையும், பஞ்சாபில் நங்கல் என்னுமிடத்திலுள்ள பயிற்சிப் பள்ளிக்கு 13 அகதிகளையும் அனுப்பியுள்ளது. பயிற்சிக் காலத்தில் ரூ 55 உதவிப்பணம் அளிக்கப்படுகிறது. சென்னை அம்பத்தூரிலுள்ள நிறுவனமொன்றுக்கு 18 அகதிகள் அனுப்பப்பட்டுப் பயிற்சி பெறுகின்றனர்.

### வளரும் வேலை வாய்ப்பு

பொதுவாக நமது மாநிலத்தில் வேலைவாய்ப்புகள் பெருகி வருகின்றன. சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் எடுத்த கணக்கின்படி 14,90,274 பேர் மாநில முழுமைக்கும் வேலையில் இருந்தனர். இது 1968ம் ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் ஒப்பிடும் போது 26,559 பேர் அதிகமாக வேலையில் இருப்பதைக் காட்டுகின்றது. இம் முன்னேற்றம் பொதுத் துறை, தனியார் துறை இரண்டிலும் காணப்படுகின்றது.

வேலை தேடித் தரும் நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் 1969ம் ஆண்டில் மட்டும் மாநிலம் முழுதும் உள்ள அலுவலகங்களில் 4,03,404 பேர் வேலைக்காகப் பதிவு செய்தனர். 1969ம் ஆண்டு இறுதியில் 3,54,924 பேர் வேலை வாய்ப்பகங்களில்வேலை கோரிக் காத்திருந்தனர். இந்த எண்ணிக்கைகள் முந்தைய ஆண்டை விட அதிகமாகும். 1969ம் ஆண்டில் வேலைவாய்ப்பகங்களுக்கு 59,472 வேலைகளுக்காக விண்ணப்பதாரர்களைக் கோரி அரசு அலுவலகங்களும் தொழில் நிறுவனங்களும் கேட்டிருந்தன. இது 1968ம் ஆண்டைவிட 2,017 அதிகமாகும். 1969ம் ஆண்டில் 42,770 பேர் வேலைத் தேடித்தரும் அலுவலகங்கள் மூலம் வேலையில் அமர்த்தப்பட்டனர். இதுவும் முந்தைய ஆண்டை விட 1,189 பேர் அதிகமாகும்.

### ஐந்தாண்டுத் திட்டம்

பயிற்சிப் பிரிவைப் பொறுத்த வரையில், ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் பெருகி வரும் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிட்டுச் செயல்படுத்தப்படுகிறது. 1-11-1956ல் ஐந்து தொழிற் பயிற்சி நிலையங்களையும் ஒரு பெண்களுக்கான பயிற்சி நிறுவனத்தையும் கொண்டு 768 பேர்களுக்கு மட்டுமே பயிற்சி தரக்கூடிய நிலையில் நம்மாநிலம் இருந்தது. இஃது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில், 3,368 பேர்களுக்கு 10 தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கக் கூடியதாய் வளர்ந்தது. மூன்ருவது திட்டகாலத்தில், இது மேலும் வளர்ச்சியடைந்து 20 தொழிற் பயிற்சி நிலையங்களாகவும் அந்நிலையங்களில் 6,224 பேர்கள் பயிற்சி பெறக்கூடிய திறனும் உடையதாய் மாறியது. தற்போது மாநிலம் முழுவதும் பரவலாக 31 தொழிற் பயிற்சி நிலையங்களும், இந்நிலையங்களில் 13,112 மாணவர்கள் பயிற்சி பெறும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. வளர்ந்து வரும் நம் தொழில் தேவைகளைக் கருதி, 1974 ஆண்டுக்குள் மேலும் 1,000 பேர்களுக்கு பயிற்சி தரத் திட்டமிடப்பட்டுள்ளது.

### மாலைநேர வகுப்புகள்

பொற்கொல்லர், கைத்தறி நெசவாளர், மாதிரி உரு அமைப்பு செய்பவர்களுக்கான மாலை நேர வகுப்புகள் சேலம், திருநெல்வேலி, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சிப்பள்ளிகளில் 160 பேர்கள் பயிற்சி பெற வாய்ப்புடன் நடந்து வருகின்றது. தொழில் நிறுவனங்களில் பணி புரிபவர்கள், தங்களின் பாட நூல் பயிற்சியை விருத்தி செய்து கொள்ளும் வகையில் மாலை நேர வகுப்புகள் வட சென்னை, கிண்டி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 825 பேர்களுக்கு பயிற்சியளிக்க இயங்கி வருகின்றன. இம்மாலை நேர வகுப்புகள் வாரத்தில் மூன்று நாட்கள் தினம் 2 மணி நேரம் நடத்தப்படுகின்றன.

### நமது அரசு

வளர்ந்து வரும் நம்முடைய பொருளாதாரம் வரவிருக்கும் முன்னேற்றங்களுக்கு அடிப்படைஆதாரமாயிருப்பதால், வேலை வாய்ப்புப் பெருக்கமும், பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் தேவையும் பொருளாதாரவளர்ச்சியின் தன்மையையும் வேகத்தையும் பொறுத்தே அமைகின்றது. இன்றைய நிலையில் தொழில் வளர்வதற்கான பல்வேறு தீவிர முயற்சிகளில் நமது அரசு ஈடுபட்டு வருகிறது. தொழில் திறன் வளர, தொழிலும் வளருகிறது, அந்த அடிப்படையில் வேகமாக விரைவடைந்துவரும் தொழில் வளர்ச்சியிலும், வேலை வாய்ப்பிற்கான விரிவடைந்த சந்தர்ப்பத்தை நம்மால் எதிர்பார்க்க முடியும்.

**வெறும்**
**'செல்' அடைத்த**
**பையடா!**

**'செல்கள்' எனப்படும் உயிரணுக்கள் கூடிய தொகுப்பே உயிர்ப் பொருளாகும். ஒரு செல் உடைய உயிர்ப்பொருள்களே உலகில் முதன் முதலில் தோன்றின. மனித உடலில் உள்ள செல்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா?**

**26,000,000,000,000,000**

# காஞ்சி மண்ணில் அகழ்வாராய்ச்சி

டாக்டர் தருமாம்பாள் மகளிர் இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்களில் 25 பெண்கள், சென்னைப் பல்கலைக் கழகத் தொல் பொருள் ஆய்வுத் துறையினர் காஞ்சியில் தோண்டியுள்ள குழிகளைக் காணச் சென்றோம். டாக்டர் டி. வி. மகாலிங்கம் அவர்கள் அத்துறைக்குத் தலைவராகப் பணியாற்றுகிறார். டாக்டர் கிருட்டிணமூர்த்தியவர்களும், திரு. சா. குருமூர்த்தி, எம்.ஏ., எம்.லிட்., அவர்களும் அகழ்வாராய்ச்சி பற்றிய கருத்துகளை எங்கட்குத் தெரிவித்தார்கள்.

சாதாரணக் குடிகள் வாழ்ந்த இடம் என்பதற்கு அறிகுறியான தொல்பொருள்களும், பழைய காலத்துக் கட்டிடங்களும் இங்கு கிடைத்துள்ளன. இங்கு பதினைந்து அடி ஆழத்தில் மதுசாடிகள் அகப்பட்டன. கூம்பு வடிவம் கொண்ட முப்பதுக்கும் அதிகமான சாடிகளைக் கண்டெடுத்துள்ளனர். இவை உரோம் நாட்டில் தயார் செய்யப்பட்ட மது சாடிகளை ஒத்த உருவம் கொண்டவை. உரோமர்களுக்கும், தமிழர்களுக்கும் பண்பாட்டு, வாணிபத் தொடர்பிலும் ஒத்த ஓர் நிலை இருந்து வந்திருக்க வேண்டும். அவை சுமார் 2,000 ஆண்டுகட்கு முன் செய்யப்பட்டவை எனக் கணக்கிட்டுள்ளனர். மண்பாண்டங்களின் ஓடுகள் அதிக அளவில் அகப்பட்டுள்ள பெரிய அகன்ற இடத்தில் பாத்தி கட்டி, ஒவ்வொரு பாத்தியிலும் பல ஓடுகளைக் குவித்து, அவற்றைச் சுத்தம் செய்து, அவற்றின் தொன்மையையும் காலத்தையும் கணித்துப் பெயர் குறிக்கின்றனர். அவ்வோடுகளை அவர்கள்

''தான் ஈன்ற குழவியைத் தாய் பரிந்து அரவணைப்பது போன்று'' நெகிழ்வை ஏற்படுத்துகிறது. அகழ்வாராய்ச்சிக்குரிய குழிகளை அவர்கள் தோண்டியுள்ள முறை வைப்பைக் காண்கையில் வியப்பு ஏற்படுகிறது. பல மண் அடுக்குகளைக் கணக்கிட்டு எண் குறித்துள்ளனர். ஒன்றின் மேல் ஒன்ருகப் பதினெட்டு அடுக்குகள் காணப்பட்டன.

மண்பாண்டங்களில்தான் எத்தனை வகைகள்!

பாண்டத்தின் உட்புறம் மிருதுவாகவும், மேற்புறம் அதிகமான வழவழப்பாகவும் வர்ணம் தீட்டியும் பளிச்சிடும் வகையிலும் உள்ளன. சில ஓடுகள் அழகிய வண்ணத்துடனும், சித்திர நுணுக்கங்களுடனும் அமைந்து நம்மை ஈர்க்கக் கூடியவையாகவுள்ளன. அவைகள் சற்றுச் செல்வந்தர்கள் புழங்கிய மண்பாண்டங்களாகயிருந்திருக்கலாம். ஓடுகளின் விளிம்புகளும் நன்கு அழகுற வளைத்துச் செப்பனிடப்பட்டுள்ளன.

நாங்கள் பார்த்த பல தொல் பொருள்கள் கலை நுணுக்கமான வேலைப்பாடுகள் அமைந்தவையாக இருந்தன. மண்ணால் சுட்ட ஆண் சிலை ஒன்றினைக் கண்டோம். நல்ல அழகு பொருந்திய முகம். கூர்மை

**பெண்ணும்**
**பேச்சும்...**

**ஆண்களை விடப் பெண்கள் ஏன் அதிகமாகப் பேசுகிருர்கள்?**

**இதனை ஆராய்ந்த விஞ்ஞானிகள் மூன்று காரணங்களைத் தருகின்றனர்.**

1. **அறிவைவிட உணர்ச்சிகளே பெண்களை அதிகம் ஆளுகின்றன.**
2. **ஒரு பெண்ணின் மனம் ஆண்களின் மனத்தைவிட அதிக விரைவில் செயல்படுகிறது.**
3. **சிந்தனைகளைப் பேச்சாக மாற்றுகின்ற மூளையின் பகுதி ஆண்களைவிடப் பெண்களிடத்தில் அதிக வளர்ச்சி பெற்று விளங்குகிறது.**



## தமிழக முதல்வரும் இத்தாலிய ஓவியரும்

ரோம் நகரில் மாலை நேரத்தில் மக்கள் கூடும் சதுக்கம் ஒன்றில் சுமார் இருபது வயதுள்ள இளைஞன் ஒருவன் மிகச் சிறிய பாத்திரம் போன்ற உலோகத்தின் உட்புறத்தில் அழகிய வண்ண ஓவியங்கள் தீட்டி விற்றுக் கொண்டிருந்தான். அதைக் கண்ணுற்ற முதல்வர் திரு. மு. கருணாநிதி அவர்கள் ஒரு சித்திரத்தை விலை கொடுத்து வாங்கினார். அவர் தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் என்று தெரிந்தவுடன் அவனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. "என்னுடைய அன்பளிப்பாக இன்னொரு சித்திரத்தையும் வைத்துக் கொள்ளுங்கள்" என்று வேறு ஒரு சித்திரத்தைக் கொடுத்தான்.

அப்பொழுது அருகிலிருந்த முதல்வரின் அந்தரங்கச் செயலாளரிடம் முதல் அமைச்சரின் போட்டோ கிடைக்குமா என்று கேட்டான். அவர் ஒரு போட்டோவைக் கொடுத்ததும் அவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அங்கிருந்து முதல்வர் கொஞ்சதூரம் வந்து விட்டார். ஆங்கிலமும் இத்தாலி மொழியும் தெரிந்த இத்தாலி நாட்டுக்காரர் ஒருவரை அழைத்துக் கொண்டு மீண்டும் முதல்வரிடம் ஓடி வந்து அவர் போட்டோவில் கையெழுத்துப் (autograph) போட்டுத் தரும்படிக் கேட்டுக் கையெழுத்து வாங்கிக் கொண்டான். தன் உணர்வையும் மகிழ்வையும் தன் மொழியில் எடுத்துரைக்க அதை இத்தாலி நாட்டுக்காரர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொன்னார். முதல்வரின் போட்டோவை சித்திரமாகத் தீட்டித் தமிழ் நாட்டிற்கு அனுப்பிவைக்கப் போவதாக அன்பொழுகக் கூறினான். முதல்வரும் அவன் ஆர்வத்திற்கும் அன்பிற்கும் நன்றி கூறி விடைபெற்றுக் கொண்டார்.

யான மூக்கு. காலம் பல கடந்தும் அழியாத பருவத் தோற்றம். பதிய வைத்த பார்வையை மீட்க முடியாதபடி அதன் அழகில் ஈடுபட்டாலும், அதை உருவாக்கிய கலைஞனின் கைத்திறனை எண்ணி வணங்கினோம். சுட்ட மண்பாண்ட வகை (Terra Cotta) என அதற்குப் பெயர் பொறித்துள்ளனர். மண்ணால் சுட்ட காதணி ஒன்றைக் கண்டோம். வட்ட வடிவமானது. அதிலும் நுணுக்கமான கோலமிட்டாற் போன்ற சித்திரங்கள், மற்றும் சுட்ட மண்ணால் செய்யப்பட்ட வளைத்துண்டுகள், சங்கு வளையல்கள், தந்த மணிகள், பச்சை மணிகள், மத்தளம் வடிவம் கொண்ட வெள்ளை மணிகளும் கண்டோம்.

மற்றொரு குழியில் உறைகிணறுகளைப் பார்த்தோம். எங்கள் மனத்தில் நீங்கா இடத்தைப் பிடித்தவை இந்த உறை கிணறுகள்தான். குழியின் இரண்டு பக்கங்களில் இரண்டு உறை கிணறுகளிருந்தன. அவற்றின் சுவர்கள் மடிப்புகளுடன் இருந்தன. அந்நாளில் இவைகளைத் தண்ணீர்த் தொட்டிகளாகவோ, அல்லது தானியக்களஞ்சியங்களாகவோ பயன்படுத்தியிருக்கவேண்டும் எனக் கருதுகின்றனர்.

(டாக்டர் தெய்வநாயகி ஜோதி)



காஞ்சியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட உறைகிணறுகள்.



# அம்பத்தூர் அழைக்கிறது

நீலநிற உல்லாசப் பயணிகள் வண்டி ஆவடிச் சாலையில் ஆரவாரமாகப் போய்க் கொண்டிருந்தது. மாலை நேர மஞ்சள் வெயிலை ரசித்தபடி டிரைவர் தணிகாசலம் வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தார். வண்டியிலிருந்த 30 மாணவ-மாணவிகளும், கதைகளை அவிழ்த்து விட்டபடியிருந்தனர். அன்று வந்த சினிமா முதல், சந்திரனை வென்ற ஆம்ஸ்டிராங் வரை அவர்கள் பேச்சில் அடிபடாதவையேயில்லை.

வண்டி, சென்னையின் 'பர்மிங் ஹாம்' ஆன அம்பத்தூரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. ஏட்டளவில் எடுத்துரைத்ததை மாணவர்களுக்கு நேரடியாகக் காட்டுவதற்காக இந்த உல்லாசப் பயணத்தை ஏற்பாடு செய்திருந்தார் ஆசிரியர் அன்புடைநம்பி.

தொழிற்பேட்டை வரும் வரை காத்திருக்க மனமில்லை, எதிலுமே அவசரக்கார மாணவனான சந்திரனுக்கு. "சார், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் என்னென்ன தயாரிக்கிறார்கள்?"

"மின்சார விசிறி முதல் மினுமினுக்கும் வர்ணங்கள் வரை பல்வேறு பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. 117 தொழிற்கூடங்களை இதற்காகத் தமிழ்நாடு அரசாங்கம் அமைத்துக்கொடுத்துள்ளது. இதற்காக அரசாங்கம் கையகப்படுத்தியுள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு தெரியுமா?"

### 1200 ஏக்கர் நிலத்தில்...

"பத்து ஏக்கர் இருக்குமா சார்?"

"பத்து அல்ல. சுமார் 12 நூறு ஏக்கர். அதாவது 1200 ஏக்கர் நிலம்."

"சினிமாவுக்குத் தேவையான சாமான்கள் ஏதாவது தயாரிக்கிறார்களா சார்"—ஒரு திரைப்படப் பிரியனின் கேள்வி, இது.

"ஆமாம். நடிகைகள் பயன்படுத்தத் தக்க 'விக்'குகள், (செயற்கைச் சிகை), கண்கவரும்கண் இமைகள் ஆகியவைகூடத் தயாராகின்றன!"

"வேறு என்ன சார், உற்பத்தி செய்கிறார்கள்" மீண்டும் கேட்கிறான் சந்திரன்.

"உன் வாயை அடைக்க போல்ட்டும் நட்டும்"—குறும்புக்கார மாணவி மாலினியின் குறுக்கு வெட்டு இது. வண்டி, சிரிப்பு ஒலியில் தள்ளாடுகிறது.

"மாலினி சொல்வது உண்மைதான். 'போல்'ட்டும், 'நட்'டும் தயாரிக்கும் நிறுவனமும் இங்கு உள்ளது."

"எல்லாம் அரசாங்க நிறுவனமா?"

"விக் இந்தியா (சிகை தயாரிப்புத் தொழிற்சாலை) போன்ற ஒரு சில, அரசின் நிறுவனங்கள். மற்ற பெரும்பான்மையானவை தனியார் துறையைச் சேர்ந்தவைதான். சிறு தொழில்களை ஊக்குவிப்பதற்காக இம்மாதிரி தொழிற்பேட்டைகளில் பல தொழிற்கூடங்களைக் கட்டி அவற்றைச் சிறு தொழில் தொடங்குபவர்களுக்குக் குறைந்த வாடகையில் அரசு வழங்குகிறது.

நீர், மின்சக்தி, போக்குவரத்து வசதி, சாலைகள் முதலிய வசதிகளுடன் நன்கு திட்டமிட்ட இடங்களைச் சிறு தொழிலதிபர்களுக்கு வழங்குவதன்மூலம், தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதே, இத்தொழிற்பேட்டைகளை நிறுவியதன் முக்கிய குறிக்கோள் ஆகும்."

### நான்கு வகைகள்

"சென்னையில் மட்டும்தான் இந்தத் தொழிற்பேட்டை உள்ளதா?"

"இல்லை. தமிழகம் முழுவதும் உள்ளது. அவை நான்கு வகையான தொழில் பேட்டைகள். முதலாவது, பல்வேறு வகையான தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள். இவை மொத்தம் 26 உள்ளன. ஒவ்வொரு வருவாய் வட்டத்திலும் ஒரு தொழிற்பேட்டை இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மேலும் 10 தொழில் பேட்டைகளை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது.

இரண்டாவது வகை, தோல், மட்பாண்டத் தொழில் போன்ற குறிப்பிட்ட தொழில்களுக்கான தொழில்பேட்டை. மட்பாண்டத்திற்காக விருத்தாசலத்திலும், தோல் தொழிலுக்காக மாதவரத்திலுமாக இரு தொழிற்கூடங்கள் தற்போது இயங்கி வருகின்றன. இன்னும் இது போன்ற 5 தொழிற்பேட்டைகள் நிறுவ அரசு ஒப்புதலளித்துள்ளது.

மூன்றாவது வகை, துணைத் தொழிற்பேட்டைகள். பெரிய

தொழில்கள் உள்ள இடங்களில் அவைகளுக்குத் தேவைப்படும் சிறு உதிரிப் பகுதிகளைத் தயாரிக்கும் தொழில்களுக்கானவை, இவை. வடலூர், திருவெறும்பூர் (திருச்சி) உதகை ஆகிய இடங்களில்இவற்றை அரசு நிறுவியுள்ளது.

நாலாவது வகை, கூட்டுறவு, தனியார் துறைத் தொழிற்பேட்டைகள். இவ்வகையில் 7 தொழிற்பேட்டைகள் உள்ளன. இவை நிறுவ அரசு கடன் உதவி அளித்துள்ளது.''

ஆசிரியர் முடிக்கவும் அம்பத்தூர் தொழிற்பேட்டை வரவும் சரியாக இருந்தது.



''சார்! வண்டியை எங்கே நிறுத்த?'' டிரைவர் தணிகாசலம் கேட்கிறார்.

''நேரே, நிர்வாக அதிகாரி அலுவலகத்திற்குச் செல்லட்டும்''ஆசிரியரின் உத்தரவு.

**இயற்கையின் எழிலுடன்**

தொழிற்பேட்டை என்றால் பட்டறையும் சம்மட்டி ஓசையுமாக இருக்குமென்று எதிர்பார்த்த மாணவ—மாணவியருக்குப் பூஞ்செடிகளுக்கு மத்தியில் மாளிகைபோன்ற கட்டிடம் சற்று வியப்பைத் தருகின்றது. ஆமாம், அலுவலகக் கட்டிடம் மட்டுமல்லாமல், பல தொழில் கூடங்கள், இயற்கையின் எழிலுடன், அழகிய கட்டிடங்களில் தான் இயங்குகின்றன.

மாணவ மணிகள் உற்சாகமாக ஒவ்வொரு கூடமாக சுற்றிப் பார்க்கிறார்கள்.

''இதோ, எங்கள் வீட்டில் இதே ஃபேன் (மின்சார விசிறி) தாண்டி'' என்று 'விஜய்' மின் விசிறி கூடத்தில் ஒருபெண் சுட்டிக்காட்டுகிறாள். ''எங்கள் வீட்டில்கூட இந்த இஸ்திரிப் பெட்டி இருக்கிறதே''! என்று அடுத்த மாணவி பதிலுரைக்கிறாள்.

விதவிதமான வண்ணங்களைக் கண்டு ''டேய் டெக்னிக் கலருடா!' என்கிறான் திரைப்படப் பிரியன். வெவ்வேறு வித வண்ணங்களைப் பற்றி விவரிக்கிறார், நிர்வாகி.

போல்ட், நட் பகுதி வந்ததும் மாணவ—மாணவியர் அனைவரும் சந்திரனைப் பார்த்துச் சிரிக்கின்றனர். அவற்றின் தேவையில்லாமலேயே மூடிய வாயைத் திறக்காமலே வருகிறான், சந்திரன். அவனுடைய எண்ணமெல்லாம், தான் பெரியவனானதும் எந்த மாதிரித் தொழில் துவங்கலாம் என்ற கற்பனையில் ஈடுபட்டிருந்ததுதான் அதற்குக் காரணம்.

அடையப்பா! எத்தனை வகைத் தொழில்கள். குடைக் கம்பிகளைத் தயாரிக்கும் தொழிற்கூடம்;பிளாஸ்டிக் பைகளைத் தயாரிக்க ஒரு கூடம்; அச்சடிக்கும் மை, அழகான சட்டைகள், மருந்துகள், மின்சார அடுப்புகள், ரெயில்வே கைகாட்டிகளுக்கான உபகரணங்கள், பல்வேறு யந்திரங்களுக்கான பாகங்கள் இப்படி எத்தனை தரப்பட்ட பொருள்கள் தயாரிக்க இங்கே தொழிற்கூடங்கள் உள்ளன.

சுற்றி வரும் மாணவ மணிகளுக்கு ஒரே இடத்தில் எல்லாத் தொழில்களையும் பார்த்துவிட்ட மனநிறைவு.

**நம்பிக்கை ஒளி**

அனைத்தையும் சுற்றிப் பார்த்ததும் மாணவ—மாணவியரின் முகத்தில் புதிய ஒளி—புதிய நம்பிக்கை தெரிகிறது. ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் இந்தத் தொழிற்பேட்டைகள் அவர்கள் ஒவ்வொருவர் மனத்திலும் ஒரு வித சிந்தனையைத் தூண்டி விட்டுள்ளது. அவர்கள் மனத்தினில் ஒரு லட்சியக் கனவினை உருவாக்கியுள்ளது.

தொழில் வளம் பெருகிட அரசு அமைத்துத் தந்துள்ள வசதிகள் சூழ்நிலைகள், அந்த இளம் உள்ளங்களின் மனத்தில் தெளிவாகப் பதிந்து விடுகின்றன. அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கான பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களும், அந்நியச் செலவாணியை அள்ளித்தரும் தொழில்களும் அவர்கள் மனத்தில் மாறி மாறி நிழலாடுகின்றன. வேலையின்மை என்ற இருள்படலம் அகல்கின்றது.

அம்பத்தூர், தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டு.

தமிழகத்தில் தொழில்வளர நல்ல சூழ்நிலையிருப்பதை எதிரொலிக்கும் பிரதிபிம்பம்.

இதோ, பரந்து கிடக்கும் பூமி, புதிய புதிய தொழில் கூடங்களைத், தாங்கி நிற்கத் தயாராக இருக்கிறது. தமிழகத்தில் புதிய புதிய தொழில்களைத் துவங்க தொழிலதிபர்களை அழைக்கிறது அம்பத்தூர்.

# நாசியைக் கவரும் நறுமணத் தைலம்



தமிழக அரசின் ''சின்கோனா''த் துறையினரால் மருந்தாகவும், மணம் வீசும் பொருளாகவும் பல அரிய தைலங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றைக் குறித்துச் சிறு விளக்கம் இங்கே தரப்படுகின்றது.

நீலகிரித் (யூகாலிப்டஸ்) தைலம்: சளி, இருமல், கைகால் மூட்டு வலி, நெஞ்சுவலி, தலைவலி ஆகியவற்றிற்கு உடம்பில் தடவலாம். அதோடு இருமலுக்கும் தொண்டை கரகரப்பிற்கும் சிறிதுசர்க்கரையில் இரண்டு சொட்டுத் தைலத்தை விட்டு உட்கொண்டால், குணம்தெரியும். ஆஸ்துமா, நெஞ்சுச் சளி போன்றவற்றிற்குக் கொதிக்கும் நீரில் இரண்டு சொட்டு தைலம் விட்டு ஆவி பிடித்து வந்தால் பலன் கிடைக்கும்.

**விண்டர் கிரின் தைலம்:** நூறு கிராம் தேங்காய் எண்ணெயைச் சுட வைத்து அதில் இரண்டு தேயிலைக் கரண்டி அளவு இந்தத் தைலத்தைச் சேர்த்து மூட்டுவலி, தலைவலி, நெஞ்சு வலி ஆகியவற்றிற்கு, உடம்பில் தடவினால் பலன் தெரியும். பல்வலியை உடனடியாகக் குறைக்க, பஞ்சில் சில துளி தைலத்தை விட்டுப்பல்லில் ஒதுக்கிக் கொள்ளவும்.

**சூடத் தைலம்:** மூட்டு வீக்கம், மூட்டு வலி, நெஞ்சு வலி இருப்பவர்கள், 25 கிராம் தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெயில் இத்தைலத்தை இரண்டு தேக்கரண்டி அளவு விட்டு, மேலுக்குப் பூசிக் கொள்ளலாம். நெஞ்சுச்சளிக்கும், இருமலுக்குங்கூட இதைப் பயன்படுத்தலாம்.

**சூட வில்லை:** சூடத் தைலத்தைப் போல் இதையும் பயன்படுத்தலாம். 25 கிராம் தேங்காய் எண்ணெயைச் சூடாக்கி அதில் 6 சூடவில்லைகளைப் பொடிசெய்து போட்டு மேற் குறிப்பிட்டபடி உபயோகிக்கலாம்.

**ஜாவா சித்திரோனெல்லாத் தைலம்:** ஈக்கள், கொசுக்கள், மூட்டைப்பூச்சிகள் இவைகளை ஒழிக்க இது அருமையான மருந்து. மண்ணெண்ணெயுடன் கலந்து அடித்தால் இது நல்ல பயனைத் தரும்.

**வெட்டிவேர் தைலம்:** 100 கிராம் தேங்காய் எண்ணெய் அல்லது வேறு, தலைக்குத் தேய்க்கும் எண்ணெயுடன் சில துளிகள் வெட்டிவேர்த் தைலத்தைச் சேர்த்தால் அது மிகவும் நறிய மணத்தினைத் தரும் (ஹேர் ஆயிலாக) எண்ணெயாகப் பயன்படுத்தலாம்.

குளிக்கும் நீரில் சில துளிகள் விட்டுக் குளித்தால் பகலெல்லாம் உடம்பில் நறுமணம் வீசிக் கொண்டிருக்கும்.

கோடைகாலத்தில், மண் பானையிலுள்ள குடி தண்ணீரில் இரு துளிகள் விட்டால், குடிக்க இனிமையாக இருக்கும். உடலுக்கும் குளுமையைத் தரும்.

**ஜெரனியம் தைலம்:** ரோஜாவைப் போன்று இனிய நறுமணம் தரும் தைலம், இது. கைக்குட்டையில் இரு துளித் தைலத்தைத் தெளித்தால் நாளெல்லாம் மணம் வீசிக் கொண்டிருக்கும். சிறு துணியில் இரு துளி தைலத்தை விட்டு வீட்டிலோ, காரிலோ வைத்திருந்தால் நறுமணம் கமழும். 100 கிராம் தேங்காய் எண்ணெயில் விட்டுத் தலைக்குத் தேய்க்கும் வாசனை எண்ணெயாகவும், குளிக்கும் போதும் பயன்படுத்தலாம்.

**பச்சோலித் தைலம்:** 100 கிராம் தேங்காய் எண்ணெயுடன் ஒரு தேயிலைக் கரண்டி தைலத்தைக் கலந்து வைத்துக் கொள்ளவும். படுக்கும் முன் உச்சந்தலையில் சிறிது தடவி விட்டுப் படுத்தால் அருமையான தூக்கம் வரும்.

இத்தைலத்தையும் மேலே கூறிய தைலங்களைப் போல் வாசனை எண்ணெயாகவும், குளிக்கவும் பயன்படுத்தலாம்.

**யூகாலிப்டஸ்-சிரிடோராத்தைலம்:** கூந்தலை வளர்க்க இது அரிய தைலம். மயிர் கொட்டுவதைத் தடுக்கும். அடர்ந்து வளர உதவும். 100 கிராம் தேங்காய் எண்ணெய் அல்லது சுத்தப்படுத்தப்பட்ட நல்லெண்ணெய், அல்லது விளக்கெண்ணெய் ஆகியவற்றில் இரு தேக்கரண்டி சேர்த்து தலைக்குத் தேய்க்கவும் பயன்படுத்தலாம். எலுமிச்சம் பழம் போன்ற வாசனையுள்ளது, இத்தைலம்.



# வழிகாட்டும் தமிழ்நாடு

## குடிநீர்-வடிகால் திட்டங்கள்

செழுமை வாய்ந்த நிறை வாழ்வுக்கு முதல் தேவையாக விளங்குவது, மக்கள் அனைவருக்கும் போதுமான தூய குடி நீர் வசதி. ஏழை மக்கள் தேவைகளை முதன்மையாகக் கருதும் தமிழக அரசு, 1972க்குள் எல்லா ஊர்களுக்கும் தூய குடி நீர் வசதியைச் செய்தாக வேண்டும் என்ற குறிக்கோளை முன்வைத்து, விரைந்து செயல்பட்டு வருகின்றது.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் குடிநீர் வசதி மேம்பாட்டுக்காகப் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டாலும், மேற்கொண்ட நடவடிக்கைகள் போதுமானவை அல்ல என்று தெரியவந்தது. குடிநீர் வசதித் திட்டங்களை நிறைவேற்றும் நிறுவனங்களிடையே ஒருங்கிணைந்த செயல்முறை இல்லாததே, குறைபாட்டுக்குக் காரணம் என்று உணரப்பட்டது.

### ஒருங்கிணைந்த அமைப்பு

குடிநீர் வழங்கும் திட்டங்கள், பல துறைகள் மூலம் நிறைவேற்றப்பட்டு வந்தன. கிராமங்களுக்கு நீர் வழங்கும் பணியை கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மேற் கொண்டிருந்தது. நகராட்சிப் பகுதிகளுக்கான திட்டங்களையும், 10,000 மக்கள் தொகைக்கு மேற்பட்ட பேருராட்சிகளுக்கான திட்டங்களையும் சுகாதார, குடும்பநலத் திட்டத் துறை மேற்கொண்டிருந்தது. சென்னை மாநகருக்குக் குடிநீர் வசதியை மேம்படுத்தக்காவிரிநீரைக் கொண்டு வருவதற்கான வீராணம் திட்டத்தைப் பொதுப் பணித்துறை செயல்படுத்தி வருகின்றது.

1972க்குள் எல்லா ஊர்களுக்கும் குடிநீர் வசதி அளிக்கும் நோக்கத்துடன், ஏற்கனவே ஏற்கப்பட்ட குடிநீர் வழங்கல், கழிவு நீர் வடிகால் திட்டங்களையும் வருங்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்களையும் திறம்பட நிறைவேற்றும் வகையில், சம்பந்தப்பட்ட துறைகளின் பணிகளை ஒருங்கிணைக்க நடவடிக்கை எடுப்பது பற்றி அரசு ஆராய்ந்தது.

### தனி வாரியம்

எல்லா நகராட்சிகளும் ஊராட்சிகளும் சம்பந்தப்பட்டநீர் வழங்கல், கழிநீர் வடிகால் திட்டங்களை நிறைவேற்றும் பணி ஒரே நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழ் அமைய வேண்டுமென அரசு முடிவுசெய்தது. இதற்கேற்ப 1969 செப்டம்பர் முதல் ''தமிழ் நாடு நீர் வழங்கல், கழிவு நீர் வடிகால் வாரியம்'' ஒன்றை அரசு அமைத்துள்ளது.

தமிழக அரசு கூட்டுத் தலைமைச் செயலாளர், இந்த வாரியத்தின் தலைவர் ஆவார். வருவாய்த்துறை, பொதுப்பணித் துறை, நிதித்துறை, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை, வேளாண்மைத் துறை, சமூகநலத் துறை, சுகாதாரக் குடும்ப நலத் திட்டத் துறை ஆகிய துறைகளின் செயலாளர்களும் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைத் தலைமைப் பொறியாளரும் வாரியத்தின் உறுப்பினர்கள். ஆவர். பொதுத் துறை 'அடிஷனல்' செயலாளர், உறுப்பினர்—செயலாளர் ஆவார்,

### வழிகாட்டும் தமிழகம்

தக்க சட்டம் இயற்றி இந்த வாரியத்தைத் தனி அதிகாரமுள்ள அமைப்பாக ஆக்கக் கருதப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதற்கும் நீர் வழங்கல், கழிவு நீர் வடிகால் வசதி அளிக்கும் பொறுப்புக்கள் கொண்ட தனி அதிகாரமுள்ள அமைப்பை உருவாக்குவதற்கு வகை செய்யும் சட்டம் எதுவும் இந்நாட்டில் இது வரை இயற்றப்படவில்லை. தமிழ் நாடு அரசு இப்போது இயற்றக் கருதியுள்ள சட்டம், மற்ற பகுதிகளுக்கு வழிகாட்டியாக அமையும் தன்மையுடையதாகும். இதற்கான வரைவு மசோதா ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. விரைவில் இம் மசோதா சட்ட மன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்படும்.

### நிதித் தேவைகள்

மாநிலத்தில் தற்சமயம் 11 நகராட்சிகளும் 5 நகரியங்களும் 92 பேரூராட்சிகளும் தூய குடிநீர்வசதி வழங்கப்படாத நிலையில் உள்ளன. 76 நகராட்சிகளுக்கும் 13 நகரியங்களுக்கும் 124 ஊராட்சிகளுக்கும் கழிவு நீர் வடிகால் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நான்காவது திட்டத்தில் நீர் வழங்கல்-வடிகால் பணிகளுக்காகத் தற்காலிகமாக வகை செய்யப்பட்ட தொகை ரூ 12.50 கோடி [illegible]

இப்பெரும் பணிக்கு மொத்தம் தேவைப்படும் தொகை சுமார் ரூ 130 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே நிதி உதவிக்காக, நிதி உதவும் நிறுவனங்களை அணுகுவது அவசியமாகிறது.

### 26 திட்டங்கள்

1969-70ஆம் ஆண்டில், 26 நீர் வழங்கல்—கழிவு நீர் வடிகால் திட்டங்கள் சம்பந்தமாகக் கடன் வழங்கும்படி ஆயுள் காப்புறுதிக் கழகத்தை அணுக வேண்டியிருந்தது. இந்த 26 திட்டங்களில் 21 திட்டங்கள் நகராட்சிகளுக்கும், 5 திட்டங்கள் பேரூராட்சிகளுக்கும் ஆனவை. 26 திட்டங்களில் 22 திட்டங்கள் நீர் வழங்கல் குறித்தவை; 4 திட்டங்கள் வடிகால் வசதி குறித்தவை. இந்த 26 திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ 13.92 கோடி ஆகும். 1969—70க்கு ரூ 2.88 கோடி தேவை என மதிப்பிடப்பட்டது. ஆயுள் காப்புறுதிக் கழகம் ரூ 1.92 கடன் வழங்கியது. எஞ்சிய தொகை மாநில நிதியிலிருந்து தரப்படுகிறது.

இந்த 26 திட்டங்கள் பின் வருமாறு:

| தொடர் எண் | திட்டத்தின் பெயர் | செலவு மதிப்பு (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மதுரை குடிநீர் வசதி விரிவினைத் திட்டம் | 17.00 |
| 2. | உதகமண்டலம் ,, | 33.00 |
| 3. | ஈரோடு ,, | 11.88 |
| 4. | பொள்ளாச்சி ,, | 28.96 |
| 5. | கோவில்பட்டி ,, | 108.45 |
| 6. | சேலம் ,, | 127.70 |
| 7. | தாம்பரம் ,, | 12.75 |
| 8. | ஆலந்தூர் குடிநீர்த் திட்டம் | 47.80 |
| 9. | வாணியம்பாடி ,, | 27.51 |
| 10. | செங்கல்பட்டு குடிநீர் வசதி விரிவினைத் திட்டம் | 23.05 |
| 11. | ஆத்தூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 23.86 |
| 12. | மேல்விஷாரம் ,, | 13.87 |
| 13. | திருச்சி வடிகால் திட்டம் | 285.06 |
| 14. | மதுரை ,, | 109.00 |
| 15. | காஞ்சிபுரம் ,, | 105.44 |
| 16. | ஆம்பூர் குடிநீர் வசதி விரிவினைத் திட்டம் | 40.00 |
| 17. | திருப்பத்தூர் ,, | 35.61 |
| 18. | கிருஷ்ணகிரி ,, | 28.00 |
| 19. | திருவாரூர் ,, | 27.76 |
| 20. | இராமனுதபுரம் ,, | 37.41 |
| 21. | கடையநல்லூர் ,, | 30.00 |
| 22. | திருக்கோயிலூர் ,, | 11.45 |
| 23. | கள்ளக்குறிச்சி ,, | 9.99 |
| 24. | விக்கிரமசிங்கபுரம் ,, | 27.55 |
| 25. | பெருந்துறை, கருமாண்டி செல்லி பாளையம், சென்னிமலை } கூட்டு குடிநீர் வழங்கு திட்டம் | 42.45 |
| 26. | கோயமுத்தூர் வடிகால் திட்டம் | 126.19 |
| | மொத்தம் | 3,191.74 |



### சென்னை வரும் காவிரி

சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் நீர் வழங்கு வசதியை மேம்படுத்துவதற்காகக் காவிரி நீரைக் கொண்டு வர வகை செய்யும் வீராணம் திட்டம் ரூ 21.30 கோடி செலவில் 222 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வீராணம் ஏரி மூலமாக நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் காலன் நீரைக் கூடுதலாகக்கொண்டு வந்து வழங்குவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. வீராணம் ஏரியிலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வடக்களத்து என்னுமிடத்தில் நீர் தூய்மைப்படுத்தப்பட்டு 66 அங்குல விட்டமுள்ள கான்கிரீட் குழாய்கள் மூலமாகச் சென்னை மாநகருக்குக் கொண்டு வரப்படும். இத்திட்டத்துக்கு 1970-71ஆம் ஆண்டில் ரூ 7.4 கோடி நிதி ஒதுக்க வகை செய்யப்படுகிறது. வீராணம் திட்டத்துக்கு நடப்பு ஆண்டுக்கு ரூ 5 கோடி கடன் வழங்குமாறு ஆயுள் காப்புறுதிக் கழகத்திடம் கேட்கப்படும்.



PSG



அமோக விளைச்சலுக்கு PSG பம்பு செட்டுகள்

■ நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள் ■ என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது ■ தாராளமாக தண்ணீர் பெறுங்கள் ■ ஏராளமாக விளைச்சல் காணுங்கள் ■ நிறைய செல்வம் அடையுங்கள்

விவரங்களுக்கு எழுதுங்கள்:

பிஎஸ்ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்

கோயமுத்தூர் 4 தென்னிந்தியா

விற்பனைக் கிளைகள்:

the hallmark of high standard

311, தம்பு செட்டி வீதி, சென்னை 1. 217 & 218, மேலமாசித்தெரு, மதுரை 1.
பப்ளிக் கார்டன் ரோடு, சைபாபாத், ஹைதராபாத் 4.
13/85, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர் 2.

VSK PSG 213.


# காவிரி நதிப்புறத்துக் கோதுமை!!



'பாட்டுக்கொரு புலவன்' என்று பாராட்டப் பெற்ற பாரதியார் அவர்கள், "கங்கை நதிப் புறத்துக் கோதுமைக்குக் காவிரி வெற்றிலையை மாறு கொள்ளுவோம்" என்று பாடினர். உண்ண உணவளிக்கும் அரிசியும், சோளம், கம்பு, கேழ்வரகு, வரகு ஆகிய சிறு தானிய வகைகளும் தமிழ்நாட்டில் போதிய அளவு இருக்கும்போது, கங்கை நதிப் புறத்தில் விளையும் கோதுமையைக் காவிரி வெற்றிலைக்குப் பண்டமாற்று செய்ய வேண்டும் என்று ஏன் பாடினர்? ஒவ்வொருவரும் சிந்தித்துப்பார்க்க வேண்டிய கேள்வி இது!

உடல் வளர்ச்சியும், உடல் நலமும் ஏற்படுவதற்கு உணவில் புரதச் சத்து, வைட்டமின்கள், தாது உப்புகள், கார்போகைடிரேட், கொழுப்புச் சத்து ஆகிய ஊட்டச் சத்துகள் போதுமான அளவில் இருக்க வேண்டும். மேற் கூறிய ஊட்டச் சத்துகள் அரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு, வரகு ஆகியவைகளில் உள்ளதைவிட, கோதுமையில் அதிக அளவில் அடங்கியுள்ளன என்பது ஆராய்ச்சியில் கண்ட உண்மையாகும். அதை அனுபவத்தில் அறிந்த தனலேயே, பாரதியார் தமிழ்நாட்டின் சமவெளிகளில் கோதுமை விளையாவிட்டாலும், கங்கைச் சமவெளிகளில் விளையும் கோதுமையைப் பண்டமாற்று முறையில் வாங்கி உண்டு பயன்பெறுவோம் என்று கருதியே அப்படிப் பாடியிருக்கக் கூடும்.

**இங்கும் சாகுபடி செய்யலாம்**

பாரதியார் காலத்திலே தமிழ் நாட்டின் சமவெளிகளில் கோதுமை விளையவில்லை; விளைவிப்பதற்குஏற்ற கோதுமை தினுசுகளும் கிடைக்கவில்லை. ஆனல், நாளும் வளர்ந்து வரும் வேளாண்மை ஆராய்ச்சியின் பயனக, தமிழ் நாட்டின் சமவெளிகளில் சாகுபடி செய்வதற்கேற்ற மெக்சிகன் கட்டை கோதுமை தினுசுகள் (Mexican dwarf wheat strains) கிடைத்துள்ளன.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் மண்டல ஆராய்ச்சி நிலையம் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் வெற்றியாக முடிந்துள்ளன. அதன் பயனய்க் கோயம்புத்தூர் பகுதியில் குளிர் காலத்தில் கோதுமை சாகுபடி செய்யலாம் என்பது தெளிவாகியதுடன், ஏற்ற தினுசுகள் என்னென்ன என்பதும் தெரிந்தது. மேலும், குறைந்த பட்சம் ஹெக்டருக்கு 4 டன் கோதுமை விளைவிக்க முடியும்என்பதும் புலனகியது.

சென்ற ஆண்டில் கோவை, தர்மபுரி, வடஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் வேளாண்மைத் துறையினரின் முயற்சி காரணமாகச் சுமார் 340 ஏக்கர் பரப்பளவில் கோதுமை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தென்ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் உள்ள ஒரு ஆர்வமுள்ள உழவர் பெருமகன் சென்ற ஆண்டில் கோதுமையைப் பயிரிட்டுப் பார்த்துள்ளார். நல்ல மகசூல் கிடைக்கும் என்றநம்பிக்கை அவருக்குத் தோன்றியுள்ளதாக அறி கிறோம். அதுபோலவே பல உழவர் பெருமக்கள் பல மாவட்டங்களிலும் கோதுமையைச் சாகுபடி செய்ய ஆர்வம் கொண்டுள்ளனர்,

லாபம் கருதிப் பயிரிடாவிட்டாலும், நலமான உடலைக் கருதியாவது நமக்கு வேண்டிய கோதுமையை நாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டியது நமது தலையாய கடமையாகும். தமிழ்நாட்டின் சமவெளிகளில் கோதுமையைச் சாகுபடி செய்ய வாய்ப்பு இருப்பதாலும், கோதுமையைச் சாப்பிட வேண்டும் என்ற ஆர்வம் வளருவதாலும், கோதுமை சாகுபடி பற்றிய ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை (Package of practices) உழவர் பெரு மக்களின் நலன் கருதி ஈண்டு படைக்கின்றோம். ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு கோதுமை சாகுபடி செய்தால் நல்ல மகசூல் பெறுவதோடு நலமான உடலும், வளமான வாழ்வும் பெற இயலுமாதலின், பின்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளைமேற் கொள்ளுமாறு உழவர் பெருமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ்நாட்டின் சமவெளிகளில் மெக்சிகன் கட்டை கோதுமை (Mexican dwarf wheat) பயிரிட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளில் தமிழ்நாட்டிற்கு ஏற்ற தினுசுகளும் அவற்றின் வயதும் வருமாறு:

1. சர்பதி சோனுரா—85 நாட்கள்
2. கல்யாண் சோனு—95 நாட்கள்
3. சேப்டு வர்மா—100 நாட்கள்

### பருவம்

நவம்பர் முதல் பிப்ரவரி வரையுள்ள குளிர்காலமே ஏற்றது. கோயம்புத்தூர் நிலைமையில் நவம்பர் முதல் வாரம் விதைப்பதற்குச் சிறந்த காலமாகும்.

### நிலம் தயாரித்தல்

மண் நன்கு புழுதியாகும் அளவுக்கு 3 முதல் 4 தடவை உழ வேண்டும். கடைசி உழவிற்கு முன்பு ஏக்கருக்கு 20 வண்டி (10 மெட்ரிக் டன்) கலவை எரு அல்லது தொழு எரு வீதம் இட்டு மண்ணுடன் நன்கு கலக்குமாறு உழுதுவிட வேண்டும். கட்டிகளை உடைத்து விட்டு நிலத்தைச் சமப்படுத்த வேண்டும். பின்பு நிலத்தின் தன்மைக்கு ஏற்பவும், தண்ணீரை நல்ல முறையில் திறமையாகப் பாய்ச்சுவதற்கு ஏற்பவும் வசதியான பாத்திகளாக வயலைப் பிரித்துக் கொள்ள வேண்டும். பாத்திகள் 15 அடி நீளமும், 10 அடி அகலமும் உள்ளனவாக அமைப்பதே சிறந்தது.

### விதையும் விதைப்பும்

பாத்திகளில் 15 செண்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளி விட்டு ''மார்க்கர்'' என்னும் கருவியால் கோடு கிழிக்கவும். இவ்வாறு செய்வதால் 15 அடி நீளமுள்ள 18 வரிசைகள் கிடைக்கும். ஏக்கருக்கு 60 கிலோ விதை வீதம் விதைக்க வேண்டுமாதலின், ஒவ்வொரு பாத்திக்கும் தேவையான அளவு விதையைக் கணக்கிட்டுக் கொண்டு, அந்த அளவு விதையைப் பாத்திகளில் முன்பே வரிசை வரிசையாகக் கிழிக்கப்பட்டுள்ள பள்ளமான கோடுகளில் விதைக்கவேண்டும். 2 முதல் 3 செண்டி மீட்டர் ஆழத்திற்கு மேற்படாமல், மேலாகவே விதைக்க வேண்டும். விதைகளை மண்ணால் மூடிவிட்டு, அவை நன்கு ஊறுமளவுக்குத் தண்ணீரைப் பாத்திகளில் விடவேண்டும்.

### உரமிடுதல்

கோதுமைக்கு ஏக்கருக்கு 46 கிலோ தழைச்சத்து, 23 கிலோ மணிச்சத்து, 23 கிலோ சாம்பல் சத்து ஆகியவை முறையே கீழ்க் கண்டவாறு தேவைப்படும்.

| | | | |
|---|---|---|---|
| அடி உரம் (கிலோவில்) | 23 | 23 | 23 |
| மேல் உரம் (கிலோவில்) | 23 | — | — |
| மொத்தம் | 46 | 23 | 23 |

அடி உரங்களை ஆழம் குறைவான படைசாலில் (Small furrows) இட்டு மண்ணால் மூடிவிட வேண்டும். இதன்மேல் விதைகளை விதைக்க வேண்டும். விதைத்த 25வது நாளில் மேல் உரமிட வேண்டும். களை எடுத்து விட்டு வரிசைகளின் இடையில் மேல் உரத்தை இடுவதே சிறந்தது. மேல் உரமிட்டவுடன் நன்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

### பின் செய் நேர்த்தி

பயிர்களைக் கலைத்து விடுதல் அவசியமில்லை. பயிர்கள் சற்று கும்பலாக இருந்தாலும் கலைத்து விடாமல் அப்படியே வளரவிட வேண்டும். தேவையானபொழுது களை எடுக்க வேண்டும். விதைத்த 20 நாள் கழித்து ஒருமுறையும், 35 நாள் கழித்து மறுமுறையும் களை எடுத்தல் வேண்டும்.

விதைத்தவுடன் நீர்பாய்ச்ச வேண்டும். 3வது நாளில் முளைநீர் விடவேண்டும். பின்பு வாரத்திற்கு ஒருமுறை அல்லது 10 நாட்களுக்கு ஒருமுறை நீர்பாய்ச்சுதல் வேண்டும். ஆனால் நீர்ப்பாசன இடைவெளியை மண்ணின் இயற்கை, தட்பவெப்பநிலை, முந்திய பாசனத்தின் ஆழம் அல்லது அடர்த்தி ஆகியவைகளைப் பொறுத்தே முடிவு செய்ய வேண்டும்.

### பயிர்ப் பாதுகாப்பு

கோதுமைப் பயிரின் இலைகளில் ''ரஸ்ட்'' (Rust) எனப்படும் சொறி நோய் தோன்றினால், 'டைத்தேன்' அல்லது 'சினப்' அல்லது 'குமான்' ஆகியவைகளில் ஏதேனும் ஒன்றை ஒரு காலன் தண்ணீருக்கு 11 கிராம் வீதம் கலந்து ஏக்கருக்கு 50 முதல் 70 காலன் மருந்துக் கலவையைத் தெளிக்கவேண்டும். தேவையானால் 10 நாட்கள் இடைவெளியில் மீண்டும் மேற்கூறியபடி மருந்து தெளிக்கவும்.

தண்டு துளைப்பான் (Stem borer) தோன்றி கோதுமைப் பயிரில்சேதம் ஏற்படுத்தக் கூடும். பூக்கும் வரை 10 நாட்களுக்கு ஒரு முறை பாரத்தியான் 0.05 சதம் (100 சி.சி. பாரத்தியானை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது என்டிரின் 0.04 சதம் (200 சி.சி. என்டிரினை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளித்துத் தண்டு துளைப்பானைக் கட்டுப்படுத்தலாம். கோதுமையில் தண்டு துளைப்பானால் ஏற்படும் சேதம், நெல்லில் தண்டு துளைப்பானால் ஏற்படும் சேதத்தை ஒத்திருக்கும்.

### அறுவடை

விதைத்த 85 முதல் 90 நாட்களில் அறுவடைக்குத் தயாராகும். கதிர்களை மட்டும் அறுத்துச் சேகரித்து அடிக்க வேண்டும். விசையினால் இயங்கும் கதிர் அடிக்கும் கருவியைப் பயன்படுத்த முடியுமானால், நெல்லை அறுவடை செய்வதுபோல், கோதுமையையும் தாளுடன் அறுவடை செய்து கதிர் அடிக்கும் கருவியில் செலுத்தித் தானியங்களைப் பிரித்து விடலாம். கோதுமைத் தாள் (வைக்கோல்) கால்நடைகளுக்கு நல்ல தீவனமாகும்.

கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள இடங்களில் ஏக்கருக்கு 1500 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. கோயம்புத்தூர் வட்டம், தொண்டாமுத்தூர் வட்டாரத்தில் அமைக்கப்பட்ட தேசீய செயல் விளக்கம் ஒன்றில் ஏக்கருக்கு ரூ 1,236 நிகர லாபம் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

# அணுவைத் துளைத்து...

அணுசக்தியின் பெரும் பயன் மின்சக்தி பெறுதல். மின்சக்தி, நாட்டின் வளர்ச்சியில் நல்ல மாற்றத்தை உண்டாக்கி, செழிப்பைப் பெருக்கி மனித சமுதாயத்தின் தரத்தை உச்சிமீது உயர்த்திக் காட்டுவதாகும். தொல் பொருளற்ற இடங்களில் அனல் வாயிலாகக் கிடைக்கும் மின்சக்தியின் விலையை விட அணு சக்தியின் வாயிலாகக் கிடைக்கும் மின் சக்தியின் விலை குறைவாக இருப்பதால், உலகத்தின் பல்வேறு பாகங்களில் அணு மின் நிலையங்கள் பரவலாகவும் வேகமாகவும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. நிலையங்களின் அளவு பெருகப் பெருக, உற்பத்தியின் செலவினம் வெகுவாகக் குறைந்து கொண்டே வருகின்றது. அணு உலையில் 400 மெகாவாட் மின் சக்திப் பெருக்கத்திற்கு ஓராண்டிற்குத் தேவையான யுரேனியம் 50 டன்கள். ஆனால் இந்தஅளவு மின் சக்தியை அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்ய ஆண்டொன்றுக்கு 12 சதம், 15 லட்சம் டன் நிலக்கரி தேவைப்படுகிறது. இதைக்காணும் போது அணுமின் திட்டத்தால் மனித உழைப்பும் செலவினமும் சிக்கனமாகும் என்பதேவெள்ளிடைமலை.

மேலும் தொல்பொருளை எரித்து அதன் வாயிலாக கிடைக்கும் அனலால் கொதிகலனிலுள்ள நீரை ஆவியாக்கி அதன் மூலம் அனல் மின்சாரத்தைப் பெறுகிறோம். ஆனால், சாதாரண உலைக்குப் பதிலாக அணு உலையைப் பொறுத்தி யுரேனியம் அல்லது புளுடோனியம் ஆகியவற்றை எரி பொருளாக உபயோகப்படுத்தி முறையான அணுச்சிதைவின் மூலம் உண்டாக்கப்படும் அனலிலிருந்து நீராவியைப் பெருக்கி அணுமின் சக்தியைப் பெறுகிறோம். இரண்டு மின்சக்திக்கும்தேவையான

கருவிகள் ஒன்று போலவே அமைந்துள்ள போதிலும் அணு உலை மிகவும் சிக்கலுடையதாகும். ஆகவே அணு உலையை அமைப்பதில் மிகவும் நுண்மையுடன் கூடிய கவனம் செலுத்தி, வெளிப்படும் கதிர்வீச்சு உடல் நலனைப் பாதிக்கும் ஆதலால், தகுந்த முன்னெச்சரிக்கையுடன் கட்டுப்படுத்திச் செயலாற்ற வேண்டும்.

### வெவ்வேறு வித அணுக்கள்

அணுசக்தி மின்சக்தியோடுநின்று விடாமல் அதன் துணைப்பொருளான கதிர் ஐஸோடோப்பு (Radio Isotope) செய்யவும் பயன்படுகிறது. கதிர் ஐஸோடோப்பு விவசாயம், மருத்துவம், உயிரியல், தொழில், ஆராய்ச்சி செய்தல், கடல் நீரைக் குடிநீராக்குவது, மற்றும் கப்பலை இயக்குதல் போன்ற பல பிரிவுகளில் பயன்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு தனிப்பொருளும்ஒரே ரசாயனக் கிரியை கொண்ட அணுக்களைக் கொண்டதாக இருப்பினும் அதன் அணு அமைப்பு, பருமன் முதலியவற்றில் மாறுபட்டதாக இருக்கும். இந்த வெவ்வேறு விதமான அணுக்களைத்தான் அவ்வப் பொருளின் ஐஸோடோப் என்கிறோம். சில ஐஸோடோப்புகள் கதிர் வீச்சுகளை வெளிப்படுத்துவதால் இதை கதிர் ஐஸோடோப்புகள் என்கிறோம். சில கதிர் ஐஸோடோப்புகள் இயற்கையில் கிடைக்கின்றன. அதிகமான கதிர் ஐஸோடோப்புகள் செயற்கையாக அணு உலையிலும் வேக வளர்த்திகளிலும் (Accelerators) தயார் செய்யப்படுகின்றன. கதிர் ஐஸோடோப்புகளின் சில கதிர்கள் திடப்பொருளினுள் எக்ஸ்-ரே செல்லுவதுபோல் செல்லும். இதைப் புகைப்படங்கள் மூலமாகவோ எலக்ட்ரானிக் உபகரணங்கள் மூலமாகவோ கண்டுபிடிக்கலாம்.

இந்த ஐஸோடோப்புகள் உயிருள்ள பொருள்களில் இயற்கை மாற்றங்களை உபயோகமுள்ளதாகச் செய்வதால் அதை விவசாயத்துறையிலும், அதனுடைய கதிர்வீச்சைக் கொண்டு அதன் பாதை அல்லது இருப்பிடத்தை அறிய முடியுமாதலால் இதை ஆராய்ச்சி, மருத்துவம், தொழில், உயிரியல் மற்றும் பலதுறைகளிலும் உபயோகப்படுத்துகிறோம்.



விவசாயத்தில் கதிர் ஐஸோடோப்புகள் நல்லமுறையில் பயிரிடுதல், தாவரங்களின் கூட்டுச் சேர்க்கை (Better strain), தீமையான பூச்சி ஒழித்தல் ஆகிய பல ஆக்கப் பணிகளுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. தாவரங்களின் சத்துள்ள உணவு, நுண்ணுயிர்களின் மாற்றம் (Mutation), பூச்சி மருந்தை வினியோகிக்கும் முறை, அதனுடைய செயல் ஆகியவைகளை ஆராய்வதற்குக் கதிர் இயக்கமுறை டிரேசர்கள் (Radio Active Tracers) பயன்படுகின்றன. அதிகக் கதிர் வீச்சினுல் தாவரங்களில் நிறைய மாறுதல்கள் காணப்படுகின்றன. இதனுல் தாவரங்களின் வளர்ச்சி பெருகுவதோடு நோயை எதிர்க்கும் சக்தியுள்ள தாவரங்களையும் வளர்க்க முடியும்.

கதிர் ஐஸோடோப்புகள் கோழி வளர்ப்பில் கோழிகளுக்கும், உயிரினங்களுக்கும் தேவையான மாற்றுச் சத்து உணவைக் கண்டுபிடிப்பதில் பெரிதும் உதவுகின்றன. அதனுல் அதிகமான அளவு முட்கள், பால், மாமிசம் முதலியவை கிடைக்கின்றன.

உணவு கெடாமல் நீண்ட நாட்களுக்குப் பதப்படுத்திப் பாதுகாப்பதிலும் இது முக்கிய பங்கு வகிக்கிறது. உதாரணமாகக் கதிர் வீச்சிற்கு உட்பட்ட கோதுமை, உருளைக்கிழங்கு, பழங்கள், மீன் முதலியன நீண்ட காலம் கெடாமல் இருக்கின்றன. நீண்டகாலம் கெடாமல் பாதுகாக்க வேறெந்த முறையினுலும் முடியாது. சில கனி வகைகள் சீக்கிரம் கனியாதபடி காக்கவும், வெங்காயம், உருளைக் கிழங்குகளில் சீக்கிரம் குறுத்து கிளம்பாமல் தடுத்தல்; சுருங்குதல், பூசணம் பிடித்தல் முதலிய கெடுதல்களைத் தவிர்க்கவும் குறைந்த அளவு காமா கதிர்வீச்சினுல் செய்ய முடியும் என்று வெற்றிகரமாகக் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. ரொட்டி, சப்பாத்திகளைக் கெடுக்கும் பூசணம் முதலியவைகளை காமா (Gama) கதிர் வீச்சினுல் கட்டுப்படுத்தி இந்தப் பொருள்களைப் பாலிதின் பைகளில் சீல் செய்து 50 நாட்கள் வரை கெடாமல் வைத்திருக்கலாம்.



### தாயன்பும் - தமிழக அதிகாரிகளும்

கையிலே குழந்தையையும் காப்பாற்றிக்கொண்டு, அந்தக்குழந்தையின் மீது சீறிவருகிற மிருகத்தையும் சமாளித்துக் கொண்டு நிற்கும் தாயின் அன்பினைப் போன்ற கவனத்தை, அன்பினை மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அதிகாரிகளும் நம் நாட்டின் மேம்பாட்டிற்காக, இந்த சமுதாயத்தின் பாதுகாப்பிற்காகச் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இதை நீங்கள் மறக்க மாட்டீர்கள்! ஆட்சியில் இன்று ஒரு கட்சி இருக்கலாம். நாளை வேறு கட்சியின் ஆட்சி வரலாம். ஆனல் ஜனநாயக நாட்டின் அமைதி என்றென்றைக்கும் இருந்து தீரவேண்டிய ஒன்ருகும். அதைப்போலவே சமுதாயத்தில் நேர்மை நிலைக்க, நாணயம் விளங்க நாம் நம்முடைய ஒத்துழைப்பைத் தர வேண்டும்.

முதல்வர் கலைஞர்
மாவட்ட ஆட்சியாளர்கள் மாநாட்டில்

உயிரியல் ஆராய்ச்சியில் கதிர் ஐஸோடோப்புகள் டிரேசர்களாகப் பெரிதும் பயன்படுகின்றன. ஒரு கதிரியக்க டிரேசரை ஓர் உறுப்பில் செலுத்தி அதனுடைய வளர்ச்சி மாற்றம் (Metabolic changes) முதலியவற்றை அறியலாம்.

மருத்துவம், உடல் பாதுகாப்பு முதலிய பிரிவுகளில் அணுசக்தியின் உதவி ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதனுல் வியாதிகளை உதாரணமாக மூளைக் கழலை (brain tumor), தைராயிட் சீர்கேடு முதலியவற்றை அறிந்து கொண்டு அதைத் தடுப்பதற்கும், மனிதனின் பிணித் தொல்லைகளைக் குறைப்பதற்கும் ஏதுவாகிறது. நோய் தீர்ப்பதிலும், நோய் கண்டு பிடிப்பதிலும் உலகத்தில் உற்பத்தியாகும் கதிர் ஐஸோடோப்புகளில் 75 சதவிகிதத்திற்கு மேல் உபயோகப்படுத்தப்படுகின்றன என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. மருத்துவர்கள் கதிர் ஐஸோடோப்புகளை நோயாளியின் உடலில் செலுத்தி, அதை டிரேசர்களாக உபயோகித்து, அது செல்லும் பாதையைக் கொண்டு நோயைக் கண்டுபிடிக்கிருர்கள்.

இந்தியத் துறைமுகங்கள், கடற்கரை ஆகியவற்றில் ஏற்படும் மணல் அசைதலைக் கண்டுபிடிப்பதில் டிரேசர்கள்

கொச்சி, மங்களூர், கர்வார், மர்ம கோவா மற்றும் இந்தியாவில் உள்ள இதர துறைமுகங்களிலும் இந்த யுக்தியால் பல உண்மைகள் தெரிந்தன. சேது சமுத்திரக் கால்வாயின் போக்கைக் கண்டுபிடிப்பதற்கு பாக் ஜலசந்தியில் பரிசோதனைகள் நடத்தியது குறிப்பிடத்தக்கதாகும். சமீபத்தில் எண்ணூர் அனல்மின் நிலையத்தில் கழிவான சாம்பலை (Fly ash) எங்கு கொட்டலாம் என்று இந்த முறையில்தான் விவரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. குளிர் படுத்த கடல்நீரை எடுக்கும்போது கொட்டும் சாம்பல் திரும்பிவராதவாறு எடுத்த விவரங்கள் குறிப்பிடத்தக்கன.

ஆளியாறு, ஸ்ரீசைலம் அணைகளில் ஏற்பட்ட நீர்க் கசிவுப் பாதைகளைக் கண்டுபிடிக்க டிரேசர் முறை கையாளப்பட்டது. கங்கை நதியில் கசிவினுல் ஏற்படும் நீர் இழப்பைக் கண்டுபிடிப்பதற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

### மூன்ருவது நிலையம் இங்கே!

நாட்டின் அணுமின்சக்தித் திட்டத்தை உருவாக்க முயலும்போது கிடைக்கும் எரிபொருளுக்குத் தக்கவாறும், தொழில் வளர்ச்சி, அணுமின்சக்தியின் பொருளாதாரம் இரண்டிற்கும் தக்கவாறு எந்த அணுஉலை அமைக்கப்பட வேண்டும் என்பதையும், உள் நாட்டு உற்பத்தித் திறனையும் கருத்தில் கொள்ளப்படுகிறது. மூன்று புதிய மின்சக்தித் திட்டங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் சுமார் ஆயிரம் மெகாவாட் உற்பத்தி செய்ய நடப்புத்திட்ட காலத்திற்குள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சென்னையிலிருந்து சுமார் 50 மைல் தெற்கே, கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள கல்பாக்கம் என்னுமிடத்தில் மூன்ருவது அணுமின் சக்தி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. வடிவமைப்பிலும், மின்சக்தி வெளிப்படுத்தும் திறனிலும் இது ராஜஸ்தான் அணு உலையை ஒத்தது. முதலாவது அணு உலையில் வேலைகள் துவக்கப்பட்டுத் திருப்திகரமான முன்னேற்றம் காணப்படுகிறது. ட்ராம்பேயில் கிடைக்கும் திறனினுலும் முதல் இரண்டு அணுமின் நிலையங்கள் அமைக்கும்போது ஏற்பட்ட பயிற்சியாலும் நம்முடைய விஞ்ஞானிகளும் பொறியாளர்களும் இந்தக் கல்பாக்கம் அணு உலையில் வடிவமைப்பு, நிர்மாண வேலை, நடத்தும் பொறுப்பு ஆகியவைகளை வெளிநாட்டு உதவி இல்லாமல் செய்து விடலாம் என்ற நம்பிக்கையில் முயலுகிருர்கள்.

அண்மையில் இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி, கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் இரண்டாவது, பகுதி வேலை தொடங்குவதறுகான அறிகுறியைத் தெரிவித்துள்ளார்.

திருக்குறளின் பெருமையைக் கூற வந்த புலவர்,

''அணுவைத் துளைத்து
எழு கடலைப் புகுத்திக்
குறுகத் தரித்த குறள்''

என்று புகழ்ந்தார். அது கற்பனையாக இருந்தது. ஆனல் நமது காலத்தில் அணுவைப் பிளப்பது என்பது ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளது. வியக்கத்தக்க நல்ல பல சாதனங்கள் இதனுல் மனித சமுதாயத்திற்குக் கிடைத்துள்ளது. மேலும் அதிகப்பலன்களைத் தரும் என்று மனித சமுதாயம் எதிர்பார்ப்பதில் வியப்பொன்றுமில்லையல்லவா?



# இதயத்தின் புன்னகை



1970ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் தேதி.

முற்பகல் நேரம்.

சென்னை பெரிய மருத்துவ மனையில் உள்ள ஒரு ஆபரேஷன் அறை. மருத்துவர்களும் நர்சுகளும் சுறுசுறுப்பாக இயங்குகிறார்கள். மருத்துவமனைச் சிப்பந்திகள் ஸ்ட்ரெச்சரில் படுக்க வைத்து ஒரு நோயாளியைத் தள்ளிக் கொண்டு வருகிறார்கள்.

அன்று மிக முக்கியமான அறுவை சிகிச்சை நடக்கவிருக்கிறது.

ஆபரேஷன் அறைக்குள் ஸ்ட்ரெச்சர் நுழைகிறது. அதைத் தொடர்ந்து வந்த நோயாளியின் உற்றார் உறவினர்கள் வெளியே தங்குகிறார்கள்.

அந்த வழியாக வந்த ஒருவர், உறவினர் ஒருவரை அணுகி விசாரிக்கிறார்:

''என்னங்க, பெரிய ஆபரேஷனா?''

ஆம் என்பதற்கு அறிகுறியாக உறவினர் தலை அசைக்கிறார். அவர் உள்ளத்தில் என்னென்ன எண்ணங்களோ!

வந்தவர் தொடர்கிறார், ''என்ன ஆபரேஷனோ?''

''இருதய ஆபரேஷன்'' உறவினர் ஆடாமல் அசையாமல் பதில் கூறுகிறார்.

கேள்வி கேட்டவர் தனது நெஞ்சைப் பிடித்துக் கொள்கிறார்.

ஆபரேஷன் அறை மூடப்படுகிறது. உள்ளே பளபளக்கும் கத்தி, கத்திரிக்கோல், ஆக்ஸிஜன் சிலிண்டர், மயக்க மருந்து கொடுக்கும் கருவி... மற்றும் ஆயிரக்கணக்கான கருவிகள், யந்திரங்களுக்கிடையே நோயாளியின் உடல் கிடத்தப்படுகிறது.

**முதல் முறையாக...**

சென்னை பெரிய மருத்துவமனையில் நாள் தோறும் சிறிய—பெரிய அறுவை சிகிச்சைகள் எத்தனை எத்தனையோ நடத்தப்படுகின்றன. ஆனால் இந்த அறுவை சிகிச்சைக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. மிக நுணுக்கமான இந்த ஆபரேஷனில் சென்னை மருத்துவமனை வரலாற்றில் ''இருதய—சுவாச யந்திரம்'' முதல்முறையாக உபயோகப்படுத்தப் பட்டது.

சென்னை அரசாங்க மருத்துவ மனையில் பெறப்பட்ட இந்த யந்திரம்—தமிழக வரலாற்றில் ஓர் ஒப்பற்ற சாதனை என்று சென்னை பொது மருத்துவமனை டீன் டாக்டர் பாலகிருஷ்ணன் பெருமைப்படும் இந்த யந்திரம்—அறுவை சிகிச்சையின்போது மாற்று இருதயமாக, நுரையீரலாக வேலை செய்கிறது.

இருதயம் மனித உடலின் மிக முக்கியமான உறுப்பு. மனிதனின் பிறப்பில் இருந்து இறப்பு வரையில் நிமிடத்திற்கு 70 முதல் 100 முறை இடை விடாமல் இயங்குகிறது. சில சமயங்களில் இருதயம் நோய்வாய்ப்பட ஏதுவாகிறது. பிறவியில் இருந்தும், சில சமயங்களில் இடையிலும் ஏற்படுவது உண்டு.

இருதயத்தில் ஓட்டை, இருதய அறையில் உள்ள வால்வுகளில் பழுது ஆகியவை இருதயத்திற்கு ஏற்படும் நோய்களில் முக்கியமானவையாகும்.

முன்னால் கூறப்பட்ட, ஆபரேஷன் அறைக்குள் கொண்டுசெல்லப்பட்டவருக்கு இருதயத்தில் ஓட்டை ஏற்பட்டிருந்தது. அந்த ஓட்டையை அடைத்துச் சீர்படுத்தவே சிகிச்சை நடக்கிறது.

**இரண்டு வகை**

இருதய நோய்களைக் குணப்படுத்தும் அறுவை சிகிச்சை இருவகைப்படும். ஒன்று மூடிய முறை. அடுத்தது திறந்த முறை.



இருதயம் இயங்கிக் கொண்டிருக்கும்போதே இருதய வால்வுகளைப் பிரித்துப் பெரிதுபடுத்தியோ அல்லது வெட்டியோ செய்யப்படுகிறது. இந்த ஆபரேஷன் நடந்து கொண்டிருக்கும்போது மூளை, நுரையீரல், மூத்திரக்காய் முதலிய அவயவங்களுக்குச் சுத்த இரத்தம் தடையில்லாமல் கிடைக்க வழி செய்யப்படுகிறது. இது மூடிய முறை.

திறந்த முறை இருதய அறுவை சிகிச்சையில், முதலாவதாகச் செயற்கை முறையில் குளிர் பதன முறைக்கு உடல் உள்ளாகிறது. அப்போது இருதயம் 6 முதல் 9 நிமிடம் வரை இயங்காமல் நின்றுவிடுகிறது. இப்படி வேலை செய்யாமல் இருதயம் நிற்கும் நேரத்தில், அறுவை சிகிச்சை நிபுணர் இருதயத்தின் அறைகளைத் திறந்து 6 நிமிடத்திற்குள் பழுது பார்க்கவேண்டும். மிக முக்கியமான நுணுக்கமான அறுவை சிகிச்சையைப் பரபரப்புடன் ஆனால் பதட்டமில்லாமல் செய்வது என்பது எத்தனை பெரிய காரியம்!

இது போன்ற அறுவை சிகிச்சைகள் பலவற்றை அரசாங்கப் பெரிய மருத்துவ மனையில் நிகழ்த்தி நமது நிபுணர்கள் வெற்றி பல கண்டுள்ளார்கள். ஆனால் இந்தக் குறுகிய நேரத்தில் இருதயத்தின் மேல் பாகத்தில் உள்ள அறைகளின் ஓட்டைகளைச் செப்பனிடுவதோ அல்லது நுரையீரல் தமனிகளின் ஒருமுக வால்வுகளைப் பெரிதுபடுத்துதல் போன்ற சிகிச்சைகளையோ தான் செய்ய முடியும். இருதய சிகிச்சைகளைப் பற்றிப் பேசும்போது இவை சிறிய சிகிச்சைகளே! ஆனால் இவற்றைவிடப் பெரிய சிகிச்சை செய்ய வேண்டியிருந்தால் என்ன செய்வது?

**இரண்டுமணி நேரம்**

சென்னை அரசாங்கப் பெரிய மருத்துவ மனை சாதனை புரிகிறது. ''செயற்கை இருதய—சுவாச யந்திரம்'' மருத்துவ மனையில் நிறுவப்படுகிறது. இதன் உதவியால் மனித உயிரை இரண்டு அல்லது மூன்று மணிநேரம் நிறுத்தி வைக்க முடியும்.

ஆறு நிமிடத்தில் அறுவை சிகிச்சை முடிக்கவேண்டிய நிலை மாறி இரண்டு மணி நேரம் கிடைப்பது தாராளம்—ஏராளம்.

ஆபரேஷன் அறைக்குள்கொண்டு செல்லப்பட்ட நோயாளிக்கு இருதயத்தில் ஏற்பட்டுள்ள நோய் என்ன ?

அவரது இருதயத்திலே ஓட்டை விழுந்து விட்டது. அது அடைக்கப்படாவிட்டால்...? அவருக்கு என்றோ எப்பொழுதோ...? வளர்ந்து வரும் விஞ்ஞானம் மரணத்தின் சவாலை ஏற்று நிற்கிறது.

ஆபரேஷன் அறைக்குள்கொண்டு செல்லப்பட்டவருக்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம்.

உடலில் சுத்தம் செய்யப்பட வேண்டிய பகுதிகள் சுத்தம் செய்யப்படுகின்றன. மயக்க மருந்து கொடுக்கப்படுகிறது. அவர் மயக்கமடைகிறார். அறுவை சிகிச்சை மூலம் அவரது நெஞ்சு திறக்கப்படுகிறது.

அவ்வப்போது எத்தனை கண்காணிப்புகள்—சோதனைகள்.

எண்ணங்களையும் செயல்களையும் உருவாக்கி—உடலின் உள்ளத்தின் நிலைக்களனான சின்னச்சிறு இருதயம் அங்கே தெரிகிறது.

**சுத்த இரத்தம்**

மருத்துவர்கள் கண்ணும் கருத்துமாகச் செயல்புரிகிறார்கள். அங்கு 'இருதய சுவாச யந்திரம்' தயாராக இருக்கிறது. யந்திரத்தின் மூலம் நோயாளியின் இரத்தம் மேல் இருதய வலது அறையில் இருந்து குழாய்கள் மூலம் யந்திரத்துக்குள் செலுத்தப்படுகிறது. அங்கு இரத்தம் பிராணவாயுவைப் பெறுகிறது. அதாவது அசுத்த இரத்தம் அங்கு சுத்த இரத்தமாக மாறுகிறது இந்த நிகழ்ச்சி சாதாரணமாக நுரையீரலில் நிகழ்வதாகும். அடுத்தபடியாக இங்கிருந்து சுழலும் குழாய்கள் வழியாக சுத்த இரத்தம் நோயாளியின் தொடையில் உள்ள தமனியின் வாயிலாக உடலுக்குள் செலுத்தப்படுகிறது.

இப்போது நோயாளியின் இருதயம் வேலை செய்யவில்லை. இருதயத்தின் வேலையை யந்திரம் செய்கிறது. அறுவை சிகிச்சைக்கு இப்

## எழுத்துப் பிழை!

**எங்கள் எண்ணத்தில் பிழை இருக்கிறதா என்று பாருங்கள்; அதை விட்டுவிட்டு எழுத்தில் பிழை இருக்கிறதா என்று தேடிப் பார்க்காதீர்கள்.**

**ஏழைகள் வாழவேண்டும்; எரியாத குடிசை வேண்டும்; வயிறார உணவு, மானமாரத் துணி; அறிவாரக் கல்வி இவைகளைத் தரவேண்டும்; உழைப்பதற்கு வாய்ப்பும்; உழைப்பதற்கேற்ற ஊதியமும் வேண்டும் என்று எண்ணுகின்ற எங்கள் எண்ணத்தில் என்ன குறை காணுகின்றீர்கள்?**

**குறிப்பிட்டுக் கோடிட்டுக் காட்டுங்கள்; குறைகளைக் களைகிறோம்!**

—பேரறிஞர் அண்ணா



போது மனித இருதயம் தயாராகிறது.

கவனத்திற்கும் கண்காணிப்புக்கும் இடையே அறுவை சிகிச்சை நடக்கிறது.

சென்னை அரசாங்க மருத்துவ மனையின் வரலாற்றில் முதல் முறையாகச் 'செயற்கை இருதய சுவாச யந்திர'த்தின் துணை கொண்டு மனித இருதயத்தில் உள்ள ஓட்டை அடைக்கப்பட்டது. குறிப்பிட்ட கால எல்லைக்குள் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிவடைகிறது.

யந்திர இருதயத்தைப் பற்றி மேற்போக்காகச் சொல்லிவிடுவது எளிது. ஆனால் நடைமுறையில் இது அவ்வளவு சுலபமான வேலை அல்ல. இதில் பல இடர்ப்பாடுகள் உண்டு. ஒரு நபருக்கு 8 முதல் 10 புட்டிகள் சுத்த இரத்தம் தேவைப்படுகிறது. இந்த இரத்தம் செயற்கைக் குழாய்கள், அறைகள், பில்டர் குழாய்கள் வழியாகச் செல்லும்போது இரத்தத்தின் சிவப்பு அணுக்கள் உடைந்து விடுகின்றன. வேறு மாறுதல்களும் நடந்துவிடுகின்றன. சில சமயங்களில் இரத்தம் உறைந்து விடுவதும் உண்டு. இந்த மாற்றங்கள் மனித உயிருக்கே ஆபத்து விளைவித்து விடலாம். எச்சரிக்கையுடன் அறுவை சிகிச்சை முடிக்கப்படுகிறது.

ஆபரேஷன் அறையில் இருந்து நோயாளி வெளியில் கொண்டு வரப்பட்டுத் தனி அறையில் வைக்கப்படுகிறார். மருத்துவர்கள் 24 மணி நேரமும் அவரைக் கண்ணும்கருத்துமாகக் கண்காணிக்கிறார்கள்.

நேரம் ஓடுகிறது.

அறுவை சிகிச்சை நடத்திய தலைமை மருத்துவர் தனது உதவியாளர்கள் சூழச் சிகிச்சை பெற்றவரைப் பரிசோதிக்கிறார்.

அவர் மெல்லக் கண் விழித்துச் சுற்றுமுற்றும் பார்க்கிறார்.

சுற்றிலும் மருத்துவர்கள், சற்றுத் தள்ளினாற்போல் உற்றார் உறவினர்கள்.

நினைவு திரும்புகிறது.

மெல்லப் புன்னகை பூக்கிறார்! தலைமை மருத்துவரும் புன்னகை பூக்கிறார்!

''இனிக் கவலை இல்லை''—தலைமை மருத்துவர் கூறுகிறார்.



பெற்றோரும் மற்றோரும் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

ஓரே ஒரு இதயம் மறு பிறப்பு எடுக்கிறது. அதைச் சுற்றியுள்ள பல இதயங்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கின்றன.

மருத்துவ மனையின் ''இருதய—சுவாச யந்திரம்'' கடமையை முடித்த முறையில் சற்று இளைப்பாறுகிறது.

**உலகம் சுற்றும் சிலந்தி!**

**சிலந்தி பின்னிய வலையின் மெல்லிய இழைகள் ஒரு பவுண்டு கிடைத்தால் அவற்றைக் கொண்டு உலகையே ஒரு சுற்றுச் சுற்றி விடலாம்!**



இத்தாலியர்களைப் பார்க்கும்போது அவர்கள் தங்கள் பாரம்பரியப் பெருமை குன்றாது வாழ விரும்புகின்றவர்களாகத் தெரிகின்றார்கள்.

சுவிட்சர்லாந்து நாட்டுக்காரர்களைச் சந்திக்கும்போது ஒரு நடுநிலைப் போக்கோடு முன்னேறுவதில் நாட்டமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

பிரஞ்சுக்காரர்களோ நேர்மையாகப் பாடுபட வேண்டுமென்ற நோக்கம் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள்.

பிரிட்டிஷ்காரர்களை நெருங்கும்போது உழைப்பும் சுயகௌரவமும் மிக்கவர்களாகத் தோன்றுகிறார்கள்.

• ஜெர்மானியரை அணுகும்போது மற்ற நாட்டினரைவிட முன்னேற வேண்டுமென்பதில் அக்கறை கொண்ட கடினமான உழைப்பாளிகளாக விளங்குகிறார்கள்.

**—அமைச்சர் வேழவேந்தன்.**




# GOING PLACES?



*Just ring us up and leave the rest to us till you're on board.*

**Wherever you go, whatever the purpose — business, pleasure, cultural, or educational — we are here to serve you to your full satisfaction. You don't have to worry about anything except to dial us and tell us what you need.**

**KUWAIT for comfortable, care-free travel.**

**WORLDWINGS**

**—GSA *KUWAIT AIRWAYS***

**7-A, GREAMES ROAD, MADRAS-6.**

PHONE: 88729, 82276, 81246 TELEX: MS 671

*Branches at:* **BANGALORE,** 51943 **HYDERABAD,** 32610 **COIMBATORE,** 33959 **COCHIN,** 32682 **MANGALORE,** 7159

TELEPHONE: **MADURAI** 27227 **& TRIVANDRUM** 3994



# மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு

சங்கம் வளர்த்த தமிழின் சிறப்பினைக் குன்றாத இளமையும் மாளாத வளமும் பெற்ற தமிழ் மொழியின் வெற்றியினை ஆராயப் பன்னாட்டுப் பேரறிஞர்கள் கூடும் மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு, பிரெஞ்சு நாட்டின் தலைநகராம் பாரிசில் 1970 ஜூலை 15லிருந்து 18 வரை நடைபெறுகின்றது. பேராசிரியர் பிலியோசா அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்குகிறார். தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி மாநாட்டை ஆரம்பித்து வைக்கிறார்.

தமிழகத்திலிருந்து, நிதியமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தலைமையில் 18 பேர்கள்கொண்ட குழு மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டில் பங்கு கொள்ளுகின்றது. குழுவில் மற்ற உறுப்பினர்கள்:

திரு. பி. ஜி. கருத்திருமன், திரு ம. பொ. சிவஞானம், திரு. என். டி. சுந்தரவடிவேலு, திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்; திரு சா. கணேசன்; திரு. கா. அப்பாதுரையார்; திரு. கி. வா ஜகன்னாதன்; திரு. ஏ. சுப்பையா, திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார்; திரு. வி. ஐ. சுப்பிரமணியம்; திரு எஸ். மகாராஜன்; திரு. அகஸ்திய லிங்கம் பிள்ளை; திரு. ஐ. மகாதேவன்; திரு. எஸ். நாகசாமி; திரு. கே. வெங்கட சுப்பிரமணியம்; அத்துடன் புதுவை முதல்வர் திரு. ஃபரூக் மரைக்காயர் அவர்கள்.

தமிழ் மொழி இயல் ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவிப்பதற்காகத் தோன்றியதும், 'யுனெஸ்கோ' உதவி பெற்றதுமான பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு பணி என்ற முறையில் இம்மாநாடு நடத்தப்படுகின்றது. முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் 1966ஆம் ஆண்டிலும், இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னை மாநகரில் 1968 ஆம் ஆண்டிலும் சிறப்பாக நடைபெற்றன. மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு பாரிசில் கூடுவதன் மூலம் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் உலகளாவிய தன்மையை எடுத்துக் காட்ட வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்துடன் திராவிடக் கலாச்சாரத்தின் ஒரு செம்பாகமாகத் தமிழ் மொழி இயல் குறித்துத் தெரியவந்துள்ள விவரங்கள் அனைத்தையும் ஐரோப்பிய மொழி ஆராய்ச்சியாளர்கள் அறிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும். நான்காவது உலகத் தமிழ் மாநாடு 1973 ஜனவரியில் இலங்கையில் நடைபெறும்.

பாரிசில் நடக்கும் உலகத் தமிழ் மாநாட்டில் 39 நாடுகளைச் சேர்ந்த சுமார் 200 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 60 பல்கலைக் கழகங்களையும் உயர்தரக் கல்வி நிறுவனங்களையும் சார்ந்த பேரறிஞர்கள் மாநாட்டில் பங்கு பெறுகிறார்கள். பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், மாரிஷஸ் தீவு, மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங் ஜப்பான், கனடா, ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் குறிப்பிடத்தக்க அளவில் கலந்துகொள்கிறார்கள். பல்வேறு நாடுகளின் தூதுவர்கள், தமிழ் அல்லாத வேறு துறைகளைச்சேர்ந்த ஆராய்ச்சி வல்லுநர்கள் ஆகியோரும் பங்கு பெறுவர்.

'யுனெஸ்கோ' துணை இயக்குநர் டாக்டர் ஆதி சேஷையா, 'யுனெஸ்கோ' தலைமை நிலையத்தில் தமிழ் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஒரு விருந்தளிப்பார். அதனைத் தொடர்ந்து தமிழ் முறை நாட்டிய நிகழ்ச்சிக்கு அயல் நாட்டுத் தூதுவர்கள், அதிகாரிகள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.



உலகத் தமிழ் மாநாட்டுக்குச் செல்லும் தமிழ் நாடு நிதியமைச்சருக்கும் புதுவை முதல்வருக்கும் விமான நிலையத்தில் வழியனுப்புவிழா!

உலகெங்கும் ஆங்காங்கே உள்ள தமிழ் பேசும் மக்களுடன், பிரெஞ்சு நாட்டின் உறவுகள் தொடர்புகளை நினைவு கொள்ள இந்த மாநாடு ஒரு வாய்ப்பாக அமையும். தென்னிந்தியா, மலேயா, இலங்கை முதலிய நாடுகளில் கல்வி வளர்ச்சிக்கும் மொழி இயல் ஆராய்ச்சிக்கும் பிரெஞ்சு மிஷனரிகளும் பேராசிரியர்களும் ஆற்றிய பணிகளை நினைவு கூர்வதற்கும் இது பயன்படும்.

ஒரு இந்திய மொழி ஆராய்ச்சி சம்பந்தமாக மேற்கு நாடு ஒன்றில் உலக மாநாடு கூடுவது இதுவே முதல் தடவை. சென்னை மாநகரில் தமிழ் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தும் திட்டத்தையும் இம் மாநாடு ஆராயும்.

---

# சாதனைகளை விளக்க...



E. P. ராயப்பா
தலைமைச் செயலாளர்

'தமிழரசு' என்ற பெயரைத் தாங்கி வரும் இந்த ஏடு, அரசின் பல்வேறு துறைகளிலிருந்து தனித் தனியே வெளியிடப்பட்டு வந்த இதழ்களின் இணைப்பு வெளியீடாகும்; சாதாரண ஏழைகளின் ஏற்றத்தினை இதயத்தில் ஏந்தி நிற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் எண்ணத்தில் பூத்த மலராகும். இந்த யுகமே சாதாரணமானவர்கள் என்று கருதப்படுகிற ஏழைகளின் அசாதாரண சக்தியினைக் காட்டும் மக்களாட்சி யுகமாகும். அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் சாதாரண மக்கள் அறிந்து கொள்வது மக்களாட்சி அமைப்பின் இன்றியமையாத தேவையாகும். ஆகவே, ஏழைகளின் நலனுக்காக அரசு தீட்டியுள்ள திட்டங்கள், ஆற்றியுள்ள சாதனைகள், அரசின் கொள்கைகள் ஆகியவற்றைப் பொதுமக்களுக்கு விளக்கிக் காட்டி, அவர்களின் கருத்தினை அறிந்து, ஒத்துழைப்பையும் பெறும் வகையில் செயற்பட்டு, தமிழக அரசின் நீண்டகாலத் தேவையினை நிறைவேற்றும் என்று நம்புகிறேன். எல்லோரும் இதனை வாங்கிப் பயன்பெற வேண்டும் என்பதற்காகவே குறைந்த விலையில் வெளியிடப்படுகிறது.

இந்த ஏடு நாளும் வளர்ந்து மக்களிடம் விரைந்து பரவி செல்வாக்குப் பெறும் என்று திடமாக நம்புகிறேன். இதழின் வெற்றிக்கு எனது

## பொன்னேடு


அன்று
சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு எதிர்ப்பு-சொத்து கிடைக்காத நிலை.
இன்று
சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லும் என்ற நிலை.
அன்று
பேருந்து உரிமையாளர்களே பெருந்தனக்காரர்கள் என்ற நிலை.
இன்று
75 மைலுக்கு மேற்பட்ட பேருந்துத் தடங்கள் அரசு உடைமையாயின.
அன்று
புஞ்சை நிலத்துக்கும் வரி வசூலிக்கப்பட்டது.
இன்று
புஞ்சை நிலத்துக்கு வரி நீக்கம் செய்யப்பட்டது!
அன்று
குடி தண்ணீருக்கும் 'கியூ' நின்ற கொடுமை.
இன்று
சென்னைக்கு மட்டுமின்றி வழியிலுள்ள ஊர்களுக்கும் காவிரி நீர்.


கைவண்ணப் பொருள்களின்
களஞ்சியம்
குறளகம்
கதர்-கைத்தொழில் அங்காடி
தொலைபேசி எண்கள்: 26762-21552-21553
கண்கவரும் பட்டுப்புடவைகள், கதர்த்துணிகள், பொன்னாடை, திரைச்சேலைகள், மெத்தை, தலையணைகள், சந்தனம், தந்தம், கொம்புச்சாமான்கள், செம்பு, பித்தளை, வெள்ளியிலான பரிசுப் பொருள்கள், பலவித தோல்-பொருள்கள், பனைபொருள்கள், மண்பாண்டம், எண்ணெய்
எல்லாம் உண்டு
தமிழகத் தலைநகருக்கு வருவோர் தவறாது காணவேண்டிய இடம்!
உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்

# இவர்கள் எதிர்கால இன்பத்திற்கு



தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்திற்கு நீங்கள் வழங்கும் ஒவ்வொரு ரூபாயும் இவர்களின் மகிழ்ச்சிக்கு அள்ளித் தருவதாகும் ... எதிர்காலத்தை நோக்கியுள்ள இளஞ்சிறுர்களுக்கு நல்ல ஆரோக்கியம், கல்வி மற்றும் வீடுகள் உருவாக அந்தப் பணம் அரசாங்கத் திட்டங்களில் முதலீடு செய்யப்படுகிறது. அத்துடன் நீங்கள் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாய்க்கும், அதிகபட்ச எண்ணிக்கையுள்ள பரிசுகளை அடைவதற்கு மகத்தான வாய்ப்பு இருக்கிறது என்பதையும் மறந்துவிட வேண்டாம்.

2.6.71

அடுத்த குலுக்கலுக்கான பரிசுகளின் மொத்தத் தொகை : **ரூ. 17,50,000**

ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு : **ரூ. 1,00,000**

## குலுக்கல் தேதி: 25-7-1970

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இதுவரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள் = 172 பேர்

**பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது.**
**ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!**

**இன்றே வாங்குங்கள்**
**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

செலவு ஒரு ரூபாய்




வரவோ லட்ச ரூபாய்

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9









# தமிழரசு

மலர் 1   1970 ஆகஸ்டு 16   இதழ் 4

Spare copies 2

TAMIL NADU ARCHIVES LIBRARY 25 SEP 1970 MADRAS-8

## இந்த இதழில்


முதல்வர் எழுதும் தொடர் கட்டுரை

இனியவை இருபது

விடுதலைத் திருநாள்

ஒரு துப்பறியும் கதை

அறுபதாம் கல்யாணம்

அமெரிக்கா போகும் நுங்கு

எல்லாம் அவனுக்காக

ஆவணக் காவியம்

மேலே வானம் கீழே பூமி

விளக்கெண்ணெய் விடாளா இந்திரனுக்கு

பிஞ்சுகளைப் பேணிக் காத்திட

ஆவணி பிறந்தது

இசைத் தேன் ஊறும் திருவையாறு

பூங்காவில் பாம்பு

தேனே தேனே

மற்றும்

கதை, கவிதை, கார்ட்டூன்,

வண்ணப்படங்கள், மகளிர் பகுதி

வழக்கம்போல் அனைத்தும் உண்டு


முகப்பில்..
பாரீசில் 3-ம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற காலேஜ்-டி பிரான்ஸ் கட்டடத்தின் வெளிப்புறத்தில், காம்போலன் சிலை அருகே.



# விடுதலைத் திருநாள்

"இன்று நாம் நடத்திடும் திருநாள்-சுதந்திரவிழா-இங்குள்ள நம்மால் மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள பல்வேறு நாட்டினராலும் போற்றப்படும் பொன்னுளாகும்.

இன்று ஆகஸ்டு பதினைந்தாம் நாள்-ஆங்கில நாட்டின்ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்று, சுதந்திரக் கொடியினைப் பெருமிதத்துடன் ஏற்றிடும் நன்னுள்-தன்னரசு பெற்ற நாள்-உரிமைப் போரிலே வெற்றி கண்டநாள் என்று பாராட்டுவர்: பாராட்டுகின்றனர்.

வரலாற்று ஏடுகளிலே, இந்நாள் தனிச் சிறப்பையளிக்கும் நாளாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நாள் திருநாள்-ஐயமில்லை; இந்நாள் பொன்னுள்-மறுப்பார் இல்லை; இந்நாள் நமது உரிமையை உலகு ஒப்புக்கொண்டு விட்டது என்பதனை அறிவிக்கும் நாள்-அறிகிறோம்; அக மகிழ்ச்சி பெறுகிறோம்.

அடிமைத்தளைகளை அகற்றி, அன்னிய அரசு அகற்றி, ஆதிக்கத்தினை அகற்றி, நம்மை நாமே ஆண்டுகொள்ளும் உரிமை பெற்றிட எவரெவர் என்னென்ன முறையில் தொண்டாற்றினர்; எத்தகைய இன்னல்களையும் இழப்புக்களையும் ஏற்றனர்; இன்னுயிர் ஈந்தனர் என்பது பற்றிய நினைவு நெஞ்சத்தில் நிரம்பி, அம் மாவீரர்கட்கு வீரவணக்கம் செலுத்திடவேண்டும் என்ற உணர்ச்சியைத் தருவதுடன், அத்தகைய வீரர்கள் வழி வழி வந்தோர் நாம் என்ற எழுச்சிமிக்க உணர்வைக் கொடுத்திடும் நாள், இந்த ஆகஸ்டு பதினைந்து.

'இழந்த அரசையாவது, இவர்கள் மீட்பதாவது-இவர்களுக்கு ஏது அதற்கான ஆற்றல்-இவர்களாவது ஒன்றுபட்டு நம்மை எதிர்ப்பதாவது' என்று ஏகாதிபத்தியவாதிகள் எக்காளமிட்டனர். வேட்டுக் கேட்டதும் விடுதலை வீரர்கள் மிரண்டோடுவர் ; சிறை என்றதும் சிந்தை குழம்புவர் என்று எண்ணினர்.

ஆனால் வீரக்கனல் கொழுந்துவிட்டு எரிந்தது. உரிமைக் கிளர்ச்சி புயலாக வடிவமெடுத்தது. கூனிக்கிடந்தோன் நிமிர்ந்து நின்றுன்! விழி பழுதாகிக் கிடந்தவனுக்கும் கண்களிலே ஒரு புத்தொளி கிளம்பிற்று. அச்சம் அழிந்தது. ஆணவபுரியினர், ஒரு புதிய நாடு எழுந்து நிற்பதனைக் கண்டனர்.

''எதற்கும் அஞ்சப் போவதில்லை, எதிர்த்துத் தாக்கப்போவதில்லை, எம்மை வாட்டி வதைத்திடினும் தாங்கிக்கொள்வோம், எமது நாடு எமக்கே, எமது அரசு எமக்காதல் வேண்டும் என்ற முழக்கம், எம்மை அடக்க வரும் பீரங்கிச் சத்தத்தையும் அடக்கிடும்'' என்று வீரர் கூறினர்—'இதுவா இந்தியா?'' என்று ஆங்கிலர் கேட்டனர்.

' ஆம். இது விழிப்புற்ற இந்தியா, வீறு கொண்டு எழுந்துவிட்ட இந்தியா, விடுதலையைப்பெற்றிட எந்த விலையையும் தந்திடத் துணிந்து நிற்கும் தூய்மை நிறைந்த நாடு' என்று உலக உத்தமர் காந்தியார் உரைத்தார்: இந்நாள், அவர் அந்நாளில் காட்டிய அறநெறியால் கிடைத்த திருநாளாகும்.

இந்நாள், நமக்கெல்லாம் அந்நாள் நிகழ்ச்சிகளை நினைவிலே கொண்டு வந்து பாடம் கற்பித்திடும் நாளாகும். இந்நாள் வந்திடின், நாடு என்னென்ன வண்ணம் பெற்றிடும், ஏற்றம் பெற்றிடும் என்றெல்லாம் விடுதலை வீரர்கள் அன்று எண்ணினர் என்பதனை இன்று எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

வந்தது சுதந்திரம். வாழ்கின்றோம்—நம்மை நாமே ஆள்கின்றோம் என்ற உரிமையுடன். ஆனால், ''வாழ்கின்றோமா?'' நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இது. வாழ்கின்றோமா?

வாழ்கின்றோம் என்பதற்கும், இருக்கின்றோம் என்பதற்கும், பொருள் வேறுபாடு மிகுதி... நம்மிலே மிகப் பெரும்பாலோர் இன்று, 'ஏதோ இருக்கின்றோம்' என்று கூறிடும் நிலையிலே உள்ளோம்; 'வாழ்கின்றோம்' என்று மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ளும் நிலையில் அல்ல.

பட்டொளி வீசிப் பறந்திடும் சுதந்திரக் கொடியினைக் காணுகின்றோம், இன்னிசை கேட்கின்றோம். அணிவகுப்புக்கள் நடத்துகின்றோம், அவனிக்கு அறிவிக்கின்றோம் — இது எமது சுதந்திரநாள் என்று. ஆனால் வாழ்கின்றோமா...? வாழ்வு நல்வாழ்வாக, புது வாழ்வாக, முழு வாழ்வாக மலர்ந்திருக்கிறதா?

ஏழ்மையும் அறியாமையும் ஒழிந்த நிலையே, வாழ்கின்றோம் என்று கூறிட நாம் உரிமை பெறும் நாளாகும்.

இல்லாமையும் போதாமையும் ஒழிந்த நாளே, நாம் வாழ்வு பெற்றிடும் புதுநாளாகும்.

பேதமும் பிளவும் நீங்கி எல்லோரும் ஒன்று என்ற நிலை பிறந்திடும் நாளே, வாழ்விலோர் திருநாள். பிறரைத் தாழ்த்தாமல், பிறர் தாள் விழாமல்; சுரண்டாமல், சுரண்டப்படாமல்; உழைத்து, உழைப்பின் பயனைப் பெற்று; புன்னகை பூத்திடும் முகத்தினராகிடும் நாளே, நாம் வாழ்கின்றோம் என்று கூறிடும் நிலையினை நமக்கு அளித்திட முடியும்.

இந்நிலையை நாம் அடையும் வரையில், 'இருக்கின்றோம்' என்று மட்டுமே கூறிக்கொள்ள முடியும்; 'வாழ்கின்றோம்' என்று கூறிக்கொள்ளும் உரிமை நமக்கு இல்லை.

விடுதலை பெற்ற நாடுகள், வாழ்வது மட்டுமல்ல, பிற நாடுகளை வாழவைக்கவும் வல்லமையும் வசதியும் பெற்றுள்ளன. காணுகின்றோம் நாம். வாழ்வின் இலக்கணத்தை நாடி நடை போடுகின்றோம்.

ஆகஸ்டு பதினைந்து என்னும் விடுதலைத் திருநாள் மகிழ்ச்சி, எழுச்சி, வீர உணர்ச்சி ஆகியவைகளைத் துவக்கத்தில் தந்திட உதவிற்று. ஆண்டு இருபதைக் கடந்து விட்டோம். இன்றைய ஆகஸ்டு பதினைந்து, நமக்குப் பொறுப்புணர்ச்சிகளைத் தந்திடும் நாளாகிறது. ''சுயராஜ்யம் பெற்றிடுவோம், சுயராஜ்யம் அமைத்திடுவோம்'' என்று சூள் உரைத்தோமே, அதற்கான முயற்சியிலே முனைந்து நிற்கிறோமா, யாது செய்திடின் அந்த இலட்சியத்தை அடைய முடியும்—என்பது பற்றி எண்ணிச் செயலாற்றிடும் பொறுப்புணர்ச்சியைத் தந்திடும் நாள், இன்றைய ஆகஸ்டு பதினைந்து.

# கணக்குத் தீர்த்த நாள்!



ஆண்டுக்காண்டு விழா நடத்துகின்றோம். விருத்தம் பாடுகின்றோம் ; வள்ளுவர் தந்த நாடு காண்பதில் வெற்றிபெற்றோமா? இது இன்றுள்ள கேள்வி.

விழா மகிழ்ச்சியைக்கெடுத்துவிடுமோ என்று அஞ்சி, இந்தக் கேள்வியினை எழுப்பாமல் விட்டுவிடுவது மிகமிகத் தவறு.

ஆயாசப்படவோ, சலிப்படையவோ, மனம் உடையவோ அல்ல, இந்தக் கேள்வியை எழுப்ப வேண்டும் என்று நான் கூறுவது. மேலும் செம்மையாகச் செயலாற்றும் உணர்வு பெற, இந்தக் கேள்வி தேவை.

இயற்கை கொஞ்சுகிறது. இல்லாமை கொட்டுகிறது—மறுப்பதற்கில்லை.

வளம் பெருகுகிறது. சிறு சிறு வளைக்குள்ளே புகுந்துகொண்டு விடுகிறது -மறைப்பதற்கில்லை.

மக்கள் தொகை பெருகுகிறது. நலிவு நெளிகிறது -ஒப்புக்கொண்டாக வேண்டும்.

இந்நாள், நாட்டின் நிலையை நாம் அறிந்திடல் வேண்டும். சுதந்திரத் திருநாள் தந்திடும் மகிழ்ச்சியுடன், விழிப்புணர்ச்சியும் இழைந்திட வேண்டும். அப்போதுதான், எதற்காகச் சுதந்திரம் பெற்றளித்தனரோ, பெரியோர்கள், அந்த நல்ல நிலையினை நாடு பெற்றிடும்; சுதந்திரத்தின் கனிச்சுவை கிடைத்திடும்.

''பாலைவனம் சோலைவனம் ஆகவேண்டும், அங்கு பசுங்கிளிகள் பாடிடவும் வேண்டும்''—இது வெறும் கவிதையாகவே என்றென்றும் இருந்திடக் கூறப்பட்டது அல்ல. செயல்படுத்திக் காட்ட முடியும் என்ற உறுதியை நாம் அனைவரும் பெற்றிடத் தரப்பட்டதே இவைபோன்ற கவிதைகள்.

மிகப்பெரிய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றிட முடிந்தது, அதற்கான ஆற்றல் நம்மிடம் இருந்திருக்கிறது. அதே ஆற்றல், இந்நாட்டிலுள்ள ஏழ்மையை



# கணக்குப் பார்க்கும் நாள் !!

யும் அறியாமையையும், பேதத்தையும் பிளவையும் போக்கிடப் பயன்பட வேண்டும் என்ற உணர்ச்சியையும் பெறவேண்டும்.

கொடி ஏற்றுபவர், கோலாகல விழா நடத்துபவர், விடுதலை வீரர்களைக் கொண்டாடுபவர்—இவர்கள் மட்டும் போதுமா, அந்த இலட்சியம் நிறைவேற?

உச்சிப்போது வந்தது கண்டும் சளைக்காமல் உழுது கொண்டிருக்கிறானே உழவன், அவனும்...

பல தொழில்களிலே ஈடுபட்டுப் பொருளை உற்பத்தி செய்கிறானே பாட்டாளி, அவனும்...

சிறார்க்கும் சிறுமியர்க்கும் அறிவுக் கண்களைத் திறந்து வைத்திடும் ஆசிரியர்கள் உள்ளனரே, அவர்களும்...

நலிவு நீக்கிடத் தொண்டாற்றுகின்றனரே மருத்துவத் துறையினர், அவர்களும்...

காட்டுவெள்ளத்தை அடக்கி, நீர்வளம் கொண்டு நிலவளம் பெருக்கி, ஊர் அமைத்து, சீர் அமைத்துத் தருகின்றனரே, பொறியியல் துறையினர், அவர்களும்...

நாட்டு நிர்வாகத்திற்கான பல்வேறு துறைகளிலே பணியாற்றுகின்றனரே அலுவலர், அவர்களும்........

இவர்களின் திறமையிலும் செயலார்வத்திலும், வெற்றியிலும் இருக்கிறது, சுதந்திரத்தின் சோபிதம்—விடுதலையின் விளைவு!

நாட்டை மீட்டிட்ட நல்லோர், அதனை இன்று எவரும் பறித்திடா வண்ணம் பாதுகாத்து நின்றிடும் போர்வீரர் ஆகியோருடன், நாட்டு நிலையை உயர்த்திட நாளும் பாடுபடும் செயல்வீரர் ஆகியவர்களுக்கு வணக்கம் கூறிட, வாழ்த்து வழங்கிட, போற்றிப் பாராட்டிட ஏற்ற நாள் இத்திருநாள்!

நாடு வாழ, நம்முடைய உழைப்பும் தேவை என்ற உணர்வு எல்லோருக்கும் எழவேண்டும்.

இவனால் என்ன ஆகும், இவனோ இதற்கு ஏற்றவன், இவனுக்கு ஏது அந்த ஆற்றல்—என்று, மறந்தும், எவரைப் பற்றியும் எண்ணிடலாகாது. அந்த எண்ணம் நாட்டு வாழ்வுக்கே ஊறு செய்திடும்.

நாம் எல்லோரும் எப்படி இருக்கிறோமோ, அப்படித்தான் நாடும் இருக்கும். இது எவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மை. நாடு என்பது வெறும் பூகோளப்படம் அல்ல, அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பு.

விடுதலை பெற்றதால் நாடு நல்வாழ்வு பெற்றிருக்கிறது என்று அவனி பாராட்டும் நிலையைக் காண நாம் என்ன செய்திட வேண்டும்; நாம் தந்திடும் காணிக்கை யாது என்பது பற்றி ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய நாள்!

களிப்படைய மட்டுமல்ல, நண்பர்களே, இது கணக்குப் பார்க்கும் நாளுமாகும். 'நாம் சுதந்திரம் பெற்ற பிறகு, நாடு வாழ்ந்திட நாம் தந்தது என்ன, இனி என்ன தர வேண்டும், எவ்வளவு தரவேண்டும்? என்ற கணக்குப் பார்த்திடும் நாள்.

முதல் ஆகஸ்டு பதினைந்து, கணக்குத் தீர்த்த நாள்–ஏகாதிபத்தியத்துக்கும் நமக்கும் இருந்து வந்த கணக்கைத் தீர்த்த நாள், புதுக்கணக்குப் போட்ட நாள்.

இருபதாண்டுகளுக்குப் பிறகு, இன்றைய ஆகஸ்டு பதினைந்து, கணக்குப் பார்க்கும் நாள்—சுதந்திரம் பெற்றபிறகு, நமது சொல்லும் செயலும் எந்த முறையில், எந்த அளவுக்கு நமக்குச் சுகவாழ்வு பெற்றளித்தது என்ற கணக்குப் பார்க்கும் நாள்.

உமது அறிவாற்றலின் துணையுடன், பெற்ற சுதந்திரம் பேணிக் காப்பாற்றப்படும் என்ற உறுதி பெறுகின்றேன்.

சுதந்திரத்தின் பலனை நல்ல அளவுக்கு நாட்டவர் அனைவரும் பெற்றிட, உழைத்திட வாரீர் என்று அழைக்கின்றேன். மனக்கண்ணால் காணுகிறேன். உறுதி படைத்த உம்மை வாழ்த்துகின்றேன்; வணங்குகின்றேன். உமது ஒப்பற்ற ஆற்றலின் துணை கொண்டு, நாடு எத்தகைய ஏற்றம் பெறப் போகிறது என்பது பற்றி எண்ணுகின்றேன். ஒரு புன்னகைப் பூந்தோட்டத்தை என் எதிரே காணுகின்றேன். எழில் மிக்கதோர் எதிர்காலம் காண்கின்றேன். அந்தப் பொற்காலம் கண்டிட, வழி அமைத்திடும் நன்னாளே இத்திருநாள்!

(பேரறிஞர் அண்ணா வானொலிப் பேச்சு)






## 2. பம்ப யத் திருநக

பம்பாய் விமான நிலையத்தில் பம்பாய்வாழ் பெருங்குடி மக்கள் எங்களை வரவேற்கக் காத்திருந்தார்கள். சிவாஜிராய் பட்டேல் என்ற மராட்டிய மாநில அமைச்சர் என்னை வரவேற்று விமானக் கூடத்திலுள்ள தங்குமிடத்திற்கு அழைத்துச் சென்றார். என்னுடன் பம்பாய் வரையில் வந்து என்னை வழியனுப்புவதற்காக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாஞ்சில் மனோகரன் அவர்களும் முரசொலி மாறனும் வந்திருந்தார்கள். ரஷ்ய நா க்குச்செல்வதற்காகப் பயணம் புறப்பட்ட சென்னை மேயர் குழுவினரும் என்னுடன்தான் வந்து பம்பாயில் இறங்கினார்கள். பம்பாயில் கட்சி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்திற்கு உடனடியாக நான் செல்லவேண்டியிருந்தது. நான் அந்தக்கூட்டத்தில் அரசியல்விஷயங்களை நிரம்பப் பேசுவேன் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் நான் வெளிநாட்டுக்குச் செல்வதுபற்றி மட்டும் பேசிவிட்டு, அன்று மராட்டிய முதல்வரின் பிறந்த நாள் என்பதால் அவருக்குப் பிறந்த நாள் வாழ்த்துக் கூறி விட்டு விமான நிலையம் வந்தேன்.

இரவு இரண்டு மணிக்கு விமானம் பம்பாயை விட்டு ரோம் நோக்கிக் கிளம்பும் என்றார்கள். அதுவரையில் ஓய்வெடுக்கலாம் என்று கண்ணயர்ந்தேன். 12 மணிக்கெல்லாம் எழுப்பி விட்டு விட்டார்கள். அதற்குப் பிறகு உடை மாற்றும் வேலை வந்துவிட்டது. கோட்டும் சூட்டும் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டேன். அந்த வேடிக்கையைப் பார்க்க பம்பாய் தோழர்கள் என் அறையில் குழுமிவிட்டார்கள். அங்கேயும் அந்தநேரத்திலும் 'மனு' கொடுப்போர் வராமல் இல்லை. திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் கிராமத்தில் ஏற்பட்டிருந்த ஒரு பிரச்சினை குறித்து மனுவைத் தந்து, அதனைத் தொடர்ந்து பெரிய விவாதமும் என்னிடம் நடத்தினார்கள். அவர்கள் பம்பாயில் வாழுகிறார்கள் என்றாலும் சொந்த ஊர்ப் பிரச்சினைக்கு என்னை வளைத்துக் கொண்டார்கள். பம்பாய் சென்றும் மனு விடவில்லை. பாரீஸ், லண்டன் சென்றும் மனு விட்டதா ? இல்லை !

அது பற்றிப் பிறகு குறிப்பிடுகிறேன். நண்பர் மனோகரன் அவர்களிடமும் மாறன், அமிர்தம், பம்பாய்வாழ் தமிழ் நண்பர்கள் அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டு ரோம் நோக்கிச் செல்லும் விமானத்தில் ஏறிக் கொண்டோம். எத்தனை மணிக்கு ரோம் போய்ச் சேரு

## முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

2



வோம் என்று கேட்டேன். காலை 6 மணிக்கு என்றார்கள். பரவாயில்லை; நாலு மணி நேரம் பயணம்தானே என்று கூறினேன். இல்லை! இல்லை! ரோம் நேரத்துக்கு ஆறுமணி—இந்திய நேரத்திற்குப் பத்தரை மணி என்றார்கள். அதாவது சுமார் ஒன்பது மணி நேரப் பயணம். விமானத்தில் ஏறிய சில நிமிடங்களுக்கு எல்லாம் வான் நோக்கிக் கிளம்பி விட்டோம். அழகிய கண்ணாடிக் கிண்ணங்களில் உயர் ரக மதுவினை நிரப்பி, விமானப் பணிப் பெண்கள் எங்களிடம் நீட்டினார்கள். நாங்கள் வேண்டாமென்று மறுத்ததைச் சற்று வியப்புடன் பார்த்துவிட்டுப், பிறகு ஆரஞ்சுப் பழ ரசம் அளித்தார்கள். அனைத்துலக நாடுகளில் பயணம் செய்யும் விமானங்களில் நமது இந்திய விமானங்களுக்கும், அவைகளின் பணிகளுக்கும் சிறப்பு மிகுந்த இடமுண்டு என்பதை நான் மேல் நாடுகளில் கேள்விப்பட்டு மகிழ்ச்சியுற்றேன் எனினும், நேரடியாகவே அதனைக் காணும் வாய்ப்பினைப் பெற்று இந்திய விமான நிறுவனம் பற்றிய நன்மதிப்பை என் உள்ளத்தில் உருவாக்கிக் கொண்டேன். நாங்கள் காலை 6 மணிக்கெல்லாம் காணப்போகிற அந்தப் பெருமை மிகு நகரைப் பற்றிய சிந்தனைகள் நெஞ்சில் அடுக்கடுக்காகஎழத்தொடங்கின.

ரோமாபுரி! இத்தாலிநாட்டின் எழில் மிகு தலைநகரம்! இத்தாலியின் தலைநகரம் என்ற நிலையில் ரோமாபுரி தன்னுடைய நூற்றாண்டுவிழாவை 1964ஆம்ஆண்டு செப்டம்பர் திங்கள் இருபதாம் நாள் வெகு சிறப்பாகக் கொண்டாடியது. அதற்கு முன்பு இத்தாலியின் தலைநகரமாக 'பிளாரன்ஸ்' இருந்தது. பிளாரன்சிலிருந்து ரோமுக்கு 1871ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாள் தலைநகர் மாற்றப்பட்டது. அந்தத் தலைநகரைக் காண நானும் ஜூலைத் திங்கள் முதல் நாளில் தான் சென்னைத் தலை நகரை விட்டுக் கிளம்பியிருக்கிறேன்.

ரோம் நகரம் நிர்மாணிக்கப்பட்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகின்றன. நகரின் எல்லை போலவும், பாதுகாப்பு அகழ் போலவும் ஓடிக்கொண்டிருக்கும் டைபர் நதியின் கரையில் நின்றுகொண்டு எதிரிகளிடம் இருந்து ரோம் நகரத்தைக் காப்பாற்றிய போர் வீரன் ஒருவனை ரோமானிய மக்கள் என்றைக்குமே மறக்க முடியாது.

ஒரேஷியஸ் என்பது அந்த ஒப்பற்ற மகாவீரனின் பெயராகும். ரோமாபுரியில் அரசன் இல்லாமல் கான்சல் என்னும் ஆட்சித் தலைவரின் கீழ் பரிபாலனம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ரோமாபுரியை ஆண்டு வந்த லூசியஸ் என்ற மன்னன் கொடுங்கோலன். அவனைவிட அவன் மகன் செக்ஸ்டஸ் என்பான் மிகக்கொடியோன். மிருகம் அனையோன். அவன் லக்ரீஷியா எனும் மங்கை நல்லாள் ஒருத்தியை மானபங்கம் செய்துவிட்டான் என்பதற்காக அந்தப் பொற்புடைப் பூவை தன்உயிரை மாய்த்துக் கொண்டாள். அந்த இளவரசனைப் பழி வாங்கவேண்டுமென்று சாகும் தறுவாயில் தன் கணவனிடமும், தாய் தந்தையரிடமும் அவள் விடுத்த வேண்டுகோள் ரோமாபுரி மக்களை உணர்ச்சி எரிமலைகளாக மாற்றியது. ரோம் நகரமே திரண்டெழுந்து மமதை பிடித்த மன்னனையும், வெறி கொண்ட அவன் மைந்தனையும் ஊரை விட்டே விரட்டியது.

பதவி இழந்தவர்கள் சும்மாயிருப்பார்களா? சிலபேர் இருப்பார்கள்; போனால் போகட்டும் போடா என்று எண்ணியவாறு! வேறு சிலரோ, எப்படியாவது இழந்த பதவியைப் பெற யார் காலிலாவது விழுந்து அபயம் கேட்பதைத் தங்கள் பதவி வெறியின் அடையாளமாகக் கொண்டிருப்பார்கள். அந்தப்பட்டியலில் முதலிடம் வகித்த லூசியஸ் மன்னனும், அவன் குமரான் கொடியோன் செக்ஸ்டசும் இத்தாலி



நாட்டில் குளூசியம் என்ற நகரத்தின் மன்னன் பார்சினா என்பவனின் படைபலத்தை நாடினர். பழைய அரசனுக்குப் பட்டம் கட்டவும், ரோம் மக்களைப் பழி வாங்கவும் பார்சினா வேந்தன் லட்சம் படை வீரர்களோடு ரோம் நகர் நோக்கிப் புறப்பட்டான். அவனது படை வரும் வழியில் நாசமாக்கப்பட்ட நகரங்கள் பல! அழிக்கப்பட்ட சிற்றூர்கள் நூற்றுக் கணக்கில்! எரிக்கப்பட்ட தானியக் கிடங்குகள் ஏராளம்! ரோம் நகருக்குள் நுழைய ஒரு வழி தான்! அது தான் டைபர் நதியின் குறுக்கே மரத்தினால் அமைக்கப்பட்டிருந்த வலிவான ஒரு பாலம். பாலத்தின் ஒரு முனையில் நகருக்கு வெளியிலேயே ஒரேஷியஸ் உருவிய வாளுடனும், உடன் இரு நண்பர்களான லார்ஷியஸ், ஹெர்மீனியஸ் ஆகியோருடனும் எதிரிகளை எதிர்பார்த்துக் காத்திருந்தான். முழங்கும் இடியோசையெனப் போர்முரசு ஒலித்துப் பளபளக்கும் வாளேந்திப் பாய்ந்து





வரும் குதிரைகளில் லட்சம் பேர் ரோமாபுரியை நோக்கி வந்தார்கள் எனினும், உருவிய போர்வாளுடன் உயிரைத் திரணமாக மதித்து நின்ற மூன்று மாவீரர்களையும் கண்டு அவர்கள் மலைத்துப்போயினர். பாலத்தைக் கடப்பதற்கு முனைந்தவர்களின் தலைகள் பனங் குலைகளைப் போல் அறுத்துத் தள்ளப்பட்டன. குதிரை மீதிருந்தவாறே பாலத்தைக் கடக்க எண்ணியவர்களின் குதிரைக் கால்கள் துண்டிக்கப்பட்டன. இறங்கிவந்து ஒரேஷியசுடன் போரிட்டவர்களின் உயிர்கள் ஓர் நொடிக்குள் பறந்து போயின.

ஆஸ்தர் எனும் ஆற்றல் மிகு வீரன் ஒருவன் எதிரிப்படையின் தளநாயகன். அவன் குதிரை விட்டுக் கீழிறங்கி ஒரேஷியசைத் தாக்கினன். கடும் போரில் ஒரேஷியசின் காலில் பெருத்த காயம் ஏற்பட்டது. குருதிவெள்ளம் பெருக்கெடுக்க ஒரேஷியஸ் ஆஸ்தரை பலங்கொண்ட மட்டும் தாக்கினன். ஆஸ்தரின் மண்டை பிளந்தது. இதற்கிடையே ரோம் நகர மக்கள், பாலத்தைத் தகர்த்து விட்டால் பகைவர்கள் டைபர் நதியைக் கடந்து உள்ளே வரமுடியாது என்று தீர்மானித்து தங்கள் பலமனைத்தையும் திரட்டிப் பாலத்தை உடைத்தெறிந்தனர். பாலம் டைபர் நதிக்குள்ளே வீழ்வதற்குள்ளாக ஒரேஷியசின் நண்பர்கள் இருவரும் பாலத்தின் வழி ஓடி டைபரின் உட்புறக் கரைக்குச் சென்றுவிட்டனர். ஆனல் ஒரேஷியசோ எதிரிகளுடன் போராடிய வேகத்தில் பின்னேக்கிப் பார்க்கத் தவறி விட்டான். ''ஓடிவா ! ஓடிவா !! ஒரேஷியஸ் !'' என்று ரோம் நகர மக்கள் போட்ட கூச்சலைக் கேட்டு அவன் திரும்பினன் எனினும், அதற்குள் பாலம் இடிந்து நொறுங்கி டைபர் நதியில் மூழ்கிப் போய்விட்டது. தனியாகச் சிக்கிக் கொண்ட அந்தத் தடந்தோள் வீரனை பார்சீனு மன்னனின் வீரர்கள் சூழ்ந்து கொண்டனர். ஒரேஷியஸ், டைபர் நதியைப் பார்த்து உரக்கக் கூவினன்.

'' ஏ, எனது அன்பு டைபர் நதியே ! என் தாய் போன்றவளே !! ரோமானியர் நாள்தோறும் உன்னை வணங்கி வழிபடுகின்றனர். இதோ இந்த ரோமானியனின் உடலை உன் மடியில் தாங்கிக்கொள்! என் உயிரையும் என் உயிரினுமினிய இந்தப் போர்க் கருவிகளையும் ஏற்றுக்கொள்!''

என்றவாறு அவன் டைபர் நதியில் குதித்து விட்டான். அய்யோ என அலறினர் ஆற்ருேரம் நின்ற ரோமாபுரி மக்கள்! அப்பாடா தொலைந்தான் எனப் பூரித்தனர் அக்கரையில் நின்ற பகைவர்கள்! ஆனல் ஆற்றில் விழுந்த அந்த இளஞ்சிங்கம் சிறிது நேரத்திற்கெல்லாம் இன்னெரு கரையில் உயிரோடு வந்து ஏறிவிட்ட அதிசயத்தை அனைவரும் கண்டனர். அவனைத் தூக்கி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். எதிரிகள் இனி ஏதும் செய்ய இயலாதெனை ஏமாந்து போயினர். ''ஒரேஷியஸ் வாழ்க! வாழ்க!!'' என இனிய கீதங்களைப் பாடி மகிழ்ந்தனர் ரோம் நாட்டு மக்கள். அந்த வெற்றி வீரனின் தீரச் செயலைப் பாராட்டாதார் இல்லை.

லட்சம் வீரர்களைக் கொண்ட பெரும் படையெடுப்பைத் தன்னுடைய வாள் முனையினல் விரட்டிக் காட்டி, ரோம் நகரத்தைக் காப்பாற்றிய அந்த வரி வேங்கைக்கு நகரின் நடுவிலே சிலை வடித்து வைத்தார்கள். அவனுக்கு அளவற்ற நிலங்களும், செல்வமும் ரோம் மக்களின் அன்புப் பரிசாக வழங்கப்பட்டன. அந்தக் காலந்தொட்டு, ரோமானியப் பெண்கள் தங்களுக்குப் பிறக்கும் ஆண்குழந்தைகள் ஒரேஷியஸைப் போல இருக்கவேண்டுமென்று ஆண்டவனிடம் வரம் கேட்பார்களாம். அத்தகைய ஆண்புலி தன்னந்தனியாக நின்று போரிட்ட களத்தைக் காணப் போகிருேம் என்பதிலும், அந்தப் போரின் போது சிந்திய ரத்தத்






துளிகளைத் தன் வெள்ளத்தோடு இணைத்துக்கொண்டு ஆவேசமாக ஓடிக்கொண்டிருந்த டைபர் நதியைப் பார்க்கப் போகிருேம் என்பதிலும் எனக்கு எவ்வளவு துடிதுடிப்பு இருந்திருக்கும். இந்த ஒரு வீரனின் அரிய சாகசத்தோடு முடிந்து விடுவதா ரோம் நாட்டு வீர வரலாற்று ஏடு? வீரர்கள் மட்டுமா?

ஓவிய விற்பன்னர்கள்!

சிற்பக் கலைஞர்கள்!

சிந்தனைச்செல்வர்கள்!

சிருங்கார ரசிகர்கள்!

அனைத்துக்கும் பேர் பெற்ற

பூமியன்ருே ரோமாபுரி!

பொழுது விடிவது போல் தோன்றும்! ரோம் வரப்போகிறது என்று எண்ணிக்கொள்வேன். அதற்குச் சிலமணித்துளிகளுக்குப் பிறகு மீண்டும் இருட்டாக இருக்கும். பம்பாயிலிருந்து ரோம் போவதற்குள் பல இடங்களில் பொழுது விடிகிறது. நான் என் கடிகாரத்தில் இந்திய நேரத்தை மாற்றவே இல்லை. இருபதுநாள் சுற்றுப் பயணத்திலும் நான் அதனை மாற்றவே இல்லை. அயல் நாட்டு ஊர்களின் மணி தெரிந்து





கொள்ளப் பக்கத்தில் இருப்பவர்களைக் கேட்டுக்கொள்வேன். இந் நேரம் சென்னையில் என்ன செய்து கொண்டிருப்பார்கள்; தூங்குவார்களா? சாப்பிடுவார்களா ? என்பதை யூகித்துக் கொள்ள என் கடிகாரத்து இந்திய நேரம் பயன் பட்டது.

மத்தியதரைக் கடலுக்குள் வடமேற்கிலிருந்து தென்கிழக்கு வரையில் சுமார் 725 மைல் தொலைவுக்குப் பரவியுள்ள இத்தாலி நாட்டின் அகலம் ஆங்காங்கு வேறுபடுகிறது. விமானத்தில் செல்லும்போதே இத்தாலியை ஒரு தீபகற்ப நாடாகக் கடல் ஆக்கியிருக்கிற காட்சியை நம்மால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது.

என் கடிகாரத்தில் மணி பத்தரை காட்டியது. அப்போது விமானப் பெண்ணின் மெல்லிய குரல் கேட்கத் தொடங்கியது. ''ரோம் நகரை நெருங்கிக்கொண் டிருக்கிருேம். இன்னும் சில நிமி டங்களில் விமானம் நிலத்தில் இறங்கும்.'' அந்தக் குரலைக் கேட்டதும் உள்ளத்தில்தான் எத்தனை ஆர்வம்! முதன் மு லாக வெளி நாட்டு மண்ணில் கால் வைக்கப் போகிருேம் என் பதில்தான் எவ்வளவு பரபரப்பு

இந்திய விமானத்திற்குரிய அடக்க உணர்ச்சியோடு விமானப் பூமியில் இறங்கியது. சரித்திரக் கதாநாயகர்கள் உலவிய வீரப் மணக்கும் மண்ணை வணங்க போகிருேம் என்ற ஆவலோடு விமானத்தை விட்டுக்கீழே இறங் கிருேம்!

(தொடரும்)

# இசைத்தேன் ஊறும் திருவையாறு



தஞ்சை மண்ணுக்குத் தனிச் சிறப்பு பல உண்டு. பண்ணும், பண்ணோடு இயைந்த பரதமும் பிறந்த இடம் அதுவன்றோ! பல இசை மேதைகளைக், கலை விற்பன்னர்களை உருவாக்கிப் பெரும் புகழ் மேவிய திருத் தலமும், அதுதான்!

காணுமிடமெல்லாம், கலையின் திருவுருவாம், கோயில்கள் சோழ மன்னர்களின் இறவாப் புகழினை உலகிற்குப் பறை சாற்றியபடி விண்ணுயர்ந்து நிற்கின்றன.

மங்கையரின் கூந்தலினை அணிவிக்கும் மலர்க்கொத்தின் பின்னல் முதல், தெருவிலே விளையாடும் சிறுவனின் தேர் போன்ற கை வண்டி வரை அத்தனை பொருட்களிலும் இன்றும் கலை வண்ணம் மிளர்கின்றன!

அதோ! வற்றாத வளம் பெருக்கும் காவிரி ஆறு! திருவையாற்றைத் தொட்டுக் கொண்டு ஓடும் காவிரியின் 'சல சல'வென்ற இனிய பண்ணோடு, தென்றலிலே மிதந்து வந்து இணைகிறது வீணைகானம்! கல்யாணி ராகத்தில், தவுலின் தாளத்தோடு, நாதசுர இசை தேனுக வந்து செவியை நனைக்கிறது.



இவ்வாறு காவிரியும், கலையும் கலக்குமிடம் தான், திருவையாற்றில் உள்ள அரசர் இசைக் கல்லூரி. அதையொட்டியுள்ளது தவுல் நாதசுரப் பயிற்சிப் பள்ளி!

மன்னர்கள் காலத்தில் சமஸ்கிருதப் பள்ளி இருந்த இந்த இடத்தில் இப்போது இசை இன்பம் வழங்கப்படுகிறது.

அரண்மனை போன்ற பெருந் தூண்களை உடைய மண்டபங்கள் நிறைந்த இந்தக் கல்லூரியில் தற்போது வீணையும், வாய்ப்பாட்டும் கற்றுத்தரப் படுகின்றன.

நான்காண்டுப் படிப்பான இதில், முதலில் இரண்டாண்டு முடிவிலும், பிறகு நான்காவது ஆண்டு முடிவிலும் பல்கலைக் கழகத் தேர்வு நடத்தப் படுகிறது. இதில் தேர்ச்சியடைபவர்களுக்கு ''சங்கீத சிரோன் மணி'' என்ற பட்டம் வழங்கப் படுகிறது. இது இசையைப்



பொறுத்தவரையில் பட்ட மேல் படிப்புப் போன்றது. இதில் படித்துத் தேறுகிறவர் கல்லூரியில் இசை விரிவுரையாளராகத் தகுதி பெறுகிறார்.

எஸ்.எஸ்.எல்.சி. படித்துத் தேறிய பெண்கள் மட்டும் இதில் சேர்க்கப்படுகின்றனர். தற்போது 34 பெண்கள் இசை பயில்கின்றனர். திருச்சி, நெல்லை, திண்டுக்கல், மதுரை, திருவில்லிபுத்தூர் போன்ற மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் இசை யார்வமுள்ள மாணவிகள் இங்கு வந்து பயிலுகின்றனர். அவர்களுக்காக விடுதி (ஹாஸ்டல்) யும் இங்கு உள்ளது. படிப்பிற்கோ, விடுதிக்கோ எந்த விதக் கட்டணமும் கிடையாது!! இதற்கான எல்லாச் செலவுகளையும் சரபோஜி மன்னர் அறக்கட்டளை (டிரஸ்ட்) ஏற்றுக் கொள்கிறது.

1965-ம் ஆண்டில் துவக்கப்பட்ட இந்த இசைக் கல்லூரியின் முதல் இரண்டாண்டு மாணவிகளும் பட்டம் பெற்று வெளியேறிவிட்டனர். முதல் ஆண்டு மாணவிகள் இருவரும் (வாய்ப்பாட்டில் பட்டம் பெற்றவர்கள்), ஒருவர் மதுரையிலும், மற்றவர் கும்பகோணத்திலும் இசை ஆசிரியைகளாகப் பணியாற்றுகிறார்கள். அடுத்த பிரிவு மாணவிகள் ஒன்பது பேர் இப்போது தான் பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர்.

தம்புராவை மீட்டியபடி ஆசிரியர் பயிற்றுவிக்க, மாணவியர் ஒரு சேர ராகத்தோடு பாடுவதைக் கேட்பவருக்குச் செவிக்கு உணவு கிடைத்த நிறைவு ஏற்படும்.

வீணையை மீட்டியபடி மயில் போல் அமர்ந்திருக்கும் மங்கையர் கூட்டத்தில், கட்டாயம் ஒரு வீணை விற்பன்னர், ஒரு தனம்மாள், தோன்றுவார் என்ற நம்பிக்கை அவர்களது இசை பாடிடும் நயனங்களில் ஒளிர்கிறது.







வாய்ப்பாட்டு வகுப்பிலே பல்வேறு வண்ணப் புடைவைகள் அணிந்த பெண்களுக்கு மத்தியில் தூய வெள்ளை ஆடையணிந்த இரு கன்னிப் பெண்டிர், (Nuns) கிறித்தவ சகோதரிகளும் உள்ளனர்.



சகோதரி ரீட்டா, சகோதரி எஸ்தர் இருவரும் தஞ்சாவூர், புனித இதயப் பள்ளியைச் சேர்ந்தவர்கள். மேனாட்டு இசை தெரிந்துள்ள அவர்கள், கர்நாடக இசையின் பால்கொண்ட தணியாத ஆர்வம் காரணமாக இங்கு சேர்ந்துள்ளனர். ''கச்சேரி செய்வதற்காக அல்ல! கடவுள் வழிபாட்டுக்காக இந்த இசையைப் பயன்படுத்துவோம்'' என்று அவர்கள் தெரிவித்தனர். ஆம்! மொழி, மதம், நாடு எல்லாவற்றையும் கடந்தது அல்லவா, இசை!

இப்படிப்பட்ட இனிய இசை தவழும் இடத்திலே ஏதோ ஒரு சோகக் களையும் தெரிந்தது. அதன் காரணத்தை விசாரித்ததில், அங்கு முதல்வராகப் பணியாற்றி வந்த இசைப் பேரறிஞர் திருவாரூர் டி. வி. நமசிவாயம் அவர்கள் அண்மையில் தமது இளம் வயதிலே மறைந்த நிகழ்ச்சிதான், இசைபயிலும் மாணவியரின் உள்ளங்களிலும், ஆசிரியர்களின் மனத்திலும் நீங்காத சோகத்தை ஏற்படுத்தியிருந்ததாகத் தெரிந்தது.

சிறுவனாக இருக்கும்போதே மேடை ஏறிப்பாடும் ஆற்றலும், ஆர்வமும் உள்ளவரும், திரைப்படங்கள், நாடகங்கள் ஆகியவற்றில் பாடி நடித்துப் புகழ் பெற்றவருமான அந்த இசைப் பேரறிஞரின் மறைவு அந்த இசைக் கல்லூரிக்கு மட்டுமன்றி இசை உலகிற்கே பேரிழப்பாகும்.

இசைக் கல்லூரியை அடுத்து உள்ளது ''தவுல்-நாதசுரப் பயிற்சிப் பள்ளி''. மூன்றாண்டுகளுக்கு முன் தோன்றிய இந்தப் பள்ளியில் இருபது மாணவர்கள் பயிலுகின்றனர். பத்துப் பேர் நாதசுரம் பயில்கின்றனர். பத்துப்பேர் தவுலில் பயிற்சி பெறுகின்றனர்.

மூன்றாண்டுப் பயிற்சியான இதற்கும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் வந்து சேர்ந்துள்ளனர். அனைவருக்கும் படிப்பு, தங்குமிடம், உணவு அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இங்கு படித்து வெளியேறியுள்ள முதல் பிரிவு மாணவர்கள் 12 பேர். இன்று கோயில் திருவிழாக்களிலும், திருமண வைபவங்களிலும், அவர்களது நாதசுரம் இன்னிசை வழங்குகிறது.

பால் வடியும் முகத்துடன் நாதசுரத்தைக் கூடத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு ஆர்வத்தோடு இசைக்கும் சிறுவனைப் பார்க்கும்போது, ஒரு திருவாவடுதுறையையோ, ஒரு காருகுறிச்சியையோ விரைவில் இந்தத் தஞ்சை மண் இசையுலகுக்கு வழங்கும் என்ற நம்பிக்கை எவர்க்கும் ஏற்படுகின்றது.



கோழையாக வாழ்வதைக் காட்டிலும், போராடிச் சாவதே மேலானது. தேசிய அகராதியில் கோழைத்தனம் என்ற சொல்லுக்கு இடமே இல்லை.

குறைபாடுகள் எனக்கு அதைரியத்தை உண்டாக்காது. அதற்குப் பதிலாக அவை என்னைப் பரிசுத்தப் படுத்தும்.

பலாத்காரத்தை அகிம்சை ஒன்றினால்தான் வெல்ல முடியும். இது பல்லாண்டுகளாகப் பெரியோர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்ட உண்மையாகும்.



# விடுதலை நாள் விழா



**கவிஞர் எஸ்.டி.சுந்தரம்**

தாரணிக்கே ஒரு காந்திமகான்—அவர்
தலைமையில் பெற்ற விடுதலையைப்
பூரணமாயினிப் போற்றியே காப்பது
புத்தியில் வல்லவர் தம் கடமை !

அண்ணா போற்றிய வீர சுதந்திரம்
அற்புதமான சரித்திரமாம்
கண்ணாய் எண்ணி நிரந்தரமாய்—இதைக்
காத்தருள் செய்வது நம் கடமை !

காலங்கருதிய ஞானியரும்—தவ
சீலம் பெருகிய மேதைகளும்
ஞாலங் கருதிடும் அன்னையரும்—உயிர்
தந்த விடுதலை காத்திடுவோம்.

செங்களத்தில் மாண்ட தியாக பரம்பரை
சேமித்த வீர விடுதலையைத்
தங்கள் சுயநலச் சந்தையிலே—சிலர்
தருமத்தையே விலை பேசுகிறார்.

மானத்தின் செல்வ விடுதலையை
மாற்றார் காலிலே ஒப்படைக்கும்
ஈனப்பிழைப்பும் பிழைப்பாமோ ! இதை
ஏனென்று கேட்பது தப்பிதமோ ?

நாட்டைப் பிறருக்குக் காட்டித்தந்தால்
நாளைக்கு நம்முயிர் வாழ்ந்திடுமா ?
வீட்டைக் கொளுத்திக் குளிர்காய்ந்தால்
வெயிலில் நிற்க நிழல் வருமா ?

கோடி உயிர்களைப் பலி கொடுத்தோம்;
கோட்டையில் ஆட்சி அமைத்து விட்டோம்!
ஆடி அசையுது அந்த விடுதலை
அன்னையைக் காப்பது நம் கடமை!

கூடியே எல்லாரும் ஓர் மனதாய்க்
கோபப்படாமலே சேர்ந்துழைப்போம்!
வாடியே ஆடும் விடுதலையை
வாழ்வினைக் காப்பது நம் கடமை!




இன்னும் ஒரிரு நிமிடங்கள் தான் இருந்தன, தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் எழும்பூர் ரயிலடியை விட்டுப் புறப்பட....

பிளாட்பாரத்தில் மக்கள் கூட்டம் அலேமோதிக் கொண்டிருந்தது.... ஊருக்குப் போவோர்; வழியனுப்ப வந்தோர்....

உலகமே இரண்டாகப் பிளந்து கிடப்பது போன்ற ஒரு பிரமை......!

ஒரே இதயக்குமுறல்..உணர்ச்சிக் கொந்தளிப்பு........வெவ்வேறு குரல்கள் வெவ்வேறு இழையில்!

''டேய்! போனதும் லெட்டர் போடு!''

''உடம்பைப் பத்திரமாய்ப் பார்த்துக்கோ....''

''காரியத்தை முடிச்சதுமே உடனே திரும்பி வந்துடு....''

இதயக் கீறல்கள் !

''அப்புறம்..சரோ!'' பேச முடியவில்லே அவளுல்! நெஞ்சை அடைக்கிறது.

புதுமணத் தம்பதிகளோ ?

அவளுக்கும் கண் கலங்குகிறது. ''உடம்பைப் பார்த்துக்குங்கோ. சீக்கிரமாத் திரும்பி வந்துடறேன்.''—தாய் வீட்டுக்குப் போகிருள் போலும்!

கைவிரல்கள் ஒன்ருெடொன்று பின்னுகின்றன!

ரயில் புறப்பட்டு விட்டது.... விரல்கள் பிரிய நேரமாகின்றது.

எழுதாத கதைகள்—எழுத்தில் ஏரு உணர்வுக் கோவைகள் எத்தனேயோ....?

ரயில் பிளாட்பாரத்தைத் தாண்டி விட்டது.

இதயங்களின் தவிப்பு........

நேரில் பார்க்கிற போது இருக்கிற, இருந்த ஆத்திரம், படபடப்பு, சற்றுக் குறைந்து.... மறுபடியும் பழைய நிலே....

அசுர வேகத்தில் நடைபோடும் நகர வாழ்வில் அதற்குமேல் முடியாதல்லவா?

கடமை அழைக்கிறதே!

நண்பனே ஊருக்கு அனுப்பி விட்டு மெள்ள மெள்ள ரயிலடியிலிருந்து தெருவில் நடை போட்டேன். ஒளி உமிழ் விளக்குகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன. ரயிலடிக்கு எதிர் வாடையில் தமிழ்நாடு ஆவணக் காப்பகக் கட்டடத்தைத் தாண்டிச் சற்று தூரம் கூடப் போயிருக்க மாட்டேன்....

''தம்பி....!''

அந்தக் கட்டடத்திலிருந்து யாரோ கைதட்டிக் கூப்பிட்டது போல் இருந்தது!

''என்னேயா கூப்பிட்டிங்க?'' கூப்பிட்டவரை நோட்டம் விட்டேன்.

முதிய வயது. காலச் சவுக்கிளுல் கன்னிப்போயிருந்தாலும் மெருகு போகவில்லே உடம்பில். வைர விழாக் கொண்டாடிய உடம்பு போலிருக்கு!

''ஆமாம் தம்பி! உங்களேத்தான் கூப்பிட்டேன். பார்த்தா படிச்ச பிள்ளேயாயிருக்கிங்க! ஒரு சங்கதி சொல்லலாம்னு....''

எனக்கும் வேலே இல்லே. ஒரு பர்லாங்கில்தான் வீடு—வீடா? என் அறை.

''தனிக்கட்டை; நண்பனும் ஊருக்குப் போயிட்டான். அறைக்குப் போய்தான் என்ன வெட்டி முறிக்கப்போறேன்....? சொல்லுங்க..கேட்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே கட்டைச் சுவரின் மீது உட்கார்ந்தேன்....

''வெத்தலே போடற பழக்கம் உண்டுங்களா தம்பி....?''

''இல்லேங்க..''

வெற்றிலேயைக் குதப்பிக் கொண்டே ஆரம்பித்தார், கதையைக், கிழவர் :—

''தம்பி! இந்தக் கட்டடத்தைத் தான் 'ஆவணக் காப்பகம்'னு கூப்பிடுவாங்க. அதாவது 'மெட்ருஸ் ரிகார்டு ஆபீசு'ன்னு முன்னே எல்லாம் கூப்பிடுவாங்க! இந்த எழும்பூர் தான், அறுபது வருடமா இங்கே தான் குடியிருப்பு. அதுக்கு முன்னுலே கோட்டையிலே இருந்தது! 1805 என்று நினேக்கிறேன்: கும்பெனிக்காரர்கள் கோட்டையிலே இருந்து ஆட்சி புரிந்து கொண்டிருந்தார்கள். வில்லியம் கேவண்டிஷ் பெண்டிக் என்று • ஒரு வெள்ளேக்கார கவர்னர். அவர்தான்....முதன் முதலிலே இந்த மாதிரி ஆவணங்களே எல்லாம் ஒரு இடத்திலே சேர்த்து வைக்கணும்கிற எண்ணத்தையே உருவாக்கினவர். கும்பெனியார் ஆட்சியிலும் அதன் பின்பும் அரசாங்க ஆவணங்கள் ஏராளமாகப் பெருகிட்டுது. அவைகளேப் பாதுகாத்து வைக்கணும்கிற அவசியம் ஏற்பட்டது. இப்படி ஓர் அலுவலகம் தேவைதான்னு செஞ்சாங்க....''

''அதாவது..இப்படி ஆவணங்களேயெல்லாம் ஓர் இடத்திலே சேர்த்து, பாதுகாத்து வைக்கனுங்கிற எண்ணம் அப்பவே வந்துட்டுதுன்னு சொல்றிங்களா?''

''பின்னே....1805-லேயே வந்துட்டுது.. அதுக்கப்புறம்.. கோட்டையிலே இருந்த இந்த அலுவலகம் இங்கே எழும்பூரிலே பெரிய கட்டடத்துக்கு வந்தது. அதாவது 1909-லே''

''அப்படியா! இங்கே வந்து 60 ஆண்டுகள் ஆயிட்டுதா? அதான் வைரவிழா அது இதுன்னு நாலு மாதத்துக்கு முன்னுலே இந்தப் பக்கத்திலே அமர்க்களப் பட்டுதா?''

''ஆமாம் தம்பி! இந்த ஆவணக்காப்பகத்தின் வைர விழாதான் அது. போன பிப்ரவரி மாதத்திலேதான் இங்கே நடந்தது. இந்த ஆவணக் காப்பகத்தைப் பற்றி என்ன நினேக்கிறே? 'ஏதோ கவர்ண்மெண்ட் ரிகார்டுகளே வச்சிருக்காங்க..வேணும்னு எடுத்துக் கொடுக்கறதுக்கு தானே இந்த அலுவலகம்'னு நீங்கள் எல்லாம் நினேக்கறீங்க.. அதல்ல தம்பி..நம்ப தமிழ்நாடு ஆவணக் காப்பகம்—உலகத்திலே உள்ள ஆவணக் காப்பகங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த ஆவணக் காப்பகங்களில் ஒன்று இது. உலகத்திலேயே சிறந்ததுன்னு நான்கைச் சொல்வாங்க....

''அமெரிக்காவிலே வாஷிங்டனில் உள்ள (1) தேசிய ஆவணக் காப்பகம் ( National Archives), (2) பொது ஆவண அலுவலகம், லண்டன் (Public Record office London) (3) பிரிட்டிஷ் மியூசியம், லண்டன் (4) தேசீய ஆவணக் காப்பகம், பாரீஸ்.

''உலகத்தில் உள்ள மிகவும் சிறப்பு வாய்ந்த இந்த நான்கு ஆவணக் காப்பங்களோடே சரி நிகர் சமானமாக நம்ப தமிழ் நாட்டு ஆவணக் காப்பகத்தையும் தாராளமாச் சொல்லலாம். அதுமட்டுமல்ல; தென்கிழக்கு ஆசியாவிலே நம்ப சென்னேயிலே உள்ள இந்தக் காப்பகம் தான் தலேசிறந்தது. வெறும் ஆவணங்கள் மட்டும் இங்கே இல்லே. நம்ம அரசாங்க அலுவலகங்களின் இருதயமே இங்கே இருக்கு. அரசு நிர்வாகத்தின் இயந்திரத்தின் அடித்தளங்கள்தான் இன்றைய ஆவணக்காப்பகத்தில் இருக்கிற கோப்புகளும், அரசுத் துறை நிபுணர்களின் எழுத்துக்களும். அவர்களுடைய, அந்த பேஞ மன்னர்களின், இதயங்கள் இங்கே பேசிக் கொண்டிருக்கின்றன. எத்தனே எத்தனேயோ உணர்ச்சிக் கோவைகள், உள்ளத்தின் படப்பிடிப்புகள், வரலாற்று உண்மைகளே அவை உள்ளடக்கிக் கொண்டுள்ளன. இலட்சோப இலட்சம் இதயங்கள் எழுத்துக்கள் மூலமாக இங்கே இந்தக் கட்டிடத்தினுள்ளே களி நடம் புரிந்து கொண்டிருக்கின்றன....

''தம்பி..அப்படி எவ்வளவு இருக்குன்னு நினேக்கிறே?.... 60 இலட்சம் கோப்புகளும், 6 இலட்சம் நூல்களும் இங்கே இருக்கு..1867-லிருந்து இந்த மாநிலத்தில் வெளியிடப்பட்ட நூல்கள் எல்லாம் இங்கே இருக்கு. இது தனி உலகம்; ஒரு கலேச் சுரங்கம்! ஆரம்பத்திலே கும்பெனியார் காலத்தில் இங்கே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தாரே ராபர்ட்கிளேவ்; அவர் கைப்பட எழுதிய ஆவணங்கள் எல்லாம் இங்கே இருக்கு. அதென்ன பிரமாதம்! கும்பெனியாருக்கு முன்னே டச்சுக்காரன் இங்கே வந்தானே, அவன் காலத்தில் டச்சுமொழியில் எழுதி வைத்த டச்சு மொழியில் உள்ள ஆவணங்கள் கூட இருக்கு தம்பி.

''கச்சத்தீவு கச்சத்தீவுன்னு பத்திரிகையிலே பிரமாதமா அடிபட்டுதே.. அந்தக் கச்சத்தீவு பற்றிய உண்மைகள் கூட இங்கே



டச்சு மொழியில் உள்ள ஆவணங்களில் இருக்கும்னு நினைக்கிறேன்....

"அரசுக்கு, அந்தக்காலத்திலும் சரி, எந்தக் காலத்திலும் சரி முக்கியமான துறையாக விளங்கும் வருவாய்த் துறை நிர்வாகம் குறித்த 'சர்வே' பற்றிய ஆவணமெல்லாம் இங்கேதான் இருக்கு. இதை உலகுக்கு எடுத்துக் காட்டியவர் மன்ரோ.. மவுண்ட் ரோடிலே குதிரைமேல் சிலையா இருக்காரே அதே மன்ரோ தான். அவர் கவர்னராயிருந்த காலத்திலே அவர்தான் 1830-லே இந்த 'சர்வே' பற்றிய ஆவணங்களையெல்லாம் ஒழுங்குபடுத்தினார்.

"இந்த ஆவணங்களையெல்லாம் காவல் துறை, வருவாய்த் துறை, நிதி நிர்வாகம், கல்வி, பொதுப் பணித்துறை என்று திருத்தி ஒழுங்குபடுத்தினார், அவருக்குப் பின்னால் வந்த ஹாரிஸ்என்பவர்.

"இதைவிட ருசிகரமான ஒரு தகவல் உனக்குச் சொல்லணும். கங்கையையும் காவிரியையும் இணைக்கணும்னு இப்ப பிரமாதமா அடிபடுதே.. அந்தத் திட்டத்தைப் பற்றிச் சிந்தித்து, 1857-லேயே அதற்கு வித்தூன்றியவர் காட்டன் என்ற வெள்ளைக்கார கவர்னர். இந்தக் கருத்தை மிகவும் தெளிவாகவும் அவர் வலியுறுத்தி உள்ளார். அந்த ஆவணங்கள் எல்லாம் இருக்கு.. சேலம் உருக்காலை இன்று நனவாகிவிட்டது. சேலம் உருக்காலை பற்றிய 'சர்வே அறிக்கை' இந்த அலுவலகத்தில் உள்ளது. அதைப் பற்றிஇங்கே 'கியூரேட்டராக'ப் பணியாற்றிய டாக்டர் பாலிகா அற்புதமான ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார்.

"அதுமட்டுமல்ல; தம்பி.. டச்சு ஆவணங்கள் இந்தியாவிலேயே வேறு எந்த ஆவணத்திலும் கிடையாது. தமிழ்நாட்டு ஆவணக் காப்பகத்தில்தான் இருக்கு....

"14-ம் நூற்றாண்டிலே ஆண்ட கர்னாடக அரசர்கள் காலத்திய ஆவணங்களும், கிழக்கிந்தியக்கம்





பெனி, மராட்டிய மன்னர்கள், போர்த்துக்கீசியர் காலம்போன்ற பழங் காலத்தைய ஆவணங்கள் தமிழ்நாட்டு ஆவணக் காப்பகத்தில் உள்ளன என்று சொன்னால் நீ நம்பமாட்டாய். தமிழ் வரலாறு பற்றி ஆதாரபூர்வமான குறிப்பேடுகள் இங்கே ஏராளமாக உள்ளன. வரலாற்று ஏடுகள் இங்கே கதை கதையாய்ச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல; நல்ல முறையில் நம்மை இந்த நாடு பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்று ஏக்கப் பெருமூச்சும் விட்டுக்கொண்டிருக்கின்றன.

"தம்பி.. கும்பெனியார்கள் வந்தார்களே.. வெள்ளைக்காரர்கள் ..அவர்கள் ஆட்சி பற்றிய 'ரிகார்டுகள்' 1670-லிருந்து இங்கே பத்திரப்படுத்தி வைக்கப் பட்டுள்ளன.

"அதுமட்டுமல்ல.. தமிழ்மொழி திணிக்கப்படுகிறது என்று கூக்குரலிடச் சில பேர் கிளம்பி இருக்கிறார்களாமே இந்தக் காலத்தில், இந்தச் செந்தமிழ் நாட்டில். ஆங்கிலேயர் வெள்ளைக்காரர்கள், அந்நியர்கள் இதைப்பற்றி அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா?

நேரமாகிவிட்டது.... போகலாமா என்ற நப்பாசை எனக்கு. இருப்பினும் சுவையான கட்டத்தில் போக மனமில்லை.... "என்ன சொல்லியிருக்கிறார்கள்? சொல்லுங்க!" என்றேன் நான்.

"அப்படிக்கேள் தம்பி! 1851-ம் வருடம் போர்டிஞ்சர் (Portinger) ஒரு கவர்னர். சென்னை கவர்னர். அப்பவெல்லாம் கிழக்காசியாவுக்கே சென்னையைத்தான் கேந்திரமாக வைத்திருந்தார்கள் வெள்ளைக்காரர்கள். அந்தப் போர்டிஞ்சர் கவர்னரின் நிர்வாக சபையிலே ஐ.எப். தாமஸ் என்று ஒரு நிர்வாக உறுப்பினர். எப்படி கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று ஓர் அறிக்கை அப்பொழுது தயாரித்தார்கள். அந்தத் தாமஸ் என்பவர்தான் தன்னுடைய குறிப்பிலே "தாய் மொழியிலேதான் படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டும்" என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னதை ஆங்கிலத்திலேயே சொல்றேன்.

'I consider therefore that instruction in the vernacular to be essential and without it a scheme of education will be most limited and partial and comparatively of little value.'

"இப்படின்னு எப்ப சொன்னார் தெரியுமா? 1851-ம் ஆண்டிலேயே! அதுவும் வெள்ளைக்காரர். அப்பக் கவர்னராயிருந்த போர்டிஞ்சரும் இதே கருத்தை வலியுறுத்தியிருக்கார் அதையும் இந்தக் காப்பகத்திலே பார்க்கலாம்.

"இப்படி என்ன என்னவோ! சொன்னால் நீண்டுகொண்டே போகும். டச்சு ரிகார்டுகள், பெர்சியின் ரிகார்டுகள், தஞ்சாவூர் ராஜ்யத்தை ஆண்ட மராட்டிய மன்னர்கள் காலத்திய ரிகார்டுகள்—"மோடி" "மோடி"ன்னு ஒரு எழுத்து வடிவம்—அந்த "மோடி" எழுத்தில் தான் இந்த மராட்டிய ரிகார்டுகள் எல்லாம் இருக்கு!

"தஞ்சாவூர் என்றதும் நினைப்பு வருது. காவிரி டெல்டா தஞ்சைத் தரணி பற்றிய நில ஆய்வு —நிலவளம் சிறப்பியல்புகள் பற்றிய குறிப்புகள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆய்வு செய்தால் எத்தனையோ உண்மைகள், எத்தனையோ விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். அத்தனையும் ஆதார பூர்வமாகக் கிடைக்கும். தேசப்படங்கள் மட்டும் ஐயாயிரத்துக்கு மேல் இருக்கின்றன.

"அரசின் தலைமைச் செயலக ஆவணங்கள், வருவாய்த்துறை வாரிய ஆவணங்கள், எல்லா அரசுப் பத்திரங்கள், பதிவேடுகள், நில அளவுத் துறை ஆவணங்கள், நீதித்துறை ஆவணங்கள் எல்லாமே இங்கு உள்ளன. புதுவை ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பு என்று கேள்விப் பட்டிருப்பாய். அந்த நாட்குறிப்பின் ஒரு பகுதியின் நகல் வடிவத்தை இங்கே காணலாம். அதெல்லாம் எதற்குத் தம்பி? சுருக்கமாகச் சொல்லப் போனா இந்தத் தமிழ்நாட்டு ஆவணக் காப்பகத்தைத் தமிழ்நாடு அரசு அலுவலகங்களின் "இதயம்" என்றே சொல்லிவிடலாம். ஆவணங்கள் இல்லாமே அரசுப் பணிகள் இயங்காதல்லவா?"

"அதெல்லாம் சரிங்க.... காப்பகம் இயங்குகின்ற நடைமுறைபற்றி ஒன்றும் சொல்லலையே?"

"மற்ற அரசு அலுவலகங்களைப் போல் இல்லை தம்பி, இந்தக் காப்பகம். இது ஓர் கலைக்கூடம். நல்ல முறையில், ஆரவாரம் இல்லாமல் ......படபடப்பு இல்லாமல் அமைதியான முறையில் பணி நடைபெற்றுக்கொண்டு வருகிறது. கட்டடத்தைப் பார்த்திருப்பாயே! பெரிய கட்டடம். இதற்கென்று ஓர் இயக்குநர் இருக்கிறார். இப்ப உள்ளவர் பெயர் திரு சிங்கராஜன். சுறுசுறுப்பான, கடமையுணர்வு மிக்க இளைஞர். அவர் தலைமையிலே இந்தக் காப்பகம் அரிமா நடை போட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டுதான் வைர விழாக் கொண்டாடியது இந்தக் காப்பகம்!





"கோப்புகள் இங்கே எழுதப் படுவதில்லை. கோப்புகளும், ஆவணங்களும் இங்கே செம்மை யான முறையில் சேகரிக்கப்பட்டு ஒழுங்கு படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. போர் முனைக்குப் பாசறை எவ்வளவு முக்கியமோ அதுபோல் அரசுப் பணிகளுக்கு இந்தக் காப்பகம் தான் பாசறை."



" இந்தக் காப்பகத்தை ஆவணப் பிரிவு (Record Section), ஆய்வுப் பிரிவு (Research Section) வெளியீட்டுப் பிரிவு (Publication Section) திட்டம், வளர்ச்சிப் பிரிவு (Planning and Development section) என்று வகைப் படுத்தலாம்.

"ஆவணங்களை ஒன்று சேர்த்து அவற்றைப் பாதுகாக்க இந்தக் காப்பகத்தில் கையாளப்படும் முறை இருக்கிறதே.. பார்த்தால் தான் தெரியும். கையில் பழைய ரிகார்டை எடுத்தால் பொடிப் பொடியாகிவிடும். அவ்வளவு பழசு! அந்தப் பழைய ஆவணங்களைப் பதப்படுத்தி, இன்னும் பல நூற்றாண்டுகளுக்குப் பயன்படும் வகையில் செப்பனிட்டுத், திருத்தி பயனுள்ளதாகச் செய்துவிடுகிறார்கள். சமுதாயத்திற்குச் செய்யும் பெரிய பணியல்லவா இது! ஒரு வகை சிபான் (Chiffon) துணியில் பழைய ஏட்டைப் பதித்து, அதற்கென்று உள்ள அமிலத்தில் போட்டுப் பின்பு எடுத்துப், பதப்படுத்தி, உறுதியான முறையில் பல ஆண்டுகள் கையாளக்கூடிய அளவுக்கு ஆவணங்களை ஆக்கிவிடுகிறார்கள். இதை Chiffon Mending என்று அழைக்கிறார்கள்.

"தம்பீ! ஒன்று சொல்ல மறந்துட்டேன்.... ருஷ்யாவிலேயிருந்து ஒரு பேராசிரியை இங்கே

வந்தார்கள். நம்ப காப்பகத்திலே ஆவணங்களைப் பாதுகாக்க, சிபான் மூலம் திருத்தக் கையாளும் முறையைப் பார்த்துவிட்டு ''டாக்கா மஸ்லின் மாதிரி அல்லவா இருக்கிறது. இந்தத் துணி; எங்க நாட்டிலும் இதை முயற்சி செய்கிறோம்'' என்று கூறி அந்தத் துணியில் ஒரு கெஜம் கேட்டு வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள்! இவ்வளவு துல்லியமான முறையில் ஆவணங்கள் சரி செய்யப்படுவதும்—பாதுகாக்கப்படுவதும் ஆசியாவிலேயே வேறு எந்த இடத்திலும் கிடையாது!

''அரசு ஆணை எது வேண்டும், எந்த ரிகார்டு வேண்டும்? உடனே கிடைக்கிறது. அரசு இயந்திரம் இயங்கக் கடையாணி மாதிரி, அடித்தளம் மாதிரி— போர் நடைபெறப் போர்க் கருவிகள் மாதிரி— இந்த ஆவணக் காப்பகம் இருக்கு தம்பீ.



''அது மட்டுமல்ல. இங்கே ஆராய்ச்சிப் பிரிவு தனியாக இருக்கு. பல வெளி நாடுகளிலிருந்து கூட ஆராய்ச்சி மாணவர்கள் இங்கே வந்து தங்கி ஆராய்ச்சி செய்து விட்டுப் போகிறார்கள். இதுபோக வெளியீட்டுப் பிரிவு வேறு இருக்கு. இப்போதுகூட பல்வேறு பொருள்களைப் பற்றி 41 நூல்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. ஆதார பூர்வமான அடிப்படைத் தகவல்களைச்—செய்திகளைச் சேகரித்து அரசின் பலதுறைகளுக்கு வரலாற்று உண்மைகளுடன் சிறப்புக் குறிப்புக்கள்—நகல்கள் எல்லாம் தயார் செய்து கொடுக்கிறார்கள். திட்டம்-வளர்ச்சிப் பிரிவு புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது..''

''அதெல்லாம் சரி. கடந்த மூன்றாண்டுகளாக என்னென்ன காரியங்கள் நடந்திருக்கு, சொல்ல முடியுமா?''

''அப்படிக் கேள்! ஆவணக் காப்பகம் முக்கியமான ஒன்று; செம்மைப் படுத்தப்பட வேண்டிய, வசதிகள் செய்து தரப்பட வேண்டிய ஒன்று என்ற கருத்து சிறப்பான முறையில் வலிவு பெற்றதே இந்த மூன்றாண்டுகளில்தான்.

''சிறப்பாகக் குறிப்பிடத்தக்க அளவுக்கு பல நல்ல காரியங்கள் இந்த மூன்றாண்டுகளில் நடைபெற்றுள்ளன. மிகவும் சிறப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஆவணக்காப்பக வளர்ச்சியை ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து விட்டதை அவசியம் குறிப்பிட வேண்டும். அரை இலட்சம் ரூபாய் செலவில் (Fumigation) புகையூட்டுக்கூடம் ஒன்றிற்கு அரசு அனுமதிவழங்கியுள்ளது. 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்ட 1971–72-க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1971–72ம்ஆண்டில் Micro-film Unit ஒன்று, இரண்டு இலட்சம் ரூபாயில் வைக்க அனுமதித்துள்ளது. Lamination இயந்திரம் வாங்க இரண்டு இலட்சம் ரூபாய் அனுமதி வழங்கியுள்ளது. பல புதிய நியமனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆவணம் பாதுகாக்கும் பிரிவு (Preservation Wing) தற்காலிகமாக இருந்ததை நிரந்தரமானதாக மாற்றியுள்ளார்கள். இதற்கெல்லாம் மேலாக மாவட்டங்களிலும், மாவட்ட அலுவலகங்கள் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஒன்று அல்லது இரண்டு மாவட்டங்களில் உடனடியாக இந்த மாவட்ட அலுவலகங்களைத் தோற்றுவிக்க ஏற்பாடாகி விட்டது. பணியாளர்களுக்குச் சீருடை வழங்கப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொன்னால் கடந்த மூன்றாண்டுகளை இந்துறையின் பொற்காலம் எனலாம்.

''இந்த அலுவலகத்தில் மிகவும் அழகான, வசதிகளுடன் கூடிய கூட்ட அரங்கு (Conference Hall) ஆராய்ச்சிப் பிரிவுக்கென்று தனியாக ஓர் அரங்கு, பொருட்காட்சி அரங்கு எல்லாம் கண்ணைக் கவரும் முறையில் உள்ளன. இது ஓர் அழகு மணிமாளிகை; கலைமணம் கமழும் அறிவுப் பெட்டகம்!

''இதை ஒரு கலைக்கூடமாக—அறிவுக்களஞ்சியமாக—சிந்தனைப் பாசறையாக மாற்ற வேண்டும். மாற்றப்பட்டு வருகிறது. வேண்டிய அரசு ஆணைகளை மட்டும் எடுத்து அனுப்புகின்ற பணி மட்டும் இங்கு நடப்பதில்லை; தமிழகத்தின் கடந்த நானூறு, ஐந்நூறு ஆண்டு வரலாறு இங்கு ஆதாரபூர்வமான முறையில் கிடைக்கிறது. ஊருக்கும் உலகுக்கும் நம்முடைய வரலாற்றுச்



செறிவு, பண்பாட்டுப் புகழினைப் பரப்பிட வேண்டும். அதற்கு நிலைக்களனாக இந்த ஆவணக் காப்பகம் உள்ளது.

''ஆவணம் காப்பதே ஒரு தனிக் கலை. நூலகப் பணிபோல் இது ஒரு தனிக்கலை. இதற்கென்று தனியாகப் பயிற்சி வேண்டும். நூலகப் பணியில் டிப்ளோமோபடிப்பு இருப்பதுபோல், மற்ற துறைகளில் டிப்ளோமா படிப்பு உள்ளதுபோல், இத்துறையிலும் டிப்ளோமா படிப்பு தனியாக இருக்க வேண்டும். இதில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களை நாம் உருவாக்க வேண்டும். ஆவணப் பாதுகாப்பு டிப்ளோமா என்று தனிப்படிப்பு இருக்க வேண்டும்.

"1867-லிருந்து இந்த மாநிலத்தில் வெளியிடப்பட்டுள்ள புத்தகங்கள் இங்கே இருக்கின்றன. வசதியற்ற நிலையில் இருக்கின்றன. அருமையான, எங்குமே கிடைக்காத புத்தகங்கள் உள்ளன. இவற்றைச் செம்மைப் படுத்தினால்—நாட்டுக்கு, ஆராய்ச்சியாளர்களுக்கு, மொழி வளர்ச்சிக்கு நல்லதொரு ஊன்றுகோலாக அமையும் என்பது உறுதி.

''இங்கே ஆய்வாளர்களுக்கு—ஆராய்ச்சி செய்பவர்கள் என்ற முறையில் உதவிச் சம்பளம் (Scholarship) வழங்கலாம். கல்வி உதவி ஏற்பாடுகள் (Fellow ships) என்று ஒன்று ஏற்படுத்தலாம். இப்படிச் செய்தால் பட்டப்பின் படிப்பு படித்த 50 பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கலாம். வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய பல்வேறு மொழியில் உள்ள ஆவணங்களை மொழி பெயர்த்துச் சிறப்புக் குறிப்புகள் தயார் செய்யலாம்.

''தமிழ்நாட்டுக்கு என்று அண்மைக்காலத்திற்குத் தனியான ஆதாரபூர்வமான வரலாற்று நூல் இல்லை. இந்த ஆவணக் காப்பகத்தில் உள்ள ஆவணங்களையும் குறிப்புகளையும் பயன்படுத்தி அதிகாரபூர்வமான வரலாற்று நூல்ஒன்று எழுதலாம்.

''இங்கேஎல்லாம் கிடைக்கிறது. பணம்தான் தேவை!...வசதிகள் செய்து கொடுத்தால்,...இந்தக் காப்பகத்தை அறிவுக் களஞ்சியமாகவே மாற்றிவிடலாம்; மாற்றிவிட முடியும். தமிழ் அரியாசனம் அமர்ந்துள்ள இப்பொற்காலத்தில் இவையெல்லாம் நிறைவேறும் என்று எதிர்பார்ப்பதில் தவறு இல்லையே!''

தன்னுடைய நீண்ட பேச்சை நிறுத்தினார் அவர்! சொற்பொழிவு மாதிரி இருந்த அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த நான் என்ன பதில்சொல்லக் கிடக்கிறது?

''எல்லாவற்றிற்கும் 'தமிழ் அரசு' இருக்கிறது..... நல்லகாரியங்கள் நடைபெறத்தானே நல்லாட்சி இருப்பது'' என்று கூறிக் கொண்டே எழுந்தேன் நான்.

தெருவில் நடமாட்டம் இல்லை. வீதி வெறிச்சோடிக் கிடந்தது. சிலமணிகளுக்கு முன்னால் இதயக் குமுறல்களின் இருப்பிடமாகிக் கிடந்த எழும்பூர் ரயிலடி, சத்தம் குறைந்து, மோன நித்திரையில் ஆழ்ந்து கிடந்தது.

''புறப்பட்டுவிட்டீர்களா தம்பி.. போய் வாங்க! ரொம்ப நன்றி!''

''வருகிறேனுங்க!'' என்று கரங்கூப்பி அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டேன்.

ஒரு பெரிய காவியத்தைப் படித்த மனநிறைவுடன் வீதியில் நடைபோட்டேன்.



சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் நாம் காட்டும் ஆர்வமும் அக்கறையும்தான் நாளைய இந்தியாவை உருவாக்கும் முயற்சியாகும்.

கூட்டுறவுத் துறை மூலம் எல்லாப் பணிகளையும் சிறப்புடன் நிறைவேற்றமுடியும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. ஆனால் அதன் வெற்றிக்கு மக்களின் முழு ஒத்துழைப்பு தேவை.

ஊராட்சிகள் பொறுப்புணர்ந்து செயல்படுவதே மாபெரும் ஜனநாயக நாடான நம் நாட்டுக்கு பெருமையைச் சேர்க்கும்.

—ஜவஹர்லால் நேரு




### குன்றின் மேல் விளக்கு.

குடத்துள் விளக்காக எரிந்து கொண்டிருந்த தமிழக அரசின் சாதனைகளைக் குன்றின் மேல் தீபமாக எரியச் செய்யும் வகையில் 'தமிழரசு' ஏடு வெளிவந்திருப்பது பாராட்டத் தக்கதாகும். தமிழக அரசின் சாதனைகளைத் தரணி அறியச் செய்ய ''தமிழரசு'' மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அத்துடன் தமிழக அரசின் சாதனைப் பிரச்சார ஏடாக இல்லாமல் கதை கட்டுரை கவிதைகளுடன் சிறப்புற வெளிவருவதால் 'தமிழரசு' வாசகர்களிடையே நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளது. 'தமிழரசு' வளர்ச்சிக்கு என் போன்ற வாசகர்களின் ஆதரவு என்றும் உண்டு என்பதைப் பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ். எஸ். மணி,
திருவனந்தபுரம்.

### தமிழ் நிலம் தகுபயன் காணும்

தமிழரசு என்னும் ஏடு
தக்கதேன் தேக்கக் கூடாம்
அமிழ்திதோ என்போம் எல்லாம்
அருமையே என்போம்-மேலும்
உமியென இருந்த ஏடே
ஒளியுமிழ் மணியாம் காண்
பேரம்.
தமிழ்நிலம் இந்த ஏட்டால்
தகுபயன் காணும் உண்மை!

புலவர் கரந்தை கணேசன்,
சென்னை-17.

### அங்கே அல்ல....இங்கே!

ஆகஸ்டு 1 'தமிழரசு' இதழில் 'தாய்க்குலத்தின் கைகளில்' என்னும் கட்டுரையில் நான், ஆஷாலதா, பாரதி, அனுசூயா ஆகிய நால்வரும் மத்திய எலக்ட்ரோ கெமிக்கல் ஆராய்ச்சிக் கழகத்தில் பணி புரிவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நாங்கள் பணி புரிவது மத்திய விஞ்ஞானக் கருவிக் கூடத்தில் (Central Seintific Instruments Organisation) தான்!

ரா. ஹேமாமாலினி,
சென்னை.

### கேள்வியும் பதிலும்

'தமிழரசு' ஏட்டில் பலவகையான கதை, கவிதை, கட்டுரை, செய்திகள் வெளியாகி ஏட்டைச் சிறப்புறச் செய்கின்றன. விவசாயத்துறைக்கு ஏற்பப் புதிதாகக் 'கேள்வி—பதில்கள்' என்ற ஒரு பகுதியை வெளியிட்டால், விவசாயிகள் பயன் பெறுவார்கள். இதனால் நாட்டுக்கும் நன்மை! ஏட்டுக்கும் பெருமை!

எஸ். கமால்—ஜி. மணி,
எள்ளேரி.

### அதிகப் படிகள் தேவை

நமது மாநில பரிசுச் சீட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவுடன் சில விற்பனையாளர்கள் அதிக விலைக்கு விற்றதுபோல் நமது 'தமிழரசு' தரும் நல் விருந்தைப் பயன்படுத்திக் கொண்டு விற்பனையாளர்கள் அதிக விலைக்கு விற்கவிடாமல் கூடுதல் பிரதிகளை விநியோகித்து நமது 'தமிழரசு' மதிப்படைந்தால் நன்று.

சண். நவநீதன்,
வத்தலக்குண்டு.

### வளர்ச்சிப் பணிக்கு உதவி

பல்வேறு துறைகளிலும் நடைபெறும் அலுவல்களைக் குறிப்பாக, வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் ஒருமுகமாக மக்கள் அறிந்து கொள்ளத் 'தமிழரசு' இதழ் உதவியாக இருக்கிறது.

இளைஞர் ஐக்கிய முன்னணி,
காயல்பட்டினம்.

### பிராவ்டா போல....!

படிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் உரிய தரமான இதழ் 'தமிழரசு'. இரஷ்யாவிலே வெளிவரும் பிராவ்டா இதழ் போலத் 'தமிழரசு'ம் மாறுமேயானால் அரசாங்கத்தைப் பற்றித் தவறான புள்ளி விவரங்களைத் தருபவர்கள் குறைவார்கள்.

ஆறு. அழகப்பன்,
சிறப்பாசிரியர், ''நாடகக் கலை''
சென்னை-14.

### என்னைக் கவர்ந்தது

'தமிழரசு' 1970 ஆகஸ்ட் 1ஆம் தேதி இதழின் முகப்பு கண்டு பூரித்துப் போனேன். திரு. போப் ஆண்டவர் அவர்களும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும் இணைந்து காட்சி அளிக்கும் தோற்றம் என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

டி. விசுவாசம்,
திண்டுக்கல்.






# அமெரிக்கா போதும் நுங்கு

நேபாளத்திலிருந்து வந்திருந்த ஒரு பார்வையாளர் சொன்னார் '' நான் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களையும் சுற்றிப் பார்த்து விட்டு வருகிறேன். ஆனால், கிராமத் தொழில்களுக்கு உரிய சரியான மதிப்புக் கொடுத்துச் சீரிய முறையில் செயல்படுத்திவருவது தமிழ் நாடு தான் '' என்று.

சென்னையில் புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த மாதவரத்திலுள்ள குமரப்பாபுரத்தில் இயங்கும் கிராமக் கைத்தொழில் கூடங்களைப் பார்த்த பின்னர்தான் அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் சோவியத் நாட்டைச் சேர்ந்த இரண்டு பேராசிரியர்கள் இந்தக் கிராமக் கைத்தொழில் கூடங்களைப் பார்க்க வந்திருந்தனர். அவர்கள் இருவரும் காந்தீயப் பொருளாதாரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பவர்கள். அன்னார் தங்களுடைய ஆராய்ச்சிக் கட்டுரைக்குத் தேவையான முழுப் பொருளும் இங்கேயே கிடைத்துவிட்டது என்று சொன்னார்களாம்.

அந்த அளவுக்கு அனைத்து நாட்டினர் கவனத்தையும் இக் கிராம கைத்தொழில் பயிற்சிக் கூடம் கவர்ந்துள்ளது.

நாலரை ஏக்கர் நிலத்தில் தான் இத்தொழிற் கூடங்கள் அமைந்திருக்கின்றன.

பனையிலிருந்து எவ்வளவு பொருள்களை இங்கே தயாரிக்கிறார்கள்!

பனஞ்சீனி ஆலை ஒரு புறத்தில் அமைந்திருக்கிறது. சுற்றியுள்ள ஒவ்வொரு இடங்களிலும் கிராமக் கைத்தொழில்கள்.

முதலில் பனம் நார் பிரிவுக்குச் செல்கிறோம். அங்கே எத்தனை எத்தனை பொருள்கள் செய்கிறார்கள்! கூடைகள், பெட்டிகள், கட்டில்கள், பைகள், நாற்காலிகள் போன்றவை மட்டுமல்ல. இப்பொழுது பிளாஸ்டிக் பொருள்களில் வந்திருக்கும் ' நவீன காலப் பொருள்கள் ' எல்லாம் அங்கே பனை நாரினால் செய்யப்பட்டுவருகின்றன.

அவைகள் எல்லாம் உரிய விளம்பரங்கள் இன்மையால் மறைக்கப்பட்டு இருக்கின்றன. என்ற எண்ணம் நம்மையறியாமல் தோன்றுகிறது.

அடுத்து, பனை வைரப் பொருள்கள் பிரிவுக்குச் செல்கிறோம்.

பனைமரம் என்பதிலிருந்து நூறு ஆண்டு ஆனவுடன் முற்றி விடுகிறது ; மற்ற மரங்களில் வைரம் உள்ளிருந்து விளைகிறது. ஆனால் பனைமரத்தில் வைரம் வெளியேயும் சோற்றுப் பாகம் உள்ளேயும் இருந்து வளர்கிறது. அதிகமாக முற்றிய பனை மரத்தில் நாலிலிருந்து ஆறு அங்குல கனம் வைரம் விளையும்.

இந்தப்பனை வைரத்தினால் எவ்வளவு அழகான பொருள்களை எல்லாம் செய்திருக்கிறார்கள்!

கைத்தடிகள், மேஜை விளக்குகள், அலங்காரப் பொருள்கள், பெட்டிகள், இப்படி பல்வகையான பொருள்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

பெண்கள் வைத்திருக்கும் 'கைப்பை' கூடப் பனை வைரப்பொருளால் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இதை அடுத்துப் பனைப் பத்தலிலிருந்து தும்பு அகற்றும் பிரிவு உள்ளது. வீடு, தொழிற் கூடங்கள் முதலியவைகளைக் கழுவும் "பிரஷ்" இங்கே செய்யப்படுகிறது. இங்கே எடுக்கப்படும் 'தும்பு'களை பிரஷ் செய்வதற்காக அமெரிக்கா வாங்குகிறது.

தமிழ் நாட்டிலிருந்து 25 லட்சம் முதல் 30 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பனைத் தும்புகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்ற தகவல் நமக்குக் கிடைக்கிறது.

பதநீரைக் காய்ச்சிப் பனங்கற்கண்டு தயாரிக்கிறார்கள். பழையகால முறைகளை மாற்றிப் புதிய முறைகளில் தயாரிக்கிறார்கள்.

பனஞ்சீனியால் இஞ்சி மிட்டாய், பால் மிட்டாய், முந்திரி மிட்டாய், ஆரஞ்சு மிட்டாய் முதலியவைகள் தயாரிக்கிறார்கள். விரைவில் லட்டுகூட தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

பெரிய நிறுவனங்கள் தயாரிக்கும் தரமான மிட்டாய்களுக்கு இணையாக உள்ளன இவை.



கிராமப் பகுதிகளில் வாழும் சிறுவர் சிறுமியர்களுக்கு ஓய்வு நேரத்தில் ஊதியம் தருவதாக இத்தொழில் அமைந்துள்ளது.

இப்பகுதியில் வாழும் சிறுவர் சிறுமியர்கள் ஓய்வு நேரத்தில் மிட்டாய் மீது காகிதம் சுற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். கிராமப்பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றத்தைவிடப் பிஞ்சு உள்ளங்களில் சின்னஞ்சிறிய பருவத்திலேயே உழைக்கும் மனப்பான்மை வளர்க்கப்படுவது போற்றுதற்குரியதாகும்.

பெரிய தொழிற் கூடங்களில் பெரும் பெரும் இயந்திரங்களினால் செய்யப்படும் மிட்டாய் தொழிலை இங்கே சிறிய இயந்திரங்களை வைத்துச் செய்கிறார்கள்.

இதன் பக்கத்திலே இருக்கிறது, பழங்களிலிருந்து சுவையான பானப் பொருள்களைத் தயாரிக்கும் பகுதி.

கிராமப் புறங்களில் அந்தந்தப் பருவங்களில் விளையும் பழங்களைக் கொண்டு "பழப் பச்சடிகள்" செய்து டின்களில் அடைத்து அனுப்புகிறார்கள். பழச்சாறுகளிலிருந்து சர்பத் செய்யப்படுகிறது. இவை அனைத்துக்கும் பனஞ் சீனிதான் பயன்படுத்தப்படுகிறது.

இங்கு புதியதாகத் திட்டமிடப்பட்டுத் தயாரிக்கப்பட்டு வருகிற தொழில்தான் நுங்குகளை வெளிநாட்டுக்கு அனுப்புவது.





பனஞ்சுளையைப் பதப்படுத்திக் காற்றுப்புகாத டின்களில் அடைத்து அயல்நாட்டுக்கு அனுப்பும் முயற்சி வெற்றி பெற்றுள்ளது.

டப்பாவில் அடைக்கப்பட்டிருக்கும் இந்த நுங்கைச் சுவைத்த அமெரிக்கர் சிலர் "எங்கள் நாட்டில் இதற்கு ஏகப்பட்ட கிராக்கி இருக்கும். விருந்துகளுக்குப் பின் அளிக்கப்படும் ஐஸ்கிரீமில் இது மிகுந்த முக்கியத்துவம் பெறும்" என்று உறுதியுடன் தெரிவித்துள்ளனர்.

ஆமாம், இந்த நுங்கு டப்பாவுக்குப் பெருமளவில் விளம்பரம் செய்யப்பட்டால், எதிர்காலத்தில் இந்தியாவுக்கு அந்நியச் செலாவணி திரட்டித் தரும் பொருள்களில் ஒன்றாக—மிக முக்கியமான இடத்தைக் கவரும் என்பதில் ஐயமில்லை.

வணிக நிமித்தம் 'மாதிரி நுங்கு டப்பாக்கள்' ஜெர்மனி நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த நுங்கு ஓராண்டுக்கு மேல் கெடாமலிருக்குமாறு பாதுகாக்கப்பட்டுள்ளது.

மாதவரத்திலுள்ள இக் கிராமத் தொழிற் கூடத்திலிருந்து மட்டும் ரூ. 10,000 மதிப்புள்ள நுங்குகளை ஏற்றுமதி செய்யலாம் என்றால், தமிழ் நாடு முழுவதிலிருந்தும் எவ்வளவு ஏற்றுமதி செய்யலாம் என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்!

அமெரிக்கா போகும் நுங்குக்கு நாம் தரவிருக்கும் விளம்பரம் அனைத்து நாட்டிலும் அதற்கு நல்ல சந்தையைத் தேடித் தரும் என்பது உறுதி! அதன் சுவையே இதற்கு ஆதாரமாகும்.

கல்வியில் சிறந்த தமிழ் நாடு கிராமத் தொழில்களிலும் சிறந்த தமிழ் நாடு என்பதை இத்தொழில்களின் வளர்ச்சியே எடுத்துரைக்கிறது!

---

மேலே : மிட்டாய் மீது காகிதம் [illegible] ஈடுபட்டிருக்கின்றனர்.

கீழே : அச்சுகள் [illegible] தயாரிக்கிறார்கள்.









சில நாளில்—சில திங்களில்

—சில வருடங்களில்

முடிந்துவிடுவதல்ல

வாழ்வு!

அதற்கு நீண்ட

எதிர்காலம் உண்டு!

கடமையும் உண்டு!

கடமை எது?

எதிர்காலம் எது?

அவை எவ்வாறு

உருவாகின்றன......?

*[வேளாண்மை அலுவலகத்தில் பணியாற்றும் மேஸ்திரி மேகலிங்கம் மாலையில் வீட்டுக்குத் திரும்பி வருகிறார்.]*

**மேகலிங்கம் :** வள்ளி....வள்ளீ............ஏ புள்ளே வள்ளி! (பதிலில்லே)
வள்......ளீ........வள்ளீ........

**வள்ளி :** (பதட்டத்துடன்) என்னுங்க மச்சான் கூப்பிட்டிங்களா?

**மேகலிங்கம் :** ஆமா......மனுசன் எத்தனே நாழியாகக் கூப்பிட்டுக்கிட்டிருக்கேன்.. நீ என்னடான்னு, சாவகாசமா வந்து நின்னுக்குட்டு கூப்பிட்டிங்களா மச்சான்னு கேக்குறியே! உனக்கு மூளே இருக்குதா......?

**வள்ளி :** சரி, சரி· கோவிச்சுக்காதிங்க மச்சான்· நீங்க வந்து ரொம்ப நேரம் ஆயிட்டுதா..

**மேகலிங்கம் :** ரொம்ப நேரம் ஆகலே! பத்து நிமிஷம்தான் ஆகுது!

**வள்ளி :** நல்லவேளே! நான் பயந்தே போயிட்டேன்!

**மேகலிங்கம் :** பொய் சொல்லாதே புள்ளே! பயம் இருந்தா நீ இப்படி நடந்துக்குவியா?

**வள்ளி :** என்ன மச்சான் சொல்றிங்க! எனக்கு ஒண்ணும் புரியலியே!

**மேகலிங்கம் :** ஏன் புள்ளே! பயம் இருந்தா தொட்டிலிலே கெடக்கிற என் தங்கத்துரையை விட்டுட்டு வெளியிலே போயிருப்பியா......?

**வள்ளி :** இப்பத்தான் மச்சான் போனேன்!

**மேகலிங்கம் :** எங்கே போனே! பச்சைப் புள்ளையை விட்டுட்டு வெளியிலே போற அளவுக்கு என்ன அவசரமான வேலே ஒனக்கு?

**வள்ளி :** வந்து.... வந்து.....

**மேகலிங்கம் :** தெரியும் புள்ளே! நீ எங்கே போனேன்னு எனக்கு நல்லாத் தெரியும்! பக்கத்து வீட்டுப் பார்வதி அம்மா கிட்டே அரட்டை அடிக்கப் போயிருக்கே!

**வள்ளி :** மச்சான்! பார்வதியம்மா வீட்டுக்குப் போனேன்னு சொல்றீங்களே அதை ஒப்புக்கிறேன். ஆனா அரட்டை அடிச்சேன்னு சொல்றீங்க பாருங்க, அதை நான் ஒத்துக்கத் தயாரா இல்லே....

**மேகலிங்கம் :** அப்படீன்னு நான் கூப்பிட்ட வுடனே ஏன் ஓடி வரல்லே....? அதுக்குக் காரணம் சொல்லு.

**வள்ளி :** அதுவா.... வந்து.... வந்து.... ஊஹூம்.... சொல்லமாட்டேன்.

**மேகலிங்கம் :** சொல்லு புள்ளே.... சொல் லாட்டி எனக்குக் கெட்ட கோபம் வரும்!

**வள்ளி :** சொல்லிடுறேன் மச்சான்........ கோவிச்சுக்காதிங்க!

**மேகலிங்கம் :** அப்படி வா வழிக்கு !

**வள்ளி :** மச்சான்.... நம்ம தங்கத்துரை இருக்கானில்லே அவனைப் பத்தித்தான் பார்வதி அம்மாவும் நானும் பேசிக்கிட்டிருந்தோம்.

**மேகலிங்கம் :** என்ன புள்ளே, ஆச்சரியமா இருக்கு! தொட்டிலிலே கிடக்கிற சின்னப் புள்ளை என்ன தப்புத் தண்டாப் பண்ணீட்டான்னு நீங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டிங்க....?

**வள்ளி :** அதுல்ல மச்சான்! பார்வதி அம்மா சீட்டுப் பிடிக்கிறாங்களாம். நம்ம தங்கத்துரை பேருக்கு மாசம் அஞ்சுரூபாயாவது சீட்டுப்போட்டு வச்சா நல்லதுன்னு அவங்க சொன்னாங்க!

**மேகலிங்கம் :** பரவாயில்லையே! பையன் பொறந்து பத்து மாசம்தான் ஆகுது! அதுக் குள்ளேயே அவனுக்காக பணம் சேர்த்து வைக் கணும்னு யோசனை செய்துட்டியே......

**வள்ளி :** ஆமா மச்சான்! இப்ப இருந்தே பணம் சேமிச்சு வச்சாத்தான் பிற்காலத்திலே அவனுக்கு நன்மையா இருக்கும்! அவன் படிப் புக்கு, அவன் கல்யாணத்துக்கு எல்லாம் பணம் தேவைப்படுமில்லே..! திடீருன்னு பணம் எப் படிக் கெடைக்கும்..? அதுனலதான் இந்த யோசனை.

**மேகலிங்கம் :** வள்ளி! நான் உன்னை ரொம்பச் சாதாரணமா நெனைச்சேன்! நீ என்னடான்னு பெரிய பெரிய திட்டமெல்லாம் போடுறே! முன் னெல்லாம் பெண் புத்தி பின் புத்தின்னு சொல் வாங்க; இப்ப அப்படி இல்லே........பெண் புத்தி, முன் புத்தின்னு தெளி வாகுது!

**வள்ளி :** வர்ணிப்பு இருக் கட்டும் மச்சான்.... சீட்டுக் கட்டுறதுக்கு பணம் எப்பத் தரப் போறிங்க......?

**மேகலிங்கம் :** பணம் இன்னைக்கே தர்றதுக்குத் தயார்! ஆனா......

**வள்ளி :** ஆரம்பிச்சிட்டிங்களே மச்சான்! நீங்க ஏதாவது தடை சொல்வீங்கன்னு எனக்குத் தெரியும்.

**மேகலிங்கம் :** தடை சொல்லலே புள்ளே! நான் ஓர் அபூர்வமான யோசனை சொல்லப் போறேன்.

**வள்ளி :** யோசனைதான் சொல்லப் போறிங் களா? பணம் தரமாட்டிங்களா....

**மேகலிங்கம் :** அடாடா அவசரப்படுறியே புள்ளே! நான் சொல்லப் போறதை நல்லாக் கேளு!

**வள்ளி :** சொல்லுங்க மச்சான்!

**மேகலிங்கம் :** பணம் சேமிக்கணும்னு சொல் றியே, அது வாழ்க்கையிலே ரொம்ப ரொம்ப முக்கியம்! அதுக்காக, தனிப்பட்டவங்க கிட்டே சீட்டுப் போட்டா நம்ம பணம் நம்மகிட்டெ வந்து சேராது! 'வட்டிக்கு ஆசைப்பட்டு முதலே போயி டுச்சு'ன்னு சொல்வாங்களே..........அதுமாதிரி நம்ம பணத்துக்கே ஆபத்து வந்திரும் !

**வள்ளி :** பார்வதி அம்மா ரொம்ப நல்லவங்க மச்சான்!

**மேகலிங்கம் :** அவங்க நல்லவங்களாகவே இருக்கட்டும்; நான் அவங்களைப் பத்தி குறை சொல்லலே! ஆனா.... குழந்தைக்கு உதவ ணும்னு நாம நல்ல மனசோட சேர்த்து வைக்குற பணத்துக்குக் கெடுதல் வரக் கூடாது. ஞாபகம் வச்சுக்கோ........!

**வள்ளி :** அப்படின்னா சீட்டுப் போட வேண் டாம்! பணத்தை நம்ம வீட்டுலெயே வச்சுக்க லாம்னு பாக்கிறிங்களா?.. அது முடியாத காரி யம்! ஏதாவது அவசரம்னு நாமே எடுத்துடு வோம்... ! அஞ்சு மாசமா உண்டியலிலே சேர்த்து வைச்ச பதினைஞ்சு ரூபாப் பணத்தை போன மாசம் நீங்க தானே எடுத்துச் செலவு செய்திங்க ?

**மேகலிங்கம் :** ஆமா புள்ளே! யாரு இல் லேன்னு சொன்னாங்க! இப்படி எல்லாம் ஏற் படும்னு தெரிஞ்சுதான் நம்ம தமிழ்நாடு சர்க்கார் சேமிப்பைப்பத்தி ரொம்ப அக்கறை எடுத்துவருது! சிறு சேமிப்புத் துறைன்னே ஒரு துறையை ஏற்படுத்தியிருக்கு! அதுக்கு நம்ம தமிழ்நாட்டு முதலமைச்சர்தான் தலைவர், துணைத் தலைவர் யாரு தெரியுமா?



**வள்ளி :** எனக்கென்ன தெரியும் மச்சான் நீங்களே சொல்லுங்க!



**மேகலிங்கம் :** சொல்றேன் சொல்றேன்! நம்ம பரங்கிமலைத் தொகுதி எம். எல். ஏ, எம். ஜி. ஆர் இருக்கிறாரே, அவருதான் துணைத் தலைவர். அவரு துணைத் தலைவரா ஆனதுக்கப்புறம் இந்த சிறு சேமிப்பு திட்டத்துக்கே பெரிய மதிப்பு ஏற்பட்டிருச்சு!



**வள்ளி :** அப்படியா எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு மச்சான்!

**மேகலிங்கம் :** இதிலே ஆச்சரியப்படுறதுக்கு என்ன இருக்கு புள்ளே! சரியான திட்டத்தைச் சரியானவரு கிட்டெ ஒப்படைச்சிட்டுப் போயி ருக்காரு நம்ம அண்ணா.

**வள்ளி :** ஓகோ! இதெல்லாம் நம்ம அண்ணா வோட திட்டம்தானா?

**மேகலிங்கம் :** ஆமா புள்ளே! நம்ம நாடு நல்லா இருக்கணும்கிறதுக்காக அந்த உத்தமரு அபூர்வமான திட்டங்களையெல்லாம் ஏற்படுத்திட் டுப் போயிருக்கிறாரு! அவரோட எண்ணத்தை எல்லாம் நிறைவேத்திறதுக்குத் தகுந்த ஒருத்தரு இப்ப முதலமைச்சரா இருக்கிறாரு! அதுனாலெ நாம எதுக்கும் கவலைப்பட வேண்டியதில்லே....

**வள்ளி :** ஆமா மச்சான்! பக்கத்து வீட்டுப் பார்வதி அம்மா கூட இதைத்தான் சொன்னாங்க!

**மேகலிங்கம் :** பக்கத்து வீட்டுப் பார்வதி அம்மா என்ன புள்ளே, சாட்சாத் பரமசிவம் சம்சாரம் பார்வதியைக் கேட்டா, அவங்க கூட இதைத்தான் சொல்வாங்க! மக்கள் குரலே மகேசன் குரல்னு சொன்னாரே நம்ம அண்ணா, அதை அப்படியே கண் போல பாதுகாத்து வர்ராரு நம்ம முதல மைச்சர். அதுனாலெ ஏழை எளிய மக்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்து வர்ராரு! அதிலே ஒண்ணுதான் இந்தச் சிறு சேமிப்புத் திட்டம்......புரியுதா?

**வள்ளி :** புரியுது மச்சான்!

**மேகலிங்கம் :** இதுலெ இன்னொரு விசேஷம் என்ன தெரியுமா புள்ளே!

**வள்ளி :** சொன்னாத்தானே மச்சான் தெரியும்!

**மேகலிங்கம் :** இந்தியா முழுதுக்கும் இந்தத் திட்டம் இருக்குது. ஆனா நம்ம தமிழ்நாட்டுலெ தான் இது நல்லபடியா நெறைவேத்தப்படுது!

**வள்ளி :** அதுக்குக் காரணம் என்னா மச்சான்!

**மேகலிங்கம் :** நம்ம நாட்டு மக்கள்தான் காரணம். எல்லாரும் மனசு வைச்சு இந்தத் திட்டம் வெற்றியடையிறதுக்குப் பாடுபடுறாங்க..

**வள்ளி :** அது சரி மச்சான் இந்தத் திட்டத்தைப் பத்தி நீங்க விளக்கிச் சொல்லலியே....

**மேகலிங்கம் :** ஆமா புள்ளே! மறந்து போயிட்டேன்...... திட்டத்தைப் பத்தி விளக்க மாகச் சொல்றேன். தெளிவாக் கேட்டுக்கோ!

**வள்ளி :** சொல்லுங்க மச்சான் சொல்லுங்க.

**மேகலிங்கம் :** தேசீய சேமிப்புப் பத்திரம்னு ஒரு பத்திரத்தை சர்க்கார் அறிமுகம் செய்திருக் காங்க.... இந்தப் பத்திரம் மூணு விதத்திலே இருக்கு.... பணக்காரங்க தங்களோட பணத்தை முதலீடு செய்து தேசீய சேமிப்புப் பத் திரம் வாங்கிக்கலாம். வருஷத்துக்கு நூத்துக்கு ஏழே கால் ரூபா வட்டியோட, வட்டியும், முதலும் சேர்த்து சர்க்கார் திருப்பித் தந்திடுது; நமக்கு இந்தத் திட்டம் லாயக்குப்படாது புள்ளே!

**வள்ளி :** என்ன மச்சான் நீங்கதானே தேசீய சேமிப்புப் பத்திரத்தைப் பத்தி புகழ்ந்து பேசு னீங்க.. இப்ப நமக்கு லாயக்குப் படாதுன்னு சொல்றீங்களே....!

**மேகலிங்கம் :** அவசரப்படாதே புள்ளே.... நம்மை மாதிரி மாத வருமானம் உள்ளவங்களுக்கு வேறொரு தினுசான திட்டம் இருக்குது.

**வள்ளி :** அப்படின்னா அதை மொதல்லே சொல்லுங்க மச்சான்!

**மேகலிங்கம் :** அதாவது மாசம் அஞ்சு ரூபாயோ அதுக்கு மேலேயோ நம்மாலே எவ்வளவு முடி யுதோ அதை, மாசந் தவறாமே செலுத்தணும். நூத்துக்கு வருஷத்துக்கு ஆறே கால் ரூபா வட்டி யோட சேர்த்து திருப்பி வாங்கிக்கலாம். இதுக்குத் தொடர் வைப்புத் திட்டம்னு பேரு வச்சிருக் காங்க.

**வள்ளி :** பரவாயில்லியே..........இது நல்ல யோசனையா இருக்குது மச்சான்.

**மேகலிங்கம் :** அப்புறம்.... இன்னொரு திட்டம் இருக்கு புள்ளே....

**வள்ளி :** எதுக்கு மச்சான் இத்தனை வித வித மான திட்டம்?

**மேகலிங்கம் :** ஒலகத்திலே பலதரப்பட்டவங்க வாழ்றாங்க புள்ளே! ஒவ்வொருத்தருக்கு ஒவ் வொண்ணு புடிக்கும். உதாரணமாக, ஒருத் தருக்கு ஜிலேபி பிடிக்கும்! ஒருத்தருக்கு லட்டு பிடிக்கும்! ஒருத்தருக்கு அல்வா பிடிக்கும்....! எல்லாம் இனிப்புத்தான். ஆனா, அதிலேயே

ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொண்ணு பிடிக்குது பாரு· அது மாதிரி, திட்டம் ஒண்ணுதான், ஆனு அது செயலாகிற விதத்திலே சில சில பிரிவுகள் இருக்கு புள்ளே!

**வள்ளி :** மச்சான்! நீங்க விவசாய மேஸ்திரி தானே!

**மேகலிங்கம் :** ஏன் புள்ளே! ஏன் உனக்குத் திடீருன்னு சந்தேகம் வந்துட்டுது.

**வள்ளி :** இல்லே.... முன்னே எல்லாம், எந்தக் காய்கறிக்கு என்ன உரம் போடணும்னு விளக்கம் செய்விங்க.... இப்ப என்னன்னு சிறு சேமிப்பைப் பத்தி இவ்வளவு தெளிவா எடுத்துச் சொல்ல ஆரம்பிச்சிட்டீங்களே.

**மேகலிங்கம் :** இந்தா பாரு வள்ளி.... நம்ம நாடு முன்னேறணும்—நம்ம நாட்டு மக்கள் எல்லாம் அதுக்கு ஒத்தாசையா இருக்கணும்னு அமைச்சர்களெல்லாம் அடிக்கடி மக்கள் கிட்டெ வேண்டிக் கொள்றதைப் பார்த்தபோது எனக்கே அக்கறை ஏற்பட்டிருச்சு புள்ளே. ஒரு நாடு முன்னேறணுமின்னு, சர்க்கார் திட்டம் போடுறது மட்டும் போதாது; அந்தத் திட்டம் வெற்றிகரமா நெறைவேற பொது மக்களோட ஒத்துழைப்பும் அவசியம்.. அதனுலதான் சம்பளம் இல்லாத ஊழியனு—அதாவது சீரணித் தொண்டர்கள் மாதிரி நானும் சிறு சேமிப்பைப் பத்திப் பிரச்சாரம் செய்ய ஆரம்பிச்சுட்டேன்....அடடா, பாத்தியா. எங்கயோ ஆரம்பிச்சு எங்கேயோ வந்துட்டேன்......

**வள்ளி :** ஒங்க வழக்கமே இது தானே மச்சான்·

**மேகலிங்கம் :** கேலி இருக்கட்டும் வுள்ளி· மாசச் சேமிப்புன்னு ஒரு திட்டம்இருக்குது..

**வள்ளி :** அதென்ன திட்டம் மச்சான்?

**மேகலிங்கம் :** அதாவது மாசந்தவருமெ, ஒரு குறிப்பிட்ட தொகையை, ஒரு அஞ்சோ, பத்தோன்னுதான் வச்சிக்குயேன்.. ..அதை 5 வருஷம் அல்லது 10 வருஷம் அல்லது 15 வருஷத்துக்கு கட்டிக்கிட்டு வர்றது.... கடைசியிலே 5 சத வீத வட்டியோட சேர்த்துத் திருப்பி வாங்கிக்கலாம்.

**வள்ளி :** இது நம்ம குடும்பத்துக்கு ஏத்த திட்டமா இருக்கு மச்சான்..·

**மேகலிங்கம் :** இதிலே இன்னெரு வசதி இருக்குது புள்ளே. மாசம் இத்தனை ரூபா கட்டுறேம்னு நான் வேலே பார்க்குற இடத்திலே சொல்லிட்டா போதும், அவங்களே அந்தப் பணத்தை சிறு சேமிப்புத் திட்டத்துக்கு அனுப்பிடுவாங்க......! நமக்கு எந்த அலேச்சலும் இல்லே......தொல்லேயும் இல்லே·

**வள்ளி :** அப்படீன்னு ரொம்ப நல்லதாப் போச்சு மச்சான்.. பருத்தி புடவையாக் காய்ச்ச மாதிரி இருக்கு மச்சான் இந்தத் திட்டம். எப்ப ஆரம்பிக்கப் போறிங்க....?

**மேகலிங்கம் :** என்ன வள்ளி, வெவரம் புரியாதவளா இருக்கிறே? நீ சொல்ற அளவுக்கா நான் வச்சுக்குவேன் ?

**வள்ளி :** நீங்க என்ன சொல்றிங்க மச்சான்?

**மேகலிங்கம் :** ரெண்டு மாசமா, ''சம்பளப் பணத்துலே அஞ்சு ரூபா கொறையா வருதே அது ஏன்னு'' கேட்டுக்கிட்டு வந்தியே. அதுக்கு இந்த சிறு சேமிப்புத் திட்டம் தான் காரணம். ரெண்டு மாசத்துக்கு முந்தியிருந்தே 5 ரூபா. போட ஆரம்பிச்சுட்டேன் புள்ளே



**வள்ளி :** மச்சான் நீங்க பெரிய ஆளுதான்· எங்கிட்டயே மறைச்சிட்டீங்களே·

**மேகலிங்கம் :** மறைச்சுத்தான் பார்த்தேன். முடியலியே. என் வாயைத் தோண்டி உண்மையை வெளிவரச் செய்திட்டியே நீதான் பெரிய ஆளு·

**வள்ளி :** இல்லெ மச்சான்.. நெறையச் செலவு செய்துக்கிட்டிருந்த ஒங்களே மாசம் 5 ரூபா சேமிக்க வச்சானே உங்க மகன் தங்கத்துரை அவன் தான் பெரிய ஆளு·

**குறளின் குரல்**

அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு



# அறுபதாங் கல்யாணம்

## மகாதேவன்



சென்னை நகரப் பூங்காக்களுக்கே ஒரு தனிச்சிறப்பு இருக்கிறது. ஏனென்முல் அவை முற்றிலும் செயற்கையான ஒரு சூழலில் செயற்கையாக அமைக்கப்பட்டுள்ள இயற்கைச் செல்வங்கள். அத்தகைய ஒரு பூங்காவின் ஒரு மூலேயில் அடர்ந்து வளர்ந்திருந்த பூஞ்செடிகள் ஒன்றின் கீழ் மாலேயில் இளம் உள்ளங்கள் இரண்டு கலந்து உறவாடின. டாக்டர் சுகுமாரும் டாக்டர் நளினியும் இன்று நேற்றுக் காதலர்கள் அல்ல. 2 ஆண்டுகளுக்கு முன் மருத்துவக் கல்லூரியில் படித்த நாட்களிலிருந்து காதலர்கள். ஆனுல் இன்றும் காதலர்கள்தான் அவர்கள்! தினமும் மாலேயில் இந்தப் பூங்காவில் சந்தித்து மற்றக் காதலர்கள் என்ன பேசுவார்களோ அதைத்தான் பேசுகிறுர்கள். அவர்களுக்கு மற்றவர்களேப் பற்றிய கவலே இல்லே, ஆனுல் பூங்காவில் இருக்கும் மற்றவர்கள் அவ்வளவு தந்நலம் கொண்டவர்கள் அல்ல. அவர்களுக்கு இந்த

இளம் காதலர்களைப் பற்றித் தான் பேச்சு, கவலை.

"சுகுமார், நீங்க ஏன் இன்னிக்கு ஒருமாதிரியா இருக்கிங்க?"

"இல்லையே, சரியாத்தானே இருக்கேன்?"

"எங்கே, இப்படி என்னைப் பார்த்துச் சொல்லுங்க!"

"நளினி உன்னைக்கூர்ந்து பார்த்தா, சொல்லே வாயிலே வரமாட்டேங்குதே"

"அப்படியா?"

"அப்படியேதான்...நளினி இப்படிக் கொஞ்சம் கிட்ட வாயேன்....."

"என்ன, சொல்லுங்க!"

"நாளைக்கு நீ என் ஹாஸ்பிடலுக்கு வர்றியா?"

"அப்பாடா! இத்தனை வருஷத்திலே முதல் தடவையா உங்க ஹாஸ்பிடலுக்கு என்னை வரச் சொல்லிக் கூப்பிடறிங்க. ஆமாம் நாளைக்கு என்ன விசேஷம்?"

"விசேஷம்.........கிசேஷம் ஒண்ணுமில்லை!"

"அப்போ சும்மா வேடிக்கை பார்க்கறதுக்கா?"

"அப்படித்தான் வைச்சுக்கயேன்."

"இருந்திருந்து வேடிக்கை பார்க்க நல்ல இடத்தைக் கண்டு பிடிச்சிங்க. பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே வேடிக்கைக்கு என்ன இருக்கு? என்ன குமார் முகத்தைத் திருப்பிக்கிட்டீங்க?"

"ஊம்..."

"சுகுமார் கோபமா? என்னை மன்னிச்சுடுங்க. புத்தி சுவாதீனமில்லாதவங்களுக்கு நாம் என்ன உதவி செய்தாலும் தகும். நான் நாளைக்கு..."

"நளினி நீ வரவேண்டாம்."

"இல்லே சுகுமார்! நான் கட்டாயம் வருவேன்."

"வேண்டாம் நளினி."




ஐயா! உங்கள் பையனைக் கண்டித்து வைக்கக்கூடாதா? பெண்ணைப்போல் முடி வளர்த்துக் கொண்டு, பூப்போட்ட சட்டை போட்டுக் கொண்டு, ஹிப்பி மாதிரி.....சேச்சே....நல்லாவே இல்லையே!

நான் ஐயா இல்லை! அம்மா !!

---

"முடியாது. நான் கட்டாயம் வருவேன். அதுவும் உங்க ஸ்கூட்டரில்தான் வருவேன். என்னைக் கூட்டிக்கிட்டுப் போவீங்களா டாக்டர்."

"நளினி நான் யோசிக்காமெ உன்னைக் கேட்டுட்டேன். காலேஜிலே படிக்கும்போதே நான் புத்தி சுவாதீனமற்றவர்களுக்கான சிகிச்சையிலே ஊக்கம் காட்டினேன். அதையே பயின்றேன். அந்தத் துறையிலேயே வேலையும் செய்கிறேன். எனக்கு அது விருப்பமான செயல். ஆனா உனக்கு குழந்தைகள் வைத்தியம் தான் பிரியம். நீ அதையே செய். இதிலே உனக்குப் பிடிக்காத..."

"சுகுமார் நீங்க என்ன சொன்னாலும் நான் கேட்கமாட்டேன். நான் கட்டாயம் நாளைக்கு உங்க ஸ்கூட்டரிலே உங்க மென்டல் ஹாஸ்பிட்டலுக்கு வரத்தான் போகிறேன்."

"வேண்டாம் வேண்டாம். உன் விருப்பத்திற்கு எதிரா..."

"இதோபாருங்க! இப்போ எனக்குன்னு தனியா விருப்பம் எதுவும் இல்லே. உங்க விருப்பம் தான் என் விருப்பம். அடடே! உங்க புஷ் ஷர்ட்லே ஒரு கட்டெறும்பு. இப்படித் திரும்புங்க! இப்படி வாங்க! பின்னாடி போயிடுச்சி, இப்படி கொஞ்சம்....! அப்பாடா!"

"சலூன் நாற்காலியிலே ஆளை வைச்சு திருப்பறமாதிரி இப்படியும் அப்படியும் என்னை ஆட்டி வச்சுட்டே. எப்படியோ எறும்பைப் பிடிச்சியே"

"எறும்பு என்ன; உங்களையே ......!"

• • •

சுகுமாரும் நளினியும் ஸ்கூட்டரில் போகும் ஒலியைக் கேட்ட பிறகு பார்க் பெஞ்சியில் அமர்ந்திருந்தகிழவர்களுக்குப்பொழுதே போகவில்லை. வெறுப்புடன் அவர்களும் எழுந்தார்கள். ஒரு கிழவர் மற்ற கிழவரிடம் "என்ன கலி காலம் ஐயா இது. அந்தக் காலத்திலே இப்படி யெல்லாம் நடக்குமா" என்று முணு முணுத்தார். அநாகரிகமாக எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று மற்றவர் சொன்னார். மூன்றும் கிழவர், சரி நாளைக்கு 4 மணிக்கே வந்துவிடுவோம் என்று கூறி பஸ்ஸில் ஏறினார். அநாகரிகமான செயல் என்று எதை அவர்கள் வருணித்தார்களோ அதைக் காண்பதற்காக அவர்கள் பஸ்ஸுக்கும் காசு செலவழித்துத் தினமும் பார்க்குக்குவந்து கொண்டிருந்தார்கள். என்ன செய்வது...அந்தக் காலத்தில் இந்தக் காட்சி காணமுடியாமல் போய்விட்டதே!

மறுநாள் காலை ஏழு மணிக்கெல்லாம் ஜார்ஜ் மெண்டல் ஹாஸ்பிடல் வாயிலில் ஒரு ஸ்கூட்டர் நுழைந்தது. ஸ்கூட்டரில் டாக்டர் சுகுமாரும் பின் சீட்டில் டாக்டர் நளினியும் அமர்ந்திருந்தனர். ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு இருவரும் இறங்கி வார்டுக்குள் நடந்தனர். வழக்கத்துக்கும் முன்பாக டாக்டர் வந்துவிட்டதால் ஆஸ்பத்திரிச் சேவகர்கள் அவசர அவசரமாக ஓடியாடித் தம் கடமைகளைச் செய்தனர். "குட்மார்னிங்.... குட்மார்னிங் டாக்டர்" எனப் பல காலை வாழ்த்துக்கள் கேட்டன. சுகுமார் நளினியை அழைத்துக் கொண்டு கடைசி வார்டை அடைந்தான். அங்கே மூன்றும் அறையின் கதவைத் திறந்தான். உள்ளேயிருந்து ஒரு முதியவர் ஓடி வந்தார். அவருக்கு அறுபது வயது இருக்கலாம். களையான முகம், கட்டான உடல்; இருந்தும் என்ன பயன்? அவர் மூளை நிலை குலைந்துவிட்டதே. சுகுமாரை வெறிக்க வெறிக்கப் பார்த்துவிட்டுப் பேசத் தொடங்கினார். "கமான் ஸ்டூடன்ஸ்...! இப்போ பிதாகோரஸ் தேற்றத்தை எப்படிப்போடவேண்டும் தெரியுமா? ஏன் பைத்தியத்தைப் போல முழிக்கிறாய்? தெரியாவிட்டால் நானே போடுகிறேன் பார். இந்தக் கரும்பலகையைப் பார்!"

நளினிக்கு அவர்மேல் இரக்கம் சுரந்தது.

"சுகுமார்...இவர் ஒருகாலத்தில் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தவரோ?"

"ஊம்..... அதுதான் அவர் பேச்சிலிருந்தே தெரிகிறதே!"

"ஆமாம். இவருக்கு எப்படி இந்த நிலை வந்தது.? காரணம் ஏதாவது தெரியுமா ?"

"காரணம் நன்றாகத் தெரியும். எப்படிக் குணப்படுத்துவது என்பதுதான் தெரியவில்லை."

"உஷ்....சத்தம் போடாதே. ஒரு செங்கோணத்தில் குறுக்கு வெட்டின் மீது வரையப்படும் சதுரம் அந்தச் செங்கோணத்தில் மற்ற இரு பக்கங்களின் மேல் வரையப்படும் சதுரங்களின் பரப்பளவுக்குச் சமம். இது எவ்வளவு சுலபமாக இருக்கிறது. இதைப் புரியவில்லை என்று ஏன் சொல்கிறீர்கள்? இதோ இந்தக் கரும் பலகையைப் பார்த்தீர்களா? அட மண்டுகளா? நீங்கள் உங்கள் புத்தியை உபயோகிக்க வேண்டும் ......."

"இந்தக் கேஸின் இஸ்டரி என்ன?"

"இவர் ஒரு கணக்கு ஆசிரியர். ஆரணிக்கு அருகில் ஒரு பள்ளிக்கூடத்தில் பணியாற்றி வந்தார். இவருக்கு 5 பெண்கள். ஒரு பையன் பிறக்க வேண்டும் என்று தவம் கிடந்து ஒரு பையன் பிறந்தான். அவன்மேல் இவர் உயிரையே வைத்திருந்தார். அவனுக்கு 8 வயதாகும்போது ஒரு நிகழ்ச்சி நடந்தது. தம்முடைய பெரிய குடும்பத்தைப் பராமரிக்கப் பெரும்பாடு பட்டு வந்தார் தந்தை. எங்கெங்கோ கடன் வாங்கிக் காலம் கடத்தி வந்தார். இருந்தும் மாதக்கடைசியில் அவர் வீட்டில் சாப்பிட ஒன்றுமே இருக்காது. அப்படி ஒரு நவம்பர் மாதக் கடைசி. அன்று வீட்டில் எல்லோரும் பட்டினி. சின்னப் பையன், செல்லப் பையனுக்காக, எப்படியோ பலரைக் கெஞ்சி, காலையில் அவனுக்குச் சாப்பாடு போட்டாகி விட்டது. மாலையில் என்ன செய்வது? இரவுக்கு எங்கே போவது? நாளைக்கு என்ன ஆவது? என்று அவர் குழம்பினார். எப்படியோ மாலையில் சிறுவனுக்கு விளையாட்டுக் காட்டிப் பசியை மறக்கச் செய்தார். ஆனால் இரவில் சிறுவன் பசியால் துடித்தான். அவருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தன் நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று, அன்று ஒரு நாளாவது தன் குடும்பத்துக்கு உணவு படைக்குமாறு கேட்டுக் கொள்ளும் நோக்கத்துடன், சைக்கிளில் ஏறினார். 'ஐயோ.... ஐயோ...... அப்பா... அம்மா'

## மூளையின் நிறை !

'எண்சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம்' என்பது உலகறிந்த மொழி. தலைக்கு அவ்வளவு சிறப்பு ஏற்பட்டதற்குக் காரணமே-தலைக்குள்ளே இருக்கும் மூளைதான்! காதுகளால் நாம் கேட்டாலும், கண்களினால் பார்த்தாலும், மூக்கினால் நுகர்ந்தாலும், நாவினால் சுவைத்தாலும், மெய்யினால் தொட்டாலும் அந்தச் செயல்கள் எல்லாம் மூளையின் கட்டளையால்தான் நடைபெறுகின்றன. ஆகவே ஒரு மனிதனுக்கு அவனது மூளைதான் அதிகாரி. சாதாரணமாக 150 பவுண்டு எடையுள்ள மனிதனாக இருந்தாலும் சரி, 250 பவுண்டு நிறையுள்ள மனிதனாக இருந்தாலும் சரி-பொதுவாக, மனித மூளையின் சராசரி எடை 51 அவுன்ஸ்தான் என்று மருத்துவ உலகம் கண்டுபிடித்திருக்கிறது. அதிலும் பெண்களின் மூளை, சராசரி எடையிலும் சுமார் 10 அவுன்ஸ் குறைவாக இருக்கிறதாம். இப்படி இருக்கும்போதே, பெண்கள் அகிலத்தை ஆட்டிப் படைக்கும் அறிவுக் கூர்மையுடன் காணப்படுகிறார்களே என்ற வியப்பு எழாமல் இல்லை. உலகத்திலேயே மிகமிக அதிகமான நிறையுடன் இருந்தது, மேல் நாட்டவரான ஆலிவர் கிராம்வெல் என்பவரின் மூளைதானாம். இவரது மூளையின் நிறை 90 அவுன்ஸ். பெரும் புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர் பைரனின் மூளை 79 அவுன்ஸ் நிறை இருந்ததாம்! பிரஞ்சு அரசியல்வாதியான கேம்பெட்டாவின் மூளை, சராசரிக்கும் குறைவு; அவரது மூளையின் நிறை 41 அவுன்ஸ்தானாம்!

என்ற அலறல் குரல் ஒன்று கேட்டு அதிர்ச்சி அடைந்து, சைக்கிளை அப்படியே போட்டுவிட்டு சத்தம் வந்த தோட்டத்திற்கு ஓடினார். அங்கே அவர் உயிருக்குயிரான செல்லப் பிள்ளை ஒரு மாமரத்தின் கீழே காலுடைந்து ரத்த வெள்ளத்தில் மயக்கமாகக் கிடந்தான். அவன் கையில் பாதி கடித்த ஒரு மாம்பழம். அவ்வளவுதான் .... பெரியவருக்கு தலை 'கிர்' என்று சுற்றியது. அப்புறம் சிந்தை கலங்கி.....''

இதற்குமேல் சுகுமாரால் பேச முடியவில்லை. அவன் தொண்டை அடைத்தது. அவன் விசும்பி விக்கி அழ ஆரம்பித்து விட்டான்.

நளினி தன் கண்ணீரை அடக்கிக்கொண்டு அவனுக்கு ஆறுதல் கூற முயன்றாள். ''சுகுமார்.... நீங்கள் டாக்டர் நீங்கள் அழக்கூடாது. வைத்தியம் செய்து குணப்படுத்துவதை விட்டுவிட்டு .....''

''நளினி—நான் ஒரு டாக்டராக மட்டும் இருந்தால் அழவே மாட்டேன். நான்....நான்.... அவருடைய மகன்! நான்தான் அவருடைய செல்லப் பிள்ளை. நான் அழாமல் எப்படி இருக்க முடியும் நளினி....!''

''ஆ....இவர் உங்கள் தந்தையா? ''

''நளினி இவர்தான் என் தந்தை....நான் தான் இவருடைய செல்லப் பிள்ளை. மாமரத்தில் பசியின் கொடுமையால் பழம் பறிக்க ஏறிக்கீழே விழுந்தவன் நான்தான். ஆனால் என் கால் சரியாகிவிட்டது. அவர் சிந்தை தெளியவில்லை. அரசாங்க உதவிப் பணத்தால் படித்து டாக்டரானேன். இன்று என் தந்தையின் அறுபதாவது பிறந்த நாள். அறுபதாம் கல்யாணம் சீரும் சிறப்புமாக நடத்த வேண்டிய நாள். அதனால்தான் உன்னையும் அழைத்துக்கொண்டு வந்தேன். என் வாழ்க்கை முழுவதும் உன் துணையுடன் இவரைக் குணப்படுத்தவே முயலப் போகிறேன்.''

''சுகுமார் உங்களுக்கு வெற்றி நிச்சயம் கிடைக்கும். எனக்கும் இதைவிட முக்கியமான தொண்டு இனி எதுவும் இல்லை.''

நளினி துவண்டு சுகுமார்மேல் விழுந்துவிட்டாள்.

கட்டுப்பாடற்றுப் பெருகிய குடும்பம் ஒரு மனிதனை எந்த இழிநிலைக்குக் கொண்டு வந்து விட்டது என எண்ணி எண்ணி அவள் வருந்தினாள்.



**அண்ணல் சொல் கேளீர்!**

இந்திய மக்கள் இமய முதல் குமரி வரை ஓரினமாக வாழ வேண்டுமானால், தமிழரல்லாத மற்ற மொழியினரும் தமிழுணர்தல் வேண்டும்.

• • •

இளம் வயதிலிருக்கும் குழந்தைகளை ஆங்கிலத்திலேயே எண்ணவும் பேசவும் பயில்விக்கும் இந்தியர்கள் தங்கள் குழந்தைகளுக்கும் நாட்டுக்கும் பெரிய துரோகம் செய்கிறார்கள். ஆங்கிலக் கல்வியினால் நமது குழந்தைகள் நம் நாட்டின் பரம்பரையான சமுதாயச் செல்வங்களை இழந்து விடுகிறார்கள்.





# விளக்கெண்ணெய் விமான இஞ்சினுக்கு



''வெண்டைக்காய், விளக்கெண்ணெய், கற்றாழை.''

வழவழாத்தனத்தை வர்ணிக்க உதவும் பழைய சொல்லடுக்கு இது.

இன்று, விமான இஞ்சினுக்கு விளக்கெண்ணெய்.

நவீன மருந்துகள், ரசாயனங்கள் செய்வதற்கு விளக்கெண்ணெய்.

நாட்டின் முன்னேற்றத்துக்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் அந்நிய நாணய செலாவணியைப் பெருக்க உதவும் விளக்கெண்ணெய் என்ற அளவில் விளக்கெண்ணெயின் பயனும் பெருமையும் உயர்ந்து விட்டன! ஆமணக்குச் சாகுபடியை மேம்படுத்தப் புதிய திருந்திய முறைகளும் செயல்படத் தொடங்கிவிட்டன.

பூங்குழந்தையின் மென்மையான குடல்உறுப்புகளைத் தீதின்றி தூய்மைப் படுத்தவும் மற்றும் பல மருந்துகளுக்கும் பயன்படுகின்றது விளக்கெண்ணெய்.

பல மைல் தூரத்துக்குக் கேட்கும்படியாக ஊங்கார ஓசையுடன் வானைக் கிழித்துக்கொண்டு செல்லும் விமானத்தின் பேரற்புதம் வாய்ந்த இஞ்சின் பாகங்களுக்கும் இதே விளக்கெண்ணெய்தான் மிகச் சிறந்த, மிகப் பொருத்தமான உயவாகிறது.

விளக்கெண்ணெயில் அப்படிப்பட்ட ஒரு தனிச் சிறப்பு!

**மாறாத தன்மை.**

தாழ்ந்த வெப்பத்திலும் இது இறுகுவதில்லை, உயர்ந்த வெப்பத்திலும் இதன் பிசுபிசுப்புக் குறைவதில்லை. இக்காரணங்களால் விமான இஞ்சின்களுக்கும் ஏனைய உள்ளெரி யந்திரங்களுக்கும் உயவிட இதுவே மிக ஏற்றதாக இருக்கின்றது. துருக்கி சிவப் பெண்ணெய் என்ற ரசாயனப் பொருளின் தயாரிப்பில் இது பயனாகின்றது. சவர்க்கார வகைகள் ஆமணக்கெண்ணெயில் தயாரிக்கப்படுகின்றன. தொன்று தொட்டே இதை விளக்கேற்றப் பயனாக்கி வந்திருக்கிறார்கள். ஆமணக்கெண்ணெய் விளக்கில் கரிப் புகை தோன்றுவதில்லை. மெழுகு வர்த்திகள், செயற்கை ரப்பர், பிளாஸ்டிக்குகள், மெருகெண்ணெய்கள் ஆகியவற்றின் தயாரிப்பிலும் இது பயனாகின்றது.

ஆமணக்குப் பிண்ணாக்கு நல்ல எருவாகின்றது, கரும்புப் பயிருக்கு மிகவும் ஏற்றது. ஆமணக்குத் தண்டு எரி பொருளாகவும், உயர்ந்த ரகக் காகிதம் செய்யவும் பயன்படுகின்றது.

முக்கியமான எண்ணெய் வித்துப் பயிர்களில் ஒன்றான ஆமணக்கு உலகில் பல்வேறு நாடுகளிலும் பயிர் செய்யப்பட்டாலும், பிரேஜில், இந்தியா இரஷியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, பாகிஸ்தான், தாய்லாந்து போன்ற நாடுகளில்தான் அதிகம் பயிராகின்றது. இந்தியாவில் இப்பயிர் நெடுங் காலத்திற்கு முன்பிருந்தே பயிர் செய்யப்பட்டு வருகிறது. உலகில் மற்றைய நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் ஆமணக்கின் மொத்த உற்பத்தி அதிகம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1967ஆம் ஆண்டில்மொத்த உலக உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 75 சதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் இப்பயிர் பரவலாகப் பயிர் செய்யப்பட்டாலும் முக்கியமாக தர்மபுரி, சேலம், தோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில்தான் அதிகப் பரப்பளவில் பயிராகிறது.

ஆமணக்கு எண்ணெய் ஆஸ்திரேலியா, இலங்கை, ஆப்பிரிக்க நாடுகள், செக்கஸ்லோவேக்கியா,நேபாளம்,மலேசியா, ஹங்கேரி, ஈராக், தாய்லாந்து, உகண்டா, அராபியா நாடுகள், பிரிட்டன், அமெரிக்கா, இரஷ்யா, யூகோஸ்லேவியா போன்ற ஏராளமான வெளிநாடுகளுக்கு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1967ஆம் ஆண்டு முதல் 1969 வரை வெளிநாடுகளுக்கு 4·73 கோடி கிலோ ஆமணக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்ததன் மூலமாக இந்தியாவிற்கு சுமார் 13·16 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.



மற்ற நாடுகளின் கலைச் சிறப்புக்கும் நமது நாட்டின் கலை வளர்ச்சிக்கும் அடிப்படையான ஒரு வித்தியாச மிருக்கிறது. செல்வ வளத்தோடு மற்ற நாடுகளிலே கலையை வளர்க்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலோஏழ்மையில் இருக்கும் போதே கலையும் வளர்க்கப்படுகிறது. நம்முடைய நாட்டு மக்களும் வறுமை நிலையிலும் கலைச் சுவையை நுகர்கிறார்கள்-கலைஞர்களை வாழ்த்துகிறார்கள்-வளர்க்கிறார்கள்-கலையை வளம் பெறச் செய்கிறார்கள் என்றால், செல்வச் செழிப்பிலே இந்நாட்டு மக்கள் இருப்பார்களானால் கலையை வளர்க்கும் கலைஞர்களை எவ்வாறெல்லாம் போற்றுவார்கள், பாராட்டுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற பிரமை ஏற்படுகிறது.

ஆமணக்கு எண்ணெய் பலரகத் தொழில்களுக்கு மிக முக்கியமான மூலப் பொருளாக உபயோகப்படுத்தப் படுவதால் உலகில் இவ்வெண்ணெயின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. உலகின் தேவையைத் தற்பொழுது ஓரளவுக்கு இந்தியா பூர்த்தி செய்தாலும் முழுத் தேவையைப் பூர்த்தி செய்ய இந்தியாவில் ஆமணக்கின் உற்பத்தியைப் பெருக்குவது மிகவும் அவசியம்.

ஆந்திரா, பீகார், மஹாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் இந்தியாவில் ஆமணக்கு உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இப்பயிர் பெரும்பாலும் வரப்பு ஓரப்பயிராகவும், கலப்புப் பயிராகவும், தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் சிற்சில இடங்களில் மட்டும் தனிப்பயிராகவும் பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் தற்பொழுது பயிரிடப்பட்டு வரும் பொறுக்கு விதை ரகங்களாக டி.எம்.வி. 1, டி.எம்.வி 2, மற்றும் டி.எம்.வி. 3 ஆகியவை சுமார் 6½—8 மாதங்கள் வரை வயதுடையவை. இவைகளைப் பயிரிட்டு நெடுங்காலத்திற்குப் பிறகு பயன் பெறுவதை விவசாயிகள் விரும்பாததால் தனிப்பயிராக ஆமணக்கைப் பயிர் செய்வதில்லை.

இக்குறைபாட்டினை நீக்க ஆராய்ச்சி செய்ததின் பலனாக சேலம்-1 என்ற குறுகிய கால ஆமணக்கு விதை, ஆமணக்கு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து (சேலம்) வெளியிடப்பட்டுள்ளது. இது 135–140 நாட்கள் வயதுடையது. மேலும் 53 சதம் வரை எண்ணெய் உடையது. இப்பயிர் ஜூன், ஜூலை மாதங்களில் பயிரிட ஏற்றது. இந்த (சேலம்-1 என்ற பொறுக்கு வித்து ரகத்தைத் தனிப்பயிராக 2,500 கிலோ தொழு உரம், 15 கிலோ தழைச் சத்து, 15 கிலோ மணிச்சத்து, 8 கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் உரமிட்டு ஏராளமாகப் பயிர் செய்தால் தமிழ்நாட்டில் ஆமணக்கு உற்பத்தியைப் பெருக்க இயலும். இப்பயிரைத் தனிப்பயிராக மானாவாரியில் பயிர் செய்வதன் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 350 முதல் 400 வரை நிகர வருமானம் கிடைக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இது போக ஒட்டுச் சேர்க்கை மூலமும், எக்ஸ்ரே கதிர்கள் மூலமும் குறுகிய கால ஆமணக்கு விதை ரகம் கண்டு பிடிக்க ஆராய்ச்சிகள் நடந்துகொண்டு வருகின்றன. விரைவில் குறுகியகா ஆமணக்கு விதை ரகங்கள், பயி செய்ய, வெளியிடப்பட இருக்கின்றன

தமிழ்நாட்டில் ஆமணக்கை ஏரா மான ஏக்கர் பரப்பளவில் தனிப் ப ராகப் பயிர் செய்தால் தமிழ்நாட்டி ஆமணக்கு உற்பத்தி பெருகுவதுட ஆமணக்கு எண்ணெய் வெளி நா களுக்கு ஏற்றுமதி செய்து தமிழ்நா டின் வருமானத்தையும்பெருக்கலாம்



எழும்பூரிலுள்ள சிறுவர் மருத்துவ மனைக்கு நாள் தோறும் நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர்கள் இளம்பிள்ளை வாதம் (போலியோ) என்ற நோய்க்காகச் சிகிச்சைபெற அழைத்து வரப்படுகின்றனர்.

தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளாத குழந்தைகளைத் தான் இந்த நோய் பீடிப்பதாகத் தெரிவிக்கிறார், டாக்டர்.

சிறுவர்களை அதிகமாகப் பாதிக்கும் கக்குவான், தொண்டை அடைப்பான், இளம் பிள்ளைவாதம் போன்ற நோய்களைத் தடுப்பதற்காக "மூன்று ஊசி" போடும் திட்டம் உள்ளது. இந்த ஊசியைச் சிறுவயதிலேயே போட்டுக்கொள்ளும் குழந்தைகளை இந்த நோய்கள் பாதிப்பதில்லை.

மேலுள்ள படத்தில் இளம் பிள்ளைவாதம் வந்த 6 மாதக் குழந்தையை டாக்டர் பரிசோதித்துப் பார்க்கிறார்.



# நீறு பூசிய நெடுஞ்சாலை



நெய்வேலி, பேசின் பிரிட்ஜ் ஆகிய இரண்டு இடங்களிலுமுள்ள அனல் மின் நிலையங்கள் நிலக்கரியை எரி பொருளாகப் பயன்படுத்துகின்றன. பயன்படுத்தப்பட்ட நிலக்கரியிலிருந்து கிடைக்கும் நீற்றின் (சாம்பலின்) தன்மையை ஆராய்ந்து ஆக்க வேலைக்குப் பயன்படுத்தும் வகையில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன

சிமெண்டு, மணல் ஆகியவற்றுடன் நிலக்கரி நீற்றையும் கலந்து கற்காரை (Dense Concrete) தயாரிப்பதற்கான சோதனைகள் செய்யப்பட்டன. குறிப்பிட்ட விகிதத்தில் மணல், சிமெண்டு, நீறு இவற்றைக் கலந்து கற்காரை தயாரிக்கும் முயற்சி வெற்றிபெற்றிருக்கிறது. கற்காரைத்தயாரிப்பில் நீற்றைப் பயன்படுத்தினால் 21 சதவிகித சிமெண்டு மிச்சப்படுகிறது.

சுண்ணாம்பு, மணல் ஆகியவற்றுடன் நீற்றையும் கலந்தால் சுண்ணாம்பு மிச்சப்படுவதுடன் உறுதிமிக்க காரையும் கிடைக்கிறது. சென்னையில் பேசின் பிரிட்ஜில் உள்ள அனல் மின் நிலையத்திலிருந்து கிடைக்கும் நீற்றைப் பயன்படுத்தினால் கற்காரை தயாரிப்பதற்காகும் தற்போதைய செலவில் 8 சதவிகிதம் மிச்சமாகும். நீற்றைப் பயன்படுத்திக் காரைப் பலகைகள் (Concrete Slabes) செய்யும் சோதனையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மணல், சுண்ணாம்பு நீறு இவற்றைச் சேர்த்து உறுதிமிக்க கலவையைப் பெற முடியும் மணல் நீறு, சுண்ணாம்பு ஆகியவற்றை முறையே 75 : 23 : 2 அல்லது 80 : 18 : 2 என்ற விகிதத்தில் கலந்து சாலை அமைப்புக்குப்பயன்படுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட கலவையைப் பயன் படுத்தி இராமேசுவரம் தனுஷ்கோடி பாதையில் 2 ஹெக்டாமீட்டர் தொலைவுக்குச் சாலை அமைபட்டிருக்கிறது. இது ஒரு சோதனைக்காக அமைக்கப்பட்ட சாலைதான். கடந்த ஒன்றரை யாண்டுக் காலமாக உறுதிமிக்க நிலையில் இருந்து வருகிறது.

சாலைக்குரிய சரளைக்கல் இல்லாத அல்லது சரளைக் கற்களின் விலை அதிகமாக உள்ள பகுதிகளுக்கு இவ்வகைக் கலவை பெரிதும் பயன்படும் ; செலவும் குறையும். பசைக் கருங்காரை ( Mastic Asphalt ) தயாரிப்பதற்கும் இக்கலவையைப் பயன்படுத்துவதற்கான சோதனையும் சென்னையிலுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.


## எங்களது நல்வாழ்த்துக்கள் !

அஜாய் எஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
பி-18/19. தொழிற்பேட்டை.
கிண்டி, சென்னை-32.

தந்தி : TIN BOX. தொலைபேசி : 801468.

* எல்லாவிதமான டின்கள், குவளைகள், தொட்டிகள், வாளிகள், சைக்கிள் சாமான்கள், நுணுக்கமான பாகங்கள் தயாரிப்பவர்கள்.
* சிறிய எஞ்சினியரிங் தயாரிப்புகள், உலோக மேஜை—நாற்காலிகள், சுருள் கதவுகள், கதவுகள், சன்னல்கள் உருவாக்குபவர்கள்,
* நிக்கல், பளபளப்பான நிக்கல், குரோமியம், காட்மியம், துத்தநாகம், தகரம், செம்பு ஆகியவற்றிற்கு எலக்ட்ரோபிளேட்டிங் செய்வதில் வல்லுநர்கள்.

# கோட்டையில் கொத்தளத்தில்...!



விடுதலைத் திருநாள்.

நம் நாட்டின் தேசியத் திருநாள்.

எல்லா மக்களும், எல்லாக் கட்சியினரும், எல்லாப் பகுதியினரும் கருத்து வேற்றுமையின்றிக் கொண்டாட வேண்டிய பெருநாள்.

ஆனால் இக் கருத்து ஏனோ முழுமையாக மக்கள் மன்றத்தில் பரப்பப்படவில்லை. அதற்குரிய அடிப்படை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வில்லை.

சுதந்திரத் திருநாள் ஒருசிலர் தான் கொண்டாட வேண்டிய விழா என்ற நிலை எப்படியோ பரவியிருந்தது ; அந்நிலை கடந்த ஆண்டு நம்முடைய அரசால் மாற்றப்பட்டது !

கோட்டையில், கொத்தளத்தில் கடந்த ஆண்டு நடை பெற்ற அனைத்துக் கட்சிகள் பங்கேற்ற ' விடுதலை விழா ' நிகழ்ச்சி இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தது.

அந்நிகழ்ச்சிப் படங்களைத் தான் எதிர்ப்பக்கத்தில் நீங்கள் காணுகின்றீர்கள் !

கடந்த ஆண்டு அக் கூட்டத்தில் நம்முடைய முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டார்கள்.

'' நம் நாடு விடுதலை பெற்று 22 ஆண்டுகள் ஓடி விட்டன. இப்பொழுது தான் அனைத்துக் கட்சியின் சார்பில் விடுதலை நாள் விழா முதல் முறையாகத் தமிழகத் தலைநகரில் கொண்டாடப்படுகிறது.

''விடுதலைக்காக இரத்தம் சிந்தியவர்களுக்கும், நாடு கடத்தப் பட்டவர்களுக்கும் உயிர்விட்டவர்களுக்கும் இன்னல்பட்டவர்களுக்கும் மற்ற தியாகிகளுக்கும் நாம் வணக்கம் செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். சுதந்திரம் காக்கும் பணியில் கட்சி வேறுபாடு ஏதுமின்றி உழைத்திடல் வேண்டும் !

''இன்றுதொடங்கும் இப்பணி, நாட்டின் எதிரியை விரட்ட ஒன்றுபடுவோம் என்பதற்கு எடுத்துக் காட்டாக அமையும். எல்லோரும் ஒற்றுமையாக இருந்து நாட்டிற்கு ஏற்படுகின்ற ஆபத்தை முறியடிப்போம் என்பதை நினைவுபடு[த்]தும் வகையில் அடுத்த ஆண்டு அனைத்துக் கட்சிகளின் சார்பி[ல்] விடுதலை நாள் விழா கொண்[டா]டப்படும்.''

முதல்வர் குறிப்பிட்ட[து] போல் இவ்வாண்டும் கோட்[டை]யில், கொத்தளத்தில், இந்தி[யா]விலேயே மிக உயரமான கொ[டி] மரத்தின் நிழலில், விடுதலை ந[ாள்] விழா கொண்டாடப்படுகிறது !

எத்தனையோ துறைகளில் எல்லா மாநிலங்களுக்கும் வழி காட்டியாகத் திகழும் தமிழக[ம்] விடுதலை நாள் விழாவை[க்] கொண்டாடுவதிலும் வழிகாட்டியாக விளங்கிடுதல் நம் அனை[]வருக்கும் பெருமையாகும் !

## வண்ணப் படங்களில்

எதிர்ப் பக்கத்தில்..கடந்த ஆண்டு சென்னைக் கோட்டையில் கொத்தளத்தில் நடைபெற்ற விடுதலை விழாக்காட்சிகள்!

அடுத்த பக்கங்களில்..காஞ்சி தந்த கலையான கடல்மல்லையில் காணப்படுகின்ற கண்கவரும் சிலைகள் பண்டைத் தமிழகத்தின் நிலையைக் காட்டுகின்றன.

இதைப்பற்றிய சிறப்புக் கட்டுரை அடுத்த இதழில் வருகிறது.

கடைசிப் பக்கத்தில்..பாரீசில் நடைபெற்ற மூன்றும் உலகத் தமிழ் மாநாட்டுக் காட்சிகள், முதல்வர் துவக்க உரை நிகழ்த்துகிறார். நிதியமைச்சர் சிறப்புரையாற்றுகிறார்.







# ஆவணி பிறந்தது

"பருவத்தே பயிர் செய்" என்பது பழமொழி. "திட்டமிட்டுச் செய்" என்பது புதுமொழி. இப்பழமொழியும், புதுமொழியும் வேளாண்மை வெற்றிக்கு அடிப்படையாகும்.

பருவத்திற்கேற்ற பயிர்களையும், அப்பயிர்களுக் கேற்ற சாகுபடி முறைகளையும் அறிந்து, முன்கூட்டியே திட்டமிட்டு, திட்டமிட்டபடி குறிப்பிட்ட பயிர்களை, குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட முறைகளை மேற்கொண்டு சாகுபடி செய்தால், வேளாண்மை உற்பத்தியும் பெருகும்; வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டுள்ள உழவர் பெருமக்களின் வாழ்வும் வளம் பெறும்; நாடும் நலம் பெறும். இந்த இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டே ஆவணி மாதத்தில் செய்ய வேண்டிய சாகுபடி வேலைகளைக் கீழே படைத்துள்ளோம். உழவர் பெருமக்கள் படித்துப் பயனடைவார்களாக :—

**1. நெல்.**—ஆவணி மாத முதற் பகுதியில் முன் போக சம்பா நெல் தினுசுகளுக்கு நாற்றுவிடலாம். உயர் விளைச்சல் நெல் தினுசுகளான ஐ.ஆர். 8, ஐ.ஆர். 5, ஜெயா, கோ. 25 ஆகியவைகளையும், சாதாரண நெல்லில் பொறுக்கு தினுசுகளான ஜி.இ.பி. 24, கோ. 30, கோ.32, கோ.19, பி.ஏ.எம். 3, பி.சி.பி. 1 ஆகியவைகளையும் நாற்றுவிடலாம்.

**நாற்றங்கால் தயாரித்தல்.**— தற்பொழுது உழவர் பெருமக்கள் அதிக அளவு விதைகளைக் குறுகிய பரப்பில் விதைக்கிறார்கள். இதனால் நாற்றுகள் நெருக்கமாக வளர்ந்து மெலிந்து காணப்படுகின்றன. இவைகளை நடும்போது, நாற்றுகள் ஒடிந்து சேதமடைகின்றன. எனவே, நாற்றுவிட, வேளாண்மைத்துறை சிபாரிசு



செய்யும் பரப்பளவு நாற்ற காலையும், விதையளவையு மேற்கொள்வதே நல்லது.

**பரப்பளவு.**—பொதுவாக ஒ ஏக்கர் நடுவதற்கு 10 சென் நாற்றங்கால் வீதம், நாற்ற கால் தயாரிக்கவும். ஐ.ஆர். நெல்லிற்கு, ஏக்கருக்கு 1 சென்ட் நாற்றங்காலும் ஐ.ஆர். 5, கோ. 25, ஜெய ஆகியவகைகளுக்கு 12 சென் நாற்றங்காலும் தேவை. மற் வகைகளுக்கு 10 சென்ட் நா றங்காலே போதுமான து நாற்றங்காலை இரும்புக் கலப்ை யால் நன்கு உழுது பண்படுத் வும். நாற்றங்காலுக்கு 2 வண் தொழு எருவோ அல்லது க போஸ்ட் எருவோ அல்ல 1 வண்டி தழை உரமோ இடவு நாற்றங்காலில் 4 முதல் 5 அ அகலமுள்ள மேட்டுப்பாங்கா பாத்திகளை அமைக்கவும்.

**விதையளவு.**—ஒரு ஏக்க நடவு செய்வதற்கு வேண்டி நாற்றுவிட ஐ.ஆர். 8, கோ. 2 ஆகிய தினுசுகளில் 15 கிலே விதையும், இதர தினுசுகளுக் 18 கிலோ விதையும் தேவை கும்.

**விதையுடன் மருந்து கலத்த**ல் விதைகள் மூலம் நோய் பரவு தைத் தடுக்க, விதைகளைப் பூ சாள மருந்துகளுடன் நன் கலக்க வேண்டும். ஐ.ஆர். ஜெயா நெல்லிற்கு 22·5 லிட்ட (5 காலன்) தண்ணீரில் 22 கிராம் ஈர கரிம பாதரசக்கலை யைக் கரைத்து, கரைத்த கல



ல் 15 கிலோ விதையைக் குறைந்தது 8 மணி
தல் 10 மணி நேரம் ஊற வைக்கவும். அதன்
ன் விதைகளை எடுத்து முளைக்க வைக்கவும்:
ற்ற நெல் வகைகளுக்கு ஒரு கிலோ விதைக்கு
கிராம் என்ற அளவில் அக்ரசான் அல்லது
சரசான் மருந்தைக் கலக்கவும். விதைகளையும்
ருந்தையும் விதை கலக்கும் கருவியில் இட்டு
ன்கு கலக்குதல் நல்லது.

**விதைத்தல்.**—மருந்து கலந்தபின் விதைகளை
ளைக்க வைக்க வேண்டும். முளைவிட்ட விதை
ளை, நாற்றங்காலில் அமைக்கப்பட்டுள்ள மேட்டுப்
ங்கான பாத்திகளில் திட்டமாக விதைக்கவும்.
ரு செண்ட் நீாற்றங்காலுக்கு 1½ கிலோ வீதம்
ளை வந்த விதையை விதைக்க வேண்டும்.

**நாற்றங்காலில் களையெடுத்தல்.** —நாற்றங்
லில் களைகள் தோன்றினுல் அவ்வப்போது அவை
ளை அப்புறப்படுத்தல் வேண்டும்.

ஆடி மாதத்தில் விடப்பட்ட நாற்றுகளுக்கு
ழ்க்கண்ட முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**நாற்றங்காலில் இரசாயன உரமிடல்.** ஐ.
ர். 8 நெல் நாற்றுப் பறிப்பதற்கு 10 அல்லது 12
ட்களுக்கு முன்பாக 5 கிலோ தழைச் சத்து
ரத்தை (அதாவது 25 கிலோ அமோனியம் சல்
ட் அல்லது 10 கிலோ யூரியா) நாற்றங்காலுக்கு
டவும். இதர வகை நாற்றுகள் நன்கு வளர
ல்லையாலுல், செண்டுக்கு ½ கிலோ வீதம் அமோ
னியம சலபேட உரத்தை நாற்றுப் பறிப்பதற்கு
10 நாட்களுக்கு முன்னர் போடவும்.

**நாற்றங்காலுக்கு மருந்து தெளித்தல்.**—ஐ. ஆர். 8 நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக 0.05 சத பாரத்தியானை (100 சி.சி. பாரத்தியானை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) டைத்தியோ கார்பமேட் மருந்துடன் (குமான் 0·1% (10⁰ கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது சினப் 0·2·/· (200 கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீருடன் கலந்து) தெளிக்கவும். இதர வகை நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக 0·05 சத பாரத்தியான் அல்லது 0·0¼ சத என்ட்ரின் மருந்தைத் தெளிக்கவும்.

**நாற்றின் வயது.**—நாற்றுகளைக் குறிப்பிட்ட நாளில், நாற்றங்காலில் இருந்து பறித்து நடவு செய்வது மிகவும் முக்கியம். மிகவும் குறைந்த வயதுடைய நாற்றுகளையும், மிகவும் வயதான நாற்றுகளையும் நடுவதால் மகசூல் கணிசமாகக் குறைந்து விடுமாதலின், குறிப்பிட்ட நாளில்நாற்றுக் களை நட்டு விடுதலே நல்லது. எனவே, கீழே குறிப்பிட்டுள்ள நாட்களில், நாற்றுகளைப் பறித்து நடவு செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| ஐ·ஆர். 8 | .. | 26 முதல் 28 நாட்கள். |
| ஜெயா | .. | ,, |
| கோ. 32 | .. | ,, |
| ஐ·ஆர். 5 | .. | 28 முதல் 30 நாட்கள். |
| கோ. 25 | .. | 40 முதல் 45 நாட்கள். |
| கோ. 19 | .. | ,, |
| ஜி.இ.பி. 24 | .. | 30 முதல் 35 நாட்கள். |
| கோ. 30 | .. | ,, |
| பி.ஏ.எம். 3 | .. | ,, |
| பி.சி.பி. 1 | .. | 35 முதல் 40 நாட்கள். |





**நாற்று நடுதல்:** நாற்றுகளைக் கூடுமானவரை வரிசையில் நடுவதே சிறந்தது. கோ. 25 நெல் நட, வரிசைக்கு வரிசை 20 செண்டி மீட்டரும் (8 அங்குலம்), வரிசையில் பயிருக்குப் பயிர் 12·0 செண்டி மீட்டரும் (5 அங்குலம்) இடைவெளி விட்டு குழிக்கு 2 நாற்றுகள் வீதம் நடவு செய்யவும். மேற்கூறிய இதர வகைகளுக்கு வரிசைக்கு வரிசை 20 செண்டி மீட்டரும் (8 அங்குலம்), வரிசையில் பயிருக்குப் பயிர் 10 செண்டி மீட்டரும் (4 அங்குலம்) இடைவெளி விட்டு, குழிக்கு 2 நாற்றுகள் வீதம் நடவும்.

**நடவு வயல் தயாரித்தல்:** ஆடி மாதத்தில் விடப்பட்ட நாற்றுகளை இம்மாதத்தில் நடவேண்டு மாதலின், நடவு வயல் தயாரிக்கும் வேலையில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

நடவு வயலை இரும்புக் கலப்பையால் 3 முறை நன்கு உழவேண்டும். ஏக்கருக்கு 10 வண்டி தொழு எருவையோ அல்லது கம்போஸ்ட் எருவையோ இட்டுச் சேற்றுடன் நன்கு கலக்குமாறு உழுதுவிட வேண்டும். அல்லது ஏக்கருக்கு 2,300 கிலோ (5 வண்டி) பசுந்தாளுரமிட்டுத் தழை மிதிக்கும் கருவியால் அல்லது பர்மிய சட்டத்தால் தழைகளை நன்கு சேற்றில் அழுத்தவும். கூண்டுச் சக்கரம் (கேஜ் வீல்)இணைக்கப்பட்ட டிராக்டர் உபயோகித்தால், நிலத்தில் குறுக்கும் நெடுக்குமாக





2 முறை உழுது, பின்னர் பரம்புப் பலகையா
நிலத்தினைச் சமப்படுத்தவும்.

**அடி உரமிடுதல்.** ஒவ்வொரு வகை நெ
லிற்கும் வேளாண்மைத்துறை பரிந்துரை செய்யு
அளவு தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்
இரசாயன உரங்களை அடி உரமாக இட வேண்டு
கடைசி உழவின்போது பரிந்துரை செய்யப்படு
அளவு மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களை இ
வும். உழுவதற்கு டிராக்டர் உபயோகப்படுத்த
பட்டால், மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்க
இரண்டாவது உழவிற்கு முன் போடவும். தழை
சத்து உரத்தை, நடுவதற்கு முன்பு போட வே
டும். எந்த வகைக்கு எவ்வளவு அடி உரம் இ
வேண்டும் என்பதற்குக் கீழ்க்கண்ட அட்டவ
துணை புரியும்.

| | அடி உரமாக இட வேண்டிய அளவு கிலோவில். | | |
|---|---|---|---|
| | தழைச் சத்து. | மணிச் சத்து. | சாம்ப சத்து. |
| ஐ.ஆர். 8, ஜெயா. | 50 | 35 | 35 |
| ஐ.இர். 5 .. | 27 | 21 | 21 |
| கோ. 25, கோ. 32 | 17 | 21 | 14 |
| கோ. 30, ஜி.இ,பி. 24, கோ. 19, பி.ஏ.எம். 3, பி,சி.பி. 1 | 7 | 14 | 7 |

மேற்கண்ட அளவு சத்துக்கள் கிடைக்கத் தேவை
யான இரசாயன உரங்களை இடவேண்டிய
மிகவும் அவசியம்.



ுவை நெல்:—

வைகாசி, ஆனி மாதங்களில் நாற்றுவிட்டு
ட்பபட்ட ஆடுதுறை 27, கோ. 29, ஐ.ஆர். 8,
ஜயா, கருணா ஆகிய இரகங்களுக்கு கீழ்க்கண்ட
றைகளை மேற்கொள்ளவும்.

ல் உரம் :—

ஆடுதுறை-27, கோ.-29 ஆகியவைகளுக்கு
ற்று நட்ட 30-ம் நாள் 14 கிலோ தழைச்சத்து
த்தை மேலுரமாக இடவும். ஐ.ஆர். 8,
ஜயா ஆகியவைகள் நடப்பட்ட 35 நாட்களுக்குப்
ன் 25 கிலோ தழைச்சத்து உரத்தையும்'
ருணா'' நெல் நடப்பட்ட 25 நாளில் 25 கிலோ
ழைச்சத்து உரத்தையும் மேலுரமாக இட
ண்டும்.

**களையெடுப்பு.**—ஆடுதுறை-27, கோ.-29
கியவைகள் நடப்பட்ட 30 நாளிலும்,
ஆர். 8, ஜெயா ஆகியவைகளுக்கு நட்ட 40-வது
ளிலும் இரண்டாவது முறை'களையெடுக்கவும்.

**பயிர்ப் பாதுகாப்பு.**—ஆடுதுறை-27, கோ.-29
யா ஆகியவைகள் தொண்டைப் பூ கதிர்
வத்தில் இருந்தால் 0·05 சத பாரத்தியானையோ
லது 0·04 சத எட்ன்ரினையோ தெளிக்கவும்.
ஆர். 8 நெல்லிற்கு தொண்டைக் கதிர் (பூட்டை
வத்தில்) மேற்கூறப்பட்ட மருந்துடன் ''டைத்
யா கார்பமேட்'' கலந்து தெளிக்கவும்.

**தானியங்கள் :—**

பெரும்பாலும் ஆனி, ஆடி மாதங்களிலேயே
ளம். கம்பு, ராகி ஆகியவைகள் மானாவாரி
க விதைக்கப்பட்டு விடுவதால், அவைகளுக்குக்
எடுத்தல், பயிர்ப்பாதுகாப்பு செய்தல் ஆகிய
லைகளை இம்மாதத்தில் மேற்கொள்ள வேண்டும்.
ரமநாதபுரம் மாவட்டத்தில் ஆவணி மாதத்தில்

மானாவாரியாக ராகி பயிரிடுபவர்கள் கே. 2 கருஞ்சுருட்டை ராகியை விதைக்கலாம். சேலம், கோவை, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் மானாவாரி கம்பு பயிரில் கதிர்கள் வந்தவுடன் ஏக்கருக்கு 4 கிலோ முதல் 8 கிலோ பி.எச்.சி. மருந்து தூவுதல் நல்லது.

நிலக்கடலை :—

ஆனி, ஆடி மாதங்களில் விதைக்கப்பட்ட மானாவாரி மணிலாவில் சிவப்புக் கம்பளிப் புழுக்கள் தோன்றி பெரும் சேதம் விளைவிக்கக்கூடும். சிவப்புக் கம்பளிப் புழுக்களை ஒழிக்கத் தமிழ் நாடு அரசு ஹெலிகாப்டர் ஆகாய விமானம் மூலமாக பெரும் பரப்பில் மருந்து தெளிக்க ஆவன செய்துள்ளது. இச்சலுகையை உழவர் பெருமக்கள் பயன்படுத்திக் கொள்வார்களாக.

பருத்தி :—

புரட்டாசிப் பட்டமான பருத்திக்கு ஆவணியிலேயே நிலம் தயாரிக்கவும். புரட்டாசிப் பட்டத்திற்குப் பொருத்தமான எம்.சி.யு. 5, ''பாரதி'' ஆகிய பருத்திகளின் விதைகளை முன்கூட்டியே வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.

மேற்கூறிய முறைகளை உழவர் பெருமக்கள் பின்பற்றினால், உணவு உற்பத்தியும், மற்றும் வணிகப் பயிர்களின் உற்பத்தியும் பெருகும் என்பது திண்ணம். எனவே திட்டமிடுங்கள். திட்டமிட்டபடி செயல் படுங்கள். வெற்றி நிச்சயம்.

''எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்''

—குறள்.



# C I P E T



**எ**த்தனையோ பேண்டுகள், சட்டைகள், சேலைகள் கண்ணைக் கவரும் வண்ணங்களில் வரும் பிளாஸ்டிக் சாமான்களுக்கு ஒவ்வொரு வீட்டிலும் பண்டமாற்று ஆவது அன்றாடம் நடக்கும் சாதாரண நிகழ்ச்சி ஆகி விட்டது.

விதவிதமான குழந்தை விளையாட்டுச் சாமான்கள், மாணவர்களுக்கேற்றவாறு ஸ்கேல், முக்கோணம், அரை வட்டம் என்று எத்தனை எத்தனை வகை!

கிண்ணம், வாளி, புட்டி, தூக்குக்கூடை என்று வண்ண வண்ணமாக அன்றாடம் வீட்டில் உபயோகப்படும் பொருள்கள் சொல்லி முடியாது !

இப்படி எல்லாருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டு எல்லாருக்கும் பயன்படும் இந்த பிளாஸ்டிக், தொழிற்சாலைகளில் கூடப் பெரிதும் பயன்படுகிறது.

சுருக்கமாகச் சொன்னால் இதை ''பிளாஸ்டிக் யுகம்'! என்றே சொல்லலாம்.

நமது அன்றாட வாழ்க்கையில் அவ்வளவு முக்கியத்துவம் பெற்றுவிட்டது பிளாஸ்டிக். ஒருவேளை சாப்பிடாமல் இருந்தாலும் இருக்கலாம், ஆனால் பிளாஸ்டிக் சாமான்களை உபயோகிக்காமல் ஒருநாள் கூட எவரும் இருக்க முடியாது என்றாகிவிட்டது.

முன்பெல்லாம் ''ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'' என்று சொல்வார்கள். இனிமேல் பிளாஸ்டிக் இல்லா வீட்டிற்கழகு பாழ் என்றுதான் சொல்லவேண்டும். அவ்வளவு தூரம் நமது அன்றாட வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றுவிட்ட பிளாஸ்டிக் சாமான்களைச் சென்னை, பம்பாய், கல்கத்தா, தில்லி, பெங்களூர், பரோடா போன்ற பல இடங்களில் உற்பத்தி செய்கிறார்கள்.

இந்த இடங்களில் உள்ள தொழிற்சாலைகள் பிளாஸ்டிக் சாமான்களைச் செய்கின்றன.

ஆனால்..........

இந்தப் பிளாஸ்டிக் சாமான்கள் செய்யும் அச்சுகள் இந்தியாவில் இதுவரையில் தயாரிக்கப்படவில்லை.

இந்தக் குறையை நிவர்த்தி செய்யவும்,

பிளாஸ்டிக் தொழிற்சாலைகளுக்குத் தேவையான எஃகு அச்சுகளைத் தயாரிக்கும் முறைகளைச் சொல்லிக் கொடுக்கவும்,

பிளாஸ்டிக் தொழிற்சாலைகளுக்கு ஏற்படும் தயாரிப்பு முறைகளின் சிக்கலுக்குத் தகுந்த ஆலோசனை கூறவும்,

சென்னையிலுள்ள கிண்டி தொழிற்பேட்டையில் மத்திய அரசு, பிளாஸ்டிக் அச்சு தயாரிப்புப் பயிற்சி நிலையம் (சிபெட்) ஒன்றை நிறுவியுள்ளது.

இதனை ஜூலை 25-ஆம் நாள் மத்திய அரசாங்க அமைச்சர் திரு. திரிகுணசென் அவர்கள் கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் திறந்து வைத்தார்.

இந்த நிலையத்திற்காகச் சுமார் 8 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தைத் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. சுமார் 50 லட்ச ரூபாய் செலவில் உருவான இந்தப் பயிற்சி நிலையம் பிளாஸ்டிக்

தொழிலில் நிச்சயம் ஒரு புரட்சியை ஏற்படுத்த முடியும்!

இத்தகைய நிறுவனம் இந்தியாவில் வேறெங்கும் இல்லை. தமிழ்நாட்டில்தான் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

பிளாஸ்டிக் சாமான்கள் செய்வதற்குத் தேவையான மூலப் பொருளான பிளாஸ்டிக் பவுடர் தயாரிக்க அநேக தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன.

ஆனால் பலவிதமான பிளாஸ்டிக் பொருள்களைச் செய்வதற்கு வேண்டிய தனிப்பட்ட இயந்திரங்கள், சிறந்த எஃகு அச்சுகள் அதிகமாகத்தேவைப்படுகின்றன.



இவ்வித அச்சுத் தயாரிப்புத் திறமையை அதிகரிக்கவே இந்த நிலையம் நிறுவப்பட்டுள்ளது என்கிறார் அதனுடைய இயக்குநர், ஓய்வு பெற்ற பிரிகேடியர் ஏ. எப். யுஜின் அவர்கள்.

நிலையத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே வருகிறோம்.

ஓரிடத்தில் நான்கைந்து பேர் தொப்பி போன்ற இரும்பின் மேல் தேய்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அவர்கள் தேய்த்துக்கொண்டு இருப்பது மின் விளக்குகளுக்கு உபயோகிக்கும் பிளாஸ்டிக் ''ஷேடுகள்'' தயாரிக்க உதவும் ''மோல்டு''—அதாவது எஃகு அச்சு என்று விளக்கம் தருகிறார் உதவி இயக்குநர்.

சரிதான் ஏதோ ஒரு நாளில் முடிந்துவிடும் வேலையாக்கும் என்று நினைக்கும்போதே நம் எண்ணத்தை அறிந்து கொண்டவர் போல, ஒவ்வொரு உறுப்பிற்கும் ''பாலிஷ்'' செய்வதற்கு மட்டும் இரண்டிலிருந்து மூன்று வாரமாவது ஆகும் என்கிறார்.

அப்படியானால் இந்த அச்சுகளைச் செய்வதற்கு எத்தனை நாள் ஆகுமோ என்று நாம் நினைக்கிறோம்.

மூன்று மாதங்களாவது தேவை என்று பதில் கிடைக்கிறது.

இங்கு பிளாஸ்டிக் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கும் அரசாங்க நிலையங்களிலிருந்து வருபவர்களுக்கும் மட்டுமே பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது 36 நிறுவனங்களில் இருந்து 55 மாணவர்கள் வந்து பயிற்சி பெறுகிறார்கள். இங்கு 80 மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கான வசதி இருக்கிறது. தொழிற் பயிற்சி இங்கு இலவசமாக அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுவோருக்கு உணவு விடுதி தனியாக உள்ளது. இதில் 60 மாணவர்கள் தங்குவதற்கு வசதி இருக்கிறது. ஆனால் உணவுச் செலவு மட்டும் பயிற்சி பெறுபவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சித் திட்ட (U.N.D.P.) உதவியுடன் தொடங்கப்பட்டுள்ள இந்த நிலையத்தில் தற்போது அனைத்து நாடுகள் தொழிலாளர்கள் ஸ்தாபனத்தின் நான்கு வல்லுநர்கள் பயிற்சியளிக்கிறார்கள். ஓரிரு இயந்திரங்களைக் கூட இந்த நிறுவனம் இதற்கு வழங்கியுள்ளது. மிக முக்கிய இயந்திரங்கள், குளிர் பதன அறையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையத்தில்—

- அச்சு செய்தல் (Mould making);
- புதிய புதிய அச்சுகள் தயாரித்தல் (Mould design);
- அச்சுகளுக்குப் பாலிஷ் கொடுத்தல்;
- அச்சு வார்க்கத் தேவையான இயந்திரங்களை அமைத்தல்

ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இங்கு பிளாஸ்டிக் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான எஃகு அச்சுகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இருபது அச்சு வார்ப்புகள் செய்யத் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் பல சிறு தொழில்கள் வளரவும், பிளாஸ்டிக் பொருள்கள் உற்பத்தி அதிகரிக்கவும் வாய்ப்பு இருக்கிறது.







## தொழிலாளர் நலம் காப்போம்!

தமிழகத் தொழிலாளர் நல அமைச்சர் திரு. கா. வேழவேந்தன் அவர்கள் தலைமையில் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. காட்டூர் கோபால், தொழிலதிபர்கள் சங்கத் தலைவர் திரு. என். எஸ். பட், மற்றும் பல்வேறு உயர்மட்ட அதிகாரிகள் அடங்கிய தூதுக் குழு 1970 ஜூலை 24-அன்று மாலை 4 மணிக்கு புதுடில்லியிலுள்ள தொழிலாளர் நல அமைச்சர் திரு. சஞ்சீவையா அவர்களைச் சந்தித்து, தொழிலாளர் அரசு இன்சூரன்ஸ் வசதித் திட்டத்தில் ஒரு தொழிலாளிக்கு ஓராண்டிற்கு ரூ. 50 மட்டும் தான் செலவழிக்கவேண்டும் என்று கொண்டுவந்திருக்கிற உச்ச வரம்பைத் தளர்த்த வேண்டும் என்றும், கோவையிலும், மதுரையிலும் தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவ மனைகளைப் பழைய திட்டத்தின்கீழ்த் திறந்து நடத்தவேண்டும் என்றும் கோரிக்கைகளை விடுத்தது. 22 பக்கங்கள் அடங்கிய கோரிக்கை மனு ஒன்றை எல்லா விவரங்களையும் விளக்கி திரு. கா. வேழவேந்தன் அவர்கள் மத்திய அமைச்சரிடம் அளித்து, லட்சோப லட்சம் தமிழகத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியான சூழ்நிலையை விளக்கமாக எடுத்துரைத்தார்.

சஞ்சீவையா அவர்கள் கோரிக்கையை ஆழ்ந்து பரிசீலனை செய்வதாகவும், இப்போது தமிழ்நாட்டில் அமைந்துள்ள தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனைக் கட்டடங்களுக்கு ஆண்டொன்றுக்கு வசூலிக்கும் ரூ. 20 லட்சம் வாடகையைத் தள்ளுபடி செய்ய முயல்வதாகவும், 50 ரூபாய் உச்ச வரம்பை, இ. எஸ். ஐ. மத்திய நிறுவனத்துடன் கலந்து பேசி, மறுபரிசீலனை செய்ய முயல்வதாகவும் தூதுக் குழுவினரிடம் எடுத்துரைத்தார்.

# கதர்-கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம்-வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:

**கதர் கிராமத் தொழில் துறை**
௨, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.


# ஒரு துப்பறியும் கதை



**ம**கனைக் காணவில்லை!

தந்தை பதறுகிறார். வீட்டை விட்டுச் சென்று நாட்கள் பல ஆயின. அவனோ கட்டிளங் காளை. வயது 22.

சில நாட்களாக ஆளைக் காணோம். எங்கு சென்றானோ? என்ன ஆனானோ?

தந்தை போலீசில் புகார் செய்கிறார். போலீசார் புலன் விசாரணை செய்கிறார்கள்.

காணாமல் போன நாளன்று யாரோ சிலருடன் சுற்றித் திரிந்தானாம். அதன் பின் காணப்படவில்லை. போலீசார் சுறுசுறுப்புடன் இயங்குகிறார்கள். மறைந்த மகனோடு சுற்றித் திரிந்தவர்கள் சிக்குகிறார்கள்.

புலன் விசாரணை தீவிரமடைகிறது. அந்த இளைஞன் கொலை செய்யப்பட்டு ஊருக்கு வெளியில் உள்ள ஒரு குளத்தில் கல்லோடு கட்டி அமுக்கப்பட்டிருப்பது வெளியாகிறது. உடல், வெளியில் எடுக்கப்படுகிறது. ஆணா பெண்ணா என்றுகூடத் தெரியாமல் உருவம் அழிந்த நிலையில் உடல் இருக்கிறது. சுருங்கக் கூறுவோமானால், மிஞ்சியது மண்டையோடும் எலும்புகளும் தான்.

ஒரு கொலை வழக்கில் மிக முக்கியமானது, உருவம் அழிந்த நிலையில் இருக்கும் உடலையோ அல்லது எலும்புக் கூட்டையோ வைத்து இவர்தான் கொலை செய்யப்பட்டவர் என்று நிரூபிப்பதாகும்.

கொலை செய்யப்பட்ட இளைஞரின் மண்டையோடு, எலும்புக் கூடு ஆகியவை சென்னை பெரிய மருத்துவ மனைக்கு அனுப்பப்படுகின்றன. குற்றவியல் பிரிவு இவற்றைப் பரிசோதனை செய்கிறது.

கொலை செய்யப்பட்டவரின் வயது, அவரது உயரம், பல்லின் அமைப்பு, முக அமைப்பு ஆகியவை மிக நுணுக்கமாகச் சோதனைகள் செய்யப்படுகின்றன.

இந்த எலும்புக்கூட்டுக்கு உரியவர் இந்த இளைஞர்தான் என்று நிர்ணயிக்கப்படுகிறது.

வழக்கு நடக்கிறது. கொலைக் குற்றம் நிரூபணமாகிறது. குற்றவாளிகள் தண்டனை அடைகிறார்கள்.

சென்னை பெரிய மருத்துவ மனையில் உள்ள குற்றவியல் பிரிவு (Forensic Department) உலகில் மற்ற நாடுகளில் உள்ள சிறந்த குற்றவியல் பிரிவுக்கு இணையாகச் செயலாற்றிச் சிறப்புப் பெற்று வருகிறது.

ஆளவந்தார் கொலை வழக்கு, சூரியநாராயணா கொலை வழக்கு, கங்கவல்லி கொலை வழக்கு போன்ற பிரபல கொலை வழக்குகளில் துப்புத் துலக்குவதற்கு உதவியாக இருந்தது, சென்னை பெரிய மருத்துவ மனையில் உள்ள குற்றவியல் பிரிவுதான்.

சட்டத்தை அமுல் நடத்துவதில் மருத்துவ விஞ்ஞானம் அளிக்கும் உதவியே குற்றவியல் பிரிவு புரியும் பணியாகும். இந்தக் குற்றவியல் பிரிவு புரிகின்ற பணியின் பயனைக் காவல்துறையினரும் வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதில் பெரும் பயன் அடைகிறார்கள். இப் பிரிவினருக்குக் குற்றம் சாட்டியவரைப் பற்றியோ குற்றம் சாட்டப்பட்டவரைப் பற்றியோ கவலை இல்லை. நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு உதவி புரிவதும், உண்மையை வெளிப்படுத்தி ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டவருக்கு நீதி கிடைக்க வகை செய்வதுமே முக்கிய பணிகளாகும்.

குற்றவியல் பிரிவுக்கு நாள் தோறும் விதம் விதமான வழக்குகள் சம்பந்தப்பட்டவை ஆய்வுக்கு வருகின்றன. போக்குவரத்து விபத்து, தூக்கிட்டுக்கொள்ளுதல், நஞ்சு அருந்துதல், நீரில் மூழ்குதல், கொலை, கற்பழித்தல் ஆகியவை இவற்றில் முக்கியமானவையாகும்.

போக்குவரத்தை எடுத்துக் கொள்வோம். இந்த விபத்துக்களில் முதலிடம் வகிப்பவை லாரிகள்! மோட்டார் போன்ற இயந்திர வாகனங்கள் ஓட்டு

வதில் கண்டிப்பான சட்டதிட்டங்கள் உலக நாடுகள் எல்லாவற்றிலும் இருந்தாலும், வேகமாக ஓட்டுதல், தடை செய்யப்பட்ட பகுதிகளில் ஓட்டுதல் போன்றவை எங்கும் உள்ளன. 369 விபத்துக்களில் 231 விபத்துக்கள் லாரிகளாலும், பஸ்களாலும் ஏற்படுவனவாகும். விபத்துக்குக் காரணம் ஓட்டுநராகவும் இருக்கலாம், அல்லது தெருவில் நடப்பவராகவும் இருக்கலாம். தெருவில் நடப்பவர் குருடராகவோ அல்லது குடிபோதையில் இருப்பவராகவோ இருந்தால் லாரி ஓட்டுபவரைக் குறை சொல்லிப் பயன் என்ன?

இதுபோன்ற சமயங்களில் 'குற்றவியல் பிரிவு' விபத்துக்குக் காரணம் யார் என்பதற்கு ஆய்வு மூலம் சரியான காரணத்தைக் கண்டுபிடிக்க உதவுகிறது.

ஒரு பிணம் பரிசோதனைக்காக வருகிறது. மருத்துவ அதிகாரி பரிசோதனை செய்கிறார். மரணம் அடைந்ததற்குக் காரணத்தை அறியும் வகையில் பரிசோதனை நுணுக்கம் மிகுந்ததாக இருக்கிறது.

தூக்கில் தொங்கியவருக்குக் கழுத்தில் சுவடு இருக்கும். குளத்தில் மூழ்கியவரின் உடம்பு வீங்கி இருக்கும். போக்குவரத்து விபத்தில் சிக்கியவருக்கு ஆங்காங்கே காயம், எலும்பு முறிவு ஆகியவை இருக்கும். கொலை செய்யப்பட்டவரின் உடம்பில் விதம் விதமான தடயங்கள் இருக்கலாம்.

சில சமயங்களில் நடந்தது ஒன்றாகவும், தெரிவிக்கப்பட்டது ஒன்றாகவும் இருக்கலாம். தூக்கில் தொங்கித் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்பட்டவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம். அது போன்ற சமயங்களில் குற்றவியல் பிரிவினரின் பணி மிக முக்கியமானதாக அமையும்.

### ஆராய்ச்சி

நஞ்சருந்தி மரணம் அடைந்தவராக இருந்தால் அவரது பெருங்குடல், சிறு குடல், ஈரல், மூத்திரக்காய் ஆகியவை பரிசோதனை செய்யப்படுகின்றன. பிரேத பரிசோதனையின்போது அவை பிரிக்கப்பட்டுப் பாதுகாப்பான ஜாடிகளில் வைக்கப்பட்டுச் சென்னை கடற்கரைச் சாலையில் உள்ள குற்றவியல் ஆய்வுச் சாலைக்கு அனுப்பப்படுகின்றன. ஆராய்ச்சிக்குப் பின்னர் அங்கிருந்து வரும் அறிக்கையை ஒட்டி மருத்துவமனைக் குற்றவியல் பிரிவுப் பேராசிரியர் மரணத்தின் காரணத்தை நிர்ணயிக்கிறார்.


இவர்தான்


ஆளவந்தார்

அடையாளம் கண்டுபிடிக்க முடியாத பிணத்தின் தலையை 'எக்ஸ்ரே' எடுத்து, இவர்தான் அவர் என்று கருதப்பட்டவரின் புகைப்படத்தையும் பிலிம்ஸ் (Films) தலை அளவு பெரிதுபடுத்தி, இரண்டையும் இணைத்துப் பார்த்து அடையாளம் கண்டுபிடிப்பதும் இத்துறையில்தான்.

காலத்திற்கும், மக்கள் தொகைக்கும் ஏற்ற வகையில் உலகில் இன்று குற்றம் புரியும் முறையும் அளவும் விரிந்து வருகின்றன. அதற்குத் தகுந்தபடி குற்றவியல் மருத்துவப் பிரிவும் தனது பணியை உலகெங்கிலும் வளர்த்து வருகிறது. குற்றவியல் மருத்துவ வரலாற்றில் சுவை மிகுந்த செய்திகள் பல உண்டு.

ஓர் ஊரில் மொட்டைக் கடிதங்கள் ஏராளமாக எழுதியதாக ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. இந்தக் கடிதங்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டதில், கடிதத்திற்கான தபால் தலைகள் எல்லாம் எச்சிலால் ஈரமாக்கப்பட்டு ஒட்டப்பட்டிருந்தன. அவை பரிசோதிக்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவரின் இரத்தம் பரிசோதிக்கப்பட்டது. இந்தப் பிரிவு இரத்தம் உள்ளவரின் எச்சில் இப்படித்தான் இருக்கும் என்பது விஞ்ஞானம் கண்ட உண்மை. தபால் தலையில் உள்ள எச்சிலும் பரிசோதனைக்குட்பட்டவரின் எச்சிலும் ஒன்று. குற்றவாளி பிடிபட்டார்!

மற்றொரு வழக்கு சுவையானது. ஒரு காவல் நிலையத்தின் தலைமைக் காவலர் தேநீர் அருந்தத் தனது கோப்பையை எடுத்தார். அதில் இருந்தது தேநீர் அல்ல—சிறுநீர்! அங்கு இருந்தவர் மொத்தம் பதினைந்து பேர். அனைவரின் சிறுநீரும் பரிசோதனை செய்யப்பட்டது. தேநீர் பாத்திரத்தில் சிறுநீர் கழித்த ஆசாமி அகப்பட்டுக் கொண்டார்!

வீட்டை உடைத்துத் திருடுகிறவர்கள் சும்மா போக மாட்டார்கள். தின்பதற்கு ஏதாவது கிடைத்தால் அவற்றைத் தின்றுவிட்டுத்தான் செல்வார்கள். ஒரு சமயம் வீடு புகுந்து திருடிய ஒருவர் வீட்டில் இருந்த ஓர் ஆப்பிள் பழத்தைக் கடித்துத் தின்றுவிட்டுப் பாதியைப் போட்டுவிட்டு ஓடிவிட்டார். பரிசோதனையின்போது திருடிய ஆளுக்கு 2 பற்கள் இல்லை என்பதை ஆப்பிள் பழம் அழகாகக் காட்டிக் கொடுத்து விட்டது. முடிவில் ஆள் பிடிபட்டார். தண்டனை பெற்றார்.

''ஒரு பல்லை மட்டும் கொடுங்கள். பல்லுக்கு உடையவரின் வயதைக் கூறுகிறோம்'' என்கிறார் சென்னைக் குற்றவியல் மருத்துவப் பேராசிரியர் டாக்டர் சி. பி. கோபாலகிருஷ்ணா.

ஒரே எலும்பை வைத்து ஆணா பெண்ணா என்று தீர்மானிக்க முடியும் என்று கூறும் இவர், ஆளவந்தார் கொலை வழக்கு, சூரிய நாராயணா கொலை வழக்கு முதலியவற்றை ஆராய்ந்தவராவார்.

ஆளவந்தாரின் தலை சென்னை ராயபுரம் கடற்கரையில் கிடந்தது. உடலோ, இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ் ரயிலில் மானாமதுரையில் அகப்பட்டது.

இந்தத் தலைதான் இந்த உடலுக்கு உரியதென்றும் இந்த உடலும் தலையும் ஆளவந்தாருடையவைதாம் என்றும் நிரூபித்தது எப்படி?

ஆளவந்தார் முன்னாள் ராணுவத்தினர். ராணுவ அடையாளப் புத்தகத்தில் இருந்த அவருடைய கைரேகையும் இந்தோ சிலோன் எக்ஸ்பிரசில் பயணம் செய்த உடலின் கைரேகையும் ஒன்று.

ராயபுரம் கடற்கரையில் கிடந்த தலையின் பற்களில் ஒன்று ''தெற்றுப் பல்'' அதாவது வரிசையாக இருந்த இரண்டு பற்களில் மேல்வரிசையில் ஒன்று முளைத்து இருந்தது. வலது புறக் காதில் இரு ஓட்டைகள் இருந்தன. (இவற்றை ஆளவந்தாரின் மனைவி கூறிய சாட்சியங்கள் உறுதிப்படுத்தின).


இது பெண் அல்ல, குற்றவியல் பொருட்காட்சிக்காகச் செய்யப்பட்ட பொம்மை!

தலையில் இருந்த முதுகெலும்புத் தொடரும் உடலில் இருந்த முதுகெலும்புத் தொடரும் சரியாக இணைந்தன.

மேலே குறிப்பிட்டவை மூலம் ஆளவந்தாரின் உடல் இது தான் என்று நிர்ணயம் செய்யப்பட்டது.

இதுபோல் குற்றவியல் மருத்துவத் துறை துப்புத் துலக்கிய வழக்குகள் ஏராளம். குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைப்பதன் மூலம் நாட்டில் தீய சக்திகள் ஒழியும். அதன் காரணமாகச் சிறப்பான சமுதாயம் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

---

**உலகிலேயே துப்புத்துலக்குவதில் புகழ் பெற்றவர்கள் ஸ்காட்லாந்துயார்டு துப்பறியும் பிரிவினர். அதுபோன்று இந்தியாவில் குற்ற இயல்களைக் கண்டுபிடிப்பதில் சிறந்து விளங்குகின்றனர் தமிழ்நாட்டுக் காவல்துறையினர்.**




நாஞ்சில் தமிழ்க்கிள்ளாய்! நாடுபல கண்டனையே
தீஞ்சொல் தமிழரசுச் செய்திகளை—வாஞ்சையுடன்
சொல்லாய், எனக்கிங்கே; சோறுடனே பால்
கலந்து
நல்ல விதந்தருவேன் நான்.

பொன்னிழையாய்! என்தோழி! போற்றும் தலை
நகராம்
சென்னை நகர்ச்செய்தி செப்புவேன்—கன்னலெனும்
அன்னை மொழியே அலுவ லகமெல்லாம்
மன்னிடவே கண்டேன் மகிழ்ந்து.

கூற்றைப்போல் தீங்கிழைக்கும் கூவ நதியதனின்
நாற்றமெலாம் மாற்றியதில் நங்கையுடன்—
ஆற்றின்கண்
ஓட மதைச்செலுத்தி உல்லாச மாய்க்களிக்க
நாடும் பணிகண்டேன் நன்கு.

தண்ணார் தமிழகந்தான் தந்த தவப்புதல்வன்
அண்ணா சிலையுடனே ஆய்தமிழின்—கண்ணனைய
கண்ணகியும் போப்பும் கவியரசுக் கம்பன் முதல்
எண்ணும் சிலைகண்டேன் இங்கு.

சாதி ஒழித்துச் சமயப் பகையொழித்து
நீதி நிலவும் நெறிவளர—ஓதுபுகழ்த்
தங்கப் பதக்கங்கள் தந்து கலப்புமணம்
இங்கு வளர்ந்திடுமால் இன்று.

ஓலைக் குடிசைகளில் ஒட்டிக் கிடந்தார்க்குச்
சாலையுடன் கல்வீடு சால்புடனே—கோலமுறக்
கட்டிக் கொடுத்த கருணையதை என்னென்பேன்!
இட்டமுறு பணியன்றோ ஈது ?

மக்கள் குறையை மரநீழல் மன்றத்தே
அக்கணமே தீர்க்கும் அழகதனை—திக்கெல்லாம்
பாடிப் பரவிடலாம்; பண்டை மனுச்சோழன்
நாடியிவண் வந்தனனே நன்கு !

'அரிசி' 'அரிசி'யென அல்லும் பகலும்
வரிசை வரிசையாய் மக்கள்—தெருவெல்லாம்
நின்ற நிலைநீங்கி நெஞ்சம் மகிழரிசிக்
குன்றுகளைக் கண்டேன் குளிர்ந்து.

படியரிசி பெற்றிட்ட பல்லா யிரவர்
குடிதழுவிக் கோலோச்சும் கோவை—அடிதழுவி
வாழ்த்துகின்றார் இவ்வரசை ; வாழியபல்
லாண்டென்றே
தாழ்த்துகின்றார் தத்தம் தலை.

அருளும் பொருளும் அவனியெலாம் பொங்கி
இருளொழிந்து வாழியவே இன்பம்!—பொருள்
நிறைந்த
நற்றாள் தமிழரசுப் பத்திரிகை நாடெல்லாம்
கற்றாயக் கண்டேன் களித்து.



**நா**னூறு ஆண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கீசியர்கள் நம் நாட்டுக்கு அறிமுகப்படுத்தியதுதான் முந்திரி!

ஒரு பழத்தின் கொட்டை அந்தப் பழத்துக்கு வெளியே நீட்டிக் கொண்டிருப்பது மக்களுக்கு அதிசயமாக இருந்தது. அதனால்தான் எதையும் முன்னால் பேசுபவர்களை "முந்திரிக் கொட்டை" என்று கேலியாகச் சொல்லும் வழக்கம் ஏற்பட்டது. அந்நியச் செலவாணி திரட்டித் தருவதில் பெரும் பங்கு வகிக்கிறது முந்திரி. இந்நிலை ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து வருகிறது!

இது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். 1925-ம் ஆண்டில் 50 டன் மட்டுமே ஏற்றுமதி செய்து, சில இலட்ச ரூபாய்களே வருவாயாக இருந்த நிலைமையிலிருந்து 1966–67-ல் 50,800 டன் ஏற்றுமதியாக உயர்ந்து 42.89 கோடி ரூபாய் வருவாயை ஈட்டியிருக்கிறது. இத்துடன் முந்திரி ஓட்டின் எண்ணெய் 11,300 டன் ஏற்றுமதி செய்யப்பட்டு 1.92 கோடி ரூபாய் வருமானத்தையும் சேர்த்தால் அந்நியச் செலாவணி மொத்தம் 44.81 கோடி ரூபாயாக வளர்ந்திருக்கிறது.

1968-69-ம் ஆண்டில் மட்டும் 64,500 டன் முந்திரிப் பருப்பும் 10,450 டன் முந்திரி ஓட்டு எண்ணெய்யும் ஏற்றுமதி செய்ததன் மூலம் 63·18 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைத்துள்ளது.

முந்திரிப் பழச்சாற்றிலிருந்து சுவைமிக்க பானம் தயாரிக்கவும், முந்திரிக் கொட்டையின் மேல் ஓட்டிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்யைப் பல வகைகளில் உபயோகிக்கவும் வாய்ப்புள்ளது.

எனவே முந்திரி சாகுபடியில் தற்போதுள்ள நிலைமையை கவனித்து அதைத் தீவிரமாக்க வேண்டிய முக்கிய கட்டத்தில் இப்பொழுது நாம் இருக்கிறோம். உலக வியாபார அரங்கில் நம் நாட்டு முந்திரிப் பருப்புக்கு இருக்கும் தனிப் பெருமையை நிலை பெறச் செய்ய வேண்டுமானால், அந்நியச் செலாவணியைப் பெருமளவில் ஈட்ட வேண்டுமானால், முந்திரி உற்பத்தியைப் பெருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

### முந்திரி சாகுபடிப் பரப்பைப் பெருக்குவதற்குள்ள வாய்ப்பு:—

தமிழ்நாட்டில் முந்திரிப்பயிரின் பரப்பு சென்ற 15 ஆண்டுகளாக பெருகிக் கொண்டே வந்திருக்கிறது என்பது மகிழ்ச்சியூட்டும் செய்தியாக உள்ளது. 1951–52-ல் தமிழ்நாட்டில் 27,000 ஏக்கராக இருந்து 1965–66-ல் 1,17,000 ஏக்கராக உயர்ந்திருக்கிறது. அரசாங்கக் காட்டிலாக் காவினரின் 54,510 ஏக்கர் முந்திரிப் பரப்பையும் சேர்த்துக் கொண்டோமானால் தமிழ் நாட்டின் சாதனை பெருமைப்பட வேண்டியதேயாகும். மேலும் சுமார் 56,627 ஏக்கர் நிலங்களில் முந்திரி சாகுபடி செய்வதற்கு வா ப்பு உள்ளது எ்பதும் தெரிய வந்துள்ளது.

தற்பொழுது தமிழ்நாட்டில் மட்டும் 1,77,000 ஏக்கராவில முந்திரி பயிரிடப்படுகிறது. ஆனால் ஆண்டு ஒன்றுக்கு 1.34 லட்சம் முந்திரிப் கொட்டையே உற்பத்தி ஆகிறது. ஆகவே நான்காவது திட்ட காலத்தில் தமிழ் நாட்டில் மட்டும் 26,000 ஏக்கராவில் முந்திரி பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

மற்ற எந்தப் பயிரும் சாகுபடி செய்ய முடியாத வளம் குன்றிய தரிசு நிலங்களிலும் முந்திரி சாகுபடி செய்யலாம். எனினும் அதற்கேற்ற வெப்ப தட்ப நிலை, மண்வளம், அதன் தன்மை, ஆழம் போன்றவற்றையும் முந்திரி சாகுபடி செய்யக் கருத்திற் கொள்ள வேண்டும். சரளை கலந்த செம்மண் மேட்டு நிலங்களும், நீர் ஈர்க்கும் தன்மை குறைந்த வளம் குன்றிய மணல் நிலங்களும், குளிர்ந்த வெப்ப தட்ப நிலையுடைய மலையடிவாரப் பகுதியிலும் முந்திரியின் வளர்ச்சி பயனற்று, பூப்பூத்தல் தாமதப்படுவதாலும் முந்திரியை வெற்றிகரமாக சாகுபடி செய்ய முடியாது. ஆனால் கடலோரப் பகுதியிலும், கடலிலிருந்து சுமார் 60—70 மைல் தூரம் உள்ள பகுதியிலும் முந்திரி சாகுபடிக்கு ஏற்ற நிலங்கள் இருக்கின்றன. எனவே, இப்பகுதிகளை முந்திரி பயிரிடப் பயன்படுத்தலாம். கடலோர மாவட்டங்களிலும், திருச்சி மாவட்டத்திலும் இருக்கின்ற 12 லட்சம் ஏக்கர் சாகுபடித் தரிசு நிலங்களில் சுலபமாக 1 லட்சம் ஏக்கர் பரப்பளவில் முந்திரியைப் பயிரிட வாய்ப்புள்ளது.



இராமநாதபுரம் மாவட்டத்திலும், புதுக்கோட்டைப் பகுதியிலும் முந்திரி சாகுபடிக்கேற்ற செம்மண் நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. திருநெல்வேலி கடற்கரையோரப் பகுதியிலும் முந்திரி சாகுபடிக்கேற்ற ''செவ்வல் தேரிகள்'' என்ற நிலங்கள் உள்ளன.

இப்பகுதிகளிலெல்லாம் முந்திரியைப் பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்க வாய்ப்புள்ளது.

ஆகவே முந்திரி அபிவிருத்திப் பணியில் உடனடியாக இந்த உபரி நிலங்களிலும் முந்திரியை நட்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது முதல் அம்சமாகும்.

### மகசூலைப் பெருக்குவதற்குரிய வழி முறைகள் :—

முந்திரியின் பரப்பைப் பெருக்குவதோடு மட்டும் அல்லாமல், மரங்களின் மகசூலையும் அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில், தற்பொழுதுள்ள மரங்களில் காய்ப்பு மிகவும் குறைந்த அளவிலேயே கிடைக்கிறது. சராசரியாக ஏக்கருக்கு 150 கிலோதான் கிடைக்கிறது என்பது கணக்கிடப்பட்டிருக்கிறது. இத்தகைய மகசூல் மிகவும் குறைந்ததே. முந்திரித் தோட்டங்களை நன்கு கவனிக்கும் பொழுது மரத்துக்கு மரம் மகசூலின் அளவு மாறுபட்டிருப்பதைக் காண்கிறோம். தனிமரம் ஒன்றே 80 கிலோ வரையும் மகசூல் தரக்கூடும் என்றும் பார்க்கிறோம். இது இயற்கையே. உயர்ந்த அளவு மகசூல் கொடுக்கும் தாய் மரங்களிலிருந்து கொட்டைகளைத் தேர்ந்தெடுத்து உபயோகித்தோமானால், கணிசமானஅளவுக்குத் தோட்டங்களின் சராசரி மகசூலை அதிகப்படுத்த முடியும். இத்துறையில் அரசினர் கவனம் செலுத்தி, ஆண்டு தோறும் பெரும் அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட விதைக் கொட்டைகளை, முந்திரி பயிரிடுவோர்களுக்கு விநியோகித்து வருகிறார்கள்.

சாதாரணமாக, முந்திரி விதைக் கொட்டைகளை நேரிடையாகவே, குழிகளில் ஊன்றி விடுகிறார்கள். இவ்வழக்கம் முற்றிலும் பயனுள்ளதும் அல்ல உகந்ததும் அல்ல. ஏனெனில் பல இடங்களில், பல சமயங்களில் இம் முறையின் மூலம் கொட்டைகள் நன்றாக முளைத்து, சீராக வளராமல் போய் விடுகின்றன என்பதைக் காண்கிறோம். அதனால் மீண்டும் மீண்டும் கொட்டைகளை ஊன்ற வேண்டிய நிர்ப்பந்தமும்ஏற்பட்டு செடிக்குச் செடிவயதிலும், உருவத்திலும் வேற்றுமை ஏற்படுவதையும் காண்கிறோம். இவ்வேற்றுமையை நிவர்த்திப்பதற்கு கைகண்ட பலனுடைய ஒரு முறை சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது 9 அங்குலம் × 5 அங்குலம் அளவுள்ள பாலிதீன் பைகளில் மக்கிய மாட்டெரு கலந்த மண்ணை நிரப்பி அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட கொட்டைகளைப் பைக்கு ஒன்றாக 1 அங்குல ஆழத்துக்குள் ஊன்றிக் கன்றுகளைத் தயார் செய்யும் முறையாகும்.

**தாய்மார்களின் உதவி**

நெசவுத் தொழில் இதுநாள் வரை நசித்துப் போகாமல் இருக்க—நெசவாளர் பாதி வயிறுவது சாப்பிட உதவுபவர்கள் நமது நாட்டுத் தாய்மார்கள் தான்! ஆடவர்கள் எப்படிப் போனாலும் தாய்மார்கள்தான் மறவாமல் கைத்தறியாடைகளை வாங்குபவர்கள்! ஆகவே, கைத்தறியாளர்களைக் காப்பாற்றும் தாய்க் குலத்திற்கு எனது மரியாதை கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆடவர்களைப்போல் தாய்மார்களும் ஆமதாபாத்தையும் கட்டாவையும் நம்பத் தொடங்கினார்கள் என்றால் நெசவாளர்கள் வீதியோரங்களிலே குடியேறவேண்டிய வேதனையான நிலை ஏற்பட்டிருக்கும்!

—பேரறிஞர் அண்ணா.

இம்முறையை மேற்கொள்வதன் மூலம் தோட்டத்திற்குத் தேவையான கன்றுகளைத் தயார் செய்து ஒரே சீராக வளர்த்து சுமார் 2 மாத அளவில் நன்கு வளர்ந்த கன்றுகளைத் தோட்டங்களில் ஏற்கெனவே தயார் செய்யப்பட்ட குழிகளின் மத்தியில் நட முடிகிறது. கன்றுகளும் நன்றாகக் குழிகளில் வேர் ஊன்றி விடுகின்றன. சாதாரணமாக நல்ல பருவத்தில், மழை காலத்தில் நட்டு விட்டோமானால் செடிகளுக்கு யாதொரு சேதமும் ஏற்படுவதில்லை. ஒன்றிரண்டு பழுது போனாலும், பைகளில் தயாரிக்கப்பட்ட கன்றுகளை உடனடியாகக் காலியான குழிகளில் நட்டுக் கொள்ளலாம். இம் முறையில் தோட்டத்தை அமைப்பதே சாலச் சிறந்த வழியாகும். ஆகவே, முந்திரி பயிரிடுவோர் அனைவரும் மேற்கொண்டு கொட்டைகளை நேரிடையாக தோட்டங்களில் ஊன்றாமல் இம் முறையைக் கையாளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

அடுத்தபடியாக மகசூலை அதிகரிக்கும் முறைகளில் முக்கியமானது மரத்திற்கு உரமிடுதல் ஆகும். முந்திரியின் உரத் தேவைகள் தற்சமயம் ஆராய்ச்சி நிலையங்களில் கவனிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே தீர்மானமாகச்சொல்லமுடியாவிட்டாலும் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட 6-ம் எண் கலப்பு உரம் ஏக்கருக்கு 100—150 கிலோ வரை மரங்களின் வயதுக்கேற்ப உபயோகிக்குமாறு சிபாரிசு செய்யப்படுகிறது. இந்த உரத்தை மழை காலத்தில் அதாவது ஆடி, ஆவணியிலோ அல்லது ஐப்பசியிலோ பெருமழைக்கு முன்னரே, மரங்களைச் சுற்றிக் கிளைகளுக்கு அப்பால் சுமார் 6 முதல் 9 அங்குல ஆழத்தில் போட்டு மூடி





விடவேண்டும். அல்லது மரங்களின் இடைவெளிகளில் உரத்தைச் சிதறிவிட்டு உழுது மூடி விடலாம்.

தவிரவும், காய்ந்த சருகுகளை மரத்தின் அடிபாகங்களில் சீராகப் போடுவதன் மூலம் பூமியின் ஈரத்தைக் காத்து மரங்களுக்கு கிடைக்கச் செய்ய முடியும். மேலும் கொளுஞ்சி (காவாளை) என்ற பசுந்தாள் உரப்பயிரை மரங்களின் இடைவெளிகளில் வளர்த்து உழுவது முந்திரிக்கு மற்றுமோர் முக்கிய, பயனுள்ள, தேர்ந்த, சாகுபடி முறையாகும்.

முந்திரி பூச்சிகளுக்கும், நோய்களுக்கும் இலக்காகி விடுகிறது. இவைகளைத் தடுப்பதன் மூலமும் முந்திரியின் மகசூலைப் பெருமளவில் அதிகரிக்கச் செய்ய முடியும்.

## முந்திரி சாகுபடிக் குறிப்புகள்

முந்திரித்தோட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய செய்முறை குறிப்புகள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன.

**மண் அமைப்பு :—**

*செம்மண், சரளை கலந்த செம்மண், மணற்பாங்கான நிலம் முந்திரி பயிரிட சிறந்தது.

*நிலங்கள் ஆழமாகவும், சீராகவும், ஈரப்பிடிப்புள்ளதாகவும் இருக்க வேண்டும்.

*நான்கு அடிக்குக் குறையாமல் ஆறு அடிவரை மண் கண்டம் இருத்தல் வேண்டும்.

*களிமண், உப்பு, உவர் நிலங்கள் முந்திரி சாகுபடிக் கேற்றதல்ல.

**நிலத்தைச் சீர்திருத்துதல் :—**

*சாகுபடிக்கு எடுத்துக் கொண்ட நிலத்திலுள்ள செடி, மரங்களை வெட்டி அப்புறப் படுத்துதல் வேண்டும்.

*சரிவான நிலங்களில் மண் அரிப்புத் தடுப்பு முறைகளைக் கையாளுதல் வேண்டும்.

*சுலபமாக வேலை செய்வதற்கும், மேற்பார்வையிட



வும் நிலத்தை 5 அல்லது 10 ஏக்கர் துண்டுகளாகப் பிரித்தல் நல்லது.

*தகுந்த பாதுகாப்பிற்கு வேலியமைத்தல் அவசியம். வேலிச் செடிகளை வளர்த்தல் சிறந்தது.

**இடைவெளி விடுதல் :—**

*செடிக்குச் செடியும், வரிசைக்கு வரிசையும் 22 அடி இடைவெளி விடுதல் நல்லது.

*மண் வளத்தையும், ஆழத்தையும் பொறுத்து 20 முதல் 50 அடி வரையும் செடிக்குச் செடி இடைவெளி தேவைப்படும்.

*12 அடி × 12 அடி அல்லது 15 அடி × 15 அடி இடைவெளியில் முதலில் நட்டு சுமார் 10 முதல் 12 ஆண்டுகளில் மரங்களின் வளர்ச்சிக்குத் தக்கவாறு 24 அடி அல்லது 30 அடி இடைவெளி விட்டு, ஊடேயுள்ள மரங்களை வெட்டி விடுவது நல்லது. இதனால் ஆரம்பத்தில் அதிக எண்ணிக்கை உள்ள மரங்களின் மூலம் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பு உண்டு. ஆரம்ப காலத்தில் அதிக இடைவெளி தேவையில்லாததாலும், பின்னர், தேவைப் படுவதாலும், இம் முறையைக் கையாள்வதன் மூலம் குறிப்பிட்ட பூமியிலிருந்து அதிக பட்ச மகசூலை அடைய முடியும்

**குழி எடுத்தல் :—**

$1\frac{1}{2} \times 1\frac{1}{2} \times 1\frac{1}{2}$ அடி குழிகளை நடுவதற்கு முன்பே வெட்டி நன்கு ஆறவிட வேண்டும். 22 × 22 அடி இடைவெளியில் ஏக்கருக்கு 8? குழிகள் தோண்டவேண்டும்.

*குழிகளினின்று எடுத்த மண்ணுடன் குழிக்கு ஒரு கூடை வீதம் மக்கிய மாட்டெரு அல்லது ''கம்போஸ்டும்'', சாம்பலும் கலந்து போட்டால் செடிகள் நன்கு முளைத்து, வேர் ஊன்றி வளரப் பயன்படும்.



நடுதல் :—

*வேளாண்மைத்துறை வழங்கும் விதைகளை உபயோகிக்க வேண்டும். ஏக்கருக்கு 1½ கிலோ விதை தேவைப்படும்.

*விதைகளை நடுமுன் தண்ணீரிலோ, சாணப் பாலிலோ 24 மணிநேரம் ஊற வைப்பதால் சீக்கிரம் முளைக்கும்.

*குழிக்கு 2 அல்லது 3 விதைகளை ஆவணி, புரட்டாசித் திங்களில் ஊன்ற வேண்டும்.

* விதையின் காம்புப் பக்கம் மேல் நோக்கி இருக்கும்படி வைத்து 1 அங்குல ஆழத்தில் ஊன்றுவதால் கன்று நேராக நன்றாய் முளைக்கும்.

* முந்திரிக் கன்றுகள் முளைத்ததும் அதிக சூரிய வெப்பத்தினால் பாதிக்கப்படாமலிருக்கப் பனை ஓலைகள் கொண்டு லேசாக மூடவும்.

* பாலிதீன் பைகளில் முந்திரிக் கன்றுகளை வளர்த்து நடுவதே நல்லது. அங்குலம் 9. அங்குலம் 5 அளவுள்ள பாலிதீன் பைகளில் 6 அங்குல உயரத்திற்கு மக்கிய கம்போஸ்டு கலந்த செம்மண்ணை நிரப்ப வேண்டும். பைகளின் அடியின் இருநுனிகளிலும், நடுவிலும் சிறு துவாரங்கள் இட வேண்டும். முந்திரி விதைகளைப் பைக்கு ஒன்றாக ஒரு அங்குல ஆழத்தில், விதையின் காம்பு மேலே இருக்கும்படி வைத்துப் பதிக்க வேண்டும். விதைகள் பதிக்கப்பட்ட பைகளை



வரிசையாக நிழலுக்கு அடியில் வைத்துத் தண்ணீர் விட வேண்டும். இவ்வாறு பாலிதீன் பைகளில் வளர்க்கப்பட்ட கன்றுகளை மழை கால ஆரம்பத்தில் (ஆடி-ஆவணி அல்லது ஐப்பசி) நடுவதே சிறந்தது.

* நட்டவுடன் செடியைச் சுற்றி மண் அணைத்து செடிகள் ஆடாது இருக்க கொம்புகள் நட்டுக் கட்டுதல் வேண்டும்.

பூச்சிகளும், நோய்களும்:—

1. மரத்தைத் துளைக்கும் புழு பழைய தோப்புகளில் அதிகம் காணப்படும். மரத்தைத் துளைத்துச் சேதம் உண்டாக்கும். அதிகமாகத் தாக்கப்பட்ட மரங்களை வேருடன் வெட்டி எரித்து விடவேண்டும்.

2. இலைகளை துளைக்கும் புழுக்கள், புதுத் துளிர்களைத்தாக்கும் ''திரிப்ஸ்'' ஆகிய பூச்சிகளை டி.டி.டீ. அல்லது பி.எச்.சி. 1 சத வீதம் மருந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

பூக்களைத் தாக்கும் நாவாய்ப் பூச்சி:—

இதன் மூலம் பூக்களும், இளம் பிஞ்சுகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு மகசூல் மிகவும் குறைகிறது. இதைத் தடுக்கவேண்டியது அவசியம். பி.எச்.சி. 0.0 சத வீதம் தெளிப்பதன் மூல இதைத் தடுக்க முடிகிறது. அ லது பாராதியான் 0.025 ச வீதம் தெளித்தும் தடுக்கலாம்

செலவும் வரவும்:—

முந்திரி சாகுபடி செய் பொதுவாக ஏக்கருக்கு ரூ. 14 வரை செலவாகும். ஆனால் இ செலவு இடத்திற்கேற்ப ரூ. 12 முதல் 150 வரையும் ஆகலாம் காய்ப்பிற்கு வந்தபின் சாகுபடி செலவு போக குறைந்த அளவு ஏக்கருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 150 முதல் ரூ. 400 வரை நிகர லாபம் கிடைக்கும்.

முந்திரி சாகுபடி செய்யத் தமிழ்நாடு அரசாங்கம் அளிக்கும் சலுகைகள்.

1. தரமான விதைகளை வேளாண்மைத் துறை வழங்குகிறது.

2. புதிதாக முந்திரி தோப்பு ஏற்படுத்த, வேளாண்மைத்துறை ஏக்கருக்கு ரூ. 150 வீதம் தனிப்பட்ட ஒருவருக்கு ரூ. 3,000வரை நீண்ட காலக் கடன் கொடுக்கிறது. இக்கடனை முந்திரி நட்ட 6-ம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுத் தவணைகளில் 5½ சத வட்டியுடன் வசூலிக்கப்படும். பஞ்சாயத்து, கூட்டுறவு சங்கங்கள், கோயில்கள் ஆகியவைகளுக்கும் இக் கடன் வழங்கப்படுகிறது.

3. பூச்சி பூஞ்சாள மருந்துகளை 15 சத மானிய விலையில் வேளாண்மைத் துறை வழங்குகிறது.

4. பயிர்ப் பாதுகாப்புக்குத் தேவையான துவான்களையும் (டஸ்டர்), தெளிப்பான்களையும் (ஸ்ப்ரேயர்) பாதி விலையில் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் வழங்கிவருகிறது. *



"பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்,
பசியாத நல் வயிறு பார்த்ததுண்டோ"
என்று பாடுகிறார் புரட்சிக்கவிஞர்.

கவிஞரின் வரிகள், தேனாக நமக்குத் தித்திக்கின்றன.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாடுகின்றார் பாரதியார். நம் சிந்தையெல்லாம் தேனாகிறது!

உடற்பிணி போக்குவது தேன்; உயிர்ப்பிணி போக்குவது திருவாசகம் என்னும் தேன் என்பர். மணிவாசகரின் திருவாசகத்தில், இறைவனின் அருள்திறத்தைப் பல காலும் தேன் எனவே கூறுகின்றார்.

இலக்கியத்தில் மட்டுமா தேன் தித்திக்கிறது? வாழ்க்கைக்கும் மாமருந்தாகத் தித்திக்கிறது!

* தேன் சாப்பிடுவதால் வாத பித்தம் சம நிலையில் இருக்கும்.

* தினமும், தண்ணீருடனோ அல்லது பாலுடனோ சேர்த்துப் பருகி வந்தால் இரத்தவிருத்தியுண்டாகும். சோர்வு இரத்தமின்மைக்குத் தேன் அருந்தினால் குணமாகும். டைபாய்டு, மலேரியா காய்ச்சல்களினால் உடல் இளைத்தவர்களுக்கு தேன் அருமையான இயற்கை "டானிக்".

* வாந்தி பேதிக்கோ அல்லது சாதாரண வாந்திக்கோ தேனைக் கொடுத்து வந்தால் குணமாகும்.

* பல் வலிக்குத் தேனைச் சூடாக்கித் தடவினால், குணமாகும். இஞ்சி நீரில் தேனைக் கலந்து ஓட்டைப் பல் வலிக்கு விட்டால் குணமாகும்.

* தொண்டைப் புண், நாக்குப் புண், தொண்டைக் கம்மல் தேன் சாப்பிடக் குணமாகும்.

* மது மூத்திரத்துக்குத் தேன் சாப்பிடுவது நல்லது.

* தேன் சாப்பிடுவதால் குடல் பூச்சிகள் அழிந்து விடும்.

* எலும்புருக்கி நோய்க்குத் தேன் மிகவும் நல்லது.

* மலச் சிக்கலுக்குத் தேன் சாப்பிடுவது நல்லது.

* தேனுடன் சிறிது சுண்ணாம்பு கலந்து கட்டிகளுக்குப் பத்துப் போட்டால், முளை பழுத்து வெளியே வந்துவிடும்.

* எலுமிச்சம்பழச் சாறு, இளநீர் இவற்றில் ஒன்றில் கலந்து சாப்பிட்டால் தாகம் அடங்கும்; உஷ்ணம் நீங்கும். மூத்திரத் துவார எரிச்சல் நீங்கும்.

* தேன், தயிர், தேங்காய்ப் பால் மூன்றையும் கலந்து உண்டால் வயிற்று வலி நீங்கும்.

* மயிலிறகைச் சுட்டுக் கரியாக்கித் தேனில் குழைத்துச் சாப்பிட்டால் விக்கல் நீங்கும்.

* மிளகை இள வறுவலாக வறுத்துத் தூள் செய்து தேனோடு சாப்பிட்டால் இருமல் நீங்கும். இஞ்சி ரசம் வெள்ளைப் பூண்டு ரசம், தேன் சம எடை சேர்த்து உண்டால் நெஞ்சுச் சளி நீங்கும்.

* கரிசிலாங்கண்ணிச் சாறு இரு பங்கு, தேன் ஒரு பங்கு கலந்து காலையில் அருந்திக் கொண்டே வந்தால் காமாலை நீங்கும்.

மக்களுக்கு மாமருந்தாகத் திகழும் தேனை, பெரிய அளவில் கிடைக்கச் செய்யத் தேனீ வளர்ப்புத் தொழிலைப் போற்றிப் பாதுகாத்து வருகின்றது தமிழக அரசு. கடந்த சில ஆண்டுகளில் இத்துறையில் கணிசமான முன்னேற்றத்தினைக் கண்டுள்ளோம்.




''மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே தேனே! —(சிலப்பதிகாரம்)

தமிழகத்தில் தேனீ வளர்ப்புத் திட்டம் 1954 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதனை மதுரை மாவட்டம் காந்தி நிகேதன் ஆசிரமம், கன்னியாகுமரி மாவட்டம், ஒய்.எம்.சி.ஏ., மார்த்தாண்டம், தமிழ் நாடு வணிகத் தொழில்துறை ஆகிய நிறுவனங்கள் ஏற்று இத்தொழி லுக்கு அடித்தளம் அமைத்தன. அனைத்திந்திய கதர், கிராமத் தொழில் குழுவால் துவங்கப்பட்ட இத் திட்டம், பின்னர் தமிழ் நாடு கதர், கிராமத் தொழில் வாரியத் தால் பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்டது. தமிழக அர சின் கணிசமான நிதி ஒதுக்கீட்டினாலும், நேர் முகக் கண் காணிப்பினாலும், இத் தொழில் தமிழ்நாட்டில் வளர்ந்து இந்திய உபகண்டத்தின் மற்றப் பகுதிகளுக்கு எடுத்துக் காட்டாக இன்றையதினம் விளங்குகின்றது..

தேனீ வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேனீ வயலவர்கள் (Bee Fieldmen) நியமிக்கப்பட்டிருக் கின்றனர். இவர்கள்தாம் சிற்றூர் மக்களிடம் நேரிடையாகப் பழகிப் பேசித் திட்டத்தைச் செயல்படுத்துபவர் ஆவார்கள். இவர்களை மேற்பார்வையிட்டு அவ்வப்போது தொழில் நுணுக்க உதவிகளை நல்குவதற்குத் தேனீ அலுவலர்கள் என வட்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

தேனீ வயலவர்கள் கிராமங்களைத் தேர்ந்தெடுத்துத் தேன் பெட்டிகளை வழங்கிப் பணிப் பரப்பு வேலையில் ஈடுபடு வர். படிப்படியாக அருகிலுள்ள கிராமங்களிலும் செயல் படுவர். தேனீ வயலவர்கள் தெரிந்தெடுத்துப் பணி புரி யும் இடத்திற்குக் கிளை நிலையங்கள் என்று பெயர். ஒரு கிளை நிலையம் ஐந்து ஆண்டுகள் இயங்கும். இங்ஙனம் இயங்கி முடிந்த கிளை நிலையங்களை ஒன்று திரட்டி 500-க் கும் குறையாமல் தேனீக் குடும்பங்கள் உள்ள வட்டார நிலையங்கள் அமைக்கப்படும். இந்த வட்டார நிலையம் இரண்டு ஆண்டுகள் இயங்கும். பின்னர் தேனீ வளர்ப்ப வர்களை இத் தொழிலில் நன்கு பயிற்றுவித்துக் கூட் டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, அவர்களிடமே ஒப்படைக்கப் படும்.

தவிர, மாதிரித் தேனீப் பண்ணைகளும், தரமுள்ள இராணி ஈக்களை உற்பத்தி செய்து வினியோகம் செய்யக் கூடிய தேனீப் பண்ணைகளும், மகரந்தச் சேர்க்கையினால் விவசாய வளர்ச்சியடையக் கூடிய மகரந்தச் சேர்க்கை நிலையங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இதுவரை தேனீ வளர்ப்போர்களுக்கு ஒரு இலட்சம் தேனீக் கூடுகள் சகாய விலையில் வழங்கப்பட்டுள்ளன. இரண்டாயிரத்துக்கும் அதிகமான கருவிகள் வழங்கப் பட்டுள்ளன. மார்த்தாண்டம், சோலைச்சேரி கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரண்டு தேனீ சுத்திகரிப்பு ஆலைகள் அமைக்கக் கதர், கிராமத் தொழில் ஆணைக்குழு மூலம் உதவி வழங்கப்பட்டிருக்கின்றது.

தேனீக் குடும்பங்களை இடம் பெயர்த்தல் என்பது இத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். அவைகளைப் பருவ காலத்தில் ரப்பர் தோட்டங்களுக்கு இடம் பெயர்த்தலால் தேனீ வளர்ப்பவர்களும், தோட்டக்காரர்களும் மிகுந்த பலனடைகின்றனர். தேனும் பெருகுகிறது ; ரப்பர் விதை யின் எடையும் பெருத்து ; முளைக்கும் தன்மை, எண்ணை மிகுதல் ஆகிய தன்மைகளோடு விளைச்சலும் பெருகுகிறது.

1968–69-ல், கன்னியாகுமரி, திருநெல்வேலி, சேலம், நீலகிரி, திண்டுக்கல் ஆகிய இடங்களில், 801 தேனீ வளர்ப்பாளர்கள் 15,963 தேனீக் குடும்பங் களை இடம் பெயர்த்து 84,869 கிலோ தேன் உற்பத்தி செய்திருக்கின்றனர். குமரி மாவட்டத்தில் மட்டும் 14,983 தேனீக் குடும்பங்கள் 682 தேனீ வளர்ப்பாளர்களால் இடம் பெயர்த்து வைக்கப்பட்டு, 79,267 கிலோ தேன் உற்பத்தி செய்திருக்கின்றனர். இதன் பயனாக, ரூ. 200 முதல் ரூ. 12,000 வரை ஒவ்வொருவரும் இலாபம் அடைந்திருக்கின்றனர்.

இலக்கியப் பெருமை மிக்க குறிஞ்சிப் பூவிலிருந்து தேன் எடுக்கவும், தனியான திட்டமொன்றை வகுத்து, இவ் வாண்டு குறிஞ்சித் தேன் எடுக்க ஆவன செய்திருக் கின்றார்கள்.

தமிழ் நாட்டில் தற்போது 29 தேனீ வளர்ப்போர் கூட் டுறவுச் சங்கங்கள் உள்ளன. உற்பத்தியாளர்களிடமிருந்து தேனை வாங்கி விற்பனை செய்து, வளர்ப்புத் தொழிலுக்கு சகல வழிகளிலும் பயன்பட்டு வருகின்றன. இவைகள் மிகுந்த இலாபத்தோடு செயல்பட்டு வருகின்றன.

தமிழ் நாடு அரசு இந்தத் திட்டத்தை மேற்கொண்டு 108 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தி வருகின்றது.

இத்திட்டம் சில குறிப்பிட்ட வட்டாரங்களில் தாழ்த்தப் பட்டோர் நல நிதியிலிருந்தும் செயல்படுத்தப்படுகிறது. 1968–69-ல் தமிழ் நாடு முழுவதிலும் ரூ. 31,47,576 மதிப்புள்ள தேனும், ரூ. 21,084 மதிப்புள்ள மெழு கும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது அனைத்திந்தியா வின் உற்பத்தியில் நாலில் ஒரு பங்காகும்.

1969–70-ல் (டிசம்பர் முடிய) தேனீ வளர்ப்புச் சாதனை கள் இதோ—

மொத்தத் தேனீக் குடும்பங்கள்—49,450.
தேன் உற்பத்தி—79,574 கிலோ—
மதிப்பு ரூ. 4,77,444·00.

மெழுகு உற்பத்தி—514 கிலோ—மதிப்பு ரூ. 3,787·00
தேனீ வளர்ப்போர் எண்ணிக்கை—15,854.
திட்டம் அமுலில் இருக்கும் சிற்றூர்கள்—3,855.

காந்தியடிகளின் தலையாய நிர்மாணத் திட்டங்களுள் ஒன்றாகிய கதர் கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டத்தில் அடங்கிய தேனீ வளர்ப்புத் தொழிலை நிறைவேற்று வதில் மற்ற மாநிலங்களை விடத் தமிழ்நாடு மிகச் சிறப் பாகச் செயலாற்றி முதன்மையாகத் திகழ்கின்றது.

—கு. செல்லசாமி

# மகளிர் பகுதி



ஆகஸ்ட் 15-ஆம் நாள்!
விடுதலைத் திருநாள்.

நாட்டின் விடுதலைக்கு வித் தூன்றிய நல்லவர்களை நினைவு கூரும் நாள்.

அந்நல்லவர்கள் வரிசையில் முதன்மையான இடம் பெறுபவர் அண்ணல் காந்தியடிகள்.

உலக உத்தமரான அவர் ஒவ் வொரு துறையிலும் நம் நாடு சீர் பெற வேண்டும் என்று விரும் பினார்.

பெண்ணுரிமையாகட்டும் உடல் வலிவு பெறுவதாகட்டும் எதிலும் நம்மக்கள் சிறந்து விளங்க வேண் டும் என்று காந்தி அண்ணல் விரும்பினார். ஒருமுறை உணவு முறையைப் பற்றிக் காந்தியடிகள் குறிப்பிட்டதாவது:—

"நான் சரசாங், சுபா, தர்னிப் கொழுந்துகள், காரட் நுனிகள், முள்ளங்கி நுனிகள், பட்டாணி இலைகள் ஆகியவற்றைத் தின்று பார்த்திருக்கிறேன். இவற்றைத் தவிர, முள்ளங்கி, தர்னிப், காரட் கிழங்கு வகைகளையும் வேகவைக்காது பச்சையாகவே தின்னலாம் என்பது தெரிந்ததே. இந்த இலைகளையும் கிழங்குகளை யும் வேகவைத்தல், பணத்தைப் பாழாக்குவதும் இவற்றின் இயல் பான ருசியை இழப்பதும் ஆகும். இந்த இலை, கிழங்குகளில் அடங்கி யுள்ள உயிர்ச் சத்துக்கள் முழு வதுமோ, ஒரு பகுதியோ இவற்றை வேகவைக்கையில் பாழாகின்றன. வேகவைத்துச் சமைப்பதால், இவற்றின் ருசி கெடுகின்றதென்று நான் சொல் லுவதன் காரணம் இவற்றுக்கு இயல்பாய் உள்ள ருசி, இவை சமைக்கப்படுகையில் போக்கப் படுவதால் தான்."

இவ்வுண்மையை 'சத்துணவு, ஆராய்ச்சி வித்தகர்களும் எடுத் துரைத்துள்ளனர்.

'உலகிலேயே எங்காவது காய் கறிகளை அதிகமாக வேகவைத்து அடியோடு கெடுக்கிறார்கள் என் றால், அது இந்தியாவில் தான்' என்று பல்வேறு நாட்டினர் கூறு வதை நாம் மறுப்பதற்கில்லை.

தேவையற்றவைகளைக் கூட நாம் வேகவைக்கிறோம். இந் நிலையை மாற்றிட முனைவது பெண்களின் கடமையாகும்.

பழங்களிலும், காய்கறிகளிலும் அவற்றின் தோலை ஒட்டியே பெரு மளவில் வைட்டமின்களும் தாது உப்புக்களும் அடங்கியிருப்பதால் அவற்றைத் தோலுடன் சமைப் பதே முறை. அவசியமானால் லேசாகத் தோலைச் சீவவேண்டும்.

காய்கறிகள் சமைப்பதற்கோ அல்லது பரிமாறுவதற்கோ சற்று முன்பாகத்தான் நறுக்க வேண் டும். கூடுமானவரை பெரிய துண்டுகளாக நறுக்குதல் நல்லது.

முடிந்தமட்டும் மூடிய பாத்தி ரங்களில் வேகவைப்பது நன்று.

நீரை முதலில் கொதிக்கவைத் துப் பிறகு கொதிநீரில் காய்களை வேகவைப்பது சிறந்தது. காய் களைக் குறைந்த நேரம் வேக வைப்பதால் ஊட்டச் சத்துக்களை ஓரளவு பாதுகாக்கலாம். நூல் கோல், முள்ளங்கி இவற்றின் கீரையை உபயோகிக்க வேண்டும்.

சமைக்கும்போது சோடா மாவைச் சேர்ப்பது உணவுகளி லுள்ள 'பி' வைட்டமின்களை அழித்து விடும். ஆகவே, சமைக் கும்போது சோடாமாவு சேர்க் கக்கூடாது.

மைசூரிலுள்ள மைய உணவு ஆராய்ச்சிக் கழகத்தினர் உணவு களில் ஊட்டச் சத்துப் பற்றாக் குறையை நிறை செய்ய, விலை மலிவான ஊட்ட மிக்க இந்தியப் பல சத்துணவைத் தயாரித்திருக் கிறார்கள். தனியாகத் தயார் செய்யப்பட்ட வேர்க்கடலைப் பிண்ணாக்கிலிருந்தும், கொத்துக் கடலை மாவிலிருந்தும் உணவைத் தயாரித்து மேலும் வைட்டமின் களையும் தாதுப் பொருள்களையும் சேர்த்துள்ளனர்.

இந்த உணவை முக்கியமாகக் குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் முதலி யோரின் உணவோடு உபரியாகச் சேர்க்கலாம். மற்றவர்களும் உப யோகிக்கலாம்.

இந்தப் பல சத்துணவை வைத் துக்கொண்டு பாயாசம் தயாரிக்க லாம்.

**பல சத்துணவுப் பாயாசம்:—**

தேவையான பொருள்கள்:
உலர்ந்த பால்பவுடர் 30 கிராம்
பலசத்துணவுப்பொடி 30 கிராம்
வெல்லம் 38 கிராம்.

செய்முறை:—பால் பவுடரை யும் சத்துணவுப் பொடியையும் கலந்து தண்ணீரைச் சிறிது சிறி தாக விட்டுப் பிசையவும். வேண் டிய அளவு தண்ணீர் விட்டுக் கலக்கிக் கொள்ளவும். வெல்லத் தையும் கலந்து, 5 நிமிடங்கள் கொதிக்கவைக்கவும். செய்தபின் சுவைத்துப்பாருங்கள். பாயா சத்தின் அருமை தெரியும்.

—அஞ்சனா

# வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டி!



எல்லா வசதிகளோடும் கூடிய ஓர் இல்லத்தை அமைத்துக் கொள்ள உங்களுக்கும் ஆசையிருக்கலாம்!

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுக்காக நீங்கள் செலவிடும் ஒவ்வொரு ரூபாயும் வீண் போவதில்லை. இந்தச் சமுதாயத்தின் வளமான சுபிட்சத்துக்காக ஏராளமான திட்டங்கள் ... உணவு ... உறைவிடம் ... சுகாதாரம் ... கல்வி ... மருத்துவம் ஆகிய பல்வேறு துறைகளில்உங்கள் முதலீடு அரசினால் மறு-முதலீடு செய்யப்படுகிறது.

வளமான வாழ்க்கையை அடைவதில் உங்களுக்குள்ள வாய்ப்புகளை நினைவு கொள்ளுங்கள் ... தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம் இந்தியாவெங்கிலும் அதிகப் படியான பரிசுகளையும், தொகையையும் அள்ளித் தருகிறது!

**அடுத்த குலுக்கலுக்கான பரிசுகளின் மொத்தத் தொகை : ரூ. 17,50,000**

**ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு : ரூ. 1,00,000**

**குலுக்கல் தேதி: 25-8-1970**

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இதுவரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள் = 177 பேர்

**பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது. ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!**

**இன்றே வாங்குங்கள்**
**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

செலவு ஒரு ரூபாய்




வரவோ லட்ச ரூபாய்

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9




# பிஞ்சுகளைப் பேணிக் காத்திட

திருமதி சகுந்தலாவிற்கு அது இரண்டாவது பிரசவம். சென்னை நகரிலுள்ள ஒரு மகப்பேறு மருத்துவமனையில் இரவு 2 மணிக்குக் குழந்தை பிறந்தது. பிரசவம் என்னவோ சுகப் பிரசவம்தான்.

பூப்போன்ற அக் குழந்தையின் அழகிலே, தாய் சற்று முன் அனுபவித்த பிரசவ வேதனையை எல்லாம் மறந்திருந்த வேளை. குழந்தை இரு முறை வாந்தி எடுத்தது. தாய்ப்பாலை அச் சிசுவினால் பருக முடியவில்லை. ஒரு துளி உள்ளே சென்றாலும் மூச்சுத் திணறியது. வாந்தி எடுத்தது.

வெளித் தோற்றத்தில் அழகுப் பதுமையாயிருந்த அந்த மழலையின் பிஞ்சு உடலுக்குள் ஏதோ ஒரு கோளாறு. எல்லோருக்கும் வேதனை. தாயுள்ளம் துடித்தது: காலம் கடந்து கொண்டே இருந்தது.

மாலையில், சென்னை எழும்பூரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் வரவழைக்கப்பட்டார். குழந்தைக்கு உணவுக் குழாயில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று அவர் ஐயப்பட்டார். உடனே எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனைக்குக் குழந்தையை எடுத்துச் செல்லும்படி ஆலோசனை கூறினார். குழந்தை அங்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு டாக்டர் குழந்தையைப் பரிசோதித்தார். எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. குழந்தையின் மூச்சுக்குழலும், உணவுக் குழலும் ஒன்றாக இணைந்திருப்பது, கண்டு பிடிக்கப்பட்டது. இரவு வெகு நேரமாகிவிட்டபடியால், மறு நாள் உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்யவேண்டுமென்று உத்தரவிட்டார். இம்மாதிரியான உடற்கூறு உள்ள குழந்தைக்குப் பிறந்த ஒரு நாளுக்குள் அறுவைச் சிகிச்சை செய்து சரி செய்து விடவேண்டும். அல்லது குழந்தை பிழைக்காது.

ஆனால் இது, திருமதி சகுந்தலாவின் குடும்பத்தில் ஒரு சலசலப்பையே ஏற்படுத்தி விட்டது. மாமியாரும் வேறு சிலரும் குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை செய்யக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்தனர்.

முடிவில் டாக்டர் ஆலோசனைப் படி அறுவைச் சிகிச்சை நடந்தது. ஒட்டிக்கொண்டிருந்த உணவுக் குழலைத் தனியாகவெட்டி அதைத் தனித்தனியே இயங்கும்படிச் செய்து விட்டனர் கைதேர்ந்த மருத்துவ நிபுணர்கள்.

ஒரு மாதம் கடந்து விட்டது. இன்று அதே குழந்தை மற்ற குழந்தைப்களை போலவே பால் பருகுகிறது.

இந்த அதிசய சாதனையைச் செய்துள்ள எழும்பூரில் உள்ள சிறுவர் மருத்துவமனை பல சிறப்புகளை உள்ளடக்கியதாகும்.

இதை மருத்துவமனை என்பதை விடச், சிறுவர் நல நிலையம் என்று சொல்லலாம். ஏனெனில், இங்கு சிறுவர்களுக்குச் சிகிச்சை செய்து மருந்துகள் வழங்குவதோடு, சிறுவர்களை எப்படி வளர்ப்பது, என்னென்ன உணவு வகைகள் அளிப்பது என்பது பற்றித் தாய்மார்களுக்கும் ஆலோசனை வழங்கப்படுகிறது. அதனால் இதன் பெயரையும் "சிறுவர் நல நிலையம்—சிறுவர்களுக்கான மருத்துவ மனை'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள சிறுவர்கள் மருத்துவமனைகள் அனைத்திலும் இதுவே பெரியது. இதனை விரிவு படுத்தும் திட்டம் ஒன்றுள்ளது. அவ்வாறு விரிவு படுத்தப்பட்ட பின் கீழ்த்திசை நாடுகளிலேயே இதுதான் மிகப் பெரிய 'சிறுவர் மருத்துவமனை' யாக இருக்கும்.

இந்த மருத்துவமனையில் ஏழைகளானாலும் பணக்காரர்களானாலும் ஒரே மாதிரியான சிகிச்சைதான்—ஒரே மாதிரியான வசதிகள்தான் தரப்படுகின்றன. இங்கு 'ஸ்பெஷல் வார்டு' கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 32 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுத் தமிழக முதல்வரால் கடந்த பொங்கலன்று திறந்து



'இன்குபேட்டர்'ரில் குழந்தை

வைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனை, புறத்தோற்றத்திலும் சரி, உள் தோற்றத்திலும் சரி, ஒரு மருத்துவ மனையின் சாயலே இல்லை எனலாம். வெளியிலிருந்து பார்ப்போருக்குச் சோலைபோல் ஓங்கி வளர்ந்த மரத்தின் மறைவிலுள்ள இதன் அழகிய கட்டடம் பெரிய மாளிகையையே நினைவுபடுத்தும். உட்புறத்தே எங்கும் ''மொசேக்'' தரை. ஆங்காங்கே பூந்தொட்டிகள். எந்த விதத்தூசியோ, மருந்துநெடியோ கிடையாது. தினம் சுமார் 2,000 குழந்தைகள் சிகிச்சைக்காக இந்த மருத்துவமனைக்கு வருகிறார்கள் என்ற செய்தி சற்று வியப்பினைக் கொடுக்கும். காரணம் அந்த அளவிற்குச் சுத்தமாக வைக்கப்பட்டுள்ளது.

இங்குக் கொண்டுவரப்படும் குழந்தைகளில் பெரும்பாலானவை அப்போதே மருந்து கொடுத்துத் திருப்பி அனுப்பப்படுகின்றன. மிகவும் மோசமான நிலையில் இருந்தால் அங்கேயுள்ள 'வார்டு'களில் தங்கவைத்துச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவசரக் 'கேஸ்' களைக் கவனிக்க மூன்று டாக்டர்கள் 24 மணி நேரமும் பணியாற்றுகின்றார்கள்.

தடுப்பு ஊசி போடவும், ஈரல் நோய், ரத்தசோகை, இருதய நோய், மனநோய், முடக்கு வாதம் (போலியோ), எலும்புருக்கி நோய் (டி.பி.), டைஃபாய்டு காய்ச்சல், தொண்டை அடைப்பான் (டிப்தீரியா) குதிரைவாய் சன்னி (டெட்டானஸ்) இப்படிப் பலதரப்பட்ட நோய்களுக்காகவும் குழந்தைகள் இங்கு கொண்டு வரப்படுகின்றனர். அன்று பிறந்த குழந்தை முதல் 12 வயது வரையுள்ள சிறுவர் வரை இங்கே அனுமதிக்கப்படுகின்றனர்.

பொதுவாகச் சத்தில்லா உணவினை உண்பதாலும், தொத்து வியாதி பீடிப்பதாலும் இந்த நோய்கள் குழந்தைகளுக்கு வருகின்றன. குழந்தைகளில் 30 சதவீதம் டி. பி. யால் பீடிக்கப்படுகிறார்கள்.

இங்கு தினம் 600 ஊசிகள் போடப்படுகின்றன. ஆண்டுக்குச் செலவாகும் மருந்தின் மதிப்பு ரூ. 3,74,000; ஆண்டுக்கு வாங்கப்படும் மருத்துவக் கருவிகளின் மதிப்பு ரூ. 2,50,000.

குதிரைவாய்ச் சன்னியால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஓர் அறையில் தனித் தனிப்படுக்கைகளில் வைக்கப்படுகின்றன. முள் குத்தியதால் இந்த நோய் வந்துள்ளது, ஒரு சிறுமிக்கு; கீழே விழுந்ததால்—அம்மைப்பால் குத்தியதைத் தொடர்ந்து—கொப்புழ்க் கொடியைத் துருப்பிடித்த கத்தியால் அறுத்ததால்—இப்

பிறந்த அன்றே அறுவைச் சிகிச்சைக்கு ஆளான குழந்தை





படிப் பல காரணங்களினால் இந்நோய் வந்ததாகத் தெரிகிறது.

மற்றொரு, வார்டில், பிறந்த ஒரு மாதத்திற்குள் உள்ள குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மஞ்சட்காமாலை போன்ற நோய்கள், தாயின் வயிற்றிலிருக்கும் போதே தாய் மூலம் குழந்தைக்கும் தொற்றிக் கொள்ளுமாம். இந்நோயால் பீடிக்கப்பட்ட குழந்தையின் உடம்பிலுள்ள இரத்தத்தைச் சிறிது சிறிதாக எடுத்துவிட்டுப் புதிய இரத்தத்தைச் சிறிது சிறிதாக ஏற்றிக் குணமாக்குகிறார்கள்.



ஒரு குழந்தையின் மூளைநோய்க்குச் சிகிச்சை தரப்படுகிறது

ஆண்டுதோறும் இங்கு 12,000 குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை நடக்கின்றது. குடல் வீக்கம் சம்பந்தப்பட்ட நோய்களினால் பீடிக்கப்பட்ட குழந்தைகள் முன்பு பிழைப்பது அரிது என்ற நிலையிருந்தது. 100 சதவீதம் மரணம் தான். ஆனால் குழந்தைகளுக்காகத் தனி மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டு, இதில் டாக்டர்கள் தனிக் கவனம் செலுத்த ஆரம்பித்தபின் இப்போது இந்நோயால் பீடிக்கப்பட்ட குழந்தைகளில் 75 சதவீதம் குணமடைகின்றனர்.

புற்றுநோய், தொண்டை-மூக்கு-காது சம்பந்தப்பட்ட நோய்கள்-இப்படிப் பலதரப்பட்ட நோய்களுக்கு அறுவைச் சிகிச்சைகள் இங்கு நடை பெறுகின்றன.

அப்போதுதான் பிறந்த குழந்தைகளை அறுவைச் சிகிச்சைக்கு முன்னும் பின்னும் 10 நாட்கள் ''இங்குபேட்டர்'' என்ற கருவியில் வைத்திருக்கிறார்கள்.

மூன்று மாடிகள் கொண்ட இந்த மருத்துவ மனையின் மூன்றாவது மாடியில் தற்காலிகமாக நர்சுகள் தங்கியிருக்கின்றனர். அருகிலேயே அவர்களுக்கு விடுதி கட்டப்படுகிறது. அவர்கள் அங்கு சென்றபின் மேலும் 100 படுக்கைகள் சிறுவர்களுக்காக ஏற்படுத்தப்படும். அதன்பின் கீழ்த்திசை நாடுகளில் மிகப் பெரிய சிறுவர் மருத்துவ மனை என்ற புகழினை இது பெறும்.

ஏனைய மருத்துவ மனைகளில் இல்லாத பல சிறப்பான வசதிகள் இதில் இருக்கின்றன.

ஒவ்வொரு வார்டு அருகிலும் ஒரு சிறிய பரிசோதனைக் கூடம் இருக்கிறது. இது தவிர மொத்தத்திற்கும் சேர்த்துப் பெரிய பரிசோதனைக் கூடமும் உண்டு.

ஒவ்வொரு மாடியிலும் தாய்மார்கள் தங்குவதற்காக ஒரு கூடம் (ஹால்) அமைக்கப்பட்டுள்ளது. தாய்மார்கள் ஓய்வு எடுக்கவும், உணவு அருந்தவும் இங்கு வசதிகள் உள்ளன. அதோடு அங்கு அவர்களுக்குக் குழந்தைகள் வளர்ப்புப் பற்றியும், குடும்ப நலத் திட்டம் பற்றியும் எடுத்துக் கூறப்படுகின்றன. இவை பற்றிய திரைப்படங்களும் காட்டப்படுகின்றன.

டாக்டர்களுக்கு மருத்துவ நூல்கள் அடங்கிய நூல்நிலையம் ஒன்றும், தாய்மார்கள் படிப்பதற்கான நூல்நிலையம் ஒன்றும் இங்கு உள்ளன.

தனியாக ஒரு இரத்த சேகரிப்பு நிலையம் (Blood Bank) உள்ளது.

குழந்தைகளுக்கு அவர்களது வார்டிலுள்ள படுக்கையிலேயே 'எக்ஸ்ரே' எடுக்கவும் வசதி உள்ளது.

அறுவைச் சிகிச்சை நடக்கும்போது அதனை நேரில் பார்த்துக் கற்கவேண்டிய பட்ட மேல்படிப்பு மாணவர்களுக்காகத் தனி வசதி உள்ளது. அவர்கள் அறுவைச் சிகிச்சை அறைக்குள் செல்லாமல் மேலே மாடியிலிருந்தபடி, இதற்காகத் தனியாக அமைக்கப்பட்ட கண்ணாடியின் வழியாகப் பார்க்லாம்.

இவை தவிரக் குழந்தை வளர்ப்பு, குடும்ப நலத்திட்டம், சத்துணவு முதலிய விளக்கங்கள் அடங்கிய - தாய்மார்களுக்கான-மியூசியம்ஒன்றுமருத்துவமனையை ஒட்டி நான்கு இலட்ச ரூபாய் செலவில் நிறுவப்படுகிறது. இது தமிழக முதல்வரின் பொங்கல் பரிசு.

இந்த மருத்துவமனையில் சென்னையில் உள்ள ஸ்டெல்லாமேரி கல்லூரி, மகளிர் கிறித்துவக் கல்லூரி, கோவை அவினாசிலிங்கம் கல்லூரி ஆகியவற்றிலிருந்து மாணவிகள் வந்து 10 நாட்கள் பயிற்சி பெற்றுச் செல்கின்றனர்.

தற்போது உலக நல அமைப்பு (W.H.O.) கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த நர்சுகள்-டாக்டர்களுக்காக ஒரு பயிற்சியை ஏற்பாடு செய்துள்ளது. இதற்கு, இந்தியாவிலே சிறந்த மருத்துவ மனை இதுதான் என்று இதனைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

# ஒளி மயமான எதிர்காலத்தை உருவாக்குகிறது மதராஸ் ரிபைனரீஸ்!

## நாடு முன்னேற்றமடைகிறது.

அந்நிய ஒத்துழைப்புடன் செயல் புரியும் தேசிய நிறுவனமான மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட் பொருளாதாரத் தன்னிறைவு, மக்களின் வளமான வாழ்வு ஆகியவற்றிற்கு மகத்தான சாதனை புரிகிறது.
மக்களுக்கும், வர்த்தக, தொழில் துறைகளுக்கும் மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட், அநேக விதங்களில் சேவை செய்கிறது. முன்பு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல பொருள்களை உள்நாட்டிலேயே தயாரித்து, நாட்டின் முக்கியத் தேவையான அந்நியச் செலாவணியில் சேமிப்பு ஏற்படுத்துகிறது. குடும்பத் தலைவிகளுக்கு வீட்டு சமையலுக்கு எரிபொருள், மற்றும் மண்ணெண்ணெய், ஆகாய விமானங்களுக்கும், மோட்டார் கார்களுக்கும் பெட்ரோல், டீசல், மற்றும் கிரீஸ்போன்ற எண்ணெய்ச் சத்துப்பொருள்கள். உரத் தயாரிப்பிற்கு ''நே:ப்தா'' பெட்ரோ கெமிக்கல்களுக்கு ரசாயனப் பொருள்கள். இவற்றுடன், ''நே:ப்தா'' மற்றும் ''பர்னஸ் ஆயில்'' ஏற்றுமதி மூலம் நாட்டிற்கு இன்றியமையாத அந்நியச்செலாவணியையும் சம்பாதிக்கிறது.

தொழிற்துறையில்—ஒரு உர உற்பத்திச்சாலை, டிரான்ஸ்பார்மர் ஆயில் உற்பத்திச்சாலை மற்றும் மணலியில் உருவாகும் பெட்ரோகெமிக்கல் தொழிற்சாலை ஆகியவற்றிற்கு மதராஸ்ரிபைனரீஸ் லிமிடெட் ஒரு தாய் நிறுவனமாகத் திகழ்கிறது. இந்நிறுவனங்களால் அநேகருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. நாட்டுவளம் பெருகுகிறது.



மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட் 122-D, மவுண்ட் ரோடு, சென்னை-6.

EP.MRL.4


''கந்தசாமி! ரெடியா இரு நாளைக்கு நீ தஞ்சாவூர் போகணும்'' என்றார், ஜெயில் வார்டர்.

தஞ்சாவூர் பக்கத்திலுள்ள நீலகிரித் தோட்டம் என்ற கிராமத்தில் திறந்த வெளிச்சிறைச் சாலை ஒன்று இருக்குதாம். அங்கேதான் என்னை மாற்றப் போறுங்கன்னு அவர் மூலமாகக் கேள்விப்பட்டேன்.

எனக்குச் சொந்த ஊரு திண்டுக்கல். வயசு இப்போது 37 இருக்கும். மனைவியைக் கொன்றதற்காக எனக்கு இந்த ஜெயில் தண்டனை கொடுத்தாங்க. 1963 லே கன்விக்சன் ஆச்சுது. அதைப் பற்றி விரிவாகக் கேளாதீங்க! ஏதோ ஒரு வெறி! பழையதை மறந்திடுங்க! நான் இப்போ புது ஆளா மாறிவிட்டேன்.




நான் நல்ல படியாக நடக்கிறதனுலேதான், என்னைத் திறந்த வெளி ஜெயிலுக்கு அனுப்புகிறதா சொன்னப்போ எனக்கு மனசுக்கு நிம்மதியாக இருந்திச்சு.

மூணு மாசத்துக்கு முன்னுல் இங்கே வந்து சேர்ந்தேன்.

சிறை வாழ்வுன்னு அதை அனுபவிச்சங்களுக்குத்தான் தெரியும். பெரிய வேதனை. இரவெல்லாம் புருக்கூடு போன்ற இருண்ட அறை. பகலிலே கூட்டை விட்டு வெளியே வரமுடியுமே தவிர வேலை செய்வதெல்லாம் பெரிய சுவர்களுக்கு உள்ளே தான். மதில் சுவர்களையும், பூட்டுக்கு மேல பூட்டு போட்டிருக்கும் பெரிய கதவுகளையும் பார்க்கிறப்போ, தினம் தினம் '' நீ ஒரு குற்றவாளி'' யின்னு நினைவு படுத்துகிற மாதிரியிருக்கும். மனசு நிம்மதியில்லாமெ இருண்டு கிடக்கும்.

திறந்த வெளிச் சிறையிலே கைதிகளைப் பூட்டிவைக்க அறைகள் இல்லை. கைதிகள் தப்பி ஓடி விடாதபடி தடுக்க நெடுஞ் சுவர்கள் இல்லை.

மேலே வானம்! கீழே பூமி!!

தப்பி ஓட முயற்சி பண்ணினுத்தானே தடுப்புச்சுவர்களும், கதவு—பூட்டுகளும் தேவை. இங்கேதான் அந்தச் சூழ்நிலையையே மாத்திப்புட்டாங்களே!

ஏதோ சொந்த ஊரிலே, சொந்த நிலத்திலே பயிர்பச்சை வைச்சுப் புழைக்கிற மாதிரி சிந்தனைதான் எனக்கு இருக்கு.

காவலுக்கு போலீஸ் இல்லியா என்று கேட்பீங்க! இருக்காங்க! கடமை தவருதகாவலர்கள் இருக்காங்க. ஆனுல் அவங்க கைகளிலே ஆயுதங்கள் கிடையாது. ஏன்? கைத்தடி கூட அவங்க வைச்சுக்கிறது இல்லியே.

எங்க மேலே நம்பிக்கை வைத்து எங்களையும் மனிதர்களாய் மதிச்சு இப்படி அன்போடு பாதுகாக்கும்போது நாங்களும் அந்த நல்லெண்ணத்தைக் காப்பாத்த வேண்டாமா? அவர்களுக்கு நாங்க சிரமமே கொடுப்பதில்லை. அவங்க கொடுக்கிற சாப்பாட்டை சாப்பிட்டுட்டு மொங்கு மொங்குன்னு வேலை பார்க்கிறேம். அதிக நேரமில்லை. மற்றத் தொழிலாளிகள் மாதிரி 8 மணி நேர வேலைதான். காலையில் கொஞ்ச நேரம், மத்தியானம், அப்புறம் சாயங்காலம்.

" நல்ல வேலைகள் செய்யும்போது கவலை யெல்லாம் மறந்துபோகுது "



இங்கே இப்போ நாங்க 57 பேர் இருக்கிறேம். எல்லோரும் என்னை மாதிரி கொலைக் குற்றத்திற்காகத் தண்டனை பெற்றவர்கள்தான். நிலத்தகராறு, பெண் காரணமாகச் சண்டை, குடும்பப்பூசல்கள் இப்படி ஏதோ



ஒரு சூழ்நிலையில் கொலை செய்தவர்கள், சிறையிலே இருக்கிற காலத்திலே ஒழுங்கா நடந்ததுலே அவங்களையும் இங்கே அனுப்பியிருக்காங்க.

அதிலே பலபேரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவங்க. அதோடு மத்திய சிறையிலே இருக்கிறப்போ, தச்சுவேலை, கொல்லு வேலை எல்லாம் சொல்லித் தந்தாங்க. நாங்க வெளியே வந்தபிறகு பிழைக்க வேலை தெரியணுங்கிறதுக்குத்தான் இதைச்சொல்லித்தர்ருங்க.

நாங்க இங்கே என்னென்ன செய்திருக்கிறோம் தெரியுமா? ஒரு வருஷத்துக்கு முன்னடி—அதுதான் தமிழக அமைச்சர் அய்யா ப. உ. சண்முகம் அவர்கள் வந்து இதைத் துவக்கிவைக்கும் முன்னடி—இது பயங்கரமான பூமியா இருந்துதாம். பாம்புப் புற்றுகளும், முள் புதர்களும் நிறைந்த காட்டுப் பகுதியா இருந்துதாம். இப்போ கம்ளீட்டா மாத்திப்பிட்டோம்.

இந்த இடம் மொத்தம் 114 ஏக்கர். இதைச்சுற்றி முள் கம்பி வேலி போட்டோம். எதுக்கு இந்த வேலி? எங்களுக்காக இல்லை. ஆடுமாடுகள் புகுந்து பயிர் பச்சைகளை அழிக்காம இருக்க.

எல்லா இடத்தையும் உழுது பயிரிட்டோம். தண்ணீர் பாய்ச்சுவதற்காகப் பெரிய கிணறுகள் ரெண்டு தோண்டினோம். அதிலே பம்புசெட்டு வைச்சுப் பயிரிடுகிறோம். இந்த ஆண்டு நிலக்கடலைப் பயிர் 30 ஏக்கரில் போட்டிருக்கோம். வாழைத் தோட்டம், காய்கறித் தோட்டம் எல்லாம் இருக்கு. 300 தென்னை போட்டிருக்கிறோம். ஜி. டி. நாயுடு கண்டுபிடிச்ச துவரை நிறையப் போட்டிருக்கோம். இது மரம் மாதிரி வளர்ந்து 8 வருஷத்திற்குப் பலன் கொடுக்கக் கூடியது.

அப்புறம் கேளுங்க, பூசணி, பாகல், சொரை எல்லாம் போட ஆயிரம் குழி வெட்டிப் போட்டிருக்கோம்.

போன வருஷம் ஐ.ஆர் 8 என்ற நெல் கூட பயிரிட்டாங்களாம். இந்த ஆண்டு குருவை நெல் பயிரிடணும்னு ஜெயிலர் அய்யா சொன்னரு.



காவலர்களுக்கும் சரி தங்கறதுக்கு படுக்கிறதுக்கு இடம் கிடையாது. மேலே வானம்! கீழே பூமி! அவ்வளவுதான். நாடோடிகள் மாதிரி கூடாரம் அடித்துத் தங்கியிருந்தோம்.

இப்போ 4 கட்டடம் கட்டியிருக்கிறோம். 36,000 ரூபாய் மதிப்பிருக்கும். 100 பேர் தங்கலாம். அதுபோக ஆபீஸ் அறை ஒண்ணு பத்தாயிரம் ரூபாய் செலவில் கட்டியிருக்கிறோம். சமையலறை, மாட்டுக் கொட்டகை இப்படிஎத்தனையோ கட்டியிருக்கிறோம். இதுகளுக்குக் கதவு சன்னல் எல்லாம் நாங்களே செய்கிறோம்.

இப்பவே இங்கு விளைகிற காய்கறிகளை வேறு ஜெயில்களுக்கு அனுப்புகிறோம். ஒரு டிராக்டரும் 5 குழாய்க் கிணறுகளும் அரசாங்கம் கொடுத்திட்டாங்கன்னு, இதைப் பொன் விளையிற பூமியா மாத்திப்புடுவோம்.

இந்தத் தரிசு நிலத்தைப் பூஞ்சோலையாமாத்திப்புடுவோம். அப்பறம் எல்லா சிறைச்சாலைகளுக்கு மட்டுமில்லாமே வெளியே கூட காய்கறிகள், நெல் எல்லாம் விற்கலாம்.

இந்தமாதிரி நல்ல வேலைகள் செய்யும்போது கவலையெல்லாம் மறந்து போயிடுது! மற்றவர்களுக்குப் பயன்படும்படியா வாழ



முடியும் என்ற நம்
பிக்கை ஏற்படுது. இப்
படிப்பட்ட ஆக்கப் பணி
கள் செய்ய நாங்கள்,
எப்பவும் தயாராயிருக்
கோம்னு நாங்கள் சொல்
லிக்கொள்கிறோமுங்க.

இன்னொண்ணு முக்கிய
மானது சொல்ல மறந்
துட்டேன். இங்கு இர
விலே, படிப்புத் தெரியாத
வங்களுக்குப் படிப்பும்
சொல்லிக் கொடுக்
கிறாங்க.

வேலை எல்லாம்
முடிஞ்சதுக்கப்புறம், இர
விலே இந்தப் படிப்புச்
சொல்லித் தருவாங்க.
மது அரசாங்கம் இவ்
வளவு நல்லெண்ணமும்
ம்பிக்கையும் எங்களிடம்



காட்டுவதால், எ
ளுக்கு நேர்மையா நட
கணும், நம்பிக்கை
துரோகமே செய்ய
கூடாது என்ற எண்ண
ஏற்படுகிறது.

கைதிகளாகிய எ
ளுக்குப் படிப்பும் சொ
லித்தந்து தொழிலு
சொல்லித் தந்து எங்க
ஆளாக்கி விடுவ
நாங்க என்றும் மறக்க
முடியாது.

இந்தத் திறந்த வெளி
சிறை எங்க வாழ்க்
யிலே ஒரு பெரிய மா
றம்; வாழ வழி காட்டு
தொழிற்கூடம் — விவ
யப்பண்ணை என்றுகூட
சொல்லுவேனுங்க!









## பூங்காவில் பாம்பு!



உலகில் பல பகுதிகளில் பாம்புப் பூங்காக்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஊர்ந்து வாழும் உயிரினங்கள் பற்றிய ஆய்வு நிகழ்த்தவும், அவ்வுயிரினங்களின் நஞ்சு விளைவிக்கும் நாசத்தினைத் தடுக்கும் வகையில் மருத்துவத் துறையில் ஆய்வு நிகழ்த்துவதற்கும் இப்பூங்காக்கள் உதவுகின்றன. மேலும், ஊர்வன பற்றி அறிந்து கொள்ள ஆர்வங் கொண்டுள்ளோருக்கு, அவற்றைக் கண்முன்னே எளிதில் காட்டுவதற்கும் இந்தப் பூங்கா உதவுகிறது.

பாம்பு போன்ற உயிரினங்களைப் பரவலாகப் பெற்றிருக்கிற இந்தியாவில், அவற்றைத் தேடி அலைய வேண்டிய நிலைதான் இருந்தது. அவற்றை எளிதில் கண்டு கொள்வதெற்கென ஒரு பூங்கா இல்லாதது பெருங் குறையாகவே இருந்து வந்தது.

சென்னை புறநகர்ப் பகுதியில், தாம்பரத்தை அடுத்து உள்ள வேளச்சேரி சாலையோரம் அமைக்கப்படுகிற பாம்புப் பூங்காதான் இந்தியாவிலேயே முதன் முதலாக அமைக்கப்படுகின்ற ஊர்ந்து வாழ்ந்திடும் உயிரின ஆராய்ச்சிக் கூடமாகும் (Reptile Research Centre). பாம்புக் கடி பற்றியும், ஊர்ந்து வாழும் உயிரினங்கள் பற்றியும் ஆய்வு நிகழ்த்தும் கூடமாக மட்டுமல்லாது, பொது மக்களுக்கு ஒரு காட்சிக் கூடமாகவும் இப்பூங்கா அமையும்.

இந்தியாவிலுள்ள பாம்பினங்கள் அனைத்தும் இங்கே கொண்டு வரப்பட்டு உள்ளன. அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் காணப்படும் பாம்பினங்களும் இங்கே வைக்கப்பட்டுள்ளன.

இப் பூங்காத் திட்டத்தைத் தொடங்கிச் செயல்படுத்துபவர் ரோமுலஸ் விக்டார் என்னும் அமெரிக்க நிபுணராவார். அவர், முதலைகள், பெரிய ஆமைகள், நாகராஜா ( King Cobra ) எனப்படும் நல்ல பாம்புகள் ஆகியவற்றையும் இப் பூங்காவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறார்.

இந்தியாவில், பாம்புக்கடியால் ஏற்படும் மரணங்கள் பெரும்பான்மையாக அறியாமையின் விளைவே என்றும், பாம்பு பற்றிய விவரங்கள் மக்களுக்குத் தெரிவிக்கப்படுமானால்; இவ்வகை மரணத்தைப் பெரும் அளவு தடுக்கலாம் அல்லது குறைக்கலாம் என்றும் அவர் கருதுகிறார். பாம்புக்கடிக்குத் தக்க சிகிச்சையும் அளிக்க முடியும் என்று நம்புகிறார்.

நல்லபாம்பு, கட்டுவிரியன், கண்ணாடி விரியன், சுருட்டை பாம்பு ஆகிய நான்கு வகைப் பாம்புகள் மட்டுமே கொடிய நஞ்சுடையனவாகும். பம்பாயிலுள்ள ஹா..ப்கைன் நிலையத்தில் ( Haaffkine Institute ) பாம்புக் கடிக்குத் தக்க மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பாம்புகள் வாழ்வதற்கான பள்ளங்களும் குழிகளும் நிறைந்த இயற்கைச் சூழ்நிலை இப்பூங்காவில் அமைக்கப்படும். பாம்பின் நஞ்சு எடுக்கப்படுவதை மக்கள் காணலாம். ஆய்வில் ஆர்வம் கொண்டு வருவோர் பாம்புகளைத் தேடி அலைய வேண்டியதில்லை. வேளச்சேரிக்கு விரைந்து வந்தால்போதும் என்ற நிலை உருவாக்கப்படுகிறது.






ஏண்டி இன்னுமா புறப்படலே!
சும்மா விரட்டாதீங்க. இரண்டு குழந்தைகளைத் தான் ரெடி பண்ணி இருக்கேன்.
அம்மா, என்னையும் தூக்கிக்க.
சீ! சனியனே காலை விடு.
அப்பா! கால் வலிக்குது டாக்ஸியிலே போகலாம்.
வாயை மூடு. டாக்ஸியிலே நாலு பேருக்கு மேலே ஏத்த மாட்டான்! பஸ்ஸிலே போகலாம்.


அய்யய்யோ! சுந்தரத்தைக் காணோம்! பஸ்ஸிலே ஏறினானா?
சார்! மூணு டிக்கெட் தான் இருக்கு.
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம் இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம்
சொன்னு கேட்டியாடி.
என்னை மட்டும் இப்ப குற்றம் சொல்லி என்ன செய்யறது

# எதிர்காலத்தை நோக்கி இன்ப ஊஞ்சலில்



## செல்வனும் செல்வியும்

வளமான வாழ்வு. எதிர்காலம் பற்றிய அச்சமில்லை. புன்னகையுடன் வருங் காலத்தை வரவேற்கக் காத்திருக்கும் இக்குழந்தைகளுக்கு மட்டும் இந்த இன்பச் சூழ்நிலை எப்படி வந்தது? பிறக்கும் போதே அதிர்ஷ்டத்தை அணைத்துக் கொண்டா பிறந்தனர்? இல்லை.

வருமுன் காக்கும் வகையறிந்த இவர் தம் பெற்றோர், திட்டமிட்டுப் பொருளைச் சேர்த்தனர், திட்டமிட்டே குடும்பத்தைக் காத்தனர். வருவாய் குறைவாக இருப்பினும், குடும்பம் விரிவாகவில்லை. திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத இன்பம் என்பதை உணர்ந்து போற்றினர்; பின்பற்றினர்.

உங்கள் இன்பமும் உங்கள் குழந்தைகளின் வருங்கால இன்பமும் உங்கள் கரத்திலேயே உள்ளது. திட்டமிட்டுக் குடும்பத்தை அமையுங்கள். மட்டில்லா இன்பம் பெறுவீர்கள்.

தமிழகத்தில் பத்து லட்சம் பேர் குடும்ப நலத் திட்டத்தால் பயனடைந்துள்ளனர். வளமிக்க நிறைவாழ்வும் எழில் குன்றா இன்னுடலும் பெற்று மகிழ்கின்றனர். பெற்றோரும் குழந்தைகளும் இனிமைமிக்க எதிர் காலத்தை இப்போதே அமைத்துக் கொண்டனர்.

உங்கள் வாழ்வையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாழ்படுத்திட வேண்டாம்; பாதுகாத்திடுங்கள்! உங்கள் மருத்துவரைச் சந்தியுங்கள்; நண்பர்களிடம் கேளுங்கள்!

குடும்ப நலத் திட்டப் பணியகத்திற்குச் செல்லுங்கள். பயிற்சி பெற்ற பணியாளர்கள் கனிவு காட்டுவர்; கருத்துரை தருவர்; கருவிகளும் கிடைக்கும்; பயன் பெறுக!

*திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்*

**வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9**

MOULIS


தமிழ் நாட்டின் வருவாய்ப் பெருக்கத்திற்குத் தமிழகக் கடல் முத்துக்கள் பெரிதும் உதவுகின்றன. •முத்துக் குளிக்கும் தொழில் எப்போது தொடங்கிற்று என்பதை யாராலும் கணக்கிட்டுக் கூற இயலவில்லை. மூவேந்தர் கால முதல் முத்து வணிகம் நடைபெற்று வந்திருக்கிறது. ரோமிலும், கிரேக்கத்திலும், தமிழகத்து முத்துக்கள் மாதர்தம் அணிகளாகி மன்னர்களின் மனங் கவர்ந்திருக்கின்றன. நம் தமிழ் நாட்டில், மன்னார் வளைகுடாவில் நடக்கும் முத்துக் குளித்தலைப் பற்றி ரோம, எகிப்திய, கிரேக்கப் பயணிகள் குறிப்பிட்டுள்ளனர். மன்னார் வளைகுடாவில் முத்தெடுப்பது பற்றித் தெளிவான



வரலாற்றுக் குறிப்பினை முதன் முதல் நமக்குத் தந்தவர் உலகம் சுற்றிய வீரர் மார்க்கோபோலோ.

இயற்கையளித்த பளபளப்பும், எழிற் கவர்ச்சியும் முத்தின் முழுமைக்கு முத்தாய்ப்பு வைக்கின்றன. அதனை அழகுபடுத்தும் அக்கறையோ, அங்கலாய்ப்போ, அவசியமோ மனிதனுக்குத் தேவையில்லை!

உலகின் பல பகுதிகளில் முத்துக்கள் கிடைக்கின்றன. எனினும் ஊதியம் தரும் அளவுக்கு மிகுதியாகக் கிடைக்கும் இடங்கள் மிகக் குறைவு.

விலை மதிப்புள்ள முத்துக்களை மிகுதியாகப் பெறும் இடங்களில் மன்னார் வளைகுடாவும், பாரசீக வளைகுடாவும் முதன்மையானவை. பிரிட்டனிலுள்ள முத்து வணிகச் சந்தையான மன்ஹாட்டனில் தமிழகத்து முத்துக்கள் முதல் வரிசையில் இடம் பெற்றுள்ளன என்பதை உலகம் அறியும்.


**STANDARD** PENCILS

for Supreme Satisfaction

Blacklead HB & Short hand
Drawing 6H to H, HB, B to 6B, Copying - Hard, Medium & Soft

Also makers of

**Monalisa**

*Deluxe*
BINDHI PENCILS &
EYE BROW PENCILS



Manufacturers:
**STANDARD PENCIL FACTORY,**
*(Most up-to-date Pencil Factory in India)*
**MADRAS-32**

Criterion-S P-1106



Verified
JL
V211myN70
N70·1
69594

# எதிர்காலத்தை நோக்கி நம்பிக்கை நடை . . .

## இந்தியாவின் பொருளாதாரத்தை மாற்ற உதவும் இந்தியன் ஆயில்

இந்தியாவின் இதயமான கிராமங்களில் 80% க்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள்.

இன்று, கிராம வாழ்க்கை மாறி வருகிறது. கிராம மக்களின் முன்னேற்றத்திற்கு வகை செய்யும் வேளாண்மை-தொழில் வளர்ச்சிக்குத் துணைவன், இந்தியன் ஆயில்.

[illegible] மனிதனின் வாழ்வினை மாற்றி, அவன் எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்க உதவுகிறது இந்தியன் ஆயில்.

பொருளாதார வளமைக்கு ஒரு தேசிய நிறுவனம்

**இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்**

INDIANOIL




சும்மா இருந்ததுக்காகவா டீச்சர் அடிச்சாங்க ?

ஆமாம்மான்னு ! ஏழும் எட்டும் எவ்வளவுன்னு கேட்டாங்க ! பதில் சொல்லாமே சும்மா நின்னேன் ! அதுக்குப் போட்டு அடிச்சுட்டாங்க !




கார் விற்பனையாளர் : நம்ம கிட்டே எல்லா வருஷ மாடலும் இருக்குதுங்க !

வந்தவர் : அதுதான் பார்த்ததும் தெரியுதே ?



சார் ! நீங்க வெளியிட்ட "பிழையில்லாமல் எழுதுவது எப்படி"ங்கிற புத்தகத்தைப் படித்தேன் சார் !

அப்படியா ? எப்படி இருந்தது ?

ரே பிழையா இருந்தது !




பெண்: டாக்டர்! என் வீட்டுக்காரர் ராத்திரிலே திடீர்ன்னு எழுந்து "ஆ பேய் ! பூதம்னு" கத்துறாரு ! அதுக்கு ஏதாவது மருந்து

டாக்டர் : மருந்து ஒண்ணும் தேவையில்லே; நீங்க நல்லா தலையை வாரிக்கிட்டிங்கன்னுப் போதும் !




அம்மா ! பிச்சை போடு தாயே ! சாப்பிட்டு நாலு நாளாச்சு !

ஏய் ! நேற்றுதானே நிறைய சாதம் போட்டேன் ! பொய்யா பேசுறே !

பொய் இல்லே தாயே ! ருசியான சாப்பாடா சாப்பிட்டு நாலு நாளாச்சு !



பல் டாக்டர் மகள் : மிஸ்டர் ! என்னிடம் பல்லைக் காட்டினால், பல்லு கழண்டிடும் ! ஜாக்கிரதை !!




என்னய்யா ஆபீசுக்கே வந்துட்டே ?

அம்மா ஒரு எவர்சில்வர் பாத்திரம் வாங்கினாங்க ! அதுக்குப் போட கிழிஞ்ச துணி இல்லையாம் ! ஆபீசுக்குப் போயி அய்யா கோட்டைக் கழற்றி வாங்கிக்கோன்னாங்க ! அதுதான்..




அப்பா ! செத்தே முந்தி, உனக்குப் பாடம் சொல்லித்தந்த வாத்தியாரைப் பார்த்தேன் !

என்னடா சொன்னார் ?

"மண்டு மாணிக்கம் மகனடா நீ ?" ன்னார்.



# வேளாண்மைப் பெருங்குடி மக்களே!



## ஒரு நல்ல சேதி!

## உங்களுக்கு டிராக்டர் தேவையா?
## உடனே எங்களை அணுகுங்கள்!



ஜெட்டார் 2011-25HP (செக்கோஸ்லோவேக்யா)
வரியுட்பட ரூ. 16,700



பைலாரஸ் 50HP (ரஷ்யா)
வரியுட்பட விலை ரூ. 18,500

எங்களிடம், இவ்வாண்டு (1970-71) இறக்குமதியான டிராக்டர்களும், அவைகளுக்கான உதிரி இணைப்புப் பாகங்களும் விலைக்குக் கிடைக்கும்.

மற்றும் செக்கோஸ்லோவேகியா 25HP ஜெட்டார் 5511 டிராக்டரும் (விலை ரூ. 24,000), 25HP ரஷ்ய டிராக்டரும், 35HP போலந்து டிராக்டரும் கிடைக்கும்.



யூ 650-65HP (ருமேனியா)
வரியுட்பட விலை ரூ 26,500



ஆர்.எஸ். 09-20HP (கிழக்கு ஜெர்மனி)
வரியுட்பட ரூ. 14,500

விவரங்களுக்கு:

**நிர்வாக இயக்குநர்,**
தமிழ் நாடு வேளாண்மைத் தொழிற் கழகம்,
**122. மவுண்ட் சாலை,**
**சென்னை-6.**


ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தித்துறை இயக்குநர், தமிழ் நாடு அரசு. அச்சிடுபவர் : அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.



Registered No. M. 8657

28/1/72

# கலையெழில் துலங்கும் தமிழகம் வருக!













பழம்பெரும் பண்பாடு, அழிவிலா
நாகரிகம் சிற்பக் கலைக்கே
உற்பத்தித் தலங்களாய்
வரலாற்றுச் சீர்பெற்ற எண்ணற்ற
கோவில்கள் இயல், இசை,
கூத்து ஆகிய முத்தமிழுக்கும்
உறைவிடங்கள், வற்றாத ஆறுகள்,
அருவிகள், வளங் கொழிக்கும்
மலைகள், அலைபாடும் கடல்கள்,
சோலைகள், சாலைகள், ஆலைகள்,
இயற்கையின் கவின்மிகு
காட்சி ஓவியங்கள்!
காணத் தெவிட்டாத
மாட்சிமைக் காவியங்கள்.

விருந்தோம்பலில் சிறந்தோங்கும்
தமிழ்நாடு வரவேற்கின்றது.

சென்னை ● மாமல்லபுரம் ● காஞ்சீபுரம் ● வேடந்தாங்கல் ● சிதம்பரம் ● தஞ்சை ● சீரங்கம் ● இராமேசுவரம் ● மதுரை ● குற்றாலம் ● கன்னியாகுமரி ● உதகை ● கொடைக்கானல் ● ஏர்க்காடு...

இயக்குநர், செய்தி, விளம்பர, சுற்றுலாத்துறை, சென்னை-9.